# சமயக் கட்டுரைகள்

17602
(7411)



பண்டிதமணி,
சி. கணபதிப்பிள்ளை

உ

சிவமயம்

# FOR FAVOUR OF REVIEW

The Editor,

............................................

மதராஸ்

............................................

............................................

# சமயக் கட்டுரைகள்

ஆக்கியோன்:

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

*இந்நூலை எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். நேரிலே பெற விரும்புவோர்* **அ. பஞ்சாட்சரம், ஆசிரியர், உரும்பராய்** *என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.*

**தனிப்பிரதி விலை ரூபா 3-00**

இலங்கை
(Ceylon)

அ. பஞ்சாட்சரம்

காரியதரிசி

**பண்டிதமணி பாராட்டுவிழாச்சபை**

கணபதி துணை

# சமயக் கட்டுரைகள்

ஆக்கியோன் :

**பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை**

பதிப்பாளர் :

பழைய மாணவர்கள்
திருநெல்வேலி, சைவாசிரிய கலாசாலை

1961

வெளியீடு 1

சுன்னுகம் :
திருமகள் அழுத்தகம்

[பதிப்புரிமை ஆக்கியோனுக்குரியது]

சிவமயம்

# பதிப்புரை

சைவத்துக்குந் தமிழுக்கும் உயிர் கொடுத்த நாடு இது. வன்கண்ணரான மிலேச்ச அரசு இருந்த காலங்களிற் சைவத்தையுந் தமிழையுங் காக்கப் பெருந் தியாகங்கள் செய்த நம்மவர்களை உலகமே அறியும்.

இந்தநாள் அந்தநாள் அன்று.

சமயத்திற் சமரசம் பேசுகிற காலமிது.

இந்தக்காலத்தில் மக்களது மோகத்தைக் களையத்தக்க வகையிற் சமயத்தைச் சொல்ல வல்லவர் நமக்குள் ஒருவரே உள்ளார்.

அவரே எங்கள் பண்டிதமணி அவர்கள். 'நாவலர்' என்ருல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரையே குறிப்பதுபோல, 'பண்டிதர்' என்ருல் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களையே குறிக்கும்.

அவர்கள் குரு பரம்பரையில் வந்தவர்கள் ; தூய ஈசுர பக்தி நிறைந்தவர்கள் ; தருமந் தெரிந்தவர்கள் ; உலகம் வணங்குஞ் சீலம் உடையவர்கள் ; சைவம் அறிந்த தமிழ்ப் பேரறிஞர் ; பல்லாயிரக்கணக்கான உபாத்தியாயர்களுக்கெல்லாம் உபாத்தியாயர். கடந்த முப்பது ஆண்டுகளாக யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் தமிழ்த்துறைத் தலைவராய் அமர்ந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர்கள்.

அவர்கள் சைவத்தைப்பற்றி இந்த நூலிலே சொல்லுகிறார்கள். படிப்பவர்கள் பாக்கியசாலிகள் ; புண்ணியவான்கள்.

இதை வெளியிட அநுமதியளித்த ஞானத் தந்தையாகிய பண்டிதரையா அவர்களுக்கும், அழகாக அச்சிட்டுதவிய சுன்னாகம் திருமகள் அழுத்தக நிருவாகிகளுக்கும், மற்றும் பல்வேறு வழிகளிலே துணைபுரிந்த அன்பர்கள் யாவருக்கும் பாராட்டு விழாச் சபையாரின் நன்றி உரித்தாகுக.

பாராட்டு விழாச் சபையார்
(திருநெல்வேலி, சைவாசிரிய
கலாசாலைப் பழைய மாணவர்கள்)

யாழ்ப்பாணம்,
14-1-1961

உ

கணபதி துணை

# முகவுரை

சமயம்பற்றி அவ்வப்போது கிடைத்த கருத்துக்கள் சில 'தினகரன்' பத்திரிகையில் வந்தவை, இப்பொழுது புத்தக உருவில் வந்திருக்கின்றன. புத்தகம் ஆதற்கு உதவுமென்ற கருத்தோ உதவ வேண்டும் என்ற கருத்தோ அப்பொழுது இருந்ததில்லை. முதல் இருபத்தேழு கட்டுரைகளும் தொடர்ந்து வெளிவந்தவை. அநுபந்தத்தில் உள்ள மூன்று கட்டுரைகளும் வெவ்வேறு சந்தர்ப்பத்தில் வெளிவந்தவை. கட்டுரைகளின் முகப்பிற் றடித்த எழுத்தில் அமைந்தவை பத்திராசிரியராற் குறிப்பிடப்பட்டவை. அவை கட்டுரைக் கருத்தை எளிதில் அறிதற்குப் பெரிதும் உபகாரமானவை.

கட்டுரைதோறுங் காணப்படுஞ் சிந்தனைக்குரிய சில அம்சங்கள் பின்வருமாறு :

1. ஒன்று நம்மை நடத்துகின்றது. இரங்காமலிருக்கமாட்டாமை அதனியற்கை. சரீராதிகள் நம்மை நன்மைப்படுத்த அது உபகரித்தவை. அதன் கருத்தறிந்து அவற்றை உபயோகித்தல்வேண்டும். கருத்தறிய வழியுண்டு. அதன் கருத்தறியாத செயல் வீண்செயல்.

2. தருமம் திருவருளின் குறிப்பு. கர்மங்களுக்கெல்லாம் அடித்தளம் தர்மம். காமியங்கள் பலன் கருதியவைகள். அவற்றைச் செய்யும்போது பல துன்பங்கள் நேரிடும். துன்பங்களைப் பொருள் செய்யாது அடித்தளமான தருமத்திற் கண்ணுயிருத்தல் வேண்டும். பலன் தானே வரும். நிஷ்காமியஞ் செய்யாமலிருக்கமாட்டாமையாற் செய்வது ; பலன் கருதாதது.

3. திருவருட் குறிப்பாகிய தர்மத்தை விசாரிக்கத் தொடங்குவது சமயத்தின் தொடக்கம்.

4. உயிருக்கும் உடலுக்கும் உள்ள சம்பந்தம் வேறு ; உயிர்க்குயிருக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தம் வேறு. உயிர் உயிர்க்குயிரைக் கேட்டும் உயிர்க்கும் ; கேளாமலும் உயிர்க்கும்.

5. ஆட்டுகிறவன் கருத்தறியாத ஆட்டங்கள் புறச் சமயங்கள். வேதாகமப் பிறழ்வுகளும் புறச் சமயங்களே. ஓர் உண்மை எண்ணிறந்த பிறழ்வுகளை உற்பத்தி செய்யலாம்.

6. அகச் சமயங்கள் ஒரு புள்ளியைத் தொடும் விட்டார்த்தம் போன்றவைகள். மெய்யிற் பொய் அடங்கும். அடங்குதல் இருவகை :— ஒன்று ஏகதேசமா

யடங்குதல் ; மற்றது இல்லையாய் அடங்குதல். உண்மைச் சமயம் சமயகோடிகளாகியும் அதே சமயத்தில் அவையல்லது ஆகியும் இருக்கும்

7. உண்மைச் சமயமே சம—ரச—சமயம். மெய்ச் சமயத்துக்கும் பொய்ச் சமயத்துக்கும் சமத்துவம் பேசுகிறவர்கள், மெய்ச்சமயத்தைப் பொய்ச்சமயம் என்று சொல்லுகிறவர்கள். மெய்ச் சமயம் என்று ஒன்று இருக்கிறபடியாலேதான், பொய்ச் சமயங்கள் கோடிக்கணக்கிற் கிடக்கின்றன. அகச் சமயங்கள் படிகளல்ல ; ஒத்த வழிகள். புறச் சமயங்கள் படிகளுமல்ல ; ஒத்த வழிகளுமல்ல.

8. கதிப்பாற் செல்ல ஏது நெறி என விசாரிப்பாருக்குரியது சமயம். சமயம் ஆறே. ஆறனையும் அறுபத்து மூன்றாகவும், நூறாகவும் வகுப்பதுண்டு. ஒவ்வொரு பிடியும் விடுபடுதற்கு ஒவ்வொரு சமயம் வேண்டும்.

9. சமயம் அகம் புறம் என இருவகை. அகச் சமயங்கள் சைவம் முதல் வைரவம் இறுதியானவை ; பாடாணவாதம் முதல் சிவாத்துவிதம் இறுதியானவையல்ல. அவை புறம்.

10. அகச் சமயம்பற்றிப் பழைய புதிய கொள்கைகள்.

11. சைவத்தின் பிறழ்வுகளைச் சைவ சித்தாந்தத்தின் பிறழ்வுகள் என்கின்றது தத்துவப்பிரகாசம். சிவாத்துவிதத்தை அகச்சமய உச்சம் என்பது சரித்திரக் கோளாறு.

12. புறச் சமயங்கள் சைவத்துக்குச் செல்லும் படிகள் அல்ல. சமயம் மார்க்கமாதல்வேண்டும்.

13. தமிழ் நுதலிய பொருள் அன்பு. உண்மைச் சரியை உடன்போக்கு. 'நன்றுந் தீதும் பிறர்தர வாரா' என்பதைத் தெளிந்த யோகிக்கு 'யாதும் ஊரே'. ஏனையோர் சான்றோரினத்திருத்தல் வேண்டும்.

14. 'சரியை கிரியா யோகந் தன்னிலுஞ் சாராமே' என்ற சித்தியார்ப் பொருள் சிந்திக்கற்பாலது.

15. 'தாடலை' என்றதில் "ட்" என்ற மெய்க்குள் இரு மெய் இருப்பது மெய். அவற்றின் நித்திய சம்பந்தமே அத்வைதம்.

16. சத்தாகிய ஆன்மா அசத்தாகிய உலகைக் காணாது. சிவமான ஆன்மா சிவத்தையே அநுபவிக்கும்.

17. அத்வைத நிலையில் மூன்றுவகை உபகாரங்கள்.

18. 'அசி' பதம் தமிழில் 'ஆ' பதம். ஆன்மா பாவி. பாவி – பாவிப்பது. பாவனை ஒரு சாதனை.

19. சீவன் சிவமயம் ஆகும்; சிவம் ஆகாது. சிவமயமான ஆன்மாவுக்குச் சிவமேயன்றி மற்றையவை யாவையுஞ் சூனியம்.

20. "அத்தியாரோபித்தற்குரிய ஐந்து காரணங்களுள், இடமாகிய 'பிரமம்' ஒன்றேயன்றி மற்றை நான்கும் இல்லாதிருக்க, வேதாந்திகள் அத்தியாரோபித்தல் கூடாதே!"

"அருவாயும் அகண்டமாயும் இருக்கிற பிரமம் உருவப் பொருள் போலப் பிரதிவிம்பங் காட்டுமென்கை யுத்திக்குப் பொருந்தாத மகாவிரோதம்!"

"பிரதிவிம்பத்துக்கு அறிவு உண்டா?"
"மாயாவாதிகள் சுருதிக்குக்கொண்ட வியாக்கியானமே விபரீதம்."

[இவை சிவசங்கர பண்டிதர் வாக்குக்கள்.]

21. மாயாவாதம் உலோகாயதத்திற் சென்றுமுற்றும்.

22. வேத நூல் சைவ நூல், உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும் முறையே உரைத்தவை. உலகர் உலகத்தை ஆராய்பவர்.

23. மாயை விதைமுதல். ஆதிபகவன் வினைமுதல். 'ஹிமவத் பர்வதம் எப்போது உண்டாயிற்று? யாருக்குத் தெரியும்? வேதரிஷிகள் எக்காலத்தில் வாழ்ந்தனர்? எப்படிச் சொல்வது?' பாரதி.

விஞ்ஞானிகள் சடசத்தியை ஆராய்கின்றார்கள். வேதரிஷிகள் சடசத்தியின் தாரகமான சிவசத்தியை ஆராய்ந்தார்கள்.

24. உலகம் சினிமாத் திரைப்படக் காட்சி. அவள் அடிக்கடி ஆதி. சிவசத்தியைச் சாராது சடசத்தியின் மூல உண்மையைக் காணல் முடியாது.

25. தத்தம் வருணத்துக்கும் நிலைக்குமுரிய ஒழுக்கமாகிய கர்மத்தை அறிந்து அநுட்டித்தல் வேண்டும். அது செய்யாவழி எடுத்த பிறப்பு வீண்.

சர்வகலாசாலைகள் உட்பட ஊர்தோறும் எடுக்கப்படும் கல்விச்சாலைகள் ஒருவனின் சுவதர்மத்தைக் காட்டாதபோது, அவையனைத்தும் ஆரவாரம்பண்ணுகிற வெறுஞ் சினிமாக்கொட்டகைகளே; வயிறு வளர்க்கைக்கு ஏற்பட்ட வியாபார ஸ்தலங்களே.

மனம் சடம். அது சித்துப் பொருளைச் சித்தாகப் பாராது; சடமாகவே பார்க்கும்.

26. கர்மம் ஞானத்துக்கு நிமித்தம்.

வேதபாதஸ்தவத்தினுலே ஸ்ரீமந் நடராஜமூர்த்தியைத் துதிசெய்த 'அருந்தவனுஞ் சைமினி' பகவான் தாமா கடவுள் இல்லை என்று பூர்வமீமாஞ்சை செய்பவர்!!

27. ஈசுவரன் செய்யும் உதவி,
'செய்யாமை செய்யும் உதவி'.

## அநுபந்தம்

i. ஒருவன் தன் நன்மைக்காகப் பிறருக்குத் தீமை செய்யாமலிருப்பான்; தன் நன்மைக்காகப் பிறருக்கு நன்மைகூடச் செய்வான். ஆனுல், தான் இரங்கிய ஒரு ஏழை திடீரென்று பணக்காரனுய் நல் வாழ்வு வாழ அதைப் பார்த்துச் சகிக்கமாட்டான். எரிச்சல் வந்துவிடும்.

ii. 'பொய்கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்டார்.'

அவைதிகர்களும் அசைவர்களுமே உட்பகை. சங்கற்ப நிராகரணதில் ஒன்பது சமயங்கள் கண்டிக்கப்படுகின்றன. அவற்றுள் முதலாவது மாயாவாதம். இது வேதப் பிறழ்வு. ஏனையவை சைவாகமப் பிறழ்வுகள்.

iii. 'தருமம் என்று ஒரு பொருள் உளது'. அது அறத்தின் மூலவேர்.

சி. கணபதிப்பிள்ளை

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்,*
*14-1-61.*

17802



பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்தச்சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் ... | 1 |
| 2. | காமியம் வேறு: நிஷ்காமியம் வேறு ... | 10 |
| 3. | மகான் அரவிந்தர் எப்பொழுது சமயி ஆனார் | 18 |
| 4. | நாம் செய்கின்ற நம் செயல் கடவுள் செயல் ஆகாது ... | 25 |
| 5. | சமயி ... | 33 |
| 6. | உண்மைச் சமய இயல்பு ... | 42 |
| 7. | மெய்ச்சமயமே சமரச சமயம் ... | 51 |
| 8. | மனிதர் மூவகையர் ... | 59 |
| 9. | இன்று சங்கற்பநிராகரணஞ் செய்ய நேர்ந்தால் | 67 |
| 10. | பிராசீனர், நவீனர் வகுத்த சமயங்கள் ... | 76 |
| 11. | உண்டிருந்து வாழ்வதற்கு வழிகாணும் மடசைவம் ... | 85 |
| 12. | உபநிஷதம் ஓதியும் பயன் பெறாதவர் யாவர்? | 92 |
| 13. | ஆசனம் அறிந்தவன் யோகி ... | 99 |
| 14. | நாம் இந்தச் சரீரமா? இது என்ன வேடிக்கை! ... | 106 |
| 15. | ஆத்மாவும் சரீரமும் ... | 113 |

பக்கம்

16. 'சிவோகம்' சித்தாந்த வாக்கியம்
'அது நான் ஆனேன்' வேதாந்தம் 120
17. சுத்தமான அத்வைதமே
வேதாந்த சித்தாந்தம் ... 126
18. வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் 132
19. பழுக்கக் காய்ச்சிய இரும்பும்
துருப்பிடித்த இரும்பும் ... 139
20. மாயாவாதத்தின் கிளையான
பிரம விவர்த்தன வாதம் ... 145
21. மாயாவாதம்? உலோகாயதம்? ... 153
22. ஆராய்ந்து மெய்ப்பொருள்
காணுதல் வேண்டும் ... 159
23. சிவசக்தியே ஆதிபகவன் ... 165
24. சிவசத்தியைச் சாராது
உண்மையைக் காணமுடியாது ... 172
25. சுவதர்மம் : சுதர்மம் ... 179
26. பூர்வமீமாஞ்சை உத்தரமீமாஞ்சை ... 186
27. ஒரு பதிக்குப் பலவழிகள்
உளவாறுற்போல...... ... 194

**அநுபந்தம்**

I. வள்ளுவர் உபதேசம் ... 1
II. மெய்கண்ட பரம்பரையில் உமாபதிசிவம் 15
III. கச்சியப்ப சிவாசாரியரின் தருமோபதேசம் 25

உ

சிவமயம்

# சமயக் கட்டுரைகள்

## சமயம் 1

### பொய்ம்மையைப் பெருக்கப் போதிய சமயம் உண்டு. மெய்ம்மைக்குத்தான் நமக்குச் சமயம் இல்லை.

### இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறும்பொருட்டேயாம்

ஒரு நல்லது செய்யும்படி ஒரு மனிதனைக் கேட்டால், அந்த மனிதன், அந்த நல்லதைச் செய்தற்குச் 'சமயம்' இல்லை என்கின்றான். அந்த மனிதனைப் போலவேதான் நாமெல்லாம் நல்லதைச் செய்தற்கு நமக்குச் 'சமயம்' இல்லை இல்லை என்று சொல்லிக்கொண்டு வாளா திரிகின்றோம். குறிப்பிட்ட சமயத்தில் நாம் என்ன செய்கிறோம் என்று கூர்ந்து நோக்குவோமேயானால், நாம் அச்சமயத்திற் செய்யும் செயல், இம்மைக்கோ மறுமைக்கோ பயன் படாத வீண் செயலா யிருப்பதைக் காணலாம். அப்படி வீண்செயலாய் விட்டாலே அது பெரிய காரியம். நன்மையுமில்லைத் தீமையுமில்லை—நயமு

மில்லை நட்டமுமில்லை—என்று மரம்போல நின்று விடலாம்.

ஆனல், சிலசமயம் நம் செயல் அவ்வளவில் நின்றுவிடுவதில்லை; கடும் கொடும் பாவச்செயலாய் முடிந்துவிடுகிறது. எத்தனையோ உயிர்களை அச் செயல் பாழ்படுத்திவிடலாம். பிரசித்த மனிதர் களின் செயல்களையே ஆராய்ந்து இதற்குப் பல உதாரணங்கள் கண்டுபிடிக்க முடியும்.

"பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி" விடுகின்றோம். பொய்ம்மையைப் பெருக்கு தற்கு நமக்குப் போதிய சமயம் உண்டு. மெய்ம் மைக்குத்தான் நமக்குச் சமயம் இல்லை.

சமயம் என்ற வார்த்தையை 'நேரம்' என்ற பொருளில் இதுவரை உபயோகித்தோம். இந்த வார்த்தைக்கு 'நெறி', 'வழி' என்றுங் கருத் துக்கள் உண்டு. அவை உயர்ந்த கருத்துக்கள். இனி அக்கருத்துக்களில் உபயோகிப்போம். நெறி யென்ருலும் வழியென்ருலும் ஒன்றே.

நெறி 'பொய்ந்நெறி', 'மெய்ந்நெறி' என்று இரண்டு வகைப்படும். பொய்ந்நெறி பொய்ச் சமயம்; மெய்ந்நெறி மெய்ச்சமயம். "பொய்வந் துழலுஞ் சமயநெறிப் புகுதவேண்டா" என்பது நமக்குத் தந்தையினுஞ் சிறந்த தாயுமானவரின் புத்திமதி.

பொய்ச் சமயத்துக்குப் புறச்சமயம் என்றும், மெய்ச் சமயத்துக்கு அகச்சமயம் என்றும் பெயர்.

புறச்சமயத்தை 'மறுசமயம்' என்று சொல்வதும் உண்டு. மெய்ச்சமயத்துக்கு வேருன சமயம் மறு சமயம்; மறுவுள்ள சமயம் என்றுஞ் சொல்லலாம். மறு - மாசு, குற்றம்.

"மறுசமயங்கள் மாளப் பேதகஞ் செய்வாய் போற்றி"

நாம் ஒன்றை நினைத்துக்கொண்டிருக்க, அந் நினைவை நாம் அறியாமலே மாற்றி, நம்மை வேருென்றை நினைக்கச் செய்கிற ஒரு பொருள் நம்முட் குடியிருப்பதை நாம் ஊகித்து உணரலாம். ஆத்மா இந்த உடம்பை நடத்துகின்றது. அவ்வாறே ஆத்மாவை மற்ருெரு பொருள் நடத்துகின்றது. அந்தப் பொருள் நம்மறிவைக் கடந்தது; எட்டாதது. அதற்குக் கடவுள் என்று பெயர்.

கடவுள் இரக்கமே வடிவாய் உள்ளவர்; நம்முட் குடியிருப்பவர். அவர், நாம் பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்காமலும், பொய்வந் துழலுஞ் சமயநெறிப் புகுதாமலும், நம்மை மறு சமயங்களினின்றும் சதா பேதகஞ் செய்துகொண்டேயிருக்கின்ருர். பேதகஞ் செய்தலாவது, புன்னெறியை விலக்கி நன்னெறியிற் செலுத்துவது. இதனுலே கடவுளுக்குச் 'சிவம்' என்று பெயர். சிவம் என்ருல் நன்மை. சிவம் அளவிறந்த வல்லமை உள்ளது. சிவத்தின் வல்லமைக்குச் சத்தி என்று பெயர்.

"எத்திறம் நின்ருன் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்"
-- சித்தியார் 2ஆம் சூத். 75

சிவம் நம்மைப் பேதிக்க, சத்தியும் நம்மைப் பேதிக்கும். அவன் தூளி என்ருல் அவள் நிறு

தூளி என்பாள். அவனுக்கும் அவளுக்கும் இயற்கை ஒன்றே. அவன் குணி; அவள் குணம். அவனைப்போலவே அவளும் பேதிக்கின்றாள். அதனாலேதான் நமது அறிவு மனசை அடிக்கடி எதிர்க்கின்றது.

" பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்."

—திருவெம்பாவை 14

அவள் நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை; உலக மாதா. பேதித்தல்தான் அவளுக்குச் சதா முயற்சி. குழந்தைகள் மலபந்தத்தாற் சிக்குண்டு பந்தர்களாய் இருண்டு கிடக்க அவளாற் பார்த்துக் கொண்டிருக்க முடிவதில்லை. அவளுக்குத்தானே தனி இரக்கம், தனிக் கருணை, தனி அருள் என்றெல்லாம் பெயர் வழங்குகின்றது. இரங்காமல் இருக்கமாட்டாமையினாலே, அவள் நம்மை மறு சமயங்களினின்றும் பேதித்துக்கொண்டே யிருக்கின்றாள்.

" இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு "

--திருப்பள்ளியெழுச்சி 10

ஆத்மாக்களாகிய நம்மை, மறுசமயங்களாகிய மலபந்தங்களினின்றும் பேதித்து, உய்யக்கொள்ளுமாறு, அந்த அருட்சத்தி எத்தனையோ உபகாரங்களைத் தந்தருளுகின்றாள். இந்தப் பூமி, பூமியில் உள்ள போகங்கள், அவைகளை அனுபவித்தற்குரிய இந்த உடம்பு ஆகிய இவை அனைத்தும் அவள் உபகரித்தவைகள்.

"அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம்"
—சித்தியார் 1ஆம் சூத். 69

அதனாலே அவளுக்குத் 'தரும் சத்தி' என்று பெயர். நமக்கு நன்மை தருபவைகளைத் தந்து கொண்டிருப்பவள் அவள்.

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்."

என்பது திருவருட்பயன்.

சிலர் இந்தப் பூமியைக் கயிற்றிற் பாம்புபோன்ற பொய்த்தோற்றம் என்றும், வேறு சிலர் நீரோட்டம் போன்ற—ஒன்றுமற்ற—வெறும் மாற்றம் என்றும் சொல்லுகிறார்கள். பூமி தோற்றமும் அன்று மாற்றமும் அன்று. இந்தப் பூமி நாமுய்யும்பொருட்டு நமக்கு உபகரிக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பூமி போலவே இந்தச் சரீரமும் நாமுய்யும்பொருட்டு நமக்கு உபகரிக்கப்பட்டது. கண்பார்வை குறைந்தவர்களுக்குக் கண்ணாடி உபகாரஞ் செய்வதுபோல, அறியாமையாகிய இருளிலே கிடக்கிறவர்களுக்குச் சற்றே அறிவு உதிப்பதற்கு இந்தச் சரீரம் உபகாரமாயிருக்கிறது.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை
வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்"

என்பது நாவலர் எழுதிய இரண்டாம் பாலபாடத்து முதல் வசனம். இந்தச் சரீரத்துக்குள்ளே மனம் புத்தி சித்தம் என்கின்ற அருமையான அந்தக்கரணங்கள் அமைந்திருக்கின்றன. அவைகளிலிருந்து எண்ணங்கள் நீர்க்குமிழிகள்போல

எழுகின்றன. எழுகின்ற அவ்வெண்ணங்கள் ஒலி வடிவு எடுத்து வெளிவருகின்றன. எண்ணங்களைப் பொருள் என்றும், எண்ணங்களின் ஒலிவடிவைச் சொல் என்றும் வழங்குகின்றோம். சொல்லும் சொற் கருத்தாகிய பொருளும் ஒன்றுசேர்ந்த ஒரு உபகாரம் இந்தச் சரீரம். இது ஒரு நூதன இயந்திரம்.

'மாயா யந்திர தநு'

என்று இதற்கு ஒரு பெயரிட்டிருக்கிறார் மெய்கண்ட தேவநாயனார். தநு என்றால் சரீரம். சரீரயந்திரத்தை எவள் எக்கருத்தில் நமக்கு உபகரித்தாளோ, அவள் கருத்தறிந்தே அதனை உபயோகிக்க வேண்டும்.

## அவள் கருத்தை அறிவதெப்படி ?

அவள் கருத்தை அறிவிப்பது வேதம். வேதப் பொருளைத் தெளிவுபடுத்தி வந்தவைகள் குரு குலங்கள். அவை பழையகாலத்திலே காட்டுக்குள் இருந்தவை. பிறகு நாட்டுக்கு வந்து, திண்ணைப் பள்ளிகளிலிருந்து, இப்பொழுது நகரத்தில் நிமிர்ந்து, கல்லூரிகளாய், சர்வகலாசாலைகளா யிருக்கின்றன. காலத்துக்கேற்ற கோலம் பூண்டுவிட்டன. வெளித்தோற்றம் மாறுவது குற்றம் அன்று. ஆனால், குருகுலங்களின் அடிப்படை நோக்கம் இப்பொழுது இருந்த இடமுந் தெரியாமற் குடி போய்விட்டது ; மாங்கல்யத்தை மறந்து வந்து சேர்ந்த மணமகன் நிலையாய்விட்டது. உண்டிருந்து எப்படியோ வயிறு வாழ்வதுதான் உடம்பு எடுத்த நோக்கம் என்று முடிந்தது.

"புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின்றோம் அவமே..."

—திருப்பள்ளியெழுச்சி 10

நாம் அவள் தந்த இந்தப் புவனியில் வந்தும், அவள் தந்த இந்தச் சரீரத்துட் புகுந்தும், அருமையான கருவி கரணங்கள் இருந்தும், அவள் கருத்தை அறிய முயல்வதில்லை; அவள் கருத்தைப் பேசும் வேதங்களைப் பொருள் செய்வதுமில்லை; அருமையான இந்தப் பூமியில் வந்து பிறந்தும் பிறவாதவர்களா யிருக்கின்றோம். பள்ளிக்குப் போயும் பயன்பெறாத பிள்ளைகள்போலே வாழ் நாளை வீழ்நாள் செய்கின்றோம்.

"அரன்றன் பாதம் மறந்துசெய் அறங்க ளெல்லாம்
வீண்செயல்."

—சித்தியார் 2ஆம் சூத். 27

அவளுடைய கருத்துக்களை அறிதற்கு வழி இருக்கிறது; முறை இருக்கிறது. நாமோ அந்த வழி முறைகளை வகுக்கின்ற வேதங்களை, அவை களை எடுத்துச் சொல்ல வல்ல சான்றோர்களைக் கைவிடுத்து, நம் மனம் போனவாறு, வீண்செயல் செய்கின்றோம். வீண் செயல் பாவச் செயல்; நமக்கும் பிறர்க்கும் பயன் தாராத செயல்; கேடு சூழ்கின்ற செயல். வீண் என்பதற்கு நன்மை தீமை இரண்டுமற்ற செயல் என்று தொடக்கத்திற் பொருள் சொல்ல முயன்றோம். உண்மையால் நோக்குமிடத்து, வீண் செயல் பாவச்செயலே!

வாகீசர் திருக்கைலாசத்திலே 'அரன்றன் பாதங்களை மறவாது' தவம் புரிகின்றார். இரா வணன் கைலாசகிரியின் கீழே அகப்பட்டு, நசுங் குண்டு, அலறுகின்றான். அந்த அலறுகை, திருக்

கைலாசபதியின் திருவடிகளாகிய திருவருளின் கருத்தறியத் தவங்கிடந்த வாகீசரின் தவத்தைக் குழப்புகின்றது; தவம் குலேகின்றது. வாகீசர் எழுந்தார்; இராவணனை நோக்கி நடந்தார்; அவனுக்கு இரங்கினர்; அவன் உயிர்தப்புதற்கு வழி சொல்லிக் கொடுத்தார்; அவன் உயிர் தப்பினன். அதனல் வாகீசருக்கு ஒரு பெருமிதம் உண்டாகலாம். ஆனல் அவர் தமது இரக்கத்தைத் திருவருளின் கருத்தறிந்து செய்யவில்லே.

சர்வ சீவ தயாபரரான திருக்கைலாசபதி இராவணனைத் தண்டிக்கிருர்; வாகீசர் தண்டித்தவர் கருத்தறியாது இரங்குகின்ருர்.

வாகீசர் செயல் தனி இரக்கமேயாயினும், கருத்தறியாத இரக்கம். ஆதலினலே அந்த இரக்கம், அவர் அந்த நிலேயினின்றும் இறங்கி, ஒரு பிறவி எடுத்தற்கு வித்தானது. வாகீசர் இந்தப் புவனிக்கு வந்தார்; திருநாவுக்குஅரசர் ஆயினர். புவனிக்கு வந்தும், திருவருளின் கருத்தறியாது இரங்குகின்ற,

“ புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம் ”

—திருவாசகம் திருத்தோணேக்கம் 6

என்று வாதவூர்ப் பெருமானும்,

“ புத்தரொ டமணர்கள் அறவுரை புறவுரை ”

--சம்பந்தர் பதிகம் 125

என்று சீகாழிப்பெருமானும் ஓதிய புறச்சமயத்துள் ஒன்ருகிய சமணத்துட் புகுந்தார்; தவறி விழுந்தார். விழுந்து, திருவருளின் கருத்தறியாது செய்யும் செயல் எவ்வளவு உயர்ந்தது ஆயினும், வீண் செயலே என்பதை உணர்ந்தார். அந்த உணர்ச்சி,

" காத்தாள்பவர் காவலி கழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்."

—அப்பர் தேவாரம் 5

※

" என்னிலும் இனியான் ஒருவன் உளன் "

—அப்பர் இன்னம்பர்

என்ற அருமருந்தன்ன திருவாக்குக்களாய் எழுந்தது.

திருவருளின் கருத்தறியாது இரங்கியதனாலே, மகா முனிவராகிய வாகீசருக்கு ஒரு பிறவி வந்ததானால்,

திருவருளின் கருத்தறியாது 'இரக்கம்', 'சீவகாருண்யம்', 'பரோபகாரம்' என்ற விலாசத்தில் நடக்குஞ் செயல்களுக்குத் தலைசாய்க்கின்ற இந்த உலகத்தின் கதி ஐயையோ! யாதாய் முடியும்!

---

நீ பிறர்க்குத் தீங்கு செய்தாயாயின், அவர்க்கு அது பற்றி உண்டான வருத்தத்தை எவ்வாருகவேனும் நீயே பரிகரித்து அவர்களைத் திருப்தி செய்தல்வேண்டும். உன்னல் வருத்தமடைந்த ஜீவருக்கு அது தணிந்து திருப்தி உண்டாகாதவரை உனக்கு உய்வு கிடைக்கமாட்டாது. நீ பிறனுக்குச் செய்த தீங்கு ஒன்றற்கு ஒருவிதத்தாலேனும் பரிகரிப்புச் செய்வதியலாதாயின் நீயும் அவனைப்போலவே அதுபோலுந் துயரத்தை உனக்கு உண்டாக்கி அதற்காக உன் சிவபரியந்தம் துயரத்தை அநுபவி. எங்ஙனமெனின், சோழராஜா பசுவைப் போலவே தானும் தன் பிள்ளையை இழந்து துன்புறமுயன்றது போலவாம். —ஆன்மவிசாரம்

# சமயம் 2

## தர்மதளத்தில் வைத்துச் செய்யுங் கருமமே கருமம்.

## காமியம் வேறு : நிஷ்காமியம் வேறு

“ தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.”

—திருக்குறள் 266

*தங்கருமமாவது திருவருளின் கருத்தறிந்து செய்யுங் கருமம். அந்தக் கருமமே தவம்.*

*கருத்தறிந்து கருமஞ் செய்பவர்களே “ தவஞ் செய்வார்.” திருவருளின் கருத்தறியாது, பிறர் கருமஞ் செய்கிறேம் என்பவர்கள் யாவரும் உண்மையில் அவம் செய்பவர்களே.*

“ நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.”

—திருக்குறள் 948

☀

“ தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன் ”

*என்று எவன் தன்னைச் சொல்ல வைக்கின்றனே, எவர்களுக்கு நன்மை செய்ய விரும்புகிறனே, அவன், அவர்களுக்கு இருக்கிற ‘ நோய் என்ன ’ என்பதை முதலில் அறியவேண்டும். அறிந்த பிறகு அவர்களுக்கு அந்த நோய் வந்த காரணத்தை ஆராய்ந்து தெளியவேண்டும். அதன்மேல் அந்த*

நோயைத் தீர்க்கும் உபாயத்தை அறியவேண்டும். உபாயத்தை அறிந்தபிறகு, அந்த உபாயத்தால் நோய் தீரும் பக்குவத்தைத் திருவருளின் வழி நின்று அறிந்து, தனக்கும் நோயாளருக்கும் பிறர்க்கும் நன்மை வாய்க்கும்படி செய்ய வேண்டும். தனக்கும் நோயாளர் அல்லாத பிறர்க்கும் நன்மை யாவது, யாதொரு தீமையும் சம்பவியாமை.

"இதம் உயிர்க் குறுதி செய்தல்"

--சித்தி. 2ஆம் சூத். 13

இதம் என்ருல் நன்மை. நன்மையாவது இம்மையிலும் மறுமையிலும் மற்றும் எம்மையிலும் உறுதி பயக்கத்தக்க கருமஞ் செய்தல். அப்படிப்பட்ட கருமத்துக்கு அடித்தளம் தர்மம். தர்மமாவது திருவருளின் கருத்து இருந்தபடி. தர்மதளத்தில் வைத்துச் செய்யுங் கருமமே கருமம்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்."

--திருக்குறள் 505

தர்ம அடித்தளத்தில் எழுந்த கருமம் இதம் எனப் பட்டுப் பெருமை பயக்கும்; தர்ம அடித்தளம் இல்லாத கருமம் சிறுமை பயக்கும். பெருமை பயப்பதாய் இதம் எனப்பட்டுத் தர்ம அடித் தளத்திற் செய்யப்படுங் கருமம் இரண்டு வகைப் படும். ஒன்று பிற உயிர்க்குத் தீங்கு பயவாத கருமம். இது,

"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்."

--திருக்குறள் 209

என்று திருவள்ளுவரிற் பேசப்பட்டது. மற்றையது, பிற உயிர்க்கு உறுதி செய்வதின்மூலம் நன்மையை மேலும் மேலும் பெருக்கிக்கொள்வது.

இரண்டும் சுயநலங்களே. பிற உயிர்க்குத் தீங்கு விளையாமையாலும், பிற உயிர்க்கு நன்மை விளைத்தலாலும் ஒருவன் தனக்கு நன்மையைப் பெருக்கிக்கொள்ளலாம். பிற உயிர்க்கு நன்மை செய்தல் தன் நன்மைக்கே.

மகான்கள் கொடுந் துன்பங்களைத் தாங்கியும் உடம்பையே விட்டும் பிற உயிர்களுக்கு நன்மை செய்கின்றூர்கள். அவையெல்லாம் தம் ஆத்ம விருத்திக்கே. இந்த உண்மை,

"நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது." --திருக்குறள் 235

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" --திருக்குறள் 72

என்கின்ற அருமைத் திருக்குறள்களிற் பேசப்பட்டிருக்கின்றது. பிற உயிர்க்குத் தீங்கு விளையாத கருமமும், பிற உயிர்க்கு நன்மை விளைக்குங் கருமமும் ஆகிய இரண்டுவகைக் கருமமும் பெருமை விளைவிப்பவை; தர்மத்தை அடித்தளமாகக் கொண்டவை. தர்மத்தை அடிப்படையாகக் கொண்டமையால் இவ் விருவகைக் கருமத்துக்கும் 'சுதர்மம்' என்று பெயர். 'சு' என்றுல் சம்ஸ்கிருதத்தில் நல்லது என்று அர்த்தம். சுதர்மம்—நல்ல தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட கருமம். இந்தச் சுதர்மமாகிய கருமம் ஒவ்வொருவனும் தன் கருமமாகச் செயற்பாலது ஆதலின், 'சுவதர்மம்' எனவும் பெயர் கூறப்படுகின்றது. இந்தச் சுவதர்மந்தான், "தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்" என்ற திருக்குறளில், 'தங்கருமம்' எனப்பட்டது.

17602



திருமுருகாற்றுப்படையில் "தாவில் கொள்கை தந் தொழின் முடிமார்" என்ற அடியில் 'தந்தொழில்' என்று குறிப்பிட்டதும் இதுவே. 'தந்தொழில்', 'தங்கருமம்', 'சுவதர்மம்', 'சுதர்மம்' ஆகிய இவைகள், ஒரு கருத்தில், பிற உயிர்க்குத் தீங்கு விளையாத கருமமும், பிற உயிர்க்கு நன்மை விளைக் குங் கருமமுமாகிய இருவகைக் கருமத்துக்கும் வழங்கப்பட்டமை காட்டப்பட்டது.

இனி, சுதர்மங்களாகிய இந்த இருவகைக் கருமங்களும் காமியங்களே என்பது சிந்திக்கத் தக்கது. காமியங்கள் — காமிக்கத் தக்கவைகள்; விரும்பத்தக்கவைகள்.

காமியங்களாகிய கருமங்கள் பலன் அளிப் பவைகள். பலன் இம்மையிலோ மறுமையிலோ வேறு எம்மையிலோ வரலாம். காமிய கருமத்தைச் செய்வோனுக்கு நோக்குப் பலனே ஆயினும் கருமத்தைச் செய்யும்போது நோக்குவது பலனை அன்று; பலனை விளைக்குங் கருமத்தின் அடித்தள மாகிய தர்மத்தை.

செய்யுங் கருமம் சுதர்மமோ என்பதுதான் விசாரித்து விரும்பத்தக்கது. விருப்பம் கரும அடித் தளமாகிய தருமத்தில் இருக்கவேண்டியது. பலன் தானே வரும்.

அதே அடித்தளமாகிய சுதர்மத்தை விரும்புகிற வர்கள், சுதர்மமாகிய கருமத்தைச் செய்யும்போது, சம்பவிக்குந் துன்பங்களைப் பொருள் செய்வதில்லை. எதிரில் வரும் 'இன்னுமைகளை இன்பமாகக்

கொள்வார்கள்'. 'இன்பம் விழையார்'; 'வினை விழைவார்'. வினைவிழைதலாவது சுதர்மமாகிய கருமத்தை விரும்புதல்; கருமத்தின் அடிப்படையான தருமத்தை விரும்புதல் என்றபடி.

காமியங்களின் அடித்தளமாகிய தருமத்தை விரும்புகிறவர்களே, பெரிய இன்பங்களை இனிது நுகர்பவர்கள். அவர்கள் அடையக்கடவ பெரிய பலன்களோடு, கருமத்தைச் செய்யும்போது பட்ட துன்பங்களை ஒப்பிட்டு நோக்கும்போது, துன்பங்கள் சிறு தூசி மாத்திரையே.

ஓர் இருடி கடுங் கொடுந் தவஞ் செய்கிருன். அவன் பெறும் வரங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது, அவன் பட்ட துன்பங்கள் எம் மாத்திரம்!

※

" ஆரஞர் மூழ்கியும் ஆக்கம் இழந்தும்
வாரி சுருங்கியும் வாய்மை நிறுத்தித்
தாரணி ஆள்அரிச் சந்திரன் "

—கந். தெய்வயானை 43

என்று கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளால் வருணிக்கப்படுகின்ருன், அரிச்சந்திரன். இந்த அரிச்சந்திரன் ஒருநாள், சுடலையில் உள்ள பரண் ஒன்றிலே; முழத்துண்டு கட்டிக்கொண்டு, தன்னந் தனியே படுத்திருக்கின்ருன். அதனைக் கண்டு, ஜனநாயக உலகம் கண்ணீர் வடிக்கின்றது. ஆனுல் அதே சமயத்தில், அந்த அரிச்சந்திரன் உவகை மீக்கூர்ந்து காலை ஆட்டித் தாளம் போட்டுக் 'கதியிழக்கினுங் கட்டுரை இழக்கிலேன்' என்று ஒரு பாட்டுப் பாட

வந்து பாடுகிறுன். பாட்டுக்குச் சுரமும் பெருக்கு கிறுன். சுதர்மத்தில் ஒரு கணந்தானும் நிற்பதற்கு, ஒருவனுக்கு முடியுமானுல், அந்தக் கணம் இந்த உலகம் முழுவதையும் விற்ருயினும் பெறக்கூடியதே. அத்துணைச் சிறந்தது சுதர்மம். அப்படிப்பட்ட சுதர்மத்திலே நாள் முழுதுங் கிடக்கிறுன் அரிச்சந் திரன். அரிச்சந்திரனுக்குப் பாட்டு வராமல் இந்த நில உலகத்தில் வேறு யாருக்குப் பாட்டு வருவது.

※

அருச்சுனன் போர்முனையிலே தயங்கினுன். 'நீதிக்குப் பகைவர்கள், உனக்குப் பகைவர்கள்; அவர்களை வெட்டிக் குவிக்கிறது உனக்குக் கருமம்; அது உன் சுதர்மம்' என்று கண்ணன் வழி காட்டினுன்; அருச்சுனன் சுதர்மத்தில் நின்ருன். காண்டீபம் கிண் கிண் என்று ஒலி செய்தது. எதிரிகள் இறந்து குவிந்தார்கள். அடுத்த பிறப்பில் கண்ணனுக்கும் எட்டாத 'கண்ணப்பர்' ஆயினுர் அருச்சுனர்.

※

சஞ்சயர் என்கின்ற பிராமணர் தருமருக்கு வேதாந்தஞ் சொல்லப் போனுர். தருமர் 'இப் பொழுது எதிரிகளைக் கொன்று குவிக்கின்ற கருமம், எனக்குச் சுதர்மம்' என்ருர். பிராமணர் வாய் பொத்திச் சென்ருர்.

※

மனுநீதிகண்ட சோழர் மாசு மறுவின்றிச் செயற்பால கருமம் இது என்று கண்டார். கருமத்

தின் அடித்தளமாகிய சுதர்மத்தில் உறைத்து நின்ருர். அந்தக்ஷணமே மகனை முறை செய்தார். சுதர்ம அக்கினி எதிரில் அப்பொழுதைய துன்பங்கள் துகள் துகள் ஆய்ச் சாம்பர் ஆயின. காமிய கர்மங்களுக்குத் தர்மமே அடித்தளம். அதுவே விரும்பத்தக்கது.

"தருமம் என்ெருரு பொருள் உளது"

என்று கந்தபுராணம் விதந்து பாராட்டுவது அந்தத் தருமம்; அது விரும்ப வேண்டியது. உலக அன்னை,

"அறஞ் செய விரும்பு"

என்று அருளுகின்ருள்.

தர்ம அடித்தளத்திற் செய்யப்படுங் காமியங்களை நிஷ்காமியம் என்று வழங்குவது அடாது. காமியகர்மம் வேறு; நிஷ்காமியகர்மம் வேறு.

ஒரு தாய் அன்பினுல் விழுங்கப்பட்டுத் தன் குழந்தைக்கு ஒன்று செய்கின்ருள்; செய்யாமலிருக்க முடியாமற் செய்கின்ருள். அவள் தர்மத்தையோ பலனையோ நோக்கவில்லை; அது நிஷ்காமியம்.

ஒரு கண்ணப்பர் அருளினுல் விழுங்கப்பட்டுப் பேயினுற் கொள்ளப்பட்டவர்போன்று, தம்வயம் இழந்து, ஒன்று செய்கின்ருர். செய்யாமலிருக்க முடியாமற் செய்கின்ருர்; எதையும் நோக்காமலே செய்கின்ருர். அது நிஷ்காமியம்.

காமியமாக ஒன்றைச் செய்து, அது பயன் அளியாதபோது, தோல்வி மனப்பான்மையில் 'நான் அக்கருமத்தைப் பலன் கருதாமற் செய்தேன்; நிஷ்காமியமாகச் செய்தேன்' என்று உயர்தர பாஷையிற் சொல்லுவது தன்னைத் தானே வஞ்சிப்பது.

காமியம் வேறு; நிஷ்காமியம் வேறு. காமியம் தருமதளத்திற் செய்வது; தருமம் திருவருளின் குறிப்பு. நிஷ்காமியம் தரும விரோதமன்று; அது மிகமிக உன்னதமானது.

---

சமுசாரத்தால் எப்பொழுதும் குடும்ப சம்ரக்ஷணைக்கான விவகாரங்களே மிக்கிருப்பதால் ஈசுவரனுக்குத் தொண்டு பட்டுய்ய நமக்கு நேரமில்லை என்பீர்களானால், விவகாரங்களிற் சென்று மிஞ்சின நேரம் நுமக்குக் கிடைப்பதில்லையா? அப்பொழுது யாது செய்கின்றீர்கள்? ஈசுவரனையுஞ் சிந்தித்தபடியே செய்யத்தக்கதான விவகாரங்களை நீங்கள் நடத்தும்பொழுது அங்ஙனம் சிந்தியாமைக்கு நியாயமென்ன? நீங்கள் அங்கும் இங்கும் நடந்துசெல்லுங்காலங்களில் யாது செய்கின்றீர்கள்? உங்களுக்கு ஓய்வு கிடைக்குங் காலங்களில் இடையறாமல் தொண்டுபுரிந்து விவகாரங்களை நடத்துங் காலங்களிலும் குடம் எடுத்தாடுவாள் போல் ஈசுவரன்மேற் சிந்தை வைப்பீர்களானால், அப்பால் ஈசுவரன் உங்கள் ஊழியத்தின்மேல் இரங்கி, நீங்கள் விவகாரமற்றுச் சதா தனக்குத் தொண்டுபுரியத்தக்க நிலையில் உங்களை வைப்பான்.

—ஆன்மவிசாரம்.

# சமயம் 3

## திருவருளின் குறிப்பை அறிந்து அதன்வழி நடப்பது சமயம்

## மகான் அரவிந்தர் எப்பொழுது சமயி ஆனுர்

*இராவணன் அழுதான்.*
*வாகீசர் இரங்கினர்.*

*இராவணனில் வியாபித்திருக்கும் சர்வசீவ தயாபரர்தாமே வாகீசரிலும் வியாபித்திருக்கிருர்.*

*அதனுலே வாகீசர் இரங்கியதில் நூதனம் ஒன்றுமில்லை.*

*ஏழை இரக்கிருன். பார்க்கிறவர்கள் இரங்குகிருர்கள். ஒரேஒரு தயாபரன்ருனே ஏழையிலுமிருக்கிருன்; எங்குமிருக்கிருன். இரக்கம் நமது குணம் அன்று; நம்மிலிருக்கும் சர்வசீவ தயாபரன் குணம். அவன் அருளிய சொத்து அது. அவன் சொத்தை அவன் கருத்தறிந்து உபயோகிக்க வேண்டும்.*

*வாகீசர் இராவணனுடைய அழுகை நோயை ஆராய்ந்திருத்தல்வேண்டும்; நோய்க் காரணத்தை விசாரித்திருத்தல்வேண்டும். சர்வசீவ தயாபரன் தானே இராவணனைத் தண்டிக்கிருன்; 'அவன் கருத்தென்ன' என்று, அறிய முயலல்வேண்டும்.*

அப்படிச் செய்யாது இரங்குவது சந்நிதி விரோதம்; இரக்கத்தைத் தந்தவனைக் கேட்டால், இரக்கத்தை நீதியாக வழிசெய்ய, அவன் வழி காட்டுவான்; வழிகேளாது வழிபோக ஒண்ணாது.

சம்பந்தப்பெருமானுக்குச் சமண் தொல்லைகளை மதுரையில் உள்ளவர்கள் முறையிட்டார்கள். அவர், சர்வசிவ தயாபரரிடஞ் சென்று, அப்பனே,

"சமண் சித்தரை அழிக்கத் திருவுள்ளமே"

"உன் கருத்தென்ன ?"

என்று கேட்டார். உத்தரவு கிடைத்தது. சம்பந்தப் பெருமான் உத்தரவைச் செய்தார். அது தர்மம். அரன்றன் பாதம் மறந்து செய்யவில்லை.

*

மனிதர்களாகிய நாமெல்லாம் நம்மை நடத்துகின்ற திருவருளின் கருத்தை அறிய முயலாமல் நம் மனம் போனவாறு காரியங்களைச் செய்து வருகின்றோம். நாமெல்லாம் சொல்வழி கேளாத பிள்ளைகள்.

ஒரு தாய் தான் பெற்ற பிள்ளை தன் சொல்வழி நில்லாதபோதும், படு பொல்லாத பிள்ளையாயிருந்தாலும், தாயாகிய தன்னைத் தூற்றிக்கொண்டு திரிந்தாலும், அந்தப் பெற்றதாய் அந்தப் பொல்லாத பிள்ளையைத்தானும், கைவிடுவதேயில்லை. பெற்ற மனம் பித்து. சர்வசிவ தயாபரன் பித்தன்; சர்வசீவ தயாபரை பித்தி. அவள் பேதித்து நம்மை வளர்த்தெடுக்க முயன்றுகொண்டேயிருக்கிறாள்.

"ஓடி மீள்கென ஆடல் பார்த்" திருப்பவன்.

ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடி யிருக்கும் கொக்குப்போலே, அந்தச் சர்வசீவ தயாபரன், நாம் ஓடுமட்டும் ஓடி, களைத்து மீளும் பக்குவத்தைப் பார்த்துக்கொண்டே யிருக்கின்றான். 'ஆடல்' என்ற வார்த்தை 'ஆள்+தல்' என்று பிரிக்கப்படும். அவன் ஆத் மாக்களை ஆளும் பருவம் பார்த்துக்கொண்டிருக் கிறான். அவன் எப்படியிருக்கிறானோ, அவளும் அப்படித்தான் ஆளும் பக்குவம் பார்த்துக்கொண் டிருக்கிறாள். எப்பொழுது நாம் தன்னைத் திரும் பிப் பார்ப்போமென்று, சமயம் நோக்கியிருக்கின் றாள். இருக்கின்றாள் என்று சொல்வது தவறு. நம்மைத் தொடர்கின்றாள். ஐயோ! நாம் அவளைத் திரும்பிப் பார்க்கின்றோமில்லை. திரும்பிப் பாராத நன்றிகெட்ட பிள்ளைகள் என்று கருதி நம்மைக் கைவிடுகின்றாளா? அந்த உலகமாதா அப்படிச் செய்வதே இல்லை. அது அவளுக்குத் தெரியாது. அவள் பரம கருணாகரி; நம்மைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றாள்.

"நல்ல சிவனார் நம்மை வருத்துவது
கொல்ல அல்லக் கொல்ல அல்லப்
பொல்லாப் பிணிபோக்க"

நாம் போகும் வழியில் அந்தக் கருணாகரி, எத்தனை பொறிக்கிடங்குகள், இடறு கட்டைகள் வைத்துப் பார்க்கின்றாள். அப்படி அவள் செய்தும், நன்றி கெட்ட நாய்களாகிய நாம் அவளை ஒரு முறை

* இருபாவிருபஃது — 18

*யாவது திரும்பிப்பார்க்கின்றோமா? அதுதானே நமக் கில்லை. "அந்தோ இந்தக் குழந்தைக்குப் பொல் லாத நோய்; கண் கடை தெரியவில்லை; குருட்டுக் குழந்தை; செவியும் செவிடு" என்று சொல் லிக்கொண்டு, அந்த அன்னை நம்மைத் தொடர்ந்து கொண்டே யிருக்கின்றாள்.*

☼

"புல்லாகிப் பூடாய் ...........
...................................
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்து"

—சிவபுராணம்

☼

"....................வார்கடல் உலகில்,
மானிடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
...........................................
சாலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
...........................................
பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
...........................................
தெய்வம் என்பதோர் சித்தம்உண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்"

— போற்றித்திருவகவல்: திருவாசகம்

*ஒருநாள் மகான் அரவிந்தர் சிறைக்கூடம் ஒன் றிற் சிறை வைக்கப்பட்டிருக்கின்றார்; சிந்தனையில் ஆழ்ந்திருக்கின்றார். 'பேசித்து நம்மை வளர்த் தெடுத்த பெய்வளை' ஆகிய 'அவள் கருத்*

தென்ன' என்று யோசிக்கத் தொடங்கினர். இராப்பகல் யோசித்தார். இந்த உலகத்திலே இந்த நூற்றுண்டிலே, அன்று அவருக்குத்,

"தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி"

இருக்கலாம்.

பரமாத்மாவாகிய கிருஷ்ணன் என்னுடனும் இருக்கின்றான்; என்னைச் சிறை வைத்தவனுடனும் இருக்கின்றான். 'அவன் கருத்தென்ன' என்ற விசாரத்துக்கு வந்தார்.

"முனிவி லாததோர் பொருளது கருதலும்."

முனிவு என்றால் வெறுப்பு. எக் காலத்திலும் வெறுப்பின்றி நம்மால் அடையற்பாலதும், எக் காலத்திலும் வெறுப்பின்றித் தன்பால் நம்மை அடையச் செய்வதுமாகிய,

## பொருள் யாது ?

அப்பொருளே கருதத்தக்கது; விசாரஞ் செய்தற்கு உரியது. மகான் அரவிந்தர் விசாரிக்கத் தொடங்கினர். வேத உபநிஷதங்களில், அப் பொருளைப்பற்றி அவர் பலவாறு படித்ததுண்டு; அறிந்ததுண்டு. ஆனல், அன்றுதான் அப்பொருளை விசாரிக்கத் தொடங்கினர். சிறை வீடு செய்யப் பட்டது. அவரோ அறியாமையாகிய சிறை வீடு செய்யத் தொடங்கினர். தாமாகவே கட்டியணைத்த உலக பந்தங்கள், கைநெகிழ்ந்து தாமே கழன்றன. அவர் சுமந்திருந்த பாரத சேனபதித்துவங்கூடத் தலையிலிருந்து மெல்ல இறங்கி, மகாத்துமா காந்திஜீயைத் தேடி அடைந்தது.

ஸ்ரீராமன் எந்தத் திசையை நோக்கிப் புறப் பட்டானோ, அந்தத் திசையை நோக்கி மகான் அரவிந்தர் புறப்பட்டார். வெளிப் பார்வைக்கு வெள்ளை அரசாங்கத்துக்கு அஞ்சிச் சரண்புகுபவர் போல, மகான் புதுச்சேரியிற் புகுந்தார்; விபீஷ ணன் எதற்கு அஞ்சி எந்த ஸ்ரீராமனைச் சரண டைந்தானோ, அந்த வகையிலேதான், அறியாமை யாகிய அரக்கனுக்கு அஞ்சி, அந்தப் புதுச்சேரியில் அரவிந்தர் சரண்புகுந்தார்.

தெய்வத்தின் சித்தம் என்ன?

என்று சிந்திக்கத் தொடங்கினார். அன்றே அப்பொ ழுதே அவர்

**சமயி**

ஆயினார். சமயந் தொடங்கியது.

※

எவன் ஒருவன் தன்னைச் சதா தொடருகின்ற

'பேதித்து நம்மை வளர்த்தெ'டுக்கின்ற —

பராசக்தியாகிய அன்னையின் திருவருட் குறிப்பை அறிய முயற்சிக்கின்றானோ, அறிதற்குரிய சாதனங் களைத் தேடி அமைத்துக்கொண்டு, அவள் கருத் தறிந்தன்றி, நானாக ஒன்றை நினைப்பதில்லை — சொல்வதில்லை — செய்வதில்லை — என்று,

மனம் வாக்குக் காயங்களுக்குக் கட்டளை பிறப்பிக்கின்றானோ அவன் — அந்த உத்தம மனி தன் — அந்தக்ஷணமே சமயி ஆகின்றான்; அவ னுக்குச் சமயந் தொடங்குகின்றது.

இனி அவன் சொல்வழி கேட்கின்ற பிள்ளை.

அவன் இனிமேற் பராசக்தியாகிய அன்னையின் கருத்தறிந்தன்றி — அறிகிற முறையில் அறிந்தன்றி — அவளைக் கேட்டன்றி — அவளுடைய சம்மதத்தைப் பெறுகின்ற முறையில் பெற்றன்றி—

ஒன்று நினையான், சொல்லான், செய்யான்.

☼

அர்ச்சுனன் பாரதமுனையிலே கிருஷ்ணன் கருத்தறிந்து, அவன் வழியில் நடக்க ஆரம்பித்தான்.

☼

சம்பந்தப்பிள்ளை தாய் தந்தையரைக் கேளாமல், தானே ஒன்று செய்யத் தலைப்படுவதில்லை; அந்தப் பிள்ளை நல்ல தலைப்பிள்ளை; சமயத்தின் உச்சப்பிள்ளை.

☼

உலகத்தைத் திருவருள் நடத்துகின்றது. திருவருளின் குறிப்பை அறிகிறமுறையில் அறிய முயற்சிப்பது — அறிந்து அதன்வழி நடப்பது — சமயம்.

---

எல்லாச் சிந்தனைகளையும் எல்லாச் செயல்களையும் எல்லா வார்த்தைகளையும் ஈசுவரனிடத்தில் அர்ப்பித்தும் நாம் ஈசுவரனை அணுவளவேனும் மறந்திருப்போமாயின், அது நம்மைப் பெரிய துக்கத்திலாழ்த்திவிடும். ஏனெனில் இவற்றை அர்ப்பிப்பதும் நாம் அவரை மறவாதிருத்தற்கே ஆதலால்.

— ஆன்மவிசாரம்

## சமயம் 4

நாமெல்லாம் சூத்திரப்பாவைகள். பரன் ஆடல்புரிவிப்பவன். அவன் இன்றி நாமாக அசைதல் முடியாது.

# நாம் செய்கின்ற நம் செயல் கடவுள் செயல் ஆகாது.

"அவனின்றி அணுவும் அசையாது"

இந்த உடம்பை உயிர் இயக்குகின்றது. அவ்வாறே உயிரை உயிர்க்குயிர் இயக்குகின்றது.

உயிர் பிரியுமானுல் உடம்பு உதவாத பிணம். உயிர்க்குயிர் பிரியுமானுல், உயிரின் நிலையும் அவ்வாறேதான். உயிர் உயிர்ப்புஅற்றுக் கிடக்கும்.

ஆனுல், உயிர் உடம்பைவிட்டு ஒருநாள் பிரியும். உயிர்க்குயிர் உயிரை விட்டு எக்காலத்திலாயினும் பிரிவதில்லை.

* * *

உடம்பு அசைகின்றது; உடம்பை உயிர் அசைக்கின்றது. ஆகவே, உடம்பின் செயல், உயிரின் செயல். உடம்பால் வரும் நன்மை தீமைகளுக்குப் பொறுப்பாளி உயிர்.

இனி இவ்வாறே உயிர்க்கும் உயிர்க்குயிர்க்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றிச் சிந்திப்போம்.

உயிர் உயிர்க்கின்றது; உயிரை உயிர்க்குயிர் உயிர்ப்பிக்கின்றது. ஆகவே, உயிரின் செயல், உயிர்க்குயிரின் செயல். உயிரால் வரும் நன்மை தீமைகளுக்கெல்லாம் பொறுப்பாளி, உயிரை உயிர்ப்பிக்கின்ற உயிர்க்குயிராகிய கடவுள்.

எனவே,

உயிர் செய்யும் நன்மை தீமைகளுக்குப் பயனாகிய சுவர்க்க நரகங்களை, உயிரை இயக்குகின்ற உயிர்க்குயிராகிய கடவுளே சென்று சென்று அநுபவித்தல்வேண்டும். உயிரை உயிர்ப்பிக்கிற குற்றத்துக்காகக் கடவுள் நன்றாக அநுபவிக்கட்டும்.

இந்த முடிபை நாம் ஏற்றுக்கொண்டால்,

இசைத் தட்டுகளின் சுப அபசுரங்களுக்குப் பொறுப்பாளி, இசைத் தட்டுக்களை இசைக்கச் செய்கின்ற காந்த ஊசி என்று முடியும்.

ஒரு இசைத் தட்டுச் சுபசுரம் பாடுகின்றது. மற்றொரு இசைத்தட்டு அபசுரம் பேசுகின்றது; இந்த அபசுரத்துக்குக் காரணம் காந்த ஊசிதானா?

சூரியன் அந்தகாரத்தைப் போக்குகிறான்; இருள் விடிகிறது. உலகப் பொருள்கள் கண்முன் தோன்றுகின்றன. சில பொருள்களில் தீய இச்சை பிறக்கிறது. இது சூரியனின் குற்றமா?

* * *

உடலால் வரும் நன்மை தீமைகளை உயிரிலே சுமத்துவது நீதி. அப்படியே உயிரால் வரும் நன்மை தீமைகளை உயிர்க்குயிராகிய கடவுளிலே

சுமத்திவிட்டுத் தாம் தாம் நினைத்தவாறு திரிய மிகமிகப் பிரபலஸ்தர்களே முயற்சிக்கலாம். அந்தச் சுமையை ஏற்கக் கடவுள் உடன்படுவாரா என்பதுதான் நுணுகி யோசிக்கவேண்டுவது.

* * *

சிலர் உயிர்க்குயிர் என்று ஒரு பண்டம் இல்லை. உயிர்தான் கடவுள் என்கின்றார்கள். அவர்கள் நன்றாகக் கடவுளுக்கிருக்கட்டும். அந்தப் பிரமங்களோடு இங்கே பேச்சில்லை.

கடவுள் வேறு; உயிர் வேறு. ஆனால், கடவுள் உயிரை விட்டு விலகாமல், உயிர்க்குயிராயிருந்து, உயிரை இயக்குகின்றார்; உயிர் இயங்குகின்றது. உயிர் வெறும் சூத்திரப்பாவை; கடவுள் சூத்திரதாரி.

"சூத்திரப் பாவையாகிய உயிரின் இயக்கங்களால் வரும் நன்மை தீமைகளுக்குப் பாத்திரவாளி கடவுள்" என்பவர்களோடுதான் இங்கே பேச்சு.

* * *

சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமா மன்மதனை நோக்கிச் சொல்லுகின்றார்:

ஓ மன்மதா,

"பாடு திகழ்பாவை பல்லுயிரும் அல்லனவும்
ஆடல் புரிவிப்பான் அருவுருவாய் நின்றபரன்
நாடில் அவனையின்றி நம்மாலொன் றாகவற்றோ
ஏட இதனிலைமை இந்நாளும் ஓர்ந்திலையோ"

— கந் : காமதகன. 42

பாடு — பெருமை. பாவைக்குப் பெருமை யாவது, ஆட்டினால் ஆட்டுவித்தால் ஆடுகின்ற பெருமை.

நாமெல்லாம் சூத்திரப் பாவை. பரன் ஆடல் புரிவிப்பவன். அவனையின்றி நாமாக அசைதல் முடியாது.

ஏடா — அடா! இந்த இரகசியத்தை இன்னும் நீ அறியவில்லையா?

"எல்லார் செயலும் இறைவன் இயற்றுவதே
அல்லாது இலைஓர் அணுவும்அசை யாதுஎவையும்
நில்லா அருளின்றேல் நீஇன்று அவன்பாலிற்
செல்லாய் உனது செயலும்அவன் செய்கையதே"

— கந்: காமதகன. 40

உலகத்திலே உள்ள எல்லார் செய்யும் செயலும், இறைவன் செய்யும் செயலே; ஆகையினாலே, மன்மதனே நீ செய்கின்ற உனது செயலும் அவன் செயலே. "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்கின்ற ஆப்தர் மொழியை மறவாதே. "நீ இன்று அவன் பாலிற் செல்". நீ உன்னை ஆட்டுகின்ற அந்தக் கடவுளுக்குப் பக்கத்தே பயப்படாமற் போ. புஷ்ப பாணங்களை அக் கடவுள்மேல் தூவு. உன்செயல் அவன் செயலே. உனக்கு வரக்கடவதொன்றுமில்லை.

இது பிரமாவின் பிரமை செய்கின்ற பிரம சித்தாந்தம்; அப்பொழுதைய காரிய சித்தியின் பொருட்டுச் செய்த அபத்த உபதேசம். இதனை

அப்படியே ஏற்றுக்கொள்ளுதற்கு மன்மதன் உடன் படவில்லை. கடவுள் நம்மோடு ஒன்ருய், நம்மை இயக்குகிருர் என்பதை மன்மதன் மறுக்கவில்லை; அதை உடன்படுகின்ருன்.

'நம் செயலெல்லாம், கடவுள் செயல்'

என்ற முடிவைத்தான் அவன் ஒத்துக்கொள்ள வில்லை. அதுதான் நுணுகி ஆராயற்பாலது.

*　　　*　　　*

'நம் செயல் எல்லாம் கடவுள் செயல்' என்று உபதேசித்த பிரமாத்தாமும் அந்த முடிவை ஏற்றுக்கொள்ளமாட்டார். இது புராண இரகசியம். சில சமயங்களிலே 'நான் பிரமம்' என்று பிரமைகொள்ளுகின்ற பிரமாவின் வாயிலாகக் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் செய்த உயர்தா ஹாஸ்யம் இது.

பிரமை – மயக்கம். ஹாஸ்யங்கள் சாதாரண மானவர்களிடம் எதிர்ப்பலன் அளிப்பது இயற்கை. அது, ஹாஸ்யம் செய்தவர் குற்றம் அன்று.

*　　　*　　　*

இனி விஷயத்துக்கு வருவோம். உயிருக்கும் உயிர்க்குயிருக்கும் தொடர்பு சொல்லுதற்கு, ஒரு உவமையாக, உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பைச் சொல்லுவது ஒரு மரபு.

காணப்படாத அந்தத் தொடர்புக்குக் காணப் பட்ட இந்த உலகத்திலே, வேருெரு உவமை சொல்லுதற்கு வழியில்லை.

உவமைகள் உவமேயத்தின் ஒவ்வோர் அம்சத்தை விளக்கிக்கொள்வதற்குத்தான் உபகாரம். உவமைகளால் முழு அம்சமும் விளங்குமானால். உவமைகளே உவமேயம் ஆய்விடும். அது நிற்க.

உடல் உயிர் உவமானத்தில், உடல் சடம்; உயிர் சித்து. இரண்டும் இப்பொழுது ஒன்றாய்ப் பிரிப்பின்றி இருப்பவைகள். ஆனால், ஒருநாளைக்குப் பிரிபவைகள்.

உயிர் உயிர்க்குயிர் உவமேயத்தில், உயிரும் சித்து, உயிர்க்குயிரும் சித்து. உயிர் அறியும் சித்து. உயிர்க்குயிர் அறிவிக்கும் சித்து. இரண்டும் ஒன்றாய் பிரிப்பின்றி இருப்பவைகள்; என்றுமே அப்படி இருப்பவைகள்.

* * *

உயிர் அறியும் சித்து. ஆனால், தானே அறிய மாட்டாது. இசைத்தட்டுப் பாடும். ஆனால், ஊசியின் உதவியின்றித் தானே பாடமாட்டாது; அது போல.

* * *

ஊசியின் உதவியைப் பெற்று, இசைத் தட்டுப் பாடும்போது, ஊசியைக் கேட்டுப் பாடுவதில்லை. கேளாமலே தானே பாடுகின்றது.

அதுபோல,

உயிர், உயிர்க்குயிரின் உதவியைப் பெற்று, உயிர்க்கின்றபோது, உயிர்க்குயிரை உசாவாமலே உயிர்க்கலாம்; அவ்வாறே உயிர்க்கின்றது.

* * *

இசைத்தட்டு ஒருநாள், ஊசியை என்ன பாட்டுப் பாடவேண்டுமென்று கேட்குமானால், ஒரு

பயனும் இல்லை. ஊசி ஒன்றும் பேசாது. அது வெறும் சடம்.

ஆனல்,

உயிர் ஒரு நாள் உயிர்க்குயிரை நோக்கி, நான் எவ்வாறு உயிர்க்கவேண்டுமென்று கேட்டால், உயிர்க்குயிர், உயிரை நோக்கி,

உயிரே, நீ, இவ்வாறு உயிர்க்கவேண்டுமென்று சொல்லும்.

உயிர்க்குயிர் ஊசிபோல வெறும் சடமன்று; சித்து. ஆனல், அறிவிக்க அறிகிற சித்துமன்று; தானே என்றும் எல்லாவற்றையும் இயல்பாகவே அறிந்துகொண்டிருக்கின்ற சித்து.

* * *

உயிராகிய சித்து, தனக்கு உதவுகின்ற உயிர்க்குயிராகிய சித்தைக் கேளாமலே ஒன்று செய்யும்போது, அந்த உயிர்க்குயிராகிய சித்து, வெறும் சடம்போலே பார்த்துக்கொண்டு, ஆனல் வழக்கமாக உதவுகிற உதவியைச் செய்துகொண்டு வாளா இருக்கும்; தடை செய்யாது.

* "நிறுத்துவதோர் குணம்"

இல்லாதது அது.

சிறந்த அநுபவம் படைத்த ஆசிரியன் — காரியம் தெரிந்த ஆசிரியன் — மாணவன் ஒன்று செய்யும்போது, தீடீரென்று தடுப்பதில்லை. மாணவன் செல்லும் இடமெல்லாஞ் சென்று, அப்பாற் செல்ல

* சித்தியார் 9ஆம் சூத். 6.

முடியாமல், "குன்று முட்டிய குரீஇப்போல" முட்டுண்டு, தட்டுப்பட்டுத், தான் செல்லவேண்டிய வழி எது என்று கேட்கும்போது, அந்த உத்தம ஆசிரியன், 'வா அப்பா,' என்று வழிகாட்டுகின்ருன்; மாணவன் தொடர்கின்ருன்.

அறிவிக்கின்ற அந்தச் சித்து — கடவுள் — உத்தம ஆசிரியர்களுக்குள்ளே எல்லாம், உத்தமோத்தம ஆசிரியன்; மஹாமஹோபாத்தியாயன்.

"ஓடி மீள்கென ஆடல்பார்த்" திருப்பவன்.

"நிறுத்துவதோர் குணமில்லான்".

*   *   *

ஆகவே, உயிர், தனக்கு உதவுகின்ற உயிர்க்குயிரை உசாவியும் உயிர்க்கலாம்; உசாவாமலும் உயிர்க்கலாம். உத்தரவு பெற்றும் நடக்கலாம்; உத்தரவு இன்றியும் நடக்கலாம்.

உடம்பு உயிரின் உத்தரவின்றி எதுவுஞ் செய்ய மாட்டாது. உயிர் அப்படியன்று. உயிர், உயிர்க்குயிரின் உத்தரவின்றியுங் காரியஞ் செய்யலாம். அந்தச் செயலுக்கு உயிர்க்குயிர் பொறுப்பாளி ஆகாது.

சூரிய ஒளியின் உதவி பெற்றுக் கண் பாவம் செய்கின்றது. அந்தப் பாவத்துக்குச் சூரிய ஒளி பொறுப்பாளி ஆகாது.

ஆதலினுலே,

நமக்கு உதவுகின்ற உயிர்க்குயிரின் உத்தரவு இன்றி,

நாம்செய்கின்ற, நம்செயல், கடவுள் செயல் ஆகாது.

## சமயம் 5

## எவன், ஆட்டுவான் கருத்தென்ன என்று அறிய முயல்கின்றனோ, எவன் தன் ஆட்டங்களை நிறுத்தி வைத்துச் சிந்திக்கின்றனோ

## அவன் சமயி.

"ஆட்டுவித்தால் ஆர்ஒருவர் ஆடா தாரே"

— அப்பர்

அருமந்த இந்தத் திருவாக்கு இக்காலத்திற் பிரசங்க மேடைகளிலும் பிற இடங்களிலும் வெகு சாதாரணமாகப் பயின்று வழங்குகின்றது.

சமயவாதிகள் தொடக்கம் அரசியல் வாதிகள் இறுதியாக, இடையில் எத்தனையோ எண்ணிறந்த வாதிகள், குறித்த திருவாக்கை அடிக்கடி வழங்குகிறார்கள். எட்டாத இடங்களில் — முட்டு வருங் காலங்களில் — அந்த வாக்குப் பலருக்குப் பயன்படுகிறது.

அவன் ஆட்டுகின்றான் நாமெல்லாம் ஆடுகின்றோம்; ஆடாமல் இருக்க முடியாமல் ஆடுகின்றோம். ஆட்டுகிறவனைக் கேட்டும் ஆடலாம், கேளாமலும் ஆடலாம். சம்பந்தர் கேட்டே ஆடினார். ஒருவர் ஒருநாள் கேளாமல் ஆடி அப்பரானார். இனிக் கேட்டே ஆடுவதென்று அவர் தீர்மானஞ் செய்தார்.

கேட்டாடினுலுஞ்சரி, கேளாமல் ஆடினுலுஞ்சரி ஆட்டுகிறவன் ஆட்டிக்கொண்டே யிருக்கின்ருன். நாம் எல்லாம் கேட்டா ஆடுகின்ரேம்? அவன் ஆட்டுகிறது நமக்குத் தெரிகிறதா? சொல்வார் சொன்னுலும் கேட்கிறவர்களுக்கு மதிவேண்டாமா?

நாங்கள் எங்கள்பாட்டிலே ஆடுகின்ரேம். ஒருவன் ஆட்டுவதை நாம் அறியோம். அப்படியிருந்தும் நம்மவருட் சிலர், "ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே" என்று சில சமயங்களில் வாய்புலம்பி விடுகின்ருர்கள். வெல்வியிலும் புலம்புகிருர்கள்; தோல்வியிலும் புலம்புகிருர்கள். அவர்களுக்கு ஏதோ வியாதி!

அருமந்த அந்தத் திருவாக்கை உபயோகிப்பதற்கு நாம் ஆர்!

※

மகான் அரவிந்தர் ஒருநாள் 'ஆட்டுகிற ஆள் ஆர்? ஆட்டுகிறவன் கருத்தென்ன? என்ன தாளத்துக்கு ஆடவேண்டும்? தாளக்காரியின் கருத்தென்ன?' என்று யோசித்தார்; எழுந்து நடந்தார்; சிந்தித்தார்.

அவருக்குத் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டானது போலும். முனிவிலாததோர் பொருளைச் சிந்திப்பார் ஆயினர்.

எவன் ஒருவன் 'ஆட்டுவான் கருத்தென்ன'? என்று அறிய முயல்கின்ருனே — தன் ஆட்டங்களை அப்படியே நிறுத்திவைத்துச் சிந்திக்கின்ருனே

— அவன் சமயத்தில் ஒரு கால் தூக்கி வைத்துவிட்டான். அவன் சமயி.

ஆனுல், ஒரு உண்மையைக் காணத் தூக்கி வைத்த காலை, அவன் அப்படியே பழையபடி எடுத்தும் விடலாம்; திடீரென்றும் எடுக்கலாம்; சிறிது காலங் கழித்தும் எடுக்கலாம். வெற்றிகரமாக ஒருவன் பின்வாங்கலாம். கோடிமுறை பின் வாங்கலாம். எண்ணிறந்த பிறவி எடுத்துச் சமயத்தில் தீண்டித் தீண்டிப் பின்வாங்கலாம். அதில் நூதனம் இல்லை.

ஒருவனுக்குச் சமயந் தொடங்குகிறபோது தான், அவனுக்கு எண்ணிறந்த பந்தங்கள் எதிர் வந்து மூக்கை நீட்டும். பந்தங்கள் வாழ்வுக்கு உதவுவதில்லை. தாழ்வுக்குச் 'சலாம்' போடும்.

ஏதோ ஒருபிறப்பில், ஒருவன் தப்பிப் பிழைத்து,

"தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்,
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின.
.......... .............. ................
சமய வாதிகள் தத்தம் மதங்களில்
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
....... ............................"

என்றிங்ஙனம் எத்தனையோ சங்கடங்கள் எதிரிடுவதை மணிவாசகப் பெருமான் வருணித்துக் காட்டுகின்ருர். 'சகம் பேய் என்று' சிரிக்கும்

என்றும், 'நாடவர் பழித்துரையை'க் கோணுத லின்றிப் பூணதுவாகக் கொள்ளவேண்டி வரு மென்றும் அப்பெருமான் எச்சரிக்கை செய்கின்ருர்.

"வாழ்வெனும் மையல் விட்டு
வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ்
சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெற லரிது" ...... .. — சித். சுப. 2ஆம் சூ. 91

என்கின்றது சிவஞான சித்தியார்.

ஒருவன் சமயத்தை அணுகுதல் அரிது; அரிதில் ஓரோர் முறை அணுகிய வழியும் அதில் நிலைத்தல் அரிதினும் அரிது. இது,

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்"
— சித். சுத். 8ஆம் சூ. 11

என்ற சித்தியார் வாக்கால் உணரத்தக்கது.

☼

புறச்சமயங்களுக்குக் 'கத்திடும் ஆன்மாக்களுரைக்கட்டு' என்று ஒரு பெயர் அருணந்தி சிவாசாரியர் வழங்கியிருக்கின்ருர். ஆட்டுகிறவன் கருத்தறியாது ஆடினவர்கள் ஆடிய ஆட்டங்களே புறச்சமயங்கள். அவை எண்ணிறந்தவைகள்; நூதனமான பேதம் உள்ளவைகள்; தொடக்கமுடிபு தெரியாதவைகள்.

தொடக்க முடிபுகளை விசாரிக்கத் தொடங்கிஞல், மௌனம் சாதிப்பவைகள். மௌனத்துக்கு

ஆரும் என்ன கருத்துஞ் சொல்லலாம். அப்படிச் சொல்லிச் சொல்லிப் புறச் சமயங்கள் அநந்தங் கிளைகள் விட்டுப் பெருக்கெடுக்கின்றன.

ஒருவன் சிவாகமங்களைத் தூக்கித் தலையில் வைத்திருப்பான். அவைகள் சொல்லுவது என்ன? என்று விசாரியான். தன் அறியாமைகளையே விரித்து, அவைகளே ஆகமங்களின் கருத்து என்பான். தர்மம் என்றால் என்ன என்று தன் வாழ்க்கையில் ஒரு நிமிஷமாவது கடைப்பிடியாத வன், ஆகம ஏடுகளைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டு, ஏதும் சொன்னால், அந்தப் பொதிஎரு தின் வார்த்தை ஆகமக் கருத்தாகுமா? சிவாக மங்களின் பேரால், சிவாகமங்களைத் திரித்துச் சொல்லுவோன், புறச் சமயிகளுக்குள்ளே மகா மோசமான புறச்சமயி.

ஒருவன் வேத அந்தங்களாகிய உபநிஷத்துக் களின்பெயர்களை எல்லாம் ஒப்பிக்கலாம்; பல உப நிஷத வாக்கியங்களை யெல்லாம் ஓதலாம்; அவற் றின் கருத்துக்களை நடுநின்று விசாரியாதிருப் பானேயானால், கர்ம விசேஷத்தினாலே தனக்குத் தோன்றும் மௌட்டிகங்களையே உபநிஷத் கருத் துக்கள் என்று வாய்புலம்பிக்கொண்டிருப்பானே யானால், அவனை எப்படி வேதாந்தி என்று சொல் லுவது? அவன் மகா மோசமான அவைதிகன். அவனும் பொல்லாத புறச்சமயியே.

வேதமும் இல்லை; ஆகமமும் இல்லை. ஆரோ ஒரு மனிதன் தன் புத்தியிற்பட்டுச் சொன்னதைச் சமயம் என்று சொல்லிக்கொண்டு ஒருவன் இருக்க

லாம். அவனை, வேதாகமங்களைக் கருத்தறியாது உபயோகிப்பவர்கள், புறச் சமயி என்று நிந்திக்கலாம்; அவன் புறச்சமயிதான். ஆனால் அந்தக் கருத்தறியாத வேதாகமக்காரர்களிலும், அவன் அவ்வளவு மோசமானவன் அல்லன். அவனை ஒரு நாளைக்கு வழிக்குக் கொண்டுவரலாம். கருத்து மோசஞ் செய்கின்ற வேதாந்தியை அதே வேலை செய்கிற ஆகமியை இந்தக் கற்பத்திலே வழிக்குக் கொண்டுவரமுடியாது.

அவர்களே புறச்சமயிகளுக்குள்ளே மிகமிக அஞ்சுதற்குரியவர்கள். அவர்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது, வேதாகமங்களுக்குப் புறமானவர்கள் நல்லவர்கள். வேதாகமங்களை அவைகளை ஓதும் முறைகள் ஆசாரங்களை விலகிக், கருத்து மோசஞ் செய்கிறவர்கள் உய்தியில் குற்றஞ் செய்கிற மகா துரோகிகள். அந்தத் துரோகிகளுக்கும் சமயத்துக்கும் வெகு தூரம்! உமாபதி சிவாசாரிய சுவாமிகள் வேதாகமங்களுக்குப் புறம்பானவர்களுக்கு அஞ்சவில்லை. இந்த உட் பகைவர்களுக்கே பெரிதும் அஞ்சுகிறார். அந்த அச்சந்தான் சுவாமிகள் அருளிய 'சங்கற்பநிராகரணம்' என்கின்ற ஒப்புயர்வில்லாத நூல். இதுபற்றிப் பின்னொரு சந்தர்ப்பத்தில் நோக்குவோம். புறச் சமயங்கள் ஆட்டுவோன் கருத்தறியாதவைகள். கருத்தறியாது ஆடினவர்களின் ஆட்டங்கள் அவைகள்.

※

ஒரு யானை ஒரு குளக்கரையில் நிற்கின்றது. அதன் நிழல் குளத்துள்ளே தோன்றுகின்றது.

டாக்டர் உ. வே.

நிழலை மாத்திரங் கண்டு ஒரு சிலர் அதனை அகப்படுத்தப் பெரு முயற்சி செய்கின்றார்கள்; நீத்தும் நிலையுமாய்க் குளத்துள் அலைகின்றார்கள். அவர்கள் அப்படியிருக்கக் குளக்கரையிலே ஒரு சில குருடர்கள் யானையின் ஒவ்வோர் உறுப்பைத் தொட்டுப் பார்த்து, யானையை உரல் என்றும் உலக்கை என்றும் முறம் என்றும் கலகம் இடுகின்றார்கள். இவர்கள் நிலையும் இப்படியாக, மற்றொரு பகுதியார் யானையின் ஒவ்வோர் உறுப்பைத் தீண்டிப் பார்த்து, அவ்வளவில் திருப்தி பிறவாமல் முழுப் பொருளைக் காணமுயன்றுகொண்டிருக்கின்றார்கள்.

யதார்த்தமான ஒரு பொருள்தானே மூன்று பகுதியாரைச் சிருஷ்டித்திருக்கிறது. ஒரு பகுதியார் குளத்துள் ஆழ்ந்து யானை பிடிக்கிறார்கள். மற்றொரு பகுதியார் உரல் உலக்கைகளை யானை யென்கிறார்கள். இன்னொருபகுதியார் தாம் கண்டவை ஒரு முழுப் பொருளின் ஏகதேசமே என்றுகொண்டு முழுப்பொருளைக் காண முயல்கின்றார்கள். இந்த மூன்றாவது பகுதியார் ஒரு நாளைக்கு உண்மையைக் கண்டே தீருவார்கள். அவர்களைச் சமயிகள் என்று சொல்லலாம். அவர்கள் ஒரு நாளைக்கு ஒரு புள்ளியில் ஒன்று கூடுவார்கள். ஒரு வட்டத்தில் நடுப்புள்ளியைத் தீண்டும் விட்டார்த்தம் போன்றவர்கள் அவர்கள்.

குளத்துள் ஆனை தேடுகிறவர்கள் யானையைப் பற்றிய நூல்களுக்குப் புறம்பானவர்கள்.

உரல் உலக்கை பேசுகிற குருடர்கள், கையில் அகப்பட்டதைப் பயன்படுத்த அறியாதவர்கள்.

இவர்களே வேதாகமங்களைச் சுமந்துகொண்டு அவற்றுக்கு விரோதம் பேசுபவர்கள். இவர்களுக்கும் குளத்துள் ஆனை தேடுபவர்களுக்கும் வேறு பாடு: இவர்கள் வேதாகமங்களோடு உரிமை கொண்டாடுகின்றார்கள்; அவர்கள் வேதாகமங் களைக் கொள்வதில்லை; அவ்வளவே. இருபகுதி யாரும் உண்மையைக் கண்டதுமில்லை; காணப் போவதும் இல்லை.

வேதாகமங்களைக் கொள்ளாதவர்களைப் புறப் புறம் என்றும், வேதங்களைமாத்திரம் பிறழ்ந்து கொள்ளுகிறவர்களைப் புறமென்றும், வேதாகமங் களைப் பிறழ்ந்துகொள்ளுகிறவர்களை அகப்புற மென்றும் வகுப்பதுண்டு. இந்த முத்திறமும் உண் மையைக் காணுதவகையில், உண்மைக்குப் புறமே.

ஒரு உண்மை எண்ணிறந்த பிறழ்வுகளை உற் பத்தி செய்வதில் நூதனம் இல்லை. பிறழ்வுகள் உண்மையின் குற்றம் அல்ல. உண்மையை நோக்கு பவர்களின் தகுதிக்குறைவால் வருங் குற்றம்.

காணப்படுகிற இந்த உலகத்தையே பொய் யென்றும் மெய்யென்றும் இரண்டுந்தானென்றும் அல்ல என்றும் சமயவாதிகள் சண்டை போடு கின்ருர்கள். காணப்படுகிற உலகத்தின்பாடே இங்ஙனமாஞல், காணப்படாத உண்மைகளின் பாடு எப்படியாயிருக்கும்.

ஒருபொருள் பல திறத்தாருக்கும் பலதிறப் பட்டுத் தோன்றிஞல், உண்மை எது? அதை

எப்படிக் காணுவது? கண்டு நிச்சயிப்பது எவ்வாறு?

எத்தனையோ இடைப்பெண்கள் கண்விழித்துக் காவலிருந்து, கண்ணனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து, உரலோடும் தூணோடும் கட்டி, விடிய விடியக் காவலும் இருந்திருக்கிறார்கள். விடிந்தது விடியுமுன் கண்ணனைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. அவன் வழக்கம்போல யசோதைக்கருகில், மூரி முரித்துக்கொண்டு நீண்ட நித்திரையினின்றும் எழுகின்றான். அந்தப் பரம யோக்கியனைக் 'கள்வன்' என்றால், 'உரலோடு கட்டினோம்' என்றால் ஆர்தான் நம்புவார்கள்.

மெய்யாய் மெய்யாய்க் கண்ணனைக் கண்டு பிடிப்பது எப்படி?

உண்மைக் கண்ணனைக் கண்டுபிடித்தால், உரலோடு மறைந்த கண்ணனின் இரகசியமுந் தெரிந்துவிடும்.

சகாதேவன் உரற் கண்ணனைக் கட்டிப்பிடித்துக் கண் விழிக்காமல், உண்மைக் கண்ணனை இறுகப் பிடித்தான். உரற் கண்ணர் குளக்கரைக் கண்ணர் சர்வ கண்ணரும் ஓடி மறைந்தார்கள்.

உண்மைக் கண்ணன் ஒருவன்தானே. அவ்வாறேதான் உண்மைச் சமயம் ஒருதொகை ஆகாது. அதைக் கண்டுபிடிப்பதெப்படி?

---

உலகத்திலே நாம் சுகம் என்று கருதுகின்ற ஒவ்வொரு சுகத்துக்கும் பின்னே துக்கம் உண்டாகிறது.

— ஆன்மவிசாரம்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

# சமயம் 6

## நிழற் கனியை மறைக்க முடியவில்லை ; உண்மைக் கனியின் இரகசியம் தோன்றுகிறது

## உண்மைச் சமய இயல்பு

குளத்துக்குள்ளே ஒரு பொய்யான நிழல் யானையையும், குருடர் சிலருக்கு உலக்கை உரல் முறங்களையும் குளக்கரையில் நின்ற ஒரு உண்மை யானை தானே சிருஷ்டி செய்திருக்கிறது.

உண்மை யானையில் பொய்யான நிழல்யானை முதலிய அனைத்தும் அடங்கும்.

நிழல்யானை முதலியவைகளில் உண்மை யானை அடங்காது.

நீருள் யானையை நிழல் என்றும், துதிக்கை கால் செவிகளை, உலக்கை முதலியவைகள் அல்ல, ஒரு முழுப்பொருளின் ஏகதேச உறுப்புக்கள் என்றும் உணர்ந்து, மேலும் ஆராய்கின்றவர்கள், ஒரு நாளைக்கு உண்மை யானையைக் கண்டுபிடிப்பார்கள்.

ஏகதேச உறுப்புக்களே மெய்ப்பொருள்கள், அவைகள்தாம் உரல் உலக்கை முறங்கள் என்று நிச்சயம் செய்தவர்களும், நீருள் யானையே

கைகண்ட மெய்ப்பொருள் என்று முடிவு கட்டினவர்களும் ஆகிய, மேல் ஆராய்ச்சி இல்லாதவர்களே புறச்சமயிகள். அவர்கள் எட்டிப்பார்க்க முயலாத — எட்டாத— உண்மைப்பொருள் அவர்களுக்கு இருள்.

"புறச்சமயத் தவர்க்கிருளாய்"

என்பது சிவப்பிரகாசம்.

நீருள் நிழலோ ஏகதேச உறுப்புக்களோ கிடைத்தவைகளை வைத்துக்கொண்டு, அவற்றின் மூலத்தை ஆராய்பவர்கள், ஒருநாளைக்கு உண்மையைக் கண்டுபிடிப்பார்கள். அவர்கள் அகச் சமயிகள்.

"அகச் சமயத்தவர்க்கு ஒளியாய்"

— சிவப்பிரகாசம்.

☼

குளக்கரை ஒன்றில் ஒரு மாமரம் நிற்கின்றது. அதன் கொம்பர் ஒன்றில் ஒரு மாங்கனி தூங்குகின்றது. அதன் நிழல் நீருள் தோன்றுகின்றது. சிறுவன் ஒருவன் நிழற் கனியைப் பறிக்க முயலுகிறான். அது பொய் என்று சொன்னால் கேட்கிறானில்லை. காரியம் தெரிந்த ஒருவன் மேலே தொங்குகிற மாங்கனியை மறைக்கிறான். நிழற்கனி மறைகிறது; இல்லையாகிறது.

பின் மறைப்பை எடுக்கிறான்; நிழற் கனி தோன்றுகிறது. உடனே அந்தச் சிறுவன் நிழற் கனியை மறைத்து, மேலே தொங்குகிற உண்மைக் கனியை இல்லையாகச் செய்யப் பலவாறு முயல்கிறான்.

ஒரு சிறிதும் வாய்க்கவில்லை. நிழற் கனியையே மறைக்க முடியவில்லை. உண்மைக் கனியின் இரகசியம் அவனுக்குத் தோன்றுகிறது.

இவ்வாறே ஏகதேச உறுப்புக்கள் மாத்திரமே பொருள் என்று வாதாடுகிற குருடர்களைக் காரியந் தெரிந்தவன், அவ்வுறுப்புக்களுக்கு அப்பாலுந் தடவச்செய்து, உறுப்புக்கள் ஒன்றோடொன்று தொடர்புள்ளவைகள் என்பதைக் காட்டுகின்றான். அன்றி, முழுப்பொருள் அசைய உறுப்புக்கள் அத்தனையும் அசைவதையும், ஓர் ஓர் உறுப்பு அசைவதால் முழுப்பொருள் அசையாமையையும் அவர்களுக்கு விளங்க வைக்கிறான். அதனால் அவர்கள் விழிபெறுகின்றார்கள்; முழு உண்மையைக் காணுகிற அகச் சமயிகள் ஆகின்றார்கள். அகச் சமயங்கள் வட்டத்தின் விட்டார்த்தங்கள்; உண்மையைத் தேடுபவைகள். ஒருநாளைக்கு உண்மைப் புள்ளியில் வந்து முற்றுப்பெறுபவைகள். அந்த நடுவான—ஒன்றே ஒன்றான—மத்திய புள்ளியே உண்மைச்சமயம். அது அசைய எல்லாம் அசையும். ஏகதேச உறுப்புக்கள் அதில்வந்து முற்றும். பொய்த் தோற்றங்கள் அதைக் கண்டவழி இல்லையாய் அடங்கும்.

ஆகவே ஏகதேச உறுப்புக்களும், பொய்த் தோற்றங்களும், முழு உண்மையில் அடங்கும்.

"அடங்குதல்"

அர்த்தபுஷ்டியுள்ள வார்த்தை. அடங்குதல் இருவகை :—

உறுப்புக்கள் முழுப்பொருளில் ஏகதேசமாய் அடங்குதல் ஒருவகை.

பொய்த்தோற்றங்கள் முழுப்பொருளைக் கண்ட வழி, இல்லையாய் அடங்குதல் இரண்டாவது வகை.

முழுப்பொருளாகிய உண்மையைக் கண்ட வழி, பொய்த்தோற்றங்கள் இல்லையாதல் மாத்திர மன்றி, ஏகதேச உறுப்புக்கள்கூட இல்லையாய் முடியும்.

ஒரு மனிதனைக் கண்டவழிக் கை வேறு கால் வேறு கண் வேறு மூக்கு வேறு ஆக நாம் காண்ப தில்லை. முழு மனிதனில் அவ்வுறுப்புக்கள் தனித் தனி தோன்றா, அடங்கி இல்லையாம்.

"யாவையும் சத்தெதிர் சூனியம்"

— சிவஞானபோதம்.

சத்து – உண்மை. யாவையும் என்பது பொய்த் தோற்றங்களுமாம்; ஏகதேச உறுப்புக்களுமாம். உண்மையைக் கண்டவழி எல்லாமுமே சூனியம்.

※

சகாதேவன் உண்மைக் கிருஷ்ணரைப் பிடிக்க வேண்டிய இடத்தில் இறுகப் பிடித்தான். ஏக தேசக் கிருஷ்ணர்—பொய்க் கிருஷ்ணர்—சர்வகிருஷ் ணரும் சூனியமாயினர்.

எத்தனையோ பெண்கள் பொய்க் கிருஷ்ண ரைக் கட்டி அணைந்து வெள்கிப்போயினர்.

ஒருசிலர் கை கால்களில் எட்டித் தொட்டும், அவனை—அந்த முழுக் கிருஷ்ணனை—அகப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

கை கால்களைக் கண்ட தபசிகள், அவ்வளவில் அடங்காமல், அகப்பட்டவைகளை இறுகப் பற்றிக் கொண்டு மேலும் தவங்கிடக்கின்றார்கள்.

※

உண்மைச் சமயம் ஒன்றே; ஏனைய சமயங்கள் இரண்டுவகைப்படும். ஒருவகை ஏகதேச உறுப்புக்கள்; அவை அகச் சமயங்கள். இரண்டாவது வகை பொய்த் தோற்றங்கள்; அவை புறச் சமயங்கள்.

எவன் ஒருவன், எந்த உண்மையில், சமயங்கள் எல்லாம் இருவகைப்பட்டு, ஏகதேச உறுப்பாகவும்—பொய்த் தோற்றங்களாய் இல்லையாகவும் — அடங்கக் காண்கின்றானோ,

அவன்

உண்மைச் சமயத்தைக் காணுகின்றான்.

**அவன்கண்ட சமயமே சமயம்; உண்மைச் சமயம்.**

※

" ஓதுசம யங்கள்பொருள் உணரு நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னில்
இதுஆகும் அதுஅல்லது எனும்பிணக்க தின்றி
நீதியினால் இவைஎல்லாம் ஓரிடத்தே காண
நின்றதுயா தொருசமயம் அதுசமயம் பொருணூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறைஆ கமத்தே
அடங்கியிடும் அவையிரண்டும் அரனடிக்கீ ழடங்கும்"

என்பது சிவஞானசித்தியார்.

— சுப. 8ஆம் சூத். 13

உண்மைச் சமயம் எது? அந்தச் சமயம் சாதிக்கும் உண்மைப் பொருள் எது? அந்தப் பொருளை உபகரிக்கும் உண்மைநூல் எது? என்ற வினாக்களுக்கு இப்பாடல் விடை அளிக்கின்றது.

இந்த மூன்று வினாக்களுக்குள்ளும், 'உண்மைச் சமயம் எது?' என்ற வினாவை விடுவித்தால், ஏனைய வினாக்களின் விடைகளும் அதில் அடங்கும்.

சமயங்கள் ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் பலவும் உள்ளன. 'பல' என்பதை 'எண்ணிறந்தன' என்று சொல்லலாம். தாயுமானசுவாமிகள் "சமய கோடிகள்" என்று கூறியிருக்கின்றார்.

சமய கோடிகளை உண்மைச் சமயத்துக்கு அங்கமான அகச்சமயங்கள் என்றும், உண்மைச் சமயத்தின் பொய்த்தோற்றமான புறச்சமயங்கள் என்றும் இரண்டாக வகுக்கலாம். இரண்டுவகையாக வகுக்கப்படும் சமயகோடிகளுள்ளே, உண்மைச் சமயம் அடங்காது. உண்மைச் சமயத்தில் சமயகோடிகள் அங்கமாயும் இல்லையாயும் அடங்கும்.

அந்த உண்மைச் சமயம் யாது?

"இவை எல்லாம்"

அகமும் புறமுமான சமய கோடிகள் அத்தனையையும் தனித்தனி எடுத்துக்கொண்டு,

"இது ஆகும்"

இச் சமயம் உளதாகும்; சம்பவிக்கத்தக்கது.

"அது அல்லது"

அச்சமயம் உளதாகாது; சம்பவிக்க ஏலாது.

"எனும் பிணக்கது இன்றி"

என்று தீர்த்துக்கட்டாமல், 'சமய கோடிகள் எல்லாமுமே ஆகத்தக்கவைகள்; சம்பவிக்கத்தக்க வைகள்' என்று வைத்துக்கொண்டு,

'இவை எல்லாம்"

அகம்புறமான சமய கோடிகள் அத்தனையையும்,

"நீதியினல் ஓரிடத்தே காண"

ஒவ்வொரு சமயத்தையும் அதன் அதன் உண்மை இயல்பில் வைத்து, அங்கத்தை அங்க மாகவும் நிழலாகிய பொய்த் தோற்றத்தைப் பொய்த் தோற்றமாகவும், ஒரு மயிரிடையும் நீதி குன்ருமலே, எந்த ஒரேஒரு புள்ளியில் நின்று காணமுடியுமோ,

"ஓரிடத்தே நின்றது யாதொரு சமயம்"

அந்த மத்திய புள்ளியாகிய ஒப்பில்லாத ஒன்றே ஒன்ருன இடத்தின்கண்ணே, அங்கங்களும் நிழ லான தோற்றங்களும் தன்பால்வந்து அடங்கும் முறையில் அடங்க, தான் அவற்றில் அடங்காது, எக்காலத்தும் ஒரே நிலையில் நிலைத்து நின்றதாகிய —நிற்கின்றதாகிய—நிற்பதாகிய—யாதொரு சமயம் உண்டோ,

"அது சமயம்".

அகமும் புறமுமான சமயமெல்லாம் அங்கமா யும் இல்லையாயுந் தன்பால் வந்து அடங்க, தான்

அவற்றில் அடங்காது, அவற்றை யெல்லாந் தன் பால் அடக்கி அவற்றின் உண்மை இயல்புகள் இருந்த படியைக் காட்டிக்கொண்டு, நீதி சிறிதும் கோடாது, ஒன்றே ஒன்ருய் நிலேத்து நிற்கின்ற, அந்தச் சமயமே, உண்மைச் சமயம்.

※

உண்மைச் சமயம் சாதிக்கும் பொருளே உண்மைப் பொருள். உண்மைப் பொருளே ஓதும் நூலே உண்மை நூல். எல்லாச் சமயமும் எல்லாப் பொருளும் தன்பால் அடங்கு முறையில் அடங்கக் காட்டும் நூல் அருமறை ஆகமம். அது 'தரும் சக்தி' தந்தது. 'அரன் அடி' என்றது திருவருளாகிய சிவ சக்தியை.

※

"செப்பரிய சமயநெறி எல்லாந் தன்தன்
தெய்வமே தெய்வமெனும் செயற்கை ஆன
அப்பரிசா ளருமஃதே பிடித்தா லிப்பால்
அடுத்தந்நூல் களும்விரித்தே அநுமா ஞதி
ஒப்பவிரித் துரைப்பர்இங்ஙன் பொய்மெய் என்ன
ஒன்றிலேஒன் றெனப்பார்ப்பது ஒவ்வா தார்க்கும்
இப்பரிசாஞ் சமயமுமாய் அல்ல வாகி
யாதுசம யமும்வணங்கும் இயல்ப தாகி"

உண்மைச் சமயம் ஒன்றே ஒன்ருய் நிலேத்து நிற்கும்.

※

'செப்பரிய சமயநெறி' என்ற பாட்டுத் தாயுமானவ சுவாமிகளின் பாட்டு. இந்தப் பாட்டு 'ஓது சமயங்கள்' என்ற சித்தியாருக்கு உரையாய் அமைந்திருக்கின்றது. இப்பாட்டை உரைப் பாட்டு என்றே சொல்லலாம். இதில்,

"இப்பரிசாஞ் சமயமுமாய் அல்ல வாகி"

என்ற தொடர் விலைமதித்தற்கரிய பொருள் அடக்கம் உள்ளது.

"இப்பரிசாஞ் சமயம்"

என்றது, இது பொய் இது மெய் என்றும், ஒன்று இல்லை, மற்றொன்று உண்டு என்றும் பார்ப்பதற்கு ஒவ்வாதனவும், எல்லாமே சம்பவிப்பனவும் ஆகியுள்ள, அகமும் புறமுமான சமயகோடிகளை.

உண்மைச் சமயம், சமய கோடிகள் தன்பாலடங்குதலின் அவையாயும், அதே சமயத்தில், அச் சமய கோடிகளில் தான் அடங்காமையால், அவை அல்லது ஆகியும் இருக்கும்.

ஒரு பொய்த் தோற்றத்துக்கும் மெய்த் தோற்றமே மூலமாதலின், பொய் மெய்யில் அடங்கும். மெய் பொய்யில் அடங்காது. பொய் நிழல் போன்றது.

"யாது சமயமும் வணங்கும் இயல்பு"

அகச் சமயம் அங்கமாகியும், புறச் சமயம் இல்லையாயும் அடங்கும் இயல்பு.

இவ்வாற்றால்,

உண்மைச் சமயத்தில் ஏனைய சமயங்கள் அடங்குமாறு கூறுமுகத்தால் உண்மைச் சமயத்தினியல்பு கூறியவாறு.

## சமயம் 7

### நரகத்திலிருக்கிறவர்கள் மோட்சத்துக்கு வரவில்லையா? அதனாலே நரகம் மோட்சத்துக்கு வழியாகிவிடுமா?

### மெய்ச் சமயமே சமரச சமயம்

*நீதியான நீதிபதி வழக்காளியின் முறையீடுகளையும், எதிரியின் மறுமொழிகளையும் ஆராய்வதில், பாரபக்ஷமின்றிச் சம—ரசம்—உள்ளவனாயிருக்கிறான்.*

" சமன்செய்துசீர்தூக்குங்கோல்போல்அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி."

*—குறள்: 118*

*சான்றோனான நீதிபதி, ஒருவரோடு ஒருவர் முரண்படுகின்ற இருவர் நிலையை ஆராயும்போது, தனது விருப்பு வெறுப்புக்கள் மயிரிடையும் தன்னை வந்து தாக்காது, வெகு சாவதானமாயிருப்பான்.*

*நீதியை நிலைநாட்டுதற்கே அவதரித்த ஸ்ரீராமன், இராவண வதத்தின் பிறகு, திருக் கைலையை அசைத்தவனாகிய இராவணனின் வீரத்தில், ' இம்மியளவாவது பொறாமை தன் மனசில் நிகழ்ந்திருக்குமோ ' என்ற அச்சத்தால், சிவபூசை செய்து, தன்னைக் கழுவிக்கொண்டான் என்பது புராணப் பிரசித்தம்.*

"நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதியா தொருசமயம் அதுசமயம்"

என்று, உண்மைச் சமயத்தினியல்பு, மேலே விரித்து உரைக்கப்பட்டது.

※

உண்மைச் சமயம்,

அங்கமாகிய அகச்சமயங்களை ஆராய்வதிலும், நிழலான புறச்சமயங்களை ஆராய்வதிலும், பாரபக்ஷமின்றிச் சமமான ரசமுள்ளதாயிருக்கும்.

"குணநாடிக் குற்றமு நாடி அவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்"

—குறள்: 504

என்பது தெய்வப் புலவர் திருவாக்கு. குணத்தைக் குணமாக நாடுவதிலும், குற்றத்தைக் குற்றமாக நாடுவதிலும் ஒருவன் சமமான ரசமுள்ளவனாயிருக்கவேண்டும். அதுவே சமரசம். குணம் சமம் குற்றம் என்று முடிவுகட்டுவது சமரசமாகாது.

ஓர் ஆசிரியன் எட்டுத் தர நான்கு (8×4) என்ற கணிதத்தைக் கொடுக்கின்றான். மாணவர்களுள் ஒருசிலர் பன்னிரண்டு என்று விடை காணுகின்றார்கள். மற்றவர்கள் முப்பத்திரண்டு என்றும், இரண்டு என்றும், நான்கு என்றும் பல வேறு வகையில் விடை காணுகின்றார்கள். உத்தம ஆசிரியன் அவர்கள் கண்ட விடைகளின் குண குற்றங்களை ஆராய்வதிற் சமரச முள்ளவனாயிருப்பான்.

எல்லா விடைகளும் ஒரு உண்மையைத்தான் சாதிப்பவைகள் என்று அவைகளை ஒப்ப மதியான். ஒப்ப மதித்தல் அநியாயம். அப்படியான—அநியாயம் ஆகிய—சமத்துவ புத்தி ஆசிரியனுக்கு உதிக்குமானால், அந்தப் புத்தி, பிழையான விடை கண்ட பிள்ளைகளை மேலும் பிழையான வழியிற் செலுத்துவதாய்—பிழையில் நிலைநாட்டுவதாயிருக்கும்.

பிழையைப் பிழை என்றுணர்தற்குரிய நிலை மாணவனுக்கு வாராதிருந்தால், அந்த நிலை வருஞ் சந்தர்ப்பத்தை அந்த நல்லாசிரியன் எதிர்பார்த்துக் காத்திருப்பான். அவ்வளவும் மௌனஞ் சாதிப்பான். பிழையைச் சரி என்று ஒருபோதுஞ் சொல்லான்.

**பிழையைச் சரி என்று சொல்லுவது,**
**சரியைப் பிழை என்று சொல்லுவதற்குச் சமம்.**

மெய்ச் சமயத்துக்கும் பொய்ச் சமயத்துக்கும் சமத்துவம் பேசுகிறவர்கள்,

உண்மையில்,

மெய்ச் சமயத்தைப் பொய்ச் சமயம் என்று சொல்லுகிறவர்கள்.

⁂

உண்மைச் சமயம்,

அங்கமாகிய அகச்சமயங்களைத் தன் உறுப்புக்கள் என்று ஏற்றுக்கொள்வதிலும்,

பொய்யான புறச்சமயங்களைத் தன் நிழல் என்று கொள்வதிலும் சற்றேனுந் தயங்குவதில்லை

நெருப்பின்றிப் புகையாது என்பார்கள். அது போல ஒரு மெய்யிலிருந்துதான் பொய் பிறக்கிறது. கயிற்றிலிருந்து சிலசமயம் பாம்பு பிறக்கிறதைக் காண்கிறோம். இந்த உலகம் ஏன் கிடக்கிறது என்று திருவள்ளுவரைக் கேட்டால், "ஆதிபகவன்" என்றொரு "முதல்" இருக்கிறது. அந்த முதல் இருக்கிறபடியால், இந்த உலகம் கிடக்கிறது என் கின்றார்.

கோடிக்கணக்கான பொய்ச்சமயங்கள் ஏன் கிடக்கின்றன என்ற கேள்விக்கு,

இனி விடை எளிது.

மெய்ச்சமயம் என்று ஒன்று இருக்கிறபடியால்,

"பொய்ச்சமயங்கள் கோடிக் கணக்கில் கிடக் கின்றன" என்பது விடை.

மெய்ச்சமயத்துக்கு மற்றொரு விசேஷ அடை யாளம், அது பொய்ச்சமயங்களை மறந்தும் தூஷியாது.

ஒருவன் தன்னிழலைத் தூஷிப்பானா? தூஷிப்பா னாயின், அவன் தன்னைத் தூஷிப்பவனே.

அவ்வாறேதான், மெய்ச்சமயம் தன்னிழலான பொய்ச்சமயங்களைத் தூஷியாது. தூஷித்தால் அது தன்னைத் தானே தூஷித்ததாயிருக்கும்.

மெய்ச்சமயத்துக்குக் குணம் இரக்கம். "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை"யின் குணமே மெய்ச்சமயத்தின் குணம்.

அது, பொய்ச்சமயம் தன்னை எப்பொழுது உணரும் என்று பருவம் பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும். அது அதன் தருமம். தாய்போல் இரங்கிக்கொண்டிருக்கும்.

பொய்ச்சமயம், தன்னை மெய்ச்சமயம் என்று எல்லாச் சமயமும் அங்கீகரிக்கவேண்டும் என்று கேட்டால், அதற்கு மெய்ச்சமயம் ஒன்றும் பேசாது. மௌன விரதம் பூண்டு மோனமோலி தரித்துக் கொண்டிருக்கும். "ஆம்" என்று தலை ஆட்டுமானுல், அது பொய்ச்சமயத்துக்கு அநியாயம் செய்ததாய் முடியும். பொய்ச்சமயம் தன்னைப்பற்றிச் சிந்திக்க வழியில்லாமற் போய்விடும்.

பொய் ஒருநாளைக்குத் தன்நிலையை உணர்ந்து, மெய்யாக வேண்டும்.

மெய்யின் நிழல் பொய். பொய் எப்பொழுது தன்னை நிழல் என்று எண்ணுகின்றதோ அப்பொழுதே மெய்யாய்விட்டதென்று சொல்லலாம்.

மனிதனை மறைக்க நிழல் மறையும். நிழலை மறைக்க மனிதன் மறையான். மனிதன் நிழலில் அடங்கான். நிழல் மனிதனில் அடங்கும்.

மனிதன் நிழலாயும் அதேசமயத்தில், நிழலில் அடங்காத பொருளாயும் இருக்கின்றுன். நிழல் மனிதனில் அடங்காத மற்ருெரு பொருளாயிருப்பதில்லை.

மெய்ச்சமயம் பொய்ச்சமயங்களாயும் அதே சமயத்தில், அவற்றில் அடங்காத உண்மைப்

பொருளாயுமிருக்கின்றது. பொய்ச்சமயங்கள் அப்படி யிருப்பதில்லை. மெய் இல்லையேல் பொய் இல்லை.

உயிர் இல்லையேல் உடம்பு இல்லை. உயிர் உடம்பாயும் அதே சமயத்தில், உடம்பின் வேருன பொருளாயும் இருக்கின்றது. உடம்பு இல்லாத வழியும் உயிர் உண்டு. உயிர் என்றும் உயிரே. உடம்பு உயிரில்வழிச் சவம்.

மெய்ச்சமயம் உயிர். பொய்ச்சமயம் உடம்பு.

உடம்பை இறுகப் பிடித்தவன் உயிரைப் பிடித்தவன் ஆகான்.

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே"
—குறள்: 338

உடம்பு தனித்துக் கிடப்ப உயிர் பறந்துவிடும்.

பொய்ச்சமயத்தை இறுகப் பிடிப்பதனுல், மெய்ச்சமயத்தை அகப்படுத்த முடியாது. பொய்ச்சமயம் மெய்ச்சமயத்தை அடைவிக்கும் வழியன்று. பொய்ச்சமயம் இருள்; கத்திடுமான்மாக்களுரைக் கட்டு.

மெய்ச்சமயம் ஒளி; திருவருள் வழி வந்தது. ஒளியைக் காண இருள் உபகாரம் அன்று. இருளுக்கு ஒளியே இருளாயிருக்கும்.

அகச்சமயங்கள் மெய்ச்சமயத்துக்கு வழிகள்; விட்டார்த்தம் போன்றவைகள்.

நடுப்புள்ளி அசைய விட்டார்த்தங்களும், வட்டத்தின் நிழலும் அசையும். அந்தப் புள்ளி தான் மெய்ச்சமயம்.

விட்டார்த்தங்கள் நடுப்புள்ளியை அடைய வழிகள்; ஒன்றில் ஒன்று உயர்ந்த படிகள் அல்ல. அகச்சமயங்கள் மெய்ச்சமயத்தை அடைய வழிகள். படிகள் அல்ல.

வட்டத்துக்கு அப்பால் விட்டார்த்தங்களாய், புள்ளியை அடையும் வழிகள் இல்லை. புறச்சமயங்கள் வழிகளே அல்ல. புறச்சமயத்தவர்கள் மெய்ச்சமயத்துக்கு வரவில்லையா? அதனாலே, மெய்ச்சமயத்துக்குப் புறச்சமயங்கள் வழிகள் அல்லவா என்று கேட்டால், அப்படிக் கேட்கின்றவர்களை நரகத்திலிருக்கிறவர்கள் மோக்ஷத்துக்கு வரவில்லையா? அதனாலே, மோக்ஷத்துக்கு நரகம் வழிதானே என்று கேட்கலாம்.

அகச்சமயங்களையும் புறச்சமயங்களையும் ஒரு சேர எண்ணி, எல்லாம் மெய்ச்சமயத்துக்குப் படிகள் என்பதும், எல்லாம் மெய்ச்சமயத்துக்கு ஒத்த வழிகள் என்பதும் தவறு. அகச்சமயங்களே ஒத்த வழிகள்.

மெய்ச்சமயம்,

அகச்சமயங்களையும்,

புறச்சமயங்களையும் அவை அவைக்குரிய நிலையில் வைத்து நோக்குவதிற் சமமான ரசம் உள்ளது.

ஆகவே மெய்ச்சமயமே சமரச சமயம்.

"சுத்தவடிவு இயல்பாக உடைய சோதி
சொல்லியஆ கமங்களெலாஞ் சூழப் போயும்
ஒத்துமுடி யுங்கூட ஓரி டத்தே
ஒருபதிக்குப் பலநெறிகள் உளவா றுற்போற்
பித்தர்குண மதுபோல ஒருகா லுண்டாய்ப்
பின்னொருகா லறிவின்றிப் பேதை யோராய்க்
கத்திடுமான் மாக்களுரைக் கட்டிற் பட்டோர்
கனகவரை குறித்துப்போய்க் கடற்கே வீழ்வர்"
—சிவஞானசித்தியார்

இதில்,

*"ஆகமங்கள்" என்றது, அகச்சமயங்களை. அவைகள் திருவருளின் குறிப்பின் வழி வந்த சமயங்கள் என்றபடி. அவைகள் ஒரு ஊருக்குப் பலவழிகள் உளவாறுற்போல, ஓரிடத்தே ஒத்து முடியும்.*

*"கத்திடுமான் மாக்களுரைக் கட்டு" என்றது, புறச்சமயங்களை. அவைகள் திருவருளின் குறிப்பை விசாரியாது வருபவைகள். அவைதாம் பலதலைப் பட்டுக் "கனகவரை குறித்துப் போய்க் கடற்கே வீழ்"வன.*

---

*பிறருடைய சரீர வருத்தம் வறுமை இவற்றைக் கண்டு வருந்துவதன்று இரக்கம். பிறருடைய கோபம் பொறாமை முதலிய அஞ்ஞானப் பிணிகண்டு அவற்றின் பொருட்டு இரங்குவதே இரக்கம்.*

*முன்பு தன்னிடத்தே கண்டு, பின்பு பிறரிடத்தும் அவை அத்தன்மையவாம் என்று காண்பானுக்கு வருவதே அருள்.*

—ஆன்மவிசாரம்

# சமயம் 8

'உடுக்கை இழந்தவன் கைபோல' உற்றுழி உதவுகின்ற கை
—துகிலை இறுகப்பற்றியிருந்த திரௌபதியின் கை —
திடீரென்று நெகிழ்ந்தது.

## மனிதர் மூவகையர்

" ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள."
*—திருமந்திரம் : 1533*

" புறச்சம யங்கள் சிறப்பில வாகி
அருளில் மாந்தரை வெருளுற மயக்கி
அலகைத் தேரின் நிலையில் தீரும் ;
ஈங்கிவை நிற்க ; நீங்காச் சமயம்
மூவிரு தகுதி மேவிய தாமும்
ஒன்ருே டொன்று சென்றுறும் நிலையில்
ஆறும் மாரு வீறுடைத்து "
*— சங்கற்பநிராகரணம் : பாயிரம்*

☼

" அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய் "
*—சித்தியார்*

☼

" மெய்தரு சைவமாதி இருமூன்று "
*—சித்தியார்*

☼

" சமயம் ஆறினையுந் தாயென வளர்த்து "
*—கந்தபு. திருநகரப். 78*

வேற்றுமை எட்டு; இசைகள் ஏழு; சமயம் ஆறு.

இந்த வரையறை இரகசியம், சாதகர்களுக் கன்றி எம்மனோர்க்கு அறிதற்கரியது.

மனிதர் மூவகையர்:

"போத மிகுத்தோர்" முதலாம் வகையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பிறக்கும்போதே ஞானத்தோடு பிறக்கிறவர்கள். ஒரு நெறி வகுத்து, இந்நெறியிற் செல்ல வேண்டுமென்று இவர்களுக்குக் காட்ட வேண்டுவதில்லை. உலகத்தை ஒரு தரம் நிமிர்ந்து பார்த்ததும், அவர்களுக்குக் காரியம் தெரிந்துவிடும். செல்லவேண்டிய நெறியில் அவர்கள் தாமே சென்றுகொண்டிருப்பார்கள். அவர்களைச் "சாமுசித்தர்" என்பர்.

"தொகுத்த பேதைமைக்கே பொருந்தினோர்"

இவர்கள் மனிதவர்க்கத்தில் மூன்றாவது வர்க்கம்; அறியாமையின் தொகுதிக்கு இருப்பிடமானவர்கள். இவர்களுக்கும் ஒரு நெறி வகுத்து, இந்த நெறியிற் செல்லவேண்டுமென்று காட்ட வேண்டுவதில்லை. காட்டுவதால் ஒரு பயனும் இல்லை. "காணாதாற் காட்டுவான் தான் காணான்." அவர்கள் தாம் நினைத்த நெறியிற் சென்றுகொண்டிருப்பார்கள். அவர்களைத் தடுக்க முடியாது. அவர்கள் இரண்டுகால் விலங்குகள். அவர்களைப் "பிராகிருதர்" என்பர்.

இனி இரண்டாவது வகையினருக்கு வருவோம். அவர்களுக்கு,

"வைநாயிகர்"
என்று பெயர். விழைவுகிறவர்கள் என்று அர்த்தம்.

"கதிப்பாற் செல்ல ஏதுநெறி எனும்அவர்'
என்பது சித்தியார் வார்த்தை. "நமக்கு ஒரு கதி யில்லையா? அக் கதிக்குச் செல்லும் வழி யாது?" என்று ஆராய்கிறவர்கள்; கேட்கிறவர்கள் அவர்கள்.

அப்படிப்பட்ட வைநாயிகர்களுக்கு உரியது தான் சமயம். உடலோம்பும் வழிகள் வழிகளல்ல என்றுவிட்டு, உயிரோம்பும் வழிகளை விழைவுகிற வர்களுக்கு உரியதுதான் சமயம்.

*

வழிகள் ஆறு என்கின்றது திருமந்திரம். அவ் வழிகள் வைநாயிகர்களுக்கு வகுக்கப்பட்டவை கள். வைநாயிகர்களுக்குள்ளே எவர் எவர் எந்த வழியிற் செல்லவேண்டியவர்களோ, அவர் அவ ருக்குரிய வழிகளைச் சாத்திரங்கள் வகுத்துக் காட் டும்; குரவர்கள் சுட்டிக்காட்டுவார்கள்.

ஆறு வழிகளும் ஓர் ஊரிற்சென்று ஒன்றுகூடும். அவ்வழிகளே அகச்சமயங்கள்.

சாமுசித்தர்கள் ஒரு குறையுமில்லாதவர்கள்; கண்ணை மூடிக்கொண்டு, குறித்த ஊருக்குத் தாமே சென்று சேருவார்கள்.

பிராகிருதர்களைக் குறித்த ஊரிற் கொண்டு போய்விட்டாலும் கண்ணை மூடிக்கொண்டு வெளிக் கிளம்பி வேறு ஊருக்குப் போய்விடுவார்கள்.

சாமுசித்தர் குறையில்லாதவர்கள்; பிராகிருதர் தமக்குக் குறையிருப்பது தெரியாதவர்கள்,

வைநாயிகர் தமக்குக் குறையிருப்பதைத் தெரிந்தவர்கள்.

வேற்றுமைகளை எட்டாக வகுப்பதுபோல, இசைகளை ஏழாக வகுப்பதுபோல, மனிதர்களுக்குரிய குறைகளை ஆருக வகுக்கலாம் என்பது பெரியோர் கருத்து.

ஒவ்வோர் குறையைத் தீர்ப்பது ஒவ்வோர் சமயம். ஆறுவகைக் குறைகளையுந் தீர்ப்பவை அறுவகைச் சமயம்.

ஒரு மனிதன் கழிந்த பிறப்புக்களில் ஐந்து வகைக் குறையுந் தீர்ந்து, ஒரு குறைமாத்திரம் இருப்பின், அவன் அந்த ஒரு குறைதீர ஒரு சமயத்தை அநுட்டிக்கற்பாலன். மற்ருெரு மனிதனுக்கு இரு குறை இருந்தால் இரு சமயத்தை அநுட்டிக்கவேண்டியவன் ஆகின்ருன். இங்ஙனமே மூன்று சமயத்தை—நான்கு சமயத்தை—ஐந்து சமயத்தை—ஆறுசமயத்தையும் அநுட்டிக்க வேண்டி வரலாம். ஆறு குறையுந் தீரவேண்டியிருந்தால், ஆறு சமயமும் அநுட்டிக்க வேண்டியனவே.

குறையுள்ளவர்களை, ஆறு குறையும் உள்ளவர்; ஐந்து குறை உள்ளவர்; நான்கு—மூன்று — இரண்டு — ஒன்று என்ற எண்ணிக்கையிற் குறையுள்ளவர் என்று வகுத்தால்,

குறையுள்ளவர்கள் அறுபத்துமூன்று வகையினர்கள் ஆவார்கள். $(2^6-1)=63$ என்ற கணித வாய்ப்பாடு கொண்டு இது அறியத்தக்கது.

ஆறு சமயங்களுந் தனித்தும் சேர்ந்தும் அறு பத்துமூன்று வகையில் அநுட்டிக்கப்படலாம். அறு பத்துமூன்று வகைக்கும் வகைக்கொருவரை உதா ரணங் காட்டியது பெரியபுராணம்போலும். இது பெரிதும் சிந்தனைக்குரியது.

☼

இவ்வாறு, அறுவகைச் சமயங்களைக் குறை பற்றி அறுபத்துமூன்று வகையாக வகுத்தலே யன்றி நூறாக வகுப்பதுமுண்டு. இந்த அண்டத் துக்குக் கீழ் மேல் உட்படப் பத்துத் திசைக் கும் திசைக்குப் பத்தாக, நூறு புவனங்கள் உண்டு. புவனங்கள் தத்துவங்களைப்பற்றி யிருப்பவைகள். தத்துவ தாத்துவிகங்களைப் பற்றிக்கொண்டு, அவையே தாம் என்று அபிமானிக்கின்ற ஆன்மாக் களுக்கு, அவ்வாறு அபிமானித்தற்குக் காரணமா யிருப்பவைகள் புவனங்கள்.

மனிதனைப் பத்து நாடிகள் பத்துத் திக்கிலும் நாட்டத்தை வருவித்து அங்கும் இங்கும் வலிக்கின் றன. ஒவ்வொரு நாடிக்கும் பத்துக் கிளைகள் இருக் கலாம். ஆகவே மனிதனின் நாட்டங்களை—பற்றுக் கோடுகளை—நூறு வகையாக வகுக்கலாம்.

இந்தப் பிருதிவி அண்டத்துக்கு வந்த மனி தன், குரங்குமாதிரி, நூறுபிடி பிடித்துக் கொள்ளு வான். ஒவ்வொரு பிடியும் ஒவ்வொரு புவனம். ஒவ்வொரு பிடியினின்றும் விலக ஒவ்வொரு சமயம் வேண்டும். பிருதிவி அண்டத்தினின்றும் விடு படுதற்கே நூறுசமயம் வேண்டும். நூறு சமயமும் ஆறு சமயத்துள் அடங்கும்.

" நூறு சமயம் உளவாம் நுவலுங்கால்
ஆறு சமயம்அவ் வாறுட் படுவன
கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா
வீறு பரநெறி இல்லா நெறியன்றே "

—திருமந்திரம் : 1512

பஞ்சபாண்டவர்கள் சுவரோவியம்போலிருந்தவர்கள், இப்பொழுது தலை குனிகின்றார்கள். ஐம்பத்தாறு தேசத்து அரசர்கள் மனம் பதறுகின்றார்கள். துரியோதன மகாராஜன் திரௌபதியின் துகிலை, அந்தச் சபை மத்தியில் உரியும்படி ஆக்ஞாபிக்கின்றான். துச்சாதனன் அந்தப் புனிதையான திரௌபதியின் துகிலைத் தீண்டுகின்றான். திரௌபதி ஒரு கையால் துகிலை இறுகப் பற்றிக்கொண்டு, மற்றக்கையைச் சிரமேல் எடுத்து நின்று, " கோவிந்தா ! கோவிந்தா !" என்று அலறுகின்றாள். கோவிந்தன் சற்றே துயிலுணர்ந்தவன் — மீண்டும் மறுபுறம் புரண்டு துயில் கூடுகின்றான். கோவிந்தன் அந்தப் பக்கம் நோக்கவில்லை.

திரௌபதியோ " தீண்டாத கற்புடைய செழுந்திரு". ஐம்புலன்கள்போல் ஐவர்கள் பதிகளாகவும், அவர்களால் தீண்டப்படாமலே, ஓரகத்திலே ஒருவனையே பற்றிக்கொண்டு—தீண்டுதற்குரியவனையே தீண்டிக்கொண்டு—இருப்பவள். " ஒருவனைப்பற்றி ஓரகத்திரு" என்ற மந்திரத்துக்குத் திருஷ்டாந்தமானவள். இரண்டகம் இல்லாதவள். நித்திய கன்னிகை. அகல்யை, சீதை, மந்தோதரி, தாரை, திரௌபதி என்கின்ற உத்தம பஞ்ச கன்னிகைகளுள் ஒருத்தி. சார்புணர்ந்து சார்புகெட ஒழுகுபவள். அவள் பெய்யெனப் மழை பெய்யும்.

இப்படிப்பட்ட—எவராலுந் தீண்டப்படாத—நித்திய கன்னிகையான கற்புத்தெய்வம்—அன்று, அந்த இராசசபையில் கோவிந்தனைக் கூப்பிட்டு அலறுகின்றாள். அருந்ததிக்கு ஒப்பான அவள் ஒருகாற் கூப்பிட்டால், இருகால் ஓடிவர வேண்டிய அவன்—வருகிறவன்—கோவிந்தன். அன்று—அருந்தருணத்தில்—ஆயிரம்முறை கூப்பிட்டும் கோவிந்தன் அசையவில்லை. காரணத்தைக் கற்புத்தெய்வம் உணர்ந்தது. உணர்ந்ததும் — உத்தரவின்றியே, 'உடுக்கை இழந்தவன் கைபோல்' உற்றுழி உதவுகின்ற கை—துகிலை இறுகப் பற்றிய திரௌபதியின் கை—திடீரென்று நெகிழ்ந்தது. ஒரே ஒரு பிடியும் விடுபட்டது. பிடி பிடிக்கவேண்டுமிடத்தை அந்தக் கை அறிந்தது. அறிந்ததும் அந்தக் கையும் மேல் எழுந்து, மற்றக் கையோடு சேர்ந்து குவிந்தது.

"என்செய லாவ தியாதொன்றும் இல்லை இனி"

என்று சொல்வதுபோன்றிருந்தது அந்தத் திருக்கைகளின் குவிவு. "கோவிந்தா" என்று மற்றொரு வார்த்தையை அந்தத் தெய்வம் உச்சரிக்கவில்லை. அதற்கு முன்னமே, அந்த அறிதுயிற் கள்வன்—திரௌபதி எல்லாப் பிடிகளையும் விட்டுவிட்டாள்—சர்வபுவனங்களையும் கடந்துவிட்டாள் — தன்னையே இறுகப் பற்றிக்கொண்டாள்; அவள் கைக் குவிப்புக்குள் தான் அகப்பட்டுக்கொண்டான் — என்பதை உணர்ந்தான். கோவிந்தன் துயிலுணர நேரமில்லாமலே, துகில்களை வாரிச்சுமந்துகொண்டு ஓடோடி வந்தான். அவன் சக்கரம் அவனுக்கு

முன்னமே, உருண்டோடாமற் பறந்தோடி வந்தது. கதர்ச் சக்கரம்போலக் காரியஞ்செய்தது ; மானங் காத்தது.

※

தீண்டாத கற்புடைய செழுந்திருவாகிய திரௌபதியின் துகிற்பிடியொன்றே, ஸ்ரீ கோவிந்தன் வருதற்குத் தடையாயிருந்ததானால், நம்மிடம் எத்தனை பிடிகள் இருக்கின்றன. நமக்கும் கோவிந்தனுக்கும் எவ்வளவு தூரம். ஒவ்வொரு பிடியும் விடுபடுதற்கு ஒவ்வொரு சமயம் வேண்டும். ஒவ்வொரு பிடியும் ஒவ்வொரு புவனம். பிருதிவி தத்துவத்தில் இறுக்கமான நூறுபிடி நமக்குண்டு. நூறு புவனம். பிருதிவி தத்துவத்தினின்றுமாத்திரம் விடுபட நூறு சமயம் வேண்டும்.

குறைபற்றி அறுபத்துமூன்று வகையாகவும், பிடிபற்றி நூறுவகையாகவும் வகுக்கப்படும் சமயம் எல்லாம் ஆறாக அடங்கும். அந்த ஆறு சமயங்கள் எவை ?

---

"ஈசுவரானுக்கிரகத்தினால் நமக்குப் புலப்பட்டிருக்கிற மெய்யுணர்வை உலகத்தாருக்குப் போதித்து அவர்களைத் திருத்துவது தக்கதன்றேவெனின், ஈசுவரனே சகல ஆன்மாக்களையும் அவரவர் பக்குவத்துக்குத் தக்க நிலையில் வருவித்துத் திருத்திக்கொண்டு வருகின்றார். அங்ஙனமாக, நாம் ஒன்றை முன்னிட்டுச் செய்வது ஈசுவரன்மேல் அறியாமை ஏற்றுவதாய் அவர் கிருத்தியத்துக்கு மாறாய் முடியும். ஆதலால் திருவருள் வசப்பட்டு நின்று செய்யுங்காலம் வந்தால் மாத்திரமே இதை மாத்திரமன்று, மற்றும் ஆகவேண்டிய எவற்றையும் இனிது செய்யலாம். அந் நிலையில் அது ஈசுவரச் செயலாகும். ஆகவே, ஈசுவரனே எதையுஞ் செய்யவேண்டியவர் என்பது முடிந்தது."

— ஆன்மவிசாரம்

## சமயம் 9

### உடலோம்புங் காலம் முதிர முதிரச் சமயங்கள் பிறழ்வதில் நூதனம் இல்லை.

# இன்று சங்கற்ப நிராகரணஞ் செய்ய நேர்ந்தால்

*உண்மைச் சமயங்கள் ஆறு.*

*அவற்றுக்கு அகச்சமயம் என்று பெயர். அவை எவை?*

*புறச்சமயங்கள் எண்ணில் அடங்காத சமய கோடிகள் ஆதலின், அவைகளைப் "பொய்தரு சமயம் எல்லாம்" என்றும், அகச்சமயங்களை, "மெய்தரு சைவமாதி இருமூன்று" என்றும் கூறுகின்றது சித்தியார். அகச் சமயங்கள் சைவம் முதலிய ஆறு. ஆறு சமயத்துள் ஒன்று 'சைவம்'. அது முதலில் வைத்து எண்ணப்படுகின்றது. மிகுதியான ஐந்து சமயங்களும் எவை?*

"புறச்சமயங்கள் சிறப்பில வாகி
அருளின் மாந்தரை வெருளுற மயக்கி
அலகைத் தேரின் நிலையில் தீரும்
ஈங்கிவை நிற்க; நீங்காச் சமயம்
மூவிரு தகுதி மேவிய தாமும்

ஒன்றே டொன்று சென்றுறு நிலையில்
ஆறும் மாறு வீறுடைத்து ; இவற்றுள்
எவ்வ மில்லாச் சைவநற் சமயத்து''

என்ற சங்கற்பநிராகரணப் (பாயிரம் 11-18) பகுதிக்கு உரை வகுத்தவர்,

ஆறு சமயங்களை,

சைவம், பாசுபதம், மகாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் என்று பெயர் குறிப்பிட்டு, இவை எனக் காட்டியிருக்கின்றார். அன்றி இவைகளுக்கு உட்சமயங்கள் என்று பெயருங் குறிப்பிட்டிருக்கின் றார். உட்சமயம் என்றால் அகச் சமயம். ''ஆகவே சைவமாதி இருமூன்று'' எவை என்ற கேள்விக்கு விடை இப்பொழுது தெரிகிறது. அகச் சமயங்கள், சைவம் முதல் வைரவம் இறுதியானவைகள். இங் ஙனமே ஆறுமுகநாவலர் பரியந்தம் பழையவர்கள் எல்லாம் குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள்.

சைவ நாயன்மார்களுள் ஒருவராகிய சிறுத் தொண்ட நாயனார் வழிபட்ட வேடம் வைரவ வேடம். இதனால் வைரவ சமயத்தின் உயர்வு தெரிகின்றது. மற்றொரு நாயனார் மணக்கோலம் பூண்ட தமது அருமைப் புதல்வியின் கூந்தலை அரிந்து பரம சற்பாத்திரமாகிய மாவிரதியர் ஒருவ ருக்கு வழங்குகின்றார். இதனால், மகாவிரத சமயத் தின் உயர்வு தெரிகிறது. 'சைவர் பாசுபதர்' என்ற தொடர் மதிப்பான கருத்தில் திருஞான சம்பந்தப் பெருமான் திருவாக்கில் வந்திருக்கிறது. இதனால் பாசுபத சமயத்தின் பெருமை விளங்கு கின்றது. இங்ஙனமே காளாமுகம், வாமம் என்

பனவும் ஒவ்வோர் குறையைப் போக்குதற்குரிய உயர்ந்த சமயம் ஆகலாம்.

அகச் சமயங்கள் சைவம் முதல் வைரவம் இறுதியானவை என்பதில் இனிச் சந்தேகம் வேண்டியதில்லை.

வாம சமயம் வெகுகாலத்துக்கு முன்னமே பழுதுபட்டிருக்கவேண்டும். வாம சமயத்தை உரை யாசிரியர்கள் சுத்த வாமம் அசுத்த வாமம் என்று வகுப்பதாலும், வாமத்தைப் பெரியோர் இகழ்வ தாலும் இது அறியத்தக்கது. அநுட்டிக்கிறவர்களின் பிறழ்வால், வாமம் என்ற பெயரே அருவருப்புக் குரியதாய் விட்டது. இப்பொழுது 'சைவம்', 'வைதிகம்' என்ற பெயர்கள், அநுட்டிப்போரின் பிறழ்வால் இகழப்படுவதிலிருந்தே வாமத்தின் நிலை உய்த்துணரத்தக்கது.

காளாமுக சமயம் மிக முன்னரே அநுட்டிப்பா ரின்றி மறைந்திருக்கலாம்; பிறழ்ந்துபோயு மிருக்கலாம்.

பாசுபதம் மாவிரதம் வைரவம் பிற்காலத்திற் பிறழ்ந்துவிட்டன. உடலோம்புங் காலம் முதிர முதிரச் சமயங்கள் பிறழ்வதில் நூதனம் இல்லை.

பாசுபதம் முதல் ஐந்தும் பெயர்கூடச் சொல்ல முடியாத நிலையில் மிக மிகப் பிறழ்ந்தமையினால் அருணந்தி சிவாசாரியர் அவற்றின் பெயர் கூறக் கூசிப்போலும், "சைவமாதி இருமூன்று" என்று மாத்திரம் அருளிச்செய்தார். சைவம், அருணந்தி

சிவாசாரிய சுவாமிகள் காலத்திற் சற்றே பெயர் கூறத்தக்க நிலையில் ஒருசிலரேனும் பிறழ்வின்றி அநுட்டிக்கத்தக்கவாறு இருந்திருக்கலாம்.

அருணந்திசிவாசாரியருடைய சீடர் மறை ஞானசம்பந்தர்; அவருடைய சீடர் உமாபதி சிவாசாரியர். உமாபதி சிவாசாரியர் சைவமும் பஃறலைப்பட்டுப் பிறழ்ந்தமையைத் தாமியற்றிய சங்கற்பநிராகரணத்திற் காட்டியிருக்கிறார்.

சங்கற்பநிராகரணத்தில் நிராகரிக்கப்பட்ட சமயங்கள் ஒன்பது. அவற்றுள் ஒன்று மாயா வாதம். இது உபநிடத சாரமான வேதாந்தத்தின் பிறழ்வாகிய ஏகாத்மவாதம்.

ஏனைய எட்டும், அகச் சமயம் ஆறுள் முதற்கண் வைத்து எண்ணப்படும் சைவத்தின் பிறழ்வுகள்.

அவை :

1. ஐக்கியவாத சைவம்,
2. பாடாணவாத சைவம்,
3. பேதவாத சைவம்,
4. சிவசமவாத சைவம்,
5. சங்கிராந்தவாத சைவம்,
6. ஈசுர அவிகாரவாத சைவம்,
7. நிமித்த காரண பரிணாமவாத சைவம் என வழங்கும் சிவாத்துவித சைவம்,
8. சைவம்,

எனும் இவை. ஏகாத்மவாதம் வேதாந்தத்தின் பிறழ்வு. அது தன்னை வேதாந்தம் என்றே சொல்

லும். அவ்வாறே சைவத்தின் பிறழ்வுகளில் ஒன்று தன்னைச் சைவம் என்றே வைத்துக்கொண்டது. உண்மையான சைவத்தினின்றும் புறம்பு செய்வதற்காக இதனைச் சுத்த சைவம் என்று சொல்வதுமுண்டு.

உமாபதிசிவாசாரியர் சங்கற்பநிராகரணம் செய்தற்கு ஏழுவருஷங்களுக்குமுன் சிவப்பிரகாசஞ் செய்தார் என்று சொல்லப்படுகின்றது. சிவப்பிரகாசத்தி னிறுதியில் நூற்கருத்து என்ற தலையங்கத்தில்,

"நிலவுல காய தாதி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்
குலவினர் அளவ ளாவாக் கொள்கைய தாகி வேதத்
தலைதரு பொருளாய் இன்பாய்த் தாவில்சற் காரி
யத்தாய்
மலைவறுமுணர்வாற்பெத்த முத்திகள்மதித்தாமன்றே"
(சிவப். 16-ஆம் சூத். 2)

என்ற பாட்டு வருகின்றது.

"உலோகாயதம் முதல் சிவாத்துவித சைவம் ஈருகிய சமயத்தவராற் கொண்டாடப்படாத கோட்பாடுகளையுடையதாய், வேதாந்தமாகிய உபநிடதங்களின் உண்மைப் பொருளாய், பேரின்பத்தை விளைவிப்பதாய், சற்காரிய இயல்பு கூறுவதாய், மலைவற்றிருக்கும் சைவசித்தாந்த உணர்வாற், பெத்தமுத்தி நிலைகளை இந்நூலிற் சொன்னேம்" என்பது கொழும்பு மு. திருவிளங்கம் அவர்கள் குறித்த பாடலுக்குத் தந்த பொழிப்புரை.

"வேதத்தலை"—வேதாந்தம். "வேதத்தலை தருபொருள்"—வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்

தாந்தம். இது, "உலகாயதாதி, சிவாத்துவிதாந்தத் துக் குலவினர், அளவளாவாக் கொள்கையது."

அளவு—பிரமாணம். சிவாத்துவிதிகள் இறுதி யான சமயத்தவர்களின் அளவைகளுக்கு எட்டா தது சைவசித்தாந்தம் என்பது கருத்து.

இப்பாட்டில் உலகாயதம் முதல் சிவாத்துவித சைவம் இறுதியான சமயங்கள் "மெய்தரு சைவத்" துக்குப் புறம்பான புறச்சமயங்கள் என்பது வெளிப்படை.

சிவாத்துவித சைவம், சைவத்தின் பிறழ்வுக ளாகச் சங்கற்பநிராகரணத்திற் சொல்லப்பட்ட சைவங்களுள் ஏழாவது. சைவப் பிறழ்வில் எட் டாவதாகிய (சுத்த) சைவம் "நிலவுலகாயதாதி" என்ற சிவப்பிரகாசப் பாட்டில் வரவில்லை. சிவப் பிரகாசஞ் செய்த காலத்தில் சைவப் பிறழ்வு சிவாத்துவ சைவம்வரை எல்லைப்படுத்தப்பட்டிருந் ததுபோலும். சிவப்பிரகாசஞ் செய்து ஏழுவருஷத் தின் பின் சங்கற்பநிராகரணஞ் செய்கின்ற காலத் தில் (சுத்த) சைவம் என்ற பெயரில் ஒரு சைவப் பிறழ்வு, சிவாத்துவித சைவத்துக்கு மேற்பட்டு முளைத்திருக்கவேண்டும்.

சிவப்பிரகாசம் ஏழு வருஷம் பிந்திச் செய் திருந்தால்,

"நிலவுல காய தாதி நிகழ்சுத்த சைவ அந்தத்துக்
குலவினர் அளவ ளாவாக் கொள்கைய தாகி......"

என்று சுத்த சைவத்தை இறுதியில் வைத்துப் பாட வேண்டி நேர்ந்திருக்கலாம். சிவப்பிரகாச காலத்

துக்கும் சங்கற்பநிராகரண காலத்துக்கும் இடையிலேயே — ஏழு வருஷ இடைக்காலத்தில் — ஒரு (சுத்த) சைவம் முளைத்துவிட்டது. இந்தப் போக்கில் சைவத்தின் பலதலைப்பட்ட பிறழ்வுகளைச் சிந்தித்துப் பார்க்கும்போது, இன்றைக்கு நமது காலத்தில் சங்கற்பநிராகரணஞ் செய்ய நேர்ந்திருந்தால், இன்னும் எத்தனையோ சைவப் பிறழ்வுகள் சங்கற்பித்து நிராகரிக்க நேர்ந்திருக்கும் என்று தோன்றுகிறது.

ஆரிய சைவம்—திராவிட சைவம்—மட சைவம்—தீண்டுகிற சைவம்—தீண்டாச் சைவம்—வெளிப்புறச் சைவம்—ஒன்றுமில்லாத வெறுஞ் சைவம்—என்றிங்ஙனம் எண்ணிறந்த சைவங்கள் நமது கண்முன் தோன்றி நடக்கின்றன. இவற்றுக்கே தனித்தொரு சங்கற்பநிராகரணம் வேண்டும்.

சங்கற்பநிராகரணத்தில் நிராகரிக்கப்பட்ட ஒன்பது சமயங்களுள், மாயாவாதம் வேதாந்தப் பிறழ்வு என்பதும், ஏனைய எட்டும், அறுசமயத்துள் ஒன்றாகிய சைவத்தின் பிறழ்வுகள் என்பதும் முன்னமே கூறப்பட்டன.

மாயாவாதத்தை வேதப்பிறழ்வு என்றும், ஏனைய எட்டுச் சைவங்களையும் வேதாகமப்பிறழ்வு அல்லது ஆகமப்பிறழ்வு என்றும் கூறினும் இழுக்கு ஆகாது.

வேதாகமங்களைத் தமக்குப் பிரமாணம் என்று சொல்லிக்கொண்டு, அவற்றுக்குத் தம்மனம் போனவாறு பொருள் பண்ணுகின்ற பிறழ்ந்த சமயங்கள்,

வேதாகமங்களுக்குப் புறம்பான புறச்சமயங்களோ டொத்த புறச்சமயங்களே.

"பார்ப்பான் பிறப்பு, ஒழுக்கங் குன்றக் கெடும்." அவ்வாறே, வேதாகமப் பெயரால் வழங்கும் சமயங்களும், தாம்தாம் நினைத்தவாறே, வேதாகமங்களுக்கு விபரீதார்த்தம் பேசத் தொடங்கிய அன்றே கெட்டுப்போயின. "கத்திடுமான் மாக்களுரைக்கட்டு" க்கள் ஆயின.

வேதாகமங்களுக்கு விபரீதார்த்தம் பேசுகிறவர்களிலும் பார்க்க,

**வேதாகமங்களுக்குப் புறம்பானவர்கள் மிக நல்லவர்கள்.**

✲

சமயம் அகம்புறம் என்ற இருவகையுள் அடங்கும்.

புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்ற பிரிவுகள் பிற்காலத்தில் வந்தவை.

புறப்புறத்தில் புறமும், புறத்தில் அகப்புறமும் மோசமானால் நால்வகைப் பிரிவினால் பயனே உண்டாகாது. இது, தத்துவ ரீதியிலும், தத்துவத்துக்குச் செய்யும் அர்த்தத்திலும் வைத்து ஆராயத் தக்கது. இது ஒருபுறம் இருக்க,

பிற்காலத்திலே, அகச்சமயம் என்றால் சைவம் முதல் வைரவம் இறுதியான ஆறு சமயம் என்ற கொள்கை விடுபட்டு,

சைவத்தின் பிறழ்வுகளாகச் சங்கிற்பநிரா கரணத்திலே சொல்லப்பட்ட எட்டுவகைச் சைவத் துள், வால் தலை தள்ளி,

இடையில் உள்ள,

பாடாணவாதசைவம் முதல் சிவாத்துவித சைவம் இறுதியான ஆறுமே (அகச்சமயம்) என்ற கொள்கை நிலைப்பட்டு அசைக்கமுடியாமல் உரம் பெற்றுவிட்டது.

இக்கொள்கையினர் சைவத்தை அகச்சமயம் ஆறுள் ஒன்ருகக் கொள்ளாது இருபத்தைந்தாம் சமயமாகக் கொள்பவர். புறப்புறம் ஆறு; புறம் ஆறு; அகப்புறம் ஆறு; அகம் ஆறு; ஆக இருபத்து நான்கு. இருபத்துநான்குக்கும் மேற்பட்டது சைவம். இருபத்துநான்காவது சமயம் சிவாத்து விதம். சைவத்துக்கும் சிவாத்துவிதத்துக்கும் மயி ரிடை வித்தியாசம் என்பது அவர் கொள்கை. இது சரித்திர சம்பந்தமாக நுணுகி ஆராயற்பாலது.

உமாபதி சிவாசாரியர் பாடாணவாதம் முதல் சிவாத்துவிதம் இறுதியான ஆறனையும் அகச்சம யம் என்று சொல்லவில்லை.

---

"ஈசுவரன் உனக்கு மெய்யுணர்வைத் தருவது நீ அத ஞற் கடைத்தேறும் பொருட்டன்ருே. அங்ஙனமாக, நீ அவற் றைப் பக்குவம் இல்லாத பிறர்க்குப் போதித்து அது காரண மாக உனக்குக் கீர்த்தி சம்பாதிக்க முயன்றுகொள்வா யாஞல், உனது நிலை யாதாகின்றது." —ஆன்மவிசாரம்

## சமயம் 10

### பிராசீனர் நவீனர் வகுத்த

### சமயங்கள்

பிராசினர்கள் சமயங்களை அகம் புறம் என இரண்டாக வகுத்து, அகச்சமயங்களைச் சைவம் முதல் வைரவம் இறுதியாக ஆறு என்றும், அவற்றின் பிறழ்வுகளான எண்ணிறந்த சமயங்களைப் புறச்சமயங்கள் என்றுங் கொள்வர். பிராசீனம்—பழமை.

நவீனர் சமயங்களை அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என நான்கு ஆக வகுத்து, ஒவ்வொரு வகுப்பையும் ஆறு ஆறுக வகுத்து, இருபத்துநான்கு சமயம் ஆக்கிச், சைவத்தை இருபத்துநான்குக்கு மேலே இருபத்தைந்தாம் சமயம் என்பர். அன்றி, இருபத்துநான்கு சமயங்களும் ஒன்றிலிருந்து ஒன்று உயர்ந்தவைகள்; சைவத்தை அடைதற்குரிய இருபத்துநான்கு படிகள் என்றுங் கொள்வர்.

அவர் கொள்ளும் புறப்புறம், உலகாயதம், மாத்தியமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம் ஆகிய நால்வகைப் பௌத்தம், ஆருகதம் ஆகிய ஆறுமாம்.

புறம், தருக்கம் மீமாஞ்சம் ஏகான்மவாதம் சாங்கியம் யோகம் பாஞ்சராத்திரம் என்னும் ஆறுமாம்.

அகப்புறம், பாசுபதம் மாவிரதம் காபாலம் வாமம் வைரவம் ஐக்கியவாதசைவம் என்னும் ஆறுமாம்.

அகம், பாடாணவாதம் பேதவாதம் சிவசமவாதம் சிவசங்கிராந்தவாதம் ஈசுரஅவிகாரவாதம் சிவாத்துவிதம் என்னும் ஆறுமாம்.

பிராசீனர்கள் சைவம் முதல் வைரவம் இறுதியாகக் கொள்ளும் அகச்சமயம் ஆறனுள் சைவத்தைப் பிரித்து இருபத்தைந்தாம் சமயம் ஆக்கி, ஏனைய பாசுபதம் முதல் வைரவம் இறுதியான ஐந்தனோடு, சங்கற்பநிராகரணத்துள் நிராகரிக்கப்பட்ட, எண்வகைப் பிறழ்ந்த சைவங்களுள் முதற்கணின்ற ஐக்கியவாத சைவத்தைப் பாசுபதம் முதலிய ஐந்தோடுங் கூட்டி ஆறுக்கி, ஆறனையும், அகப்புறம் என்றும், எண்வகைப் பிறழ்ந்த சைவங்களுள் இரண்டாவதாகிய பாடாணவாதம் முதல் ஏழாவதாகிய சிவாத்துவிதம் இறுதியான ஆறனையும் அகச்சமயம் என்றுங் கொள்வர் நவீனர்.

பிராசீனர் கொண்ட அகச்சமயம் ஆறனுள் சைவந் தவிர்ந்த ஏனைய ஐந்தும் நவீனருக்கு அகப்புறச் சமயம்.

சங்கற்பநிராகரணத்தில் நிராகரிக்கப்பட்ட பிறழ்ந்த எண்வகைச் சைவத்துள் இடைப்பட்ட ஆறுமே நவீனருக்கு அகச்சமயம்.

சங்கற்பநிராகரணத்தில் நிராகரிக்கப்பட்ட சமயங்கள் ஒன்பது. அவற்றுள் முதலாவது மாயா வாதம். இதனைப் புறச்சமயமாகிய ஏகான்மவாதத்துள் ஒரு கூறு ஆக அடக்குவர் நவீனர். மிகுதி எண் வகைச் சமயத்துள் முதற்கணின்ற ஐக்கியவாதம் நவீனரால் அகப்புறத்திற் சேர்க்கப்பட்டது. ஏனைய ஏழனுள் முதல் ஆறும் அகம். எட்டாவது சுத்த சைவம். இதனை அகத்துள் அடக்க நவீனர் முயல்வர்.

சங்கற்பநிராகரணத்துள் நிராகரிக்கப்பட்ட சைவப்பிறழ்வுகளை அகச்சமயம் ஆக்கப் பெரு முயற்சிகள் நடந்திருக்கின்றன.

"ஏழஞ் சிருநூ றெடுத்த ஆயிரம்
வாழுநற் சகனம் மருவா நிற்பப்
பொற்பொது மலிந்த அற்புதன் ஆனி
ஆரும் விழவிற் பொற்றே ராலயத்து
ஏரு எண்மர் நிரையி லிருப்ப
மயங்கு வாத மாயா வாதி
முயங்கிட ஒருதலை முதுவெதிர் மணிசேர்
பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம் பதிதிகழ்
மெய்கண் டவனருள் கைகண் டவர்களில்
ஒருவர் ஒருதலை மருவி இருப்ப
வஞ்சப் பிறவிக்கு அஞ்சிவந் தொருவன்
ஏதிறை அருளென ஈதெனும் மாயா
வாதியை அயலினர் மறுதலைத் தருடர
மற்றவ ரயலினர் அவருரை மறுத்துச்
சொற்றர அயலினர் அவருந் தொலைவுற்று
இன்னே எவரும் முன்னே கழிவுழி
ஆங்கய லிருந்த அருளினர் அழகிது

நீங்கள்சங் கற்ப நிராகரித் தமைமென
மற்றவ ருரைத்த சொற்றரு பொருள்கொடு,
வாத செற்ப விதண்டையு மேது
மோது நால்வகை உவமையுந் திகழ்தர
அருள்சேர் மாந்தர் வெருள்சே ராமல்
தர்க்கமும் விடயமுங் கற்க
நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே."

(சங்கற்ப பாயிரம் 26-49)

சங்கற்ப நிராகரணத்தில் இப்பகுதி அதன் வரலாறு பேசுகின்ற பிரதான பகுதி. இதில் "ஏரு எண்மர் நிரையி லிருப்ப" என்ற அடியில் "எண் மர்" என்ற வார்த்தையும்,

"இன்னே எவரும் முன்னே கழிவுழி" என்ற அடியில் "எவரும்" என்ற வார்த்தையும் குறிப் பிடத் தக்கவை.

இவ்வார்த்தைகளில், "எண்மர்" என்பதனை "அறுவர்" என்றும், "எவரும்" என்பதனை "எழுவரும்" என்றும் பாடபேதம் செய்ய முயற்சி நடந்திருக்கின்றது.

"எண்மர்" என்றது ஐக்கியவாதி முதல் சைவவாதி இறுதியான பிறழ்ந்த எட்டுவகைச் சமயங்களை.

"எவரும்" என்றது வாதிக்க முன்வந்த யாவ ரும் என்றவாறு. 'யாவரும்' என்றது, மாயா வாதியும் எண்வகைச் சைவவாதிகளும் ஆகிய ஒன்பதின் மரையும்.

"எண்மர்" என்பதனை "அறுவர்" என்று பாடங்கொள்பவர்களின் நோக்கம், சங்கற்பநிராகரணத்தில் நிராகரிக்கப்பட்ட சமயங்களுள் மாயாவாதம் தவிர்ந்தவை, அறுவகையான அகச்சமயங்கள் என்று கொள்வதாயிருக்கும்.

மாயாவாதம் தவிர்ந்த சமயங்கள் எட்டாயிருக்க, அவற்றை ஆறு என்று கொள்வது காண்டல் விரோதம். இங்ஙனம் எண்மரை, அறுவர் ஆக்குபவர்களே, "எவரும்" என்பதனை "எழுவரும்" என்று ஆக்க முயல்பவர். "எழுவரும்" என்று கொள்வதன் நோக்கமும், "எழுவரும்" என்பதில், மாயாவாதி தவிர்ந்த அறுவரும் அகச்சமயிகள் என்று கொள்வதே.

※

இங்ஙனம் கூறியவாற்றால், நவீனர்,

அகச்சமயம் ஆறனையும், பாடாணவாத சைவம் முதல் சிவாத்துவித சைவம் இறுதியான ஆறும் என்கின்றனர்.

பிராசீனர்,

சைவம் முதல் வைரவம் இறுதியான ஆறும் என்கின்றனர். இந்த இரண்டு ஆறுகளில் எந்த ஆறு கொள்ளத்தக்கது?

※

"ஆறுவகைச் சமயத்தி லருந்தவரும் அடியவரும்
கூறுமறை முனிவர்களும் கும்பிடவந் தணைந்தாரும்
வேறுதிரு வருளினால் வீடுபெற வந்தாரும்
ஈறில்பெருஞ் சோதியினுள் எல்லாரும் புக்கதற்பின்."

திருஞானசம்பந்தப் பெருமானின் திருக்கலியாணத்தைத் தரிசித்த ஆறுவகைச் சமயத்தில் அருந்தவரும் சோதியிற் பிரவேசித்தார்கள்.

அந்த ஆறுவகைச் சமயத்தவர்களும்,

சைவம் முதல் வைரவம் இறுதியான சமயத தவர்களா? பாடாணவாதம் முதல் சிவாத்துவித வாதம் இறுதியான சமயத்தவர்களா?

"ஆறுவகைச் சமயத்தி லருந்தவரும்"

என்ற பாடலுக்கு உரை வகுத்தவர்கள் இரண்டு வகையாகவும் வகுத்திருக்கின்ருர்கள்.

சைவம் முதலிய ஆறும் பெரியபுராணத்திலும், தேவாரங்களிலும் மதிப்புப் பெற்றிருக்கின்றன. பாடாணவாதம் முதலியவற்றுக்கு அவ்வாருன மதிப்பைக் காணேம். சமயவாதிகள் இதனை ஆராயக்கடவர்.

☀

சைவத்தை இருபத்தைந்தாம் சமயம் எனக் கொண்டு, ஏனைய சமயங்களை இருபத்துநான்கு ஆக வகுக்கின்ற நவீனர்கள், மாயாவாதத்தை ஒன்பதாஞ் சமயமாகக் கொண்டு அதனைப் புறச் சமயம் என்றும், சிவாத்துவிதத்தை இருபத்து நான்காஞ் சமயமாகக் கொண்டு, அதனை அகச் சமய உச்சமென்றுஞ் சைவத்துக்கு மிக அண்மை என்றுங் கொள்வர்.

☀

மாயாவாதி சிவன் மாயையாற் பந்தப்பட்டுச் சீவன் ஆயினுன் என்று சொல்பவன்.

சிவாத்துவிதி சீவனைச் சிவன் என்றும், மாயை ஆகிய உலகத்தைச் சிவசத்தி என்றும் கொள்பவன்.

இன்னும் சிவாத்துவிதி உலகத்தைச் சிவசத்தி என்று சொல்ல, மாயாவாதி, சிவசத்தியைச் சட சத்தி என்று சொல்லுகிறவன். இருவரும் அண் ணனுந் தம்பியும்.

※

இவர்கள்பாடு இப்படியிருக்க மாயாவாதியை ஒன்பதாம் படியிலும், சிவாத்துவிதியை மிக மிக உயர்த்தி உச்சப் படியாகிய இருபத்துநான்காம் படியிலும் நவீனர்கள் வைத்துத் தத்துவ ஆராய்ச்சி செய்வது ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியம்.

※

சமய தத்துவங்களை ஆராய்ந்த உமாபதி சிவாசாரியார்,

மாயாவாதியிலும் பார்க்கச் சிவாத்துவிதிக்கு அதிகஞ் சிறப்புக் கொடுக்கவில்லை.

உமாபதிசிவாசாரியார் மாயாவாதியை நோக்கி,

" அகண்டிதம் எனநீ பகர்ந்தமை தனக்குப்
பந்தம் இதுவெனத் தந்தமை கருதில்
வானில் நடக்குங் காலினைப் பிடித்துப்
பருவிலங் கிட்ட ஒருவன்நீ யன்றே."

—சங்கற்பநிராகரணம்

※

[பரப்பிரமம் ஒன்றாலுங் கண்டிக்கப்படாமல் அகண்டிதமா யிருப்பதென்று நீ முன் சொன்னதற்கு இப்பொழுது மாயா உபாதிகளால் இப்படிப் பந்திக்கப்பட்டு நிற்குமென்று சொன்னதை விசாரித்துப் பார்க்கில்,—

ஆகாயத்தின்கண் வியாபித்து நடக்குங் காற்றினைப் பிடித்து அங்கு இங்கு அசையாவண்ணம் பெரிய விலங்கை இட்டு வைத்தவன் நீ ஆவை]

என்று கூறுகின்றார்.

அவ்வாறே சிவாத்துவிதியையும் நோக்கி,

" உலகா யதனும் பூதக் கூட்டஞ்
சலமேற் கொப்புள் தகுமெனச் சாற்றினன்
தீய கருமச் சினர்சா வகர்பிறர்
நேயம் இல்லென நிகழ்த்தினர் இலரே
காண்டல் விரோதம் நிற்பிறர் கணித்திலர் "

—சங்கற்பநிராகரணம்

[" உலகாயதன் கூடப் பூதக் கூட்டமாயிருக்கிற தேகாதிப் பிரபஞ்சத்தை நீர்க் குமிழிபோல நிலைநிற்ப தன்று என்று கூறினன். அப்படியிருக்கச் செய்தே நீ இப்பிரபஞ்சத்தைச் சிற்சொரூபமென்று சொன்னது அர்த்தமன்று.

புத்தர்கள் சமணர்கள் மற்றுமுண்டான சமயிகள் அனைவரும் இந்தச் சரீரத்திலே ஓர் அறிவு உண்டென்று சொல்லுவார்கள். அதனை ஒழிந்து நின்போல ஆன்மா இன்று என்பார் இலர். பிரத்தியக்ஷ விரோதம் நீ காட்டினாற்போல அப்புறச் சமயிகளும் இவ்வாறு கூறினாரிலர் "]

என்று கூறுகின்றார்.

அன்றி,

" மாயா வாதப் பேயா உனக்குத்
தேவரில் ஒருவர்உண் டாக
மேவரு நரகம் விடுதலோ அரிதே "

—சங்கற்பநிராகரணம்

[ "மாயாவாதம் என்னும் பேய்ச் சமயத்தை உடையானே உனக்கு எல்லாரும் இறந்துபோய்த் தேவவர்க்கத்திலே ஒருவர் இருந்தாராயினும் ஒருவராலும் கிட்டுதற்கு அரிதாயிருக்கும் நிரயம் உனக்கு நீங்காதென்றறி" ]

என்கின்ற நடையிலேதானே,

சிவாத்து விதியையும் நோக்கி, உலகாயதனிலும் பார்க்க உன்னிடம் என்ன விசேடம் இருக்கிறது !

"நின் சித்தாந்தம் அவசித்தாந்தம்" என்கின்றனர்.

உமாபதி சிவாசாரியருக்கு உலகாயதம் முதல் சிவாத்துவிதம் இறுதியாக, அதற்குமேலே (சுத்த) சைவமுஞ் சேர, அகச்சமயம் ஒழிந்த எல்லாம் புறச்சமயமே.

---

ஈசுவரன் இன்ப துன்பங்களை ஊட்டுவதெல்லாம் சடசித்துக்களைப் பிரேரித்து நின்றேயல்லாமல் தாமாய் வெளிப்பட்டல்ல. பிறரால் நமக்கு இம்சை உண்டாகும்போது அதற்காக ஈசுவரனை வேண்டுவதும் முறைப்பாடு செய்வதும் தக்கது. அதுபற்றியே நன்மை உண்டாகற்பாலது. இங்ஙனமன்றி இம்சை உண்டாகும் விஷயங்களில் சீவர்களிற் சிறி அழுக்கறுத்துக் கடுமொழி புறங்கூற்றுக்களை வழங்கி அவர்களைக் குற்றந் தூற்றுவது நமது காலத்தையும் பாழாக்கி நமக்கு அஞ்ஞானத்தையும் நிலைப்படுத்தி ஈசுவரனுக்கு நம்மேல் வெறுப்பையும் நாம் பெற்றுக்கொள்வதாகும்.

--ஆன்மவிசாரம்

# சமயம் 11

## மாணிக்கர், சம்பந்தர், சுந்தரர், நாவுக்கரசரை மெல்ல மெல்ல மறக்கும் மடங்கள்

## உண்டிருந்து வாழ்வதற்கு வழிகாணும் மடசைவம்

"மெய்தரு சைவமாதி யிருமூன்று"—சைவம் முதல் வைரவம் இறுதியான ஆறு. இந்த ஆறும் அகச்சமயங்கள்.

இவற்றுள் சைவத்தின் பிறழ்வுகள், ஐக்கிய வாதம் முதல் சைவவாதம் இறுதியாகச் சங்கற்ப நிராகரணத்தில் நிராகரிக்கப்பட்டவைகள். இது காறுங் கூறியவைகளிலிருந்து சித்திக்கும் சுருக்க மான கருத்து இது.

☼

சமய ஆராய்ச்சி செய்த தத்துவப் பிரகாசம் என்கின்ற நூலும் சைவமாதி இருமூன்றையும் உட் சமயம் என்று கொள்ளுகின்றது. அதில் மற்றொரு விசேஷம், ஐம்பத்தாறு சமயங்களை எடுத்துக் கொண்டு அது கண்டிக்கின்றது. முதலிற் சமயங் களைப் புறச்சமயம் உட்சமயம் என இரண்டாக வகுக்கின்றது. வேதாகமங்களைக் கொள்ளாத சம யம் புறச்சமயம்; கொள்ளும் சமயம் உட்சமயம்.

வேதாகமங்களைக் கொள்ளாத புறச்சமயங்களை இருபத்துநான்கு சமயங்களாக வகுத்து ஆரம்பத்திற் கண்டனம் நடத்துகின்றது. அதன் மேல் உட்சமயங்களை ஆறுக வகுத்து, அந்த ஆறன் பிறழ்வுகளை இருபத்துநான்காக வகுத்து, இருபத்து நான்கையுங் கண்டிக்கின்றது.

வேதாகமப் பிறழ்வுகளான புறச்சமயம் இருபத்துநான்கு, உட்சமயங்களின் பிறழ்வுகள் இருபத்துநான்கு ஆக மொத்தம் நாற்பத்தெட்டுச் சமயங்கள் ஆராய்ந்து கண்டிக்கப்பட்டன. அந்த நாற்பத்தெட்டுக்குமேல் வேறும் எட்டுச் சமயங்கள் கண்டிக்கப்பட்டன. அவைகள் சங்கற்பநிராகரணத்தில் நிராகரிக்கப்பட்ட ஐக்கியவாதம் முதற் சைவவாதம் இறுதியான எட்டுமாம்.

இந்த எட்டையும் சைவசித்தாந்தத்தின் பிறழ்வுகள் என்கிறது தத்துவப்பிரகாசம். சைவத்தின் பிறழ்வுகள் என்கின்றது இக் கட்டுரை. இதற்குப் பின்வருமாறு ஆதரவு அளிக்கின்றது சங்கற்பநிராகரணம்.

"ஆறும் மாறு வீறுடைத்து இவற்றுள்
எவ்வ மில்லாச் சைவநற் சமயத்து
அலகில் ஆகமம் நிலவுதல் உளஅவை

*   *   *

வாய்ந்த நூல்கள் ஆய்ந்தன ராகி
ஆசா ஞகி வீசிய சமத்துடன்

*   *   *

பொற்பொது மலிந்த அற்புதன் ஆனி
ஆரும் விழவில் பொற்றே ராலயத்து
ஏரு எண்மர் நிரையி லிருப்ப."

இப்பகுதியில் வருகின்ற எண்மர் சைவாகமங்களைப் பிறழக் கொள்கின்ற ஐக்கியவாதிமுதல் சைவவாதி ஈறுன எண்மர்.

※

சைவத்தைச் சைவசித்தாந்தத்தின் அடித்தளம் என்று காண்பார்க்குச் சைவத்தின் பிறழ்வுகளைச் சைவசித்தாந்தத்தின் பிறழ்வுகள் என்று கொள்வதில் இழுக்கின்மை உய்த்துணரப்படும்.

※

உட்சமயப் பிறழ்வுகளே ஆயினுமாக, சைவசித்தாந்தப் பிறழ்வுகளே ஆயினுமாக அவையெல்லாம் பிறழ்ந்தவழிப் புறச்சமயங்களே. வேதாகமங்களைப் பிறழக் கொள்வதும் கொள்ளாமையும் ஒன்றே. கொள்ளாதவைகளும் பிறழக் கொள்பவைகளுங் கத்திடுமான்மாக்களுரைக் கட்டுக்களே.

இக்கருத்துப்பற்றியே சிவப்பிரகாச இறுதியில், வேதாகமங்களைக் கொள்ளாத சமயங்களையும், பிறழக் கொள்ளும் சமயங்களையும் ஒரே வரிசையில் வைத்து,

> "நிலவுல காய தர்தி நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்
> குலவினர் அளவ ளாவாக் கொள்கையது......"
>
> --சிவப் .12ஆஞ் சூத். 2

என்றிவ்வாறு கூறப்பட்டது.

என்றிங்ஙனங் கூறியவாற்ருற் சிவாத்துவிதம் உலகாயத வரிசையிற் புறச்சமயமாகக் கூறப்பட்டதாயிற்று.

சிவப்பிரகாசத் தொடக்கத்தில்,

"புறச்சமயத் தவர்க்கிருளாய்"

என்ற இடத்தில் சிவாத்துவிதத்தைப் புறச்சமயத்துள் அடக்கவேண்டியதாயிற்று.

"தம்மிற் புணராமை கேளாம் புறன்"

—சிவஞானபோதம்

என்ற மெய்கண்டார் வாக்கில் வருகின்ற 'புறன்' என்பதிலேதான் சிவாத்துவிதம் கொள்ளற்பாலதாயிருக்கின்றது.

இங்ஙனமெல்லாம் புறம்பு செய்கின்ற சிவாத்துவிதத்தை, அகச்சமயத்தின் சிரோரத்தினமாக நவீனர் பெரிதுங் கொண்டாடுகின்றனர்.

"சிவாத்துவிதாந்தத்துக் குலவினர் அளவளாவாக்" கொள்கையினராகிய நவீனர்கள் சிவாத்துவிதத்தைக் கட்டி அளவளாவுகின்றனர். இது சாதாரண சரித்திரமுகமாக ஆராய்ந்து தீர்க்கத்தக்கது.

※

தமது சமயம் இருபத்தைந்தாம் சமயம் என்று பெருமை பேசும் மடங்களும், அதே மடங்கள் புறச்சமயம் என்று கழிக்கும் ஏகாத்மவாத மடங்களும் இப்பொழுது, அரசியல் தாக்கங்களுக்கு அஞ்சி ஒன்றையொன்று கட்டித் தழுவுவது பகிரங்க இரகசியம். ஏகாத்மவாதமடங்கள் அரசாங்கத்துக்கு அதிகம் அஞ்சுவதில்லை. அவைகள் அரசாங்கம் மதிக்கத்தக்கவகையிற் பொதுநன்மைகள் புரிந்துவருகின்றன. சுகபோக வாழ்க்கைகளிலே திளைத்துக்கிடந்த சைவமடங்களே இப்பொழுது

நடுநடுங்கித் துணைதேடுகின்றன. 'உண்டு இருந்து வாழ்வதற்கு' வழி காணுகின்றன. இந்த நிலைமையில் மடசைவம் இனி ஏகாத்மவாதத்தைத் தனக்குப் புறம் என்னாது; அகம் என்றே சொல்லும். உண்டியும் சுகபோகமும் இந்த நிலையை வருவித்திருக்கின்றன.

இப்பொழுது பௌத்தம் உலகசமயங்களுள் தலை நிமிர்ந்து விளங்குகின்றது. உபநிஷத்துக்கள் உதித்த பாரத தேசம் புத்த தர்ம சக்கரத்தையே—தனது ஆக்ஞா சக்கரம் என்கின்றது. கீதாபாராயணகாரரே அர்ச்சுனனுக்கு மேலே அசோகனைத் தூக்கி வைக்கின்றார்கள். உலகம்போற்றும் இந்தியத் தத்துவ சாத்திரிகள் புத்த தர்மம் இந்து தர்மத்துக்கு உறுதுணை என்று புத்தகம் ஆங்கிலத்தில் எழுதுகின்றார்கள். இனி மடசைவம்,

"புத்தரொ டமணர்கள் அறவுரை புறவுரை"

என்ற சம்பந்தப்பெருமான் அருள்வாக்கைப் பேண முடியுமா?

புத்தசமயத்தையும் அகச்சமயம் என்று அணைக்க வேண்டியதுதானே.

அருக சமயக் கதைகளை நாடகஞ் செய்து, சைவசித்தாந்த விழாக்களில் நடிப்பித்து, மடசைவங்கள் பொழுதுபோக்குவதைப் பத்திரிகைகளில் வாசிக்கின்றோம். சரித்திரம் ஆத்மீகத்துறைகளையே தலைகீழ்செய்து நடக்கின்றது. மடங்கள் மாணிக்கவாசக சுவாமிகளைச் சம்பந்தப் பெருமானைத் திருநாவுக்கரசரைச் சுந்தரமூர்த்தியைச்

சந்தானகுரவரை மெல்லமெல்ல மறக்கின்றன; அவர்கள் வரிசையில் வேறு ஆட்களை வைக்கின்றன. இதனை உற்று நோக்குவார்க்குச் சிவாத்துவிதம் அகச்சமய உச்சமானது, சரித்திரக் கோளாறு என்று புலப்படலாம்.

பாரத தேசம் ஒருகாலத்திலே சங்கராசாரிய சுவாமிகளின் எல்லை கடந்த சாமர்த்தியத்துக்குத் தலைவணங்கி நின்றது; இப்பொழுதும் தலை வணங்குகின்றது. இந்துமதம் என்றால் சங்கரமதம் என்றே உலகம் நம்புகிறது. சங்கரமதம் விகசிக்கின்ற இந்தக் காலத்திலேயே பௌத்தம் தலை நீட்டுகின்றது. ஒரு சமயம் பௌத்தத்துக்குத் தேசாந்தர சிக்ஷை செய்த சங்கரமதம், இப்பொழுது "அண்ணா வா" என்று பௌத்தத்துக்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்கின்றது. இது கண்கண்ட சரித்திரம்.

நீலகண்ட சிவாசாரியர், அப்பையதீக்ஷிதர் ஆதி சைவப் பிராமணர்கள்; எல்லைகடந்த கல்விமான்கள். வேதாகமங்களை நன்றாகப் பயின்றவர்கள். அவர்கள் ஆதிக்கம் ஒரு காலத்திலே தென்னாட்டிற் பேணப்பட்டது. அவர்கள் சிவாத்துவிதிகள். அவர்களைப் புறக்கணிக்க முடியவில்லை. அவர்கள் பெருமையாற் சிவாத்துவிதம் அகச்சமய உச்சம் ஆனது. அதனோடு சேர்த்துப் பாடாணவாதம் சிவசமவாதம் முதலியன சங்கற்பநிராகரணத்தில் நிராகரிக்கப்பட்டமையால், எலிப்பிழுக்கைபோலக் கூடக் கிடந்த விசேஷத்தால் அவையும் அகச்சமயம் ஆயின. இது சரித்திரக் கோளாறு. உதிரத்

தொடர்புள்ள ஒரு குடும்பத்தில் 'பூணூல் தரிக்க நேர்ந்தவர்கள் ஆரியர்; அது தரியாதவர்கள் திராவிடர்' என்று கோளாறு செய்கிற சரித்திரத்துக்குப் பாடாணவாதந் தொடங்கிச் சிவாத்துவிதம் இறுதியான ஆறனையும் அகச்சமயம் ஆக்குவது பெரியகாரியம் அன்று.

பாடாணவாதம் முதலிய ஆறும் சரித்திர அகச்சமயமன்றிச் சரித்திரத்துக்கு எட்டாத இயல்பான அகச்சமயமல்ல.

நூல்கள் பேசிய அகச்சமயம், சைவமாதி இருமூன்று; சைவம் முதல் வைரவம் இறுதியானவை.

சைவம் வைதிக சைவம் என்று அடையொடு புணர்த்திச் சொல்லப்படும். வைதிகம் என்றால் வேதசம்பந்தமானது என்று பொருள். வேதநெறியில் வாராத சைவம் சைவமாகாது. அப்படி ஒரு சைவம் இருந்தால் அது அசைவம்.

அவ்வாறே மாவிரதம் முதலியனவும் வேதநெறியை விலகியன; கொள்ளத்தகாதன.

வேதநெறி வந்த சைவம் முதல் வைரவம் இறுதியான சமயங்களே அகச்சமயங்கள்.

---

ஈசுவரனுக்கு அடிமைத்திறம் பூணுதவன், ஈசுவரனுக்குப் பூசனை, தவம் முதலிய பிரீதிகளைப் போதியவளவாகச்செய்தே பெற்றுக்கொள்ளல்வேண்டும். அப்படிச் செய்தும் தான் வேண்டியது கிடையாதாயின், ஈசுவரனுக்குத் தான் செய்த பிரீதி போதாதென அறிக. —ஆன்மவிசாரம்

# சமயம் 12

## சமயம், மார்க்கம் ஆகாதவர்களை மண்காட்டிப் பெண்காட்டிப் பொன்காட்டி எந்தச் சமயத்துக்கும் இழுக்கலாம்

## உபநிஷதம் ஓதியும் பயன் பெருதவர் யாவர்?

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்ருற் சைவத்
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்."

—சிவஞானசித். 8ஆஞ் சூத். 11

*புறச்சமயநெறி—கத்திடும் ஆன்மாக்களுநரைக் கட்டு. திருவருட் குறிப்பறியாது புறச்சமய நெறிகளிலே அலைகின்ற ஒருவன் ஒருநாள் திருவருள் வழிப்பட்டுத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி அகச்சமயங்களுள் ஒன்றை அணுகலாம். அணுகி அதிற் காணப்படும் பல நூறு துறைகளில், யாதானும் ஒரு துறையைப் பற்றலாம். அதனுல், அவன் தப்பிவிட்டான் என்ற கருத்து ஆகாது.*

"நத்தை சாணேறி முழஞ் சறுக்கும்" என்பார்கள். அதுபோல ஒரு நல்ல சமயத்தைப் பற்றி நின்றவன், வேறு பல குறைகளினாலே தாக்குண்டு, திடீரென்று கீழேயும் விழலாம்.

திருநாவுக்கரசு நாயனாருடைய பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார். திலகவதியாருக்குப் பின் பிறந்தவர்; அறுவகைச் சமயத்துள் முதற்கணின்ற சைவசமயத்திற் பிறந்தவர்.

"காவளர்த்துக் குளந்தொட்டுங் கடப்பாடு வழுவாமன்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத ஈகைவினைத் துறைநின்றார்."

"ஆசிலறச் சாலைகளும் தண்ணீர்ப்பந் தருமமைப்பார்"
—பெரியபுராணம்

இங்ஙனந் தர்மத்துறைகளில் நின்றவர் மருணீக்கியாராகிய திருநாவுக்கரசர். இவ்வாறு அறத்துறைகளில் நின்ற திருநாவுக்கரசர், இளமையில் தந்தையாரை இழந்தார். தாயார் சககமனஞ் செய்தார். அருமைச் சகோதரியாராகிய திலகவதியார் திருமங்கல்யந் தரிக்கமுன்னமே விதவையாயினார். நாவுக்கரசருக்குத் தாக்கங்களுக்குமேல் தாக்கங்கள் உண்டாயின.

நாவுக்கரசரோ ஆண்டில் இளையராயினும்,

"தந்தையார் களிமகிழ்ச்சி தலைசிறக்க முறைமையினால்
சிந்தைமலர்ந் தெழுமுணர்வில் செழுங்கலையின்
முந்தைமுறை மையிற்பயின்று" [திறங்களெல்லாம்
—பெரியபுராணம்

"சமயங்கள் ஆனவற்றின் நல்லாறு தெரிந்துணர்ந்து"

☼

"மறுவொழிந்த இளம்பிறைபோல்" கலைகள் வளர்ந்து, பரிபூரண நிலையை எய்தியவர். அங்ஙன மிருந்தும்,

"நம்பர் அருளாமையினல், கொல்லாமைமறைந்துறையும்
அமண்சமயம் குறுகுவார்" ஆயினர்.

அடைதற்கரிய சைவசமயத்திற் பிறந்தும், புறச் சமயமாகிய அருகசமயத்திலே தவறுண்டு வீழ்ந்தார் நாவுக்கரசர். அருகசமய அறத்துறைகள் அவருக்குக் கைகொடுக்கவில்லை. பண்டைநற் றவத்தினலே திருவருள் சூலைநோயாலே தடுத்து நாவுக்கரசரை ஆட்கொண்டது.

☼

சாக்கியநாயனர் பௌத்தத்திற் பிறந்தார்.

"அறுசமயத் தலைவராய் நின்றவருக்கு அன்பராய்
மறுசமயச் சாக்கியர்தம் வடிவினல் வருந்தொண்டர்
உறுதிவரச் சிவலிங்கங் கண்டுவந்து கல்லெறிந்து
மறுவில்சரண் பெற்றதிறம் அறிந்தபடி வழுத்துவாம்."

—பெரிய புராணம்

என்று சாக்கியநாயனர் புராணந் தொடங்குகின் றது. சாக்கியர் தமது சமயத்தை நன்கு ஆராய்ந் தார். உண்மைப் பொருள் தலைக்கூடவில்லை.

"ஈசர்அருள் கூட ஈறில்சிவ நன்னெறியே
பொருளாவ தெனஉணர்வு நாட்டுவார்." ஆயினர்.

ஒருவர் பௌத்தத்திலிருந்து சைவத்துக்கு வருகின்றார். மற்றொருவர் சைவத்திலிருந்து சமணத் துட் புகுகின்றார்.

"அண்டசஞ் சுவேத சங்கள் உற்பிச்சம் சராயு சத்தோடு
எண்டரு நாலெண் பத்து நான்குநூ ருயி ரத்தாய்
உண்டுபல் யோனி எல்லாம் ஒழித்துமா னுடத்து தித்தல்
கண்டிடிற் கடலைக் கையால் நீந்தினன் காரி யங்காண்."

--சித்தியார் 2ஆஞ் சூத். 89

※

ஒரு ஆத்மா மாநுட தேகத்தை எடுப்பது மகா பெரிய காரியம். அது கைகூடின இடத்தும் அந்த ஆத்மா,

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்",

அவ்வாறே,

அகச்சமயத்தினின்று புறச்சமயத்துக்குப் போந்தும், கறங்குபோலே அலைந்துகொண்டிருக்கும்; அகச் சமயங்களுள் ஒன்றிற் பிறந்தும் அதில் நிலைக்க முடியாமற் பல தாக்கங்களினுல் தவறுதல் வந்து கொண்டேயிருக்கும்.

"நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றல் மிக்கபுண் ணியந்தா னுகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில்வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணெ ணுதே."

--சித்தியார் 2ஆஞ் சூத். 90

※

மனித தேகம் எடுத்த ஆன்மா பரசமயமாகிய புறச்சமயங்களிற் பிறவாமல் அகச்சமயங்களில் ஒன்றிலே, தவஞ்செய் சாதியிலே வந்து பிறப்பது மகாபாக்கியம். அந்தப் பாக்கியத்தை அடைந்த பிறகும் அந்த ஆத்மா புறச்சமயத்தில் வீழலாம்.

அம்மட்டோ,

அகச்சமயமொன்றிற் பிறந்து, மிருதிவழி உழன்று, ஆச்சிரம அறத்துறைகள் அடைந்து, அருந்தவங்கள் புரிந்து, அருங்கலைகள் பல தெரிந்து, ஆரணங்கள் படித்து, புராணங்கள் உணர்ந்து வேதச் சிரப்பொருளாகிய உபநிடதங்களைப் படித்துக் கொண்டே,

ஒரு ஆத்மா புறச்சமயத்தில் வீழலாம்.

அப்படியே புறச்சமயத்தில் இருந்த ஒரு ஆத்மா அருள் கைகூட நேரே அகச்சமயத்துள் ஒரு சமயத்துக்கு வரலாம். இன்ன சமயத்திலிருந்து இன்ன சமயத்துக்கு வருகிறதென்ற படிக்கிரமம் இல்லை.

திருவருள் கைகூடுதல் கூடாமைக்கு ஏற்ற பிரகாரம் ஆத்மா உயர்ந்துந் தாழ்ந்தும் உழன்று கொண்டிருக்கும்.

அகச்சமயத்தை அடைந்த ஆத்மா அதில் நிலைக்கவேண்டுமானல், அதுபற்றிய சமயம் அதற்கு மார்க்கமாகவேண்டும்.

சமயிகள் மார்க்கர்களாக வேண்டும். திருமுருகாற்றுப்படைநடையிற் சொன்னல்,

"புலம்புரிந்துறையும் செலவினர்"

ஆதல் வேண்டும். சமயி ஒருவனுக்கு அகச்சமயம் மார்க்கமாய் ஸ்திரப்படல்வேண்டும். மார்க்கமாய் ஸ்திரப்பட்டுவிட்டால் அதிலிருந்து அவன் தவற மாட்டான்.

சமயம், மார்க்கம் ஆகாதவர்களை மண்காட்டிப் பெண்காட்டிப் பொன்காட்டி எந்தச் சமயத்துக்கும் இழுக்கலாம். உண்டிருந்து வாழ்வதற்கே அவர்கள் உதயம் செய்தவர்கள். அவர்கள் உபநிஷதம் ஓதியும் பயன்பெறமாட்டார்கள்.

சமயம், மார்க்கம் ஆனவனை மண் பெண் பொன்னென்று அசைக்கமுடியாது. உடம்பே அவனுக்கு ஒரு பொருளன்று. சமயமே அவனுக்கு உயிர். அவன் அநுட்டிக்கும் சமயத்தைச் சமயத்திறம் என்றே சொல்லவேண்டும். 'திறம்' என்பது ஒரு சமய பரிபாஷை.

அகச்சமயம் ஒவ்வொன்றும், மார்க்கம் ஆகும் போது, இந்தத் 'திறம்' என்ற வார்த்தையோடு சேர்ந்து வழங்கலாம். சைவம் மார்க்கம் ஆகும் போது, 'சைவத்திறம்' எனப்படும்.

"வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றூற் சைவத்
திறத்தடைவர்...... ...... ............"

—சித்தியார் 8ஆஞ் சூத். 11

※

என்ற இடத்தில் 'சைவத்திறம்' என்றது, மார்க்க நிலை அடைந்த ஸ்திரமான சைவத்தை.

சைவத்திறத்தைச் சைவத்துறை என்றும் சொல்லலாம். அகச்சமயம் ஒவ்வொன்றிலும் திறங்களாகிய துறைகள் பலவாயிருக்கும். சைவத்தை எடுத்துக்கொண்டால் அதன் திறங்களாகிய துறைகள் எண்ணில்லாதன.

"வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்க"

என்பது சேக்கிழார் பெருமான் திருவாக்கு. அளவில்லாத சைவத்துறைகள் இங்கே "மிகுசைவத் துறை" என்று குறிக்கப்பட்டன. அகச்சமயம் ஒவ்வொன்றும், அதனதன் துறைகளும் வேதநெறிப் பட்டனவாதல் வேண்டும். அதனாலேதான் "வேதநெறி தழைத்தோங்க" என்பது முதற்கண் ஓதப் பட்டது.

சைவசமயத்திற் பிறந்த ஒரு ஆத்மா,

ஒருநாளைக்கு "வேதச்சிரப்பொருளை மிகத்" தெளியலாம். தெளியவே அந்த ஆத்மாவுக்குச் 'சைவம்' ஸ்திரப்பட்டு மார்க்கம் ஆய்விடும். ஆகவே 'சைவம்' சைவத்திறமாகும்.

சைவத்திறங்கள் பல. அவற்றுள் ஒன்று, நாற்பாத சைவம். அதுதான் சித்தியாரில் எடுத்துக் கொண்ட சைவத்திறம்.

"சைவத்
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்."

—சித்தியார் 8ஆஞ் சூத். 11

---

எல்லாச் சிந்தனைகளையும் எல்லாச் செயல்களையும் எல்லா வார்த்தைகளையும் ஈசுவரனிடத்து அர்ப்பித்தும் நாம் ஈசுவரனை அனுவளவேனும் மறந்திருப்போமாயின், அது நம்மைப் பெரிய துக்கத்தி லாழ்த்திவிடும். ஏனெனில் இவற்றை அர்ப்பிப்பதும் நாம் அவரை மறவாதிருத்தற்கே யாதலால்.

—ஆன்மவிசாரம்

# சமயம் 13

## அருளை அடைய விரும்புகின்ற மக்கள், முதலில் அன்பை அறிந்து பெருக்கவேண்டும்; அன்புமயமாகவேண்டும்

## ஆசனம் அறிந்தவன் யோகி

அகச்சமயங்கள் வேதநெறி வந்தவைகள். அவற்றுள் முதற்கண் உள்ளது சைவம்.

அது மார்க்கமாய் — "புலம்புரிந் துறையும் செலவு" ஆய் — ஸ்திரப்பட்ட நிலையில் "சைவத் திறம்" எனப்படும்.

திறங்கள் பல. திறங்கள் — துறைகள். "மிகு சைவத்துறைகள்". துறைகளாகிய சைவத்திறங்களுள் ஒன்று,

**நாற்பாதசைவம்,**

நாற்பாதத்துள் முதற்பாதம் சரியை.

※

* சரியை என்ற வார்த்தை சம்ஸ்கிருதத்தினின்றும் வந்தது. இதற்கு ஏற்ற தமிழ் உடன்போக்கு.

---

* சரித்தல் என்ற வார்த்தைக்கு, அநுட்டித்தல் — சஞ்சரித்தல் — நடத்தல் — போதல் என்றெல்லாம் பொருள் விரிக்கப்படும். இதிலிருந்து 'சரியை' என்பதன் பொருள் சிந்திக்கத்தக்கது.

உடன்போக்கில் வைத்துச் சரியையைச் சற்றே சிந்திப்போம்.

※

"அருள் என்னும் அன்பீன் குழவி" என்பது வள்ளுவதேவரின் வாக்கு. ஒருமகான் எங்கேயோ ஒரு மலைக்குகையுள் இருக்கிறாரென்று கேள்விப் படுகிறோம். அந்த மகானைக் காணாமலே, அம் மகானிடம் நமக்கு அன்பு பெருகுகிறது. இந்த நில உலகத்திலே ஒரு விஞ்ஞானி தலை நிமிர்ந்து விளங்குகின்றார். அவர் பெயரைக் கேட்டதுமே நமதுஉள்ளம் உருகிவிடுகின்றது. காரணம் என்ன?

திருவருள் எங்கும் வியாபகமானது. நம்முட் கலந்திருக்கின்றது. சில பரிசுத்த ஆன்மாக்களில் அழுக்கின்மையால் அதிகம் பிரகாசிக்கின்றது. அந்தத் தருணத்தில் நம்மிடம் மறைந்து கிடந்த அருள், அந்தப் பிரகாசத்தைக் கண்டதும் அதிற் கலக்க அவாவுகின்றது; வாயூறுகின்றது. அந்த நிலைக்கு அன்பு என்று பெயர்; உண்மை அன்பு.

நாம் ஒரு பொருளிடத்தில் அன்பு வைக்கின்றோம். அது பரிசுத்தமான அன்பாயுமிருக்கிறது. அந்தப் பொருளைக் கண்களாற் காணாமலும் இருக்கலாம். அப்படியிருந்தும் நமக்கு அப் பொருளில் அன்பு கசிகின்றது. காரணம் என்ன? அந்தப் பொருளில் அருள் பிரகாசிக்கின்றது. நீதி குமுறுகின்றது. அதனாலே நமக்கு அந்தப் பொருளில் அன்பு உதிக்கின்றது. நன்றாக விசாரித்துக் கொண்டு போனால், அன்பு உதித்தற்கு உபகாரமான உறைவிடம் அருளாயிருக்கும். உண்மை

அன்பாற் பெறப்படும் பொருள் அருளே. உண்மை அன்பு செய்யத்தக்கது, அந்த அருள் ஒன்றுதானே. அருளே ஒருவன் பெறுதற்கரிய பெறுபேறு. அருள் அன்பு பெற்றெடுக்குங் குழந்தை.

அருள்,

"அன்பு ஈன் குழவி".

ஆகையினாலே அருளை அடைய விரும்புகின்ற மக்கள், முதலில் அன்பை அறிந்து பெருக்கவேண்டும்; அன்புமயம் ஆதல்வேண்டும்.

சான்றோர்கள் அன்பைத் தமிழ் செய்திருக்கின்றார்கள். தமிழ் நுதலிய பொருள் அன்பே. அருளைக்குள்ளவர்கள் தமிழ் பயிலற்பாலர். தமிழ்—அன்பு.

அன்புக்கு ஆதாரமானவைகளை ஏழு திணைகளாகவும், அன்பை ஏழு திணைகளாகவும் சான்றோர் வகுத்துத் தமிழ் செய்திருக்கின்றார்கள்.

ஆதாரமானவைகள் புறம் என்றும் அன்பு அகம் என்றும் வழங்கப்படும்.

அகம் என்றால் அன்பு. அது ஏழுதிணை. அவற்றுள் நடுவண் ஐந்திணையை, 'மக்களுதலிய அகனைந்திணை' என்கின்றது தொல்காப்பியம். மக்களுக்கு இன்றியமையாத அன்பின் பெருக்கம் ஐந்திணை. இந்த ஐந்திணையை "அன்பின் ஐந்திணை" என்கின்றது இறையனார் களவியல்.

இந்த அன்பின் ஐந்திணையை நானூறு துறை செய்திருக்கின்றது, திருவருள் நோக்காகிய திருச் சிற்றம்பலக்கோவை. இந்த நானூறு துறைகளிற் சில துறைகள் 'உடன்போக்கு' நுதலியவை. உடன்போக்குப் பாலைத்திணையைச் சேர்ந்தது. பாலை – பிரிவு ; வெகு வெப்பமானது.

வெகுநாட் பழகிய இனசன பந்தங்களைப் பிரிவதும், அரிதிற்கண்ட உண்மையைத் தொடராமல் இருக்கமுடியாமையும் வெகு வெப்பமே.

ஒரு தலைவி பந்தங்களை உதறிவிட்டு, உண்மையைத் தொடரக் கால்தூக்கி வைக்கின்ருள். நடத்தலரிதாகிய நெறியில் நடக்கத் தொடங்கிவிட்டாள். இனிப் பந்தங்களைத் திரும்பிப் பார்க்கமாட்டாள். இந்த நிலைக்கு உடன்போக்கு என்று பெயர். பந்தங்களைப் பிரிவது வெப்பமாயினும், பந்தங்களோடிருப்பதே அவளுக்குப் பெரும் வெப்பம் ; கொடும் பாலை.

"நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு"

என்கின்ருள் சீதை. சீதையின் உடன்போக்கை இனி யாருந் தடுத்தல்முடியாது.

"உடுத்த துகிலோடும் உயிர்உக்க உடலோடும்"

இராமனுக்கயலில் அவனுடன் போக அவள் ஆயத்தமாய்விட்டாள். அவளுக்குக் கணவனை அன்றிக் காட்டுவதற்கு இங்கே ஒரு பண்டமும் இல்லை.

கணவனுடைய,

"உயிருடன் சென்ற ஒருமகள்" கதை சிலப்பதிகாரத்திற் சிந்திக்கத்தக்கது.

அன்பினைந்திணையில் உடன்போக்காகிய அன்புத்துறையின் முதிர்வுதான்,

மிகுசைவத்துறையுள் ஒரு துறையாகிய நாற்பாத சைவத்திறத்தின், முதற்பாதமாகிய உண்மைச் சரியை.

உடன்போக்கு அன்பின் முதிர்வு. உண்மைச் சரியை அருள்நோக்கின் ஆரம்பம். உடன்போக்கு ஈன்ற குழவி, உண்மைச் சரியை.

உடன்போக்குச் சாதகர்கள், உண்மைச்சரியை ஆகிய பயனைப் பெறுகின்றார்கள்.

[ உண்மைச்சரியை பூரணப்படுவதற்குச் சில குறைகள் இருக்குமாயின், அக் குறைகளைப் போக்குதற்கு ஆளும் உபாயங்கள் உபாயச்சரியை எனப்படும். உபாயச் சரியை உண்மைச் சரியைக்கு உபகாரம். உண்மையும் உபாயமும் அல்லாத சரியையை ஞாபக சரியை என்று வைத்துக்கொள்ளலாம். சரியை என்று ஒன்று உண்டு என்பதை ஞாபகஞ் செய்வதற்கு உபகாரமானது என்றபடி. இது இப்பொழுதைய சமய சின்னங்களில் வைத்து உணரத்தக்கது.]

சைவத்தை அடைந்த ஒருவன், உடன்போக்கின் முதிர்வாகிய உண்மைச் சரியையை இறுகப் பற்றிக்கொள்வான். ஆனால், அவன் அடைந்த சைவம், சமயம் என்ற அளவில் நில்லாது,

மார்க்கம் அல்லது திறம் என்ற நிலையை அடைகின்றது. சைவத்திறத்தடைந்தவன், சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தால் வீடு அடைவான். அவன் புலம்புரிந்து உறையுஞ் செலவினன் ஆய்விட்டான்.

சரியை கிரியை யோகம் ஞானம், அரும்பு மலர் காய் கனி. சரியை ஆகிய அரும்பு ஒருநாளைக்குக் கிரியை ஆகிய மலர் ஆகும். அம் மலர் காயாய்க் கனிதரும்.

"மானுடப் பிறவி தானும் வகுத்தது மனம்வாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனைஅர்ச் சிப்பர்
ஊனெடுத்துழலும்ஊமர் ஒன்றையும்உணரார்அந்தோ."

—சித்தியார் 2ஆஞ் சூத் 92.

மானுடப் பிறவி எடுத்தது, ஆனிடத்தைந்து மாடும் அரன்பணிக்கு என்பதை உணர்ந்தருளினர் சண்டேசுர நாயனர். ஆவின் பாலை அதனை உடையாருக்கு அபிஷேகித்துச், சிவபூசையாகிய உண்மைக் கிரியையை அவர் செய்தருளினர்.

இயமம் நியமம் முதலிய யோக அங்கங்களுள் ஆசனம் என்பது ஒன்று. ஆசனம் என்ருல் இருப்பு; இருத்தல். யோகிகளுக்கு இருக்கத் தெரியும். எந்த இடத்திலே எப்படி இருக்கவேண்டுமென்று அவர்கள் அறிவார்கள்.

அவர்களுக்கு,

"யாதும் ஊரே யாவருங் கேளிர்."

"நன்றுந் தீதும் பிறர்தர வாரா."

என்ற உண்மையை ஐயந்திரிபு அற உணர்ந்தவர்கள் அவர்கள். கழைக்கூத்தன் எத்தனையோ வித்தைகள் கருமங்கள் நடத்துவான். அவன் கருத்துக் கழையிலேயே ஊன்றி நிற்கும். யோகி சித்தத்தைச் சிவன்பாலே வைத்துக்கொண்டு, எங்கேயுந் திரிவான்; யாவர்களோடுங் கூத்தாடுவான். அவனுக்கு யாதும் ஊர்; யாவரும் கேளிர். அவனை ஊரும் ஊராரும் செய்வதொன்றில்லை. அவன் ஊராலும் ஊராராலும் பாதிக்கப்படான். யோகிபோலே, நாமும்,

"யாதும் ஊரே யாவருங் கேளிர்."

என்று சொல்லிக்கொண்டு மிலேச்ச தேசங்கள் தோறும் அலையவொண்ணாது.

"நன்றுந் தீதும் பிறர்தர வாரா"

என்ற எண்ணமே நமக்கில்லை. அரசாங்கங்கள் அங்கும் இங்கும் ஓடிக் கூட்டம் போடுவதிலிருந்தே இதனைத் தினசரி அறியலாம்.

ஆத்மா சார்ந்ததன் வண்ணமானது. மிலேச்ச தேசங்களிலே மிலேச்சர்களை அணைந்தால் அது அந்தவண்ணமாய்விடும்.

நாம்,

"சான்றோர் இனத்திரு"

என்ற வாக்கைக் கடைப்பிடித்தல்வேண்டும். யோகி முன்னமே சான்றோரினத்திருந்து, தன்னைப்பேணத் தெரிந்துகொண்டான். எங்கேயுமிருக்க அறிந்து கொண்டான். ஆசனம் அறிந்தவன் அவன்.

# சமயம் 14

## நான் நான் என்கின்றேமே, நானுக்குப் பொருள் யாருக்காயினுந் தெரியுமா?

## நாம் இந்தச் சரீரமா? இது என்ன வேடிக்கை!

*நாற்பாத சைவத்தில் நான்காம்பாதம் ஞானம். ஞானமாவது,*

"அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
அறிவுதனை அருளினுன் அறியாதே அறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பது ......"

—சித்தியார் 8ஆஞ் சூத். 30

*அறியாமை ஆத்மாவை இயல்பாகவே பற்றி யிருக்கின்றது. அதற்கு ஆணவம் என்று பெயர். ஆத்மாவை அணுப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதற்கு ஞானதிரோதகம்என்பது சாத்திரப் பெயர். ஞானத்தை மறைப்பது என்பது பொருள். அது போக்கக்கூடியது. அதனைப் போக்குதற்குத்தான் இந்தச் சரீரமும் கரணங்களும் நமக்குக் கிடைத் திருக்கின்றன. சரீராதிகளால் நமக்குக் கிடைக்கும் ஞானம் பாசஞானம். இது, அறியாமையை ஒரு அளவுக்குப் போக்குமாயினும் அதனை முற்றக் களைதற்குப் போதியதாகாது; ஒரு அளவில் கை விடப்பட வேண்டியதே. இதன்மேல் உதிப்பதொரு*

ஞானம் பசு ஞானம். இது அந்தக்கரணங்களை விட்டதும் விடாததுமான ஒரு நிலையில் உதிப்பது. கரணங்கள் அழிந்தாலும் அவற்றின் வாசனை ஒரு அளவுக்கு இருக்கும் நிலையில் வருவது. இதுவும் அறியாமையை முற்றக் களைதற்குப் போதிய தாகாது. பிரம விஷ்ணுக்களுக்கு ஒருநாள் உதித்த ஞானம் பசுஞானம் என்பர். அவர்கள் அந்த ஞானம் உதித்ததும் 'நான் பிரமம்' என்று தனித் தனி வாதிட்டவர்கள் என்பது புராணப் பிரசித்தம்.

'நான் நான்'

என்கின்றோமே, நானுக்குப் பொருள் யாருக்கா யினுந் தெரியுமா? பிரம விஷ்ணுக்களுக்கு ஒருநாள் தெரியாமலிருந்தது.

※

குற்றியலுகரத்துக்கு உதாரணம் கேட்டால்— குற்றியலுகரத்தைக் காட்டும்படி கேட்டால், 'நாகு', 'வரகு' என்று ஆரம்பிக்கின்றோம். சொற்களை விலகிக் காட்டும்படி கேட்டால் திகைக் கின்றோம். தனிக் குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்குப் பின்னே சொல்லிறுதியிலே வல்லின மெய்க்கு மேலே வைத்துத்தான் குற்றியலுகரத் தைக் காட்டலாம். குற்றியலுகரம் சார்பு எழுத்து. மற்றொன்றைச் சார்ந்துதான் அது காட்சியளிக்கும்.

ஆத்மா குற்றியலுகரம் போன்றது. அதற்கு என்றுயினுந் தனித்த நிலை கிடையாது. மற் றொன்றைச் சார்ந்துதான் அது வாழமுடியும். "ஆத்மா சார்ந்ததன் வண்ணமானது." என்கின் றது சாத்திரம்.

"நீ ஆரப்பா? வெளியே வா; உன்னை ஒருக் கால் காட்டு" என்று ஒருவர் எங்களைக் கேட்டால் நாங்கள் என்ன செய்கின்றோம். ஒவ்வொரு சரீரத்தையல்லவா தூக்கிக்கொண்டு, வெளியே வருகின்றோம். நாம் இந்தச் சரீரமா? இது என்ன வேடிக்கை!

இந்தச் சரீரத்தோடு கூடிய நிலையில்,

'நான்'

என்று இந்தச் சரீரத்தைத் தானே சொல்லுகின்றோம். இந்தச் சரீரத்தை விலகி நம்மைக் காண நம்மாலே முடியாது. ஆத்மா சரீரத்தைச் சார்ந்து சரீரமே தானாய் அதன்வண்ணமா யிருக்கின்றது.

சரீரமும் ஆத்மாவும் தனித்தனி குணிகள். இரு குணிப் பொருள்கள் ஒன்றாய் இப்படி ஒற்றுமைப் பட்டிருத்தலை இந்த உலகத்திலே காண்டலரிது.

இந்தச் சரீரத்தையே 'நான்' என்று அபிமானிக்கின்ற நாம், இந்தச் சரீரத்தில் நான் வேறு என்ற உணர்ச்சியும் உடையர்களாயிருக்கின்றோம். ஆனால் சரீரத்தினின்றும் வேறுபடுத்திக் காண முடிவதில்லை; சாத்திரங்கள் வேறுபடுத்திக் காண்பதற்கு வழிகள் செப்புகின்றன. சரீராதிகள் 'நான்' அல்ல அல்ல என்று கழித்துச் செல்பவர்களும், ஒருநாளைக்கு ஆத்மாவைக் காண்பார்களோ என்றால், அதுதான் இயலாது. ஆத்மாவின் சார்புகளாகிய சரீராதிகளைக் கழித்துக் கழித்துச் செல்ல, அது மற்றொன்றைச் சார்ந்து காட்சியளிக்கும். தானே தனித்துத் தோன்றாது. சரீராதிகளைக்

கழித்துக்கண்ட சார்புதான் ஆத்மாவின் மெய்ச் சார்பு. சரீராதிகள் பொய்ச்சார்பு.

பொய்ச்சார்பு நிலையில்லாதது; கெட்டு அழியும். மெய்ச்சார்பு நிலையானது; அழியாதது. ஆத்மாவின் உண்மை நிலை மெய்ச்சார்பே.

"பொய்கெட்டு மெய்யானார்"

மீட்டிங்கு வாரார்.

☀

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்." —குறள் 359

ஆத்மா பொய்ச்சார்பில் சரீராதிகளாகத் தன்னைக் காணும்; அந்நிலையில் சரீராதிகளை 'நான்' என்று சொல்லும்.

ஆத்மா மெய்ச்சார்பில் தன்னை மெய்யாகவே காணும்; ஆத்மா பரமாத்மாவாகத் தன்னைக் காணும்; சீவன் சிவனும். அந்நிலையில் நான் என்பது மெய்ச்சார்பே.

'நான்' என்றொரு தனித்த நிலை ஆத்மாவுக்கில்லை. பொய்ச்சார்புக்கு வேறாக, மெய்ச்சார்பையுங் காணமல்,

ஒரு ஆத்மா,

'நான்', 'நான்'

என்னுமானல் அது பசுஞானம். பந்தம் இருக்கிறது என்றுதான் கருத்து. அடி முடி தேடி அது போக்கப்படவேண்டியது.

தன்னிலே, சார்ந்ததன் வண்ணம் என்பதனை உணர்ந்து, பொய்ச்சார்புகளில் நீங்கி, மெய்ச் சார்பு கைவந்து,

தன்னை மெய்யாகிய சிவமாகக் காணும் ஆத்மாவே,

'நான்'

என்பதன் பொருள் அறியவல்ல ஆத்மா.

"நான்" என்பதன் உண்மைப் பொருளை அறிவதே உண்மை ஞானம். அதுதான் பதி ஞானம்; பாசஞானம் பசுஞானம் என்பவற்றில் வேருன மெய்ஞ்ஞானம்; நாற்பாத சைவத்தில் நான்காம் பாதமான ஞானம்.

☼

தன்னைச் சிவமாகக் காணுகின்ற உண்மை ஞானி மீண்டு பந்தப்படுவதில்லை. ஒளிமயமானவர்களை இருள் அணுகாது. உண்மை ஞானமே வீடு பேறு.

"ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம்
நல்லஆக மஞ்சொல்ல அல்லவா மென்னும்
ஊனத்தார் என்கடவர் அஞ்ஞா னத்தால்
உறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தான்
ஆனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போல்
அஞ்ஞானம் விடப்பந்தம் அறும்முத்தி யாகும்
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்
இறைவனடி ஞானமே ஞான மென்பர்."

—சித்தியார் 8ஆஞ் சூத். 27

நாற்பாத சைவத்தில் நான்காம் பாதமாகிய ஞானத்துக்கு மற்ருெரு சிறப்புப் பெயர் "சித் தாந்தம்."

சித்தாந்தம் என்ருல் முடிந்த முடிபு. சித்தாந்தம் சிவாகமம் என்ற பெயரானும் வழங்கும். 'சிவாகமம்' என்ருல், சிவத்துவம் லபிப்பது என்று கருத்து.

"சிவாகமங்கள் சித்தாந்த மாகும்"

—சித்தியார் 8ஆஞ் சூத். 15

ஆகவே, சைவத்திறத்தில் நான்காம் பாதமாகிய ஞானம்,

**சைவசித்தாந்தம்**

எனப்படும்.

☀

சமயம் அகம் புறம் என இருவகை; அகம் சைவம் முதலிய ஆறு. ஒவ்வொன்றும் ஸ்திரப்படும் நிலையில் மார்க்கம் ஆகும். சைவமார்க்கம் சைவத்திறம் எனப்படும். சைவத்திறங்கள் பல. அவற்றுள் ஒரு திறம் நாற்பாத சைவம். சைவத்தின் நான்காம்பாதம் சைவசித்தாந்தம்.

☀

சைவசித்தாந்தமாகிய உண்மை ஞானத்துக்கு, வேதாந்தத் தெளிவு என்றும் பெயர்.

"வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன்." என்பது சிவப்பிரகாசம்.

உண்மை ஞானத்தைச் சரியை கிரியை யோக வழியில் நின்று அடைவது ஒரு திறன்.

"சிவஞானச் செயலுடையோர் கையில் தானம்
திலமளவே செய்திடினும் நிலமலைபோல் திகழ்ந்து
பவமாயக் கடலின்அழுந் தாதவகை எடுத்துப்
பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கத்
தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
சரியைகிரி யாயோகந் தன்னினுஞ்சா ராமே
நவமாருந் தத்துவஞா னத்தை நல்கி
நாதனடிக் கமலங்கள் நணுகுவிக்குந் தானே."

—சித்தியார் 8ஆஞ் சூத். 26

என்ற சித்தியார்ப் பாடலில்,

"சரியை கிரியா யோகந் தன்னினுஞ் சாராமே"

என்பதை நோக்கும்போது ஞானத்தை அடைதற்கு, சரியை கிரியை யோகவழி யன்றி வேறு திறனும் உண்டு என்பது சிந்திக்கத்தக்கது.

## வேதாந்தம்,

உண்மை ஞானத்தை அடைதற்கு மற்ருெரு திறன் ஆகலாம். அது சைவத்திறங்கள் பலவற்றுள் ஒன்ருகவோ, ஏனை அகச்சமயத்திறங்களுள் ஒன்ருகவோ இருக்கலாம்.

அகச்சமயத் திறங்களாகிய ஆறுகளெல்லாம், ஞானமாகிய சமுத்திரத்தை அடைவனவே; அடைந்தவழி "வேதாந்தத்திறன்", "சைவசித்தாந்தத்திறன்" என்ற பேதத்துக்கு இடமேயில்லை. அதனுலேதான் "வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன்" எனப்பட்டது. வேதாந்தத் தெளிவு—வேதாந்தத்திறன்.

# சமயம் 15

**பளிங்கு தான் சார்ந்த பொருள்களின்வண்ணம் ஆகிறதுபோலே ஆத்மாவும் தான்சார்ந்த சரீரங்களின்வண்ணமாய் விடுகின்றது.**

## ஆத்மாவும் சரீரமும்

*பால் எப்படி வெண்மைக் குணத்தினின்றும் தன்னைப் பிரித்துணர மாட்டாதோ — பிரித்துணர முடியாதோ,*

*அவ்வாறே,*

*ஆத்மா தன்னை எடுத்த சரீரங்களினின்றும் பிரித்துணரமாட்டாது; பிரித்துணர முடியாது.*

*பாலுக்கும் வெண்மைக்குமுள்ள சம்பந்தம் குணகுணி சம்பந்தம். குணி - குணமுள்ளது.*

*ஆத்மாவுக்குஞ் சரீரத்துக்கும் உள்ள சம்பந்தம் குணிகுணி சம்பந்தம். இரண்டும் வேறுபட்ட தனித்த குணிப்பொருள்கள். குணகுணிபோலே பிரித்தறிய முடியாமற் சம்பந்தப்பட்டிருக்கின்றன.*

*பிரிக்கவும் பொருத்தவுங்கூடிய சம்பந்தத்துக்குச் சையோக சம்பந்தம் என்று பெயர். கைக்கும் கையிலுள்ள புஸ்தகத்துக்கும் உள்ள சம்பந்தம் சையோகம்.*

பிரியாத சம்பந்தத்துக்குச் 'சமவாயசம்பந்தம்' என்று பெயர். சமவாயம் பிரித்தறிய முடியாத ஒற்றுமைச் சம்பந்தம். கைக்கும் விரலுக்குமுள்ள சம்பந்தம் சமவாயசம்பந்தம்.

இந்தச் சமவாய சம்பந்தம் இரண்டுவகைப்படும். ஒன்று குணத்துக்கும் குணிக்குமுள்ள சம்பந்தம். உதாரணம் பாலுக்கும் வெண்மைக்குமுள்ள சம்பந்தம். இச் சம்பந்தத்துக்குச் சிறப்பான ஒரு பெயர் இருக்கிறது. அப்பெயர் தாதான்மிய சம்பந்தம்.

மற்றது குணிக்கும் குணிக்குமுள்ள சம்பந்தம். உதாரணம் ஆத்மாவுக்கும் சரீரத்துக்குமுள்ள சம்பந்தம். இச் சம்பந்தத்துக்கும் ஒரு சிறப்பான பெயர் இருக்கின்றது. அப்பெயர் அத்துவிதசம்பந்தம். அத்துவிதம் என்பதை அத்வைதம் என்றும் சொல்லலாம்.

ஆகவே, பிரிக்கமுடியாத ஒற்றுமைச் சம்பந்தமாகிய சமவாயசம்பந்தம் இரண்டுவகைப்படும். ஒன்று தாதான்மியம்; குணகுணி சம்பந்தம்.

மற்றது அத்வைதம்; குணிகுணி சம்பந்தம்; சரீரஆத்ம சம்பந்தம்; உயிர்மெய்ச் சம்பந்தம்; 'கா' என்ற உயிர்மெய், இரு குணிகள் சம்பந்தப்பட்டது.

ஆத்மா எடுத்த சரீரங்கள் தோறும், இன்பத்திலும் துன்பத்திலும் அந்தச் சரீரங்களா யிருக்கின்றது. பளிங்கு தான் சார்ந்த பொருள்களின்வண்ணம்ஆகிறதுபோலே ஆத்மாவும் தான் சார்ந்த

சரீரங்களின்வண்ணமாய் விடுகின்றது. சரீரங்களுக்கு இட்ட பெயர்களைச் சொல்லி அழைக்க, அச் சரீரங்களின்வண்ணமாயிருக்கிற ஆத்மா ஏன் என்னும். அது தன்னைச் சரீரத்தினின்றும் பிரித்துணர்வதில்லை; சார்ந்ததன்வண்ணமானது.

என்றுயினும் அது தனித்து நிற்பதில்லை; குற்றியலுகரம்போல. குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆய்தம் இவை சார்பெழுத்துக்கள் ; இவற்றுக்குத் தனித்த நிலையில்லை; ஆத்மாவுக்குப்போல.

குற்றியலுகரமும் ஆத்மாவும் சார்ந்து வாழ்க்கை நடாத்துவதில் ஒற்றுமை உடையனவாயினும், சிறிது வேற்றுமையும் உண்டு.

குற்றிய லுகரத்துக்குச் சொல்லிறுதியிலே வல்லினமெய் ஒன்று மாத்திரமே சார்பு.

ஆத்மாவுக்கு இந்தச் சரீரமாகிய மெய் ஒன்று மாத்திரந்தான் சார்பு அன்று; மற்றுமொரு சார்பு உண்டு. அந்தச் சார்புதான் அதற்கு மெய்யான நித்தியமான மெய்ச்சார்பு.

சரீரமாகிய மெய்ச்சார்பு உண்மையில் அநித்தியமான பொய்ச்சார்பே. 'கா' என்ற உயிர் மெய்யில் உள்ள உயிர், 'க்' என்ற மெய்யை விட்டு விலகியும் போகலாம். விட்டு விலகி மற்றொரு மெய்யிலும் வசிக்கலாம். அதனையும் விடலாம். அவ்வாறே,

ஆத்மாவும் புல்லாகிப் பூடாகிப் பல்விருகமாகிப் பறவையாய் வேண்டிய மெய்களில் வசிக்கலாம் ;

விலகலாம். சரீரங்கள் அநித்தியமான பொய்ச் சார்பே.

சரீரங்களுக்கு ஆத்மாபோலே, ஆத்மாவுக்கு மற்ெருரு ஆத்மா இருக்கிறது. அது பரமாத்மா.

ஆத்மா இந்தச் சரீரத்தைச் சார்ந்தபொழுதும், அந்தப் பரமாத்மாவை விலகியதில்லை. அது மெய்ச் சார்பு. அதை என்ருயினும் ஆத்மா விலகுவதில்லை. அந்த மெய்ச்சார்பை அறியாமையினுல், இந்தச் சரீரமாகிய பொய்ச்சார்பை, ஆத்மா தான் என்று எண்ணுகிறது. மெய்ச்சார்பு ஆகிய பரமாத்மாவை அறியுமானுல்,

இவ்வாறே,

சரீரத்தைத் தான் என்று சொல்லுவது போலவே, தன்மெய்ச்சார்பாகிய பரமாத்மாவையே தான் என்று சொல்லும்.

அந்த நிலையில் "நீ ஆர்" என்று கேட்டால்,

'சிவோகம்' அல்லது 'அகம்பிரமம்' என்று அது சொல்லும்.

சிவோகம் என்ருல் நான் சிவம் என்று பொருள்.

அகம்பிரமம் என்ருலும் அதே பொருளே; நான் பிரமம்.

※

சரீரத்துக்கும் ஆத்மாவுக்கும் உள்ள சம்பந்தத்தைச் சமவாயசம்பந்தம் என்று மேலே கூறினேம். உண்மையில் சரீர ஆத்ம சம்பந்தத்தைச் சையோகம் என்றே சொல்லல்வேண்டும். சரீரமும் ஆத்மாவும்

பாலும் நிறமும்போலப் பிரியாதவைகள் அல்லவே. உயிர்ப்போடிருக்கும் வரையில் சமவாயசம்பந்தமே யன்றி உண்மையில் உடல் உயிர் சையோகமே.

சமவாயவகை இரண்டனுள் குணிகுணி சம் பந்தம் அத்வைதம் என்றேம். சரீர ஆத்ம சம்பந் தம் உண்மையில் அத்வைதம் அன்று;

ஆத்ம பரமாத்ம சம்பந்தமே சத்தியமான அத்வைதம்.

தாடலை என்ற தொடரை எடுத்துக்கொள் வோம்.

தாடலை சமம் தாள்தலை.

( தாடலை = தாள் + தலை )

இரண்டுபக்கத்திலும் ஒத்த எழுத்துக்களாகிய முதல் இறுதி எழுத்துக்களை விடுவோம்.

விடவே,

'ட' சமம் 'ள் த' ஆகும்.

(ட = ள் த) ஆகும்.

'ட' வை 'ட் + அ' என்றும்

'ள் த' வை 'ள் த் அ' என்றும் எழுதிக் கொள்வோம்.

எழுதவே,

'ட் அ' சமம் 'ள் த் அ' ஆகும்.

( ட் + அ = ள் + த் + அ )

இருபுறத்திலும் ஒத்த அகரத்தை விடுவோம்.

விடவே,

'ட்' சமம் 'ள் த்' ஆகும்.

(ட் = ள் + த்)

'ட்' ஒருமெய்,

அதற்குள்ளே,

'ள் + த்' என்ற இரண்டு மெய் இருப்பது மெய். பொய்யன்று ; நிரூபித்திருக்கின்றோம்.

'ட்' என்ற மெய்க்குள்ளே 'ள்' 'த்' என்ற மெய்கள் இருக்கின்றன.

'ட்' என்ற மெய்யைப் பிரித்து, இதோ இந்த மெய்க்குள் இரண்டு மெய்கள் இருக்கின்றன எனத் தனித்தனி காட்டல்முடியாது.

'ள்' என்ற மெய்யும் 'த்' என்ற மெய்யும் அத்துவிதமாய், 'ட்' என்ற மெய்யாய்க் கிடக்கின்றன.

'ட்' என்ற மெய் ஒன்றும் அல்ல ; இரண்டும் அன்று ; அத்வைதம்.

'கா' என்ற உயிர்மெய்யில் உள்ள 'க்' என்ற மெய்க்கும் 'ஆ' என்ற உயிர்க்கும் உள்ள சம்பந்தம் நிலையான அத்வைத சம்பந்தம் அன்று ; உண்மையில் சையோக சம்பந்தமே.

'ட்' என்ற மெய்க்குள் அடங்கிய 'ள்' 'த்' சம்பந்தமே, நித்தியமான சத்தியமான அத்வைத சம்பந்தம்.

இனி,

'ள்' என்ற மெய்யைத்,

"தனக்குவமை யில்லாதான் தாள்" என்பதில் உள்ள 'ள்' என்ற மெய்யென்றும்,

'த்' என்ற மெய்யைக்,

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை." — குறள். 9

என்பதில், 'தலை' என்ற சொல்லின் தலையில் நிற்கும் 'த்' என்ற மெய்யென்றும் வைத்து,

ஆத்ம பரமாத்ம

அத்வைதத்தை நோக்குவோம்.

☀

மனிதனுக்குத் தலையிருந்தால்,

அது தலையாயிருக்க வேண்டுமானால்,

அந்தத் தலை,

தனக்குவமையில்லாதான் தாளுக்குள்ளிருக்க வேண்டும். தாள் மேலே தலை கீழே யிருக்க வேண்டும்.

மனிதன் தலை கீழாக வேண்டும்.

தலை கீழாதலாவது,

தாடலைப்படுதல்.

"தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ ஏகமெனக் கொள்."

—திருவருட். 8ஆவது. 4

## சமயம் 16

இராக்காலத்திலே எந்த விளக்கின் உதவிகொண்டும் சூரியனைத் தரிசித்தல் இயலாது.
அவ்வாறே அசத்தாற் சத்தை அறிதல் முடியாது.

### 'சிவோகம்' சித்தாந்த வாக்கியம்
### 'அது நான் ஆனேன்' வேதாந்தம்

*ஏது தோன்றி நின்று ஒடுங்குகின்றதோ அது அசத்து; நிலையில்லாதது.*

*எது என்றும் ஒரே இயல்பிற்ருய் நிற்கின்றதோ அது சத்து; நிலையானது.*

*சத்து ஒன்றுதானே; கடவுள்; சிவம்.*

*அசத்து இருளானல் சத்து ஒளி. இருள் ஒளியை அறியாது; ஒளி இருளை அறியாது.*

*ஆத்மா அசத்தைச் சார்ந்து அசத்தாயும் சத்தைச் சார்ந்து சத்தாயும் நிற்கும்; அதனுலே, ஆத்மாவுக்குச் சதசத்து என்று பெயர்.*

*சத் + அசத்து = சதசத்து. 'சத்' சத்து என வழங்கும்.*

*இந்தச் சரீரம் அசத்து. ஆத்மா அசத்தாகிய இந்தச் சரீரத்தைச் சார்ந்து, அசத்தாய் நின்று, அசத்தை அறியும்; அநுபவிக்கும்.*

இந்த உலகம் அசத்து ; தோன்றிநின்றழிவது.

சரீரமாய் நிற்கும் ஆத்மா அசத்தாகிய உலகை அநுபவிக்கும்.

அசத்தைச் சார்ந்து நிற்கும் ஆத்மா சத்தை அறிந்து அநுபவிக்கமாட்டாது. அசத்துச் சத்தை அறியாது. ஆதலினுலே,

அசத்தாகிய சரீராதி கருவிகள் அசத்தை அறிய, அநுபவிக்க உதவுமேயன்றிச் சத்தை அறிய அநுபவிக்க உதவா.

இராக் காலத்திலே எந்த விளக்கினுதவி கொண்டுஞ் சூரியனைத் தரிசித்தல் இயலாது. அவ்வாறே அசத்தாற் சத்தை அறிதல் முடியாது.

ஆத்மா சத்தைச் சார்ந்து சத்தாய் நின்று சத்தை அறியும்; அநுபவிக்கும். கண் சூரிய ஒளியைச் சார்ந்துதான் சூரியனைத் தரிசிக்கும் ; அதுபோல.

சத்தைச் சார்ந்து சத்தாய் நின்ற ஆத்மா, அசத்தாகிய உலகத்தைத் தரிசிக்கமாட்டாது. ஏனென்றல், சத்து அசத்தை அறியாது. சத்தைச் சார்ந்த ஆத்மாவுக்கு அசத்தாகிய உலகமே இல்லையாம். பகலில் இருள் இல்லையே. இல்லாத இருளை எப்படித் தரிசிக்க இயலாதோ, அப்படியே சத்தாகிய ஆத்மா, அசத்தாகிய உலகைக் காணுது.

"யாவையும் சூனியம் சத்தெதிர்"

—சிவஞானபோதம் 7ஆஞ் சூத்.

சத்தாகிய சிவத்துக்கு எதிரில் இரண்டாவதாக ஒன்றுமில்லை ; பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமறச் சிவமே நிறைந்து நிற்கும்.

சூரியன் எதிரில் இருள் மாத்திரமா நட்சத்திரங்களுமே இல்லையாம்; நட்சத்திரங்கள் இருந்தும் இல்லையாய்ச் சூரியமயமாம்.

சத்தாகிய சிவத்துக்கெதிரில் ஆத்மாக்கள் இருந்தும் இல்லையாய்ச் சிவப்பிரகாசமாம்.

ஆகவே,

சத்தைச் சார்ந்து சிவமான ஆத்மா,

ஏனைய ஆத்மாக்களைத் தரிசிக்கமாட்டாது; அவைகளைச் சிவமயமாகவே தரிசிக்கும்; பகலிலே நட்சத்திரங்களைச் சூரியமயமாகத் தரிசிப்பதுபோல.

சிவமாகிய ஆத்மா ஏனைய ஆத்மாக்களைச் சிவமாகத் தரிசிக்குமென்றால்,

ஏனைய ஆத்மாக்கள் சிவமாய்விட்டன என்று கருத்து ஆகாது.

சிவமான ஆத்மா, ஏனை ஆத்மாக்களில் உள்ளும் புறமும் வியாபகமான சிவத்துவத்தையே காணும் என்றவாறு.

சிவமான ஆத்மா காண்பதெல்லாம் சிவமாகவே,

சிவமான ஆத்மா சிவத்தையே அநுபவிக்கும்; வேறொன்றை அநுபவியாது; இரண்டாவதாக ஒன்று இல்லாமையாலே.

"அவனரு ளாலே அவன்தாள் வணங்கி"

—சிவபுராணம்

"அருட்கண்ணுற் காணுதார் காணு தாரே"
என்பன மேற்காட்டிய உண்மைகளைக் காட்டும் அநுபவ வாசகங்கள்.

☀

"— நான்எனஒன்று
இல்லென்று தானே எனும்அவரைத் தன்னடிவைத்து
இல்லென்று தானும் இறை."

—சிவஞானபோதம் 10ஆஞ் சூத். உதார.

நான் என ஒன்று இல் என்று — இனி நான் என்று ஒரு பண்டம் காணப்படுமாறில்லை என்று உணர்ந்து,

தானே எனும் அவரை — எல்லாம் அந்தச் சிவந்தானே என்று காணுந் தெளிவுடையாரை,

தன்னடி வைத்து — அந்தச் சிவம் தனது திருவடி வியாபகத்துள் அடங்கி நிற்கச் செய்து,

இறை தான் ஆம் — சிவம் எல்லாம் தானே யாய் நிற்கும்.

☀

"பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்.........
........ ................................... .................
..... .........சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்."

—சித்தியார் 11ஆஞ் சூத். 2

☀

"சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகிற்
சர்வசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள் இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுஎன் இம்மையிலே உயிரின்
பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவர் அன்றே."

—சித்தியார் 8ஆஞ் சூத். 35

சத்தாகிச் சிவத்தைச் சார்ந்த சீவன்முத்தர் — சிவமேயாவர்.

ஆத்மா அசத்தாகிய சரீரத்தில் இன்பத் துன்பங்களை அநுபவித்துக்கொண்டே,

சரீரமே தாஞயிருக்கின்றது. அவ்வாறே,

முத்திநிலையில், ஆத்மா சத்தாகிய சிவத்தைச் சார்ந்து, (சிவமன்றிப் பிறிது காணுமையினுல்) சிவத்தை அநுபவித்துக்கொண்டு,

சிவமே தாஞயிருக்கும். இந்த நிலையில் இரண்டில்லை; ஒன்றே.

இப்பொழுது ஆத்மா ஏகன். 'ஏகம்' என்ருல் 'இன்பக்கூடல்.'

"இன்பக் கூடலைநீ ஏகமெனக் கொள்."

—திருவருட்பயன்

இன்பக் கூடலாகிய ஏகமே,

சுத்த அத்வைத சித்தாந்த முத்திநிலை.

※

முத்திநிலையில் 'நான் — அவன்', 'அது — நீ', 'அது — இது' என்ற பேச்சு இல்லை.

'சிவோகம்' என்பதே பாவனை செய்யும் ஒரு யோகநிலை.

சித்தாந்த முத்திநிலைக்கு, சரியை கிரியை வழி வந்த, சிவோகம் பாவனை ஒரு யோகநிலையாவது போல,

வேதாந்த முத்திநிலைக்கு, 'தத்துவமசி' முதலிய வேதாந்த மகா வாக்கியங்களாற் குறிப்பிடும் நிலைகளும் ஒருவகை யோகநிலைகளே.

"கண்டஇவை அல்லேன்நான் என்றகன்று காணாக்
கழிபரமும் நானல்லேன் எனக்கருதிக் கசிந்த
தொண்டினொடும் உளத்தவன்றா னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலும் மலங்களெல்லாங் கருடதியா னத்தால்
விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறை களும்அதுநான் ஆனேன் என்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே."

—சித்தியார் 9ஆஞ் சூத். 7

'சோகம்' என்பது சிவோகம்; சித்தாந்த மகாவாக்கியம்.

இரு வாக்கியத்துக்கும் சமம் பேசும் இந்தத் திருப்பாடல், சித்தியாரில் சாதன இயலில் ஒன்பதாஞ் சூத்திரத்தில் உள்ளது.

---

ஒருவன் தனது நினைவின்வழியே செல்கின்றான்; அதன் மயமேயாகின்றான். ஆகையால் நாம் நினைக்கும் ஒவ்வொரு நினைப்பிலும் விழிப்பாய் அஃதாவது சாக்கிரதையாய் இருந்து உண்மைக்குத் தடையாயுள்ளவற்றினின்றும் மீட்டால் பரிசுத்த நிலையை அடையலாம்.

—ஆன்மவிசாரம்

# சமயம் 17

**இந்தச் சரீரத்தின் உதவியினுல், ஆத்மா இந்த உலகத்தைக் காணுமே தவிரத் தன்னையோ பரமாத்மாவையோ காணமாட்டாது.**

## சுத்தமான அத்வைதமே வேதாந்த சித்தாந்தம்

சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலாற்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே.

—திருமந்திரம் 2355

*சீவன் சிவமாதலே வேதாந்த சித்தாந்தம்.*

*சீவன் ஒரு மாத்திரை குறுகிச் சிவன் ஆதல் வேண்டும்.*

*சிவன் சீவனை என்ருயினும் பிரிந்திருப்பதில்லை.*

*சீவன் சிவனை அகன்ருல் சீவனுயிருக்கமாட்டாது. உயிரை அகன்ற உடலின் நிலையாய்விடும்.*

*உயிர்க்கு உயிர்ப்பை நல்குவது உயிர்க்குயிராகிய சிவம். இது பராமாத்மா, சீவாத்மாவோடு பிரிப்பின்றிக் கலந்து சீவாத்மாவாய் அஃதாவது ஒன்ருய் நிற்கும் நிலை.*

*பரமாத்மா ஒன்ருய்க் கலந்திருப்பதனுலேதான், உயிர் உயிர்க்கின்றது.*

"என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்ப ரீசன்."

—திருநாவுக். தேவாரம்

*பரமாத்மா உயிருடன் ஒன்ருயிருந்துகொண்டே,*
*வேருய்,*

*உடலாயுமிருக்கின்ருன்; உடலோடு பிரிப்பின்றிக் கலந்துமிருக்கின்ருன்.*

"எல்லா உலகமும் ஆனுய் நீயே."

—திருநாவுக். தேவாரம்

*உடம்பும் ஒரு சிறு உலகம். பரமாத்மா உடம்பாய் நிற்கும் நிலே, உயிருக்கு வேருய் நின்று உபகரிப்பதொரு நிலே.*

*ஆகவே, பரமாத்மா,*

*உயிரை உயிர்ப்பித்தற்கு ஒன்ருய் நின்று,*

*உபகரித்தலோடமையாமல் வேருயும் நின்று இந்த உடலே உபகரிக்கின்ருன்.*

*பரமாத்மா,*

*ஒன்றுதல் வேறுதல் ஆகிய இந்த இரண்டு உபகாரங்களோடு மாத்திரம் அமைந்துவிடவில்லே. மற்றுமொரு மகத்தான உபகாரத்தைச் செய்து வைக்கின்ருன்.*

*உயிரோடு உயிராயிருந்துகொண்டே, உடலோடு உடலாயிருந்துகொண்டே,*

இரண்டையும் கூட்டியும் வைக்கின்ருன். இது தான் மகத்தான மற்ருெரு உபகாரம். இதற்கு உடனுதல் உபகாரம் என்று பெயர்.

உயிர் தானே சென்று கூடாது; அவ்வாறே உடலுந் தானே சென்று கூடாது. கூட்ட ஒருவர் வேண்டும். பரமாத்மா அங்கும் அங்காய், இங்கும் இங்காய் நின்று கூட்டி உபகரிக்கின்ருன்.

உயிரோடு ஒன்ருயிருக்கும்போதே, உடலோடும் அவ்வாறு நிற்கும் பரமாத்மாவுக்கு, இரண்டையுங் கூட்டி வைத்தலாகிய உடனுதல் உபகாரம், செய்து வைக்கத்தக்கதொன்றே.

இந்த உடனுதல் உபகாரம் ஒன்ருதல் வேருதல் உபகாரங்களின் வேருனது; ஒன்ருதல் வேருதல் என்ற அம்சங்களைத் தன்னுட்கொண்டது.

இரண்டை ஒன்று செய்யும்போது, ஒன்று செய்வது, அந்த இரண்டோடும்,

தனித்தனி,

ஒன்ருயும் வேருயும் இருத்தல்வேண்டும்.

நமது நாக்கு ஒரு மாங்கனியை அநுபவிக்க இச்சித்தால்,

உயிர் நாக்கோடு நாக்காய் இருந்துகொண்டே, கைம்மூலம் வேருகி அந்த மாங்கனியை அணைதல் வேண்டும். இந்த ஒன்ருதலும் வேருதலும் நிகழ்ந்த பிறகுதான், நாவோடு மாங்கனி சேருதலாகிய உடனுதல் உபகாரம் நிகழும். இவ்வாறே,

ஆத்மா ஒன்றை அநுபவிக்கிறதற்குப் பரமாத்மா, மூன்றுவகை உபகாரங்களைச் செய்து கொண்டிருக்கின்றது. அவ்வாறு அந்த மூன்று உபகாரங்களையுஞ் செய்யும்போது,

பரமாத்மாவை விட்டு விலகாமலே இருந்து செய்கின்றது. பரமாத்மா ஆத்மாவை என்றுயினும் விலகியதுமில்லை; விலகுவதுமில்லை.

விலகாமலிருந்துகொண்டே மூன்றுவித உபகாரங்களையும், ஆத்மாவுக்குப் பரமாத்மா உபகரித்துக்கொண்டிருக்கிற இந்த நிலைக்கு,

"அத்வைதம்"

என்று பெயர்.

இந்த அத்வைதநிலை என்றும் உள்ளது.

ஆத்மாக்கள் பந்தப்பட்டிருக்கிற இந்த நிலையிலும் உள்ளது;

பந்த நீங்கிய முத்தி நிலையிலும் உள்ளது.

பந்த நிலையிலே ஆத்மா, தன்னேடு அத்துவிதப்பட்டிருக்கிற பரமாத்மாவையோ அதன் மூன்றுவித உபகாரங்களையோ அறியாது.

சரீரத்திஞலே பந்தப்பட்ட ஆன்மா,

இந்தச் சரீரமே நான் என்கின்றது. தன்னையே அறியாமல் மயங்குகின்றது.

கண்ணுடியினுலே பந்தப்படுகின்ற கண் தன்னைக் கண்ணுடி என்று சொல்லுகின்றதா? இல்லையே.

ஆத்மாவுக்குக் கண்ணுடி போன்றதுதானே இந்தச் சரீரம். கண்ணுடிபோன்ற இந்தச் சரீரத்தை 'நான்' என்கின்ற ஆத்மா பரமாத்மாவை அறிவதெப்படி ?

கண்ணுக்கு அணிகலமான கண்ணுடி, கண்ணுக்குப் பொருள்களைக் காட்டும். கண்ணுக்குப் பொருள்களைக் காட்டுகின்ற — கண்ணேடு கண்ணுய்க் கிடக்கிற — கண்ணுடி, கண்ணைக் காணுது ; கண்ணைக் கண்ணுக்கே காட்டாது.

ஆத்மாவுக்குக் கண்ணுடிபோன்ற இந்தச் சரீரம், ஆத்மாவுக்குத் தூலமான உலகப் பொருள்களைக் காட்டும் ; ஆனுல், இந்த உதவி செய்கின்ற சரீரமாகிய தான் ஆத்மாவைக் காணமாட்டாது.

இந்தச் சரீரத்தின் உதவியிஞல், ஆத்மா இந்த உலகத்தைக் காணுமே தவிரத்,

தன்னையோ பரமாத்மாவையோ காணமாட்டாது.

ஆத்மா சார்ந்ததன் வண்ணமானது. பந்த நிலையிலே அசத்தைச் சார்ந்து அசத்தையே காணும். தன்னையும் அசத்தாகவே காணும்.

இந்தச் சரீரமே தான் என்னும்.

இவ்வாறே ஒரு நாளைக்கு முத்திநிலையிலே, ஆத்மா சத்தைச் சாரும். அந்த நிலையிலே அது சத்தையே காணும். தன்னையும் சத்தாகவே காணும்.

பழுக்கக் காய்ச்சிய இரும்பு தன்னைத் தழலாகவே காணும்.

ஆத்மா சத்தைச் சார்ந்து சத்தான நிலையிலும் அந்தச் சத்தான பரமாத்மா,

ஒன்றுதல் வேருதல் உடனுதல் என்ற மூன்று வித உபகாரங்களையும், விட்டு விலகாமலே செய்து கொண்டிருக்கும்.

முத்தி நிலையிலே,

ஆத்மா ஒன்றுதல் உபகாரம் கனிந்து, பழுக்கக் காய்ச்சிய இரும்புபோலே சிவமாய்விடும். இனி ஆத்மாவாகிய சிவம் சிவத்தையன்றிப் பிறிதொன்றைக் காணுது. "யாவையும் சூனியம் சத்தெதிர்." ஆகவே, ஆத்ம சிவம் காணுதற்குச் சத்தாகிய சிவம் வேருயும் நிற்கும். அங்ஙனம் ஒன்ருயும் வேருயுமிருந்துகொண்டே ஆத்ம சிவம் சிவத்தை அநுபவித்தற்குக் கூட்டுதலாகிய உடனுதலுபகாரத்தையும் சத்தாகிய சிவமே நிகழ்த்தும்.

ஆகவே, (ஆத்ம) சிவம் சிவத்தைக் கண்டு சிவத்தை அநுபவிக்கும். இந்த அநுபவமே சிவாநுபவம்; சிவபோகம். இதற்கு முடிவில்லை. "புணர்ந்தாற் புணருந்தொறும் புதிது." கண்டவர் விண்டிலர். இந்த அத்வைத நிலையை அசுத்தத்தோடு அத்வைதப்பட்டநிலையில் ஆத்மா அறியாது. பந்தங்கள் நீங்கிச் சுத்தமான நிலையில், ஆத்மா சிவமாய் அறிந்து அநுபவிக்கும்.

ஆத்மா சிவத்தை அறிந்து அநுபவிக்கின்ற சுத்த நிலைக்குச் சுத்த அத்வைதம் என்று பெயர்.

சுத்தமான அத்வைதமே வேதாந்த சித்தாந்தம்; ஞானபாதம்.

சிவோகத்துக்கு யோகம் என்று பெயர்;
அகம் பிரமத்துக்கு உபநிஷதம் என்று பெயர்.

## வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்

*உபநிஷதம் என்ற வார்த்தைக்கு யோகம் என்று பொருள் கூறலாம்.*

*உபநிஷதம் கிட்ட அணுகுதற்கு உபகாரமானது; யோகம் இயைதற்கு உபகாரமானது.*

*யாதொரு 'சத்' உண்டோ, அதனை அணுகுதற்கு, அதனோடு இயைதற்கு உபகாரமானவைகள் உபநிஷதங்கள்; யோகங்கள்.*

*ஆகவே,*

*உபநிஷதம், யோகம் என்பன ஒரு பொருள் குறித்தவைகள். சித்தாந்தமாகிய ஞானபாதத்துக்கு யோகம் உபகாரமாதல் போல, வேதாந்தமாகிய ஞானபாதத்துக்கு உபநிஷதம் உபகாரம்.*

*சிவோகம்பாவனை சித்தாந்தத்துக்குபகாரமான ஒரு யோகநிலை; பாவனை ஒரு சாதனை. அவ்வாறே வேதாந்த ஞானத்துக்கு வேதாந்த மகாவாக்கியங்கள் பாவனையாகிய ஒருவகை யோகநிலை குறிப்பவை.*

'தத்துவமசி', 'அகம்பிரமாஸ்மி' முதலியவைகள் வேதாந்த மகாவாக்கியங்கள். 'அது நீ ஆகிறாய்', 'நான் பிரமமாயிருக்கிறேன்' என்பன மகாவாக்கியங்களின் கருத்துக்கள்.

※

'அது நீ ஆகிறாய்' என்பதில், 'அது' என்பது ஒரு பொருள்; 'நீ' என்பது மற்றொரு பொருள்.

'ஆகிறாய்' என்பது இரண்டன் சம்பந்தத்தை விளக்குவது.

பழுக்கக் காய்ச்சிய இரும்பு நெருப்பாகலாம். நெருப்புமயம் ஆன இரும்பு,

"நான் நெருப்பா யிருக்கிறேன்" என்று சொல்லலாம். அவ்வாறே, 'சிவத்துவம்' மேலிட்டுச், சிவமயம் ஆன ஆத்மா,

"நான் சிவமாயிருக்கிறேன்" என்று சொல்லலாம்; தவறே இல்லை.

நெருப்பையே அணுகாத இரும்பு அவ்வாறு சொல்லுவதுதான், சொல்லத் தொடங்குவதுதான் தவறு.

பழுக்கக் காய்ச்சிய இரும்பு, நெருப்போடு அந்நியமின்றி, அநந்நியப்பட்டுவிட்டது. அந்நியம் பேதம். அநந்நியம் அபேதம்.

பேதம் என்றால் துவைதம்; இரண்டாகிய நிலை.

அபேதம் என்றால் அத்வைதம்; இரண்டற்ற நிலை; ஒன்றான நிலை.

'அத்துவிதம்' என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்தும்; 'ஆயிட்டு' என்பது, பொய் கண்டார் காணுப் புனிதமெனும், அத்துவித

மெய்கண்டார் வாக்கு.

வேத வேதாந்தங்களில் 'அத்துவிதம்' என்ற வார்த்தை வருகிறது. அது வேறுபட்ட இரண்டு பொருள்களின்,

'அந்நிய நாத்தியை' — வேறன்மையை அஃதாவது அபேதத் தன்மையை உணர்த்தும்.

'ஆய் இட்டு' என்பது அர்த்தபுஷ்டியுள்ள ஒரு தொடர். அதற்கு 'ஆய்' என்ற பதத்தை இட்டு என்று கருத்துச் சொல்லலாம்.

'தத்துவமசி' என்ற வாக்கியத்தில் உள்ள 'அசி' என்ற பதத்துக்கு, நேரான தமிழ்,

'அது நீ ஆகிருய்' என்பதிலுள்ள,

'ஆ' பதம். ஆ பதம் ஆக்கம் குறித்தது. அது தான் 'ஆய்' எனவும் வரும்.

'ஆயிட்டு' என்ருல் 'ஆ' பதத்தை முன்னிட்டு என்றபடி.

"எல்லா உலகமும் ஆனுய் நீயே" என்ற தமிழ் வேதத்தில் வரும் 'ஆனுய்' என்கின்ற, ஆ பதம், 'தத்துவம் அசி' என்பதில் உள்ள 'அசி' பதமே.

அசிபதப் பொருளே — 'ஆய்' என்று வருகிற 'ஆ' பதப் பொருளே — அறிவதே வேதாந்த சித்தாந்தம்.

கடவுள் எல்லா உலகமுமாய் எல்லா உயிர்களுமாய் அத்வைதப்பட்டிருக்கின்றார். அந்த நிலையை அறிவதே,

அசிபதம், ஆபதம் என்பவற்றின் பொருளை அறிதல்.

※

ஒரு சாரார் 'நாமெல்லாம் பாவிகள்' என்கின்றார்கள். அவர்கள் எக்கருத்திற் சொல்லுகிறார்கள் என்பது வெளிப்படை. மற்றொரு கருத்தில் ஆத்மாக்கள் எல்லாம் பாவிகளே.

பாவி — பாவிப்பது; தன்னை மற்றொன்றாகப் பாவிப்பது. ஆத்மாவின் குணமே பாவம். அஃதாவது பாவனை செய்வது; பாவி. சார்ந்ததன் வண்ணமானது என்பது பொருள்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்ப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய் இன்னும் எத்தனையோ யோனி பேதங்களாய், எதை எதைச் சார்கின்றதோ, அது அது ஆகத் தன்னைப் பாவிக்கின்ற பாவியாகிய ஆத்மா, ஒருநாளைக்குத் 'தெய்வம்' என்பதோர் சித்தமுண்டாகி, மெய்ச்சார்பை உணர்ந்து அதனைப் பாவிக்கும்.

பாவிக்கும் என்ற வார்த்தையே ஒன்று மற்றொன்றாகத் தன்னைப் பாவிப்பது,

என இரண்டு பொருளின் வேற்றுமையையும், வேற்றுமையில் ஒற்றுமையையும் புலப்படுத்துவதாயிருக்கின்றது.

" இனையர் இவர்எமக் கின்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு." —குறள் 790

இதற்குப் பரிமேலழகர் உரை வருமாறு:—

'இவர் எமக்கு இத்துணை அன்பினர் ; யாம் இவர்க்கு இத்தன்மையம் ; என்று ஒருவரை ஒருவர் புனைந்து சொல்லினும், நட்புப் புல்லிதாய்த் தோன்றும்.'

"தாம் அவர் என்னும் வேற்றுமை இன்றி வைத்தும், புனைந்துரைப்பின் வேற்றுமை உண் டாம் ஆகலின், 'நட்புப் புல்லென்னும்' என்றார்."

'புல்லெனல்' வேற்றுமை தோன்றி, நட்புச் சிறுமை யெய்துதல். வேற்றுமை யுணர்ச்சி சிறுமைத்தாதல்,

" முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்" —குறள் 1239

என்ற திருக்குறளிலும் நன்கு காட்டப்பட்டது.

" இருவர் ஆகத்துள் ஓருயிர் கண்டனம் ;
தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வருமின்பத்
துன்பங்களே "
— திருக்கோவை

என்கின்ற உயர்ந்த நிலையே வேற்றுமையற்ற ஒற்றுமை நிலை ; சுத்த அத்வைத நிலை.

" கட்டழ குடைய செவ்வேற் கருணையங் கடலின் மீது
பட்டன பட்ட லோடும் பைந்தொடி பதைத்துச்
சொல்வாள்."
— கந்தபு. வள்ளியம்மை 182

வேடர்கள் முருகன்மீது பாணந் தொடுத்தார்கள்; பாணம் பட்டது முருகன் மீது. அதற்குத் துடிதுடித்தவள் வள்ளி.

முருகனுக்கும் வள்ளிக்கும் இன்பத் துன்பங்கள் இரண்டன்று; ஒன்றே.

முருகனுக்கு விட்ட பாணம் வள்ளிக்கே பட்டது. வேற்றுமை யுணர்ச்சி வள்ளிக்கில்லை.

ஆத்மாவுக்கு வேருகச் சரீரம் இல்லாதவாறு போல, முருகனுக்கு வேருக ஒரு வள்ளி இல்லை.

☀

வேற்றுமையில் ஒற்றுமை, பாவனை; வேற்றுமை கடந்த ஒன்ருந் தன்மை, பாவநாதீதம்.

☀

ஒன்ருந் தன்மை எய்துதற்குப் பாவனை ஒரு சாதனை.

வேதாந்த சித்தாந்தம் ஒன்ருந் தன்மையைக் குறிக்கின்ற முடிந்த ஞானம்.

'அகம் பிரமம்', 'சிவோகம்' என்பன வேதாந்த சித்தாந்த ஞானத்தை அடைதற்குரிய சாதனைகள்.

சித்தாந்தத்துக்குச் 'சிவோகம்' வேதாந்தத்துக்கு 'அகம் பிரமம்' இரண்டும் இரண்டுவகைச் சாதனைகள்.

சிவோகத்துக்கு யோகம் என்று பெயர்;
அகம் பிரமத்துக்கு உபநிஷதம் என்று பெயர்.

இரண்டும் ஞானத்தை அடைதற்கு உபகாரமான, இருவகைச் சாதனைகள்.

ஞானமாகிய பயனை நல்குவதால் இரண்டு வழிகளும் ஒற்றுமையுடையனவே.

அதனால்,

யோகமே உபநிஷதம்; உபநிஷதமே யோகம்.

உபநிஷதம் வேதாந்த ஞானத்துக்கு உபகாரமாதலினாலே, வேதாந்தம் எனவும் வழங்குகின்றது; அது உபசாரம்.

பிரம சூத்திரத்தை வேதாந்தம் என வழங்குவதும் உபசாரமே.

பிரம சூத்திரம் மீமாம்சை. அது வேதாந்தத்துக்குப் பெரிதும் உபகாரப்படுதலின், வேதாந்தம் என வழங்குகின்றது.

வேதாந்தம் என்ற வார்த்தை உபநிஷதங்களுக்கு மிக்கு வழங்குகின்றமையால்,

உண்மை வேதாந்தத்தை,

"வேதாந்தத் தெளிவு"

என்ற தொடரால் உமாபதி சிவாசாரிய சுவாமிகள் வழங்குகின்றார்.

"வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்"
என்பது சுவாமிகளின் திருவாக்கு.

# சமயம் 19

**வியாக்கியான கர்த்தாக்கள் கட்டி நடத்தின அநர்த்தங்கள் எண்ணத் தொலையாதன.**

## பழுக்கக் காய்ச்சிய இரும்பும் துருப்பிடித்த இரும்பும்

"வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைகண்ட
வித்தகச் சித்தர் கணமே."

—தாயுமானவர்

மகான்களெல்லாம் வேதாந்தமே சித்தாந்தம்; சித்தாந்தமே வேதாந்தம் என்று சமரசம் பேசியிருக்கின்றார்கள். ஒன்றான உண்மைப் பொருளைக் காண்பதில் இரண்டும் ஒற்றுமை உடையவைகள்.

ஆனால், இப்பொழுது வழக்கிலிருக்கும் வேதாந்த சித்தாந்தங்கள் அப்படிப்பட்டவைகள் அல்ல. ஒன்று மேற்கு நோக்கினால் மற்றது கிழக்கு நோக்கும். இரண்டுந் தத்தம் நிலையிற் பிறழ்ந்து விட்டன. பிறழ்ச்சியில் — ஒன்றான உண்மையைக் காணாமையில்—கண்டதுபோல் நடிப்பதில்—இரண்டும் சமரசமானவைகள். இப்பொழுது சமரசம் பேசினால் பிறழ்வில் சமரசம் பேசலாம்.

பழுக்கக் காய்ச்சிய இரும்பு, 'நான் நெருப்பாயிருக்கிறேன்' என்று சொல்லலாம்; சொல்லுதற்கு அதற்குத் தகுதியுண்டு. சும்மா கிடக்கிற — துருப்

பிடித்த இரும்புப் பாரை — தானும் நெருப்பாயிருக்கிறேனென்றால் அதற்குச் சிரியாமல் வேறென்ன செய்யமுடியும்!

இருளில் கிடக்கிறவனுக்குப் பகலைப்பற்றி என்ன தெரியும்? பொல்லாத இருளிற் கிடந்துகொண்டு — இருள் விடியாமலிருந்துகொண்டு — ஒருவன் நான் ஒளியாயிருக்கிறேன் என்று புலம்பினால், அவனுக்குப் பைத்தியம் அல்லாமல் வேறென்ன?

※

வேதங்களிலே ஒன்றே உள்ளது; இரண்டாவதாக ஒன்றும் இல்லை என்ற கருத்தில் வாக்கியங்கள் வரும். அதனைத்தான், மெய்கண்டார்,

"யாவையும் சூனியம் சத்தெதிர்"

என்று அருளினார்.

இஃது உண்மைதானே. சூரியனைக் கண்ட வழி, இருள் மாத்திரமா, நட்சத்திரங்களும் இல்லைத்தானே.

"வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை ஆகாத மீன்போல,"

— சிவஞானபோதம் 5ஆம் சூத். உதாரணம்

என்ற வெண்பாவில் 'யாவையும் சூனியம்' என்பது விளக்கப்பட்டிருக்கின்றது.

சூரியன் எதிரில் நட்சத்திரம் சூனியம் என்றால், நட்சத்திரம் தான் விளங்கித் தோன்றாது, சூரியமயமாய்விடும் என்று கருத்து.

பழுக்கக் காய்ச்சிய வழி இரும்பு சூனியமாய் விடுகிறது. சூனியமாய் விடுகிறதென்றால், இரும்பு தன் தன்மை மடங்கி நெருப்பு மயம் ஆகின்றது என்று கருத்து.

இரும்பு நெருப்பு மயமானாலும், இரும்பு இரும்பே; நெருப்பு நெருப்பே. ஒன்று மற்றொன்று ஆகாது; மற்றொன்றன் மயம் ஆகும்.

"அவன் உளம் ஆகில்லான் உளம் அவனா மாட்டாது"

என்பது மெய்கண்டார் வாக்கு. அவன் என்றது சிவத்தை. உளம் என்றது ஆத்மாவை.

சிவம் சிவமே; ஆத்மா ஆத்மாவே. ஆத்மா சிவத்வம் வெளிப்பட்டுப் பழுக்கக் காய்ச்சிய இரும்புபோலச் சிவமயமாகும்; சிவம் ஆகாது.

ஆத்மா சிவமயம் ஆகும்; சிவமயமான ஆன்மா, சிவத்தையே பார்க்கும்; வேறொன்றையும் பார்க்க மாட்டாது. பார்முதற் பூதம் பரத்துள் மறைந்து இல்லையாய்விடும்.

பட்டப்பகலில் எப்படி நட்சத்திரங்களைப் பார்க்க முடியாதோ, அப்படித்தான் சிவமயமான ஆத்மா சிவத்தையன்றி வேறு பதார்த்தங்களைப் பார்க்க முடியாது. சிவமயமான ஆத்மாவுக்கு எதிரில் சிவமேயன்றி மற்றைய யாவும் சூனியமே.

சிவமயமான ஆத்மா பதார்த்தங்களெல்லாம் பொடியாக, அப்பொடியைப் பூசிய சிவத்தையே,

சூனியமாகிய சுடலையிலே காணும். தன்னையும் சிவமாயே காணும்.

சுடலையிலே சிவம் ஒன்றே உள்ளது. இந்த உண்மையையே வேதங்கள் எடுத்துப் பேசின.

※

வியாக்கியான கருத்தாக்கள் தங்கள் மனக் கருத்தை வேதங்களின் தலையிற் கட்டி நடத்தத் தொடங்கிய ஒரு காலத்திலே,

" சிவம் ஒன்றே உள்ளது "

என்ற கருத்தில் வரும் வேதவாக்கியங்களுக்கு,

" பரப்பிரமம் ஒன்றே உள்பொருள் "

ஆத்மாக்கள் உலகங்கள் என்று வேறு பண்டங்களில்லை. அவையெல்லாம் இல்பொருள்; கயிற்றிற் பாம்புகள்; கானல் நீர்கள்; மலடிமக்கள்.

என்றிங்ஙனம் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

பட்டப்பகலிலே சூரியன் ஒன்றுதானே உள்ளது. நட்சத்திரங்கள் இல்லையே. தெரு விளக்குக்கள் எல்லாம் சூனியம் ஆயினவே. இதனல் நட்சத்திரங்கள் தெருவிளக்குக்கள் முயற்கொம்பு போன்ற இல்பொருள்கள் என்னலாமா?

" மண்டனில் வாழ்வும் வானத்
தரசயன் மாலார் வாழ்வும்
எண்டரு பூத பேத
யோனிகள் யாவும் எல்லாம்
கண்டஇந் திரமா சாலம்
கனக்கமு திரதங் காட்டி
உண்டுபோ லின்றும் பண்பின்
உலகினை அசத்தும் என்பர்."

—சித்தியார் 6ஆஞ் சூத். 3

சிவத்துவம் வெளிப்பட்ட நிலையில்,

"உலகினை அசத்தும் என்பர்"

இந்த உலகம் சத் அன்று; அசத்தே என்பர்.

அது நீதிதானே. சிவத்துவம் எய்திய ஆத்மாவுக்கு உலகம் இல்லைத்தானே; அம்மட்டோ ஆத்மாவாகிய தானும் இல்லையே. தானும் இல்லையென்பதன் கருத்துத் தான் சிவமயம் என்பதே.

※

வியாக்கியான கர்த்தாக்கள் கட்டி நடாத்தின அநர்த்தங்கள் எண்ணத் தொலையாதன.

"சிவத்துக்கு வேருக இரண்டாவதாக ஒன்றில்லை." என்ற கருத்து வேதங்களிலே வருதலினுலே,

ஆத்மாக்கள் உலகங்கள் என்று பண்டங்களில்லை; இவையெல்லாம் வெறுந் தோற்றங்கள்; பரமாத்மாவின் பிரதிபிம்பங்கள் என்றெல்லாம் கருத்துப்பண்ணிவிட்டார்கள்.

இக்கருத்திற் சிக்கியவர்களுக்கு,

"புண்ணியம் ஆம் பாவம் போம்"

என்ற வாசகங்கள் கருத்தற்றவைகள்;

நாம்தாமே இல்பொருள் ஆயினேமே. முயற்கொம்பு என்ன செய்தாலென்ன! அதற்குப் பாவம் ஏது! புண்ணியம் ஏது!

மற்ருெரு சாரார்,

ஆகாயம், கடங்களுள் அகப்பட்டதுபோலத் தன்னைக் காட்டிக்கொள்ளுகின்றது. உண்மையில் அது

அப்படிக் கட்டுப்படவில்லை. கட்டுப்பட்டதுபோற் காட்டி நடிக்கின்றது. அவ்வாறே,

பரமாத்மா ஒன்றுதானே உடம்புகள்தோறும், கட்டப்பட்டதுபோலத் தன்னைக் காட்டி நடிக்கின்றது. உண்மையில் நாமெல்லாம் அந்தப் பரமாத்மாவே.

இந்த உண்மையை அறியாமல்,

நம்மை நாம் கந்தரும் பூதரும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். இனி அந்தப் பேச்சை நிறுத்தி,

"நீ யார்"

என்று யாராவது கேட்டால்,

"நான் பிரமம்"

என்று சொல்லப் பழகவேண்டும் என்று தீர்மானம் பண்ணி வைக்கின்றார்கள்.

இதற்கும் வேதவாக்கியங்கள் கண்டு,

அவற்றுக்கு இந்தக் கருத்துக்களைக் கட்டி நடத்தத்தானே, உரையாசிரியர்களைக் கடவுள் சிருட்டித்திருக்கிறார்.

"வானாதி நீயெனவே வைத்தமறை என்னையுநீ
தானாகச் சொல்லாதோ சாற்றாய் பராபரமே."

—தாயுமானவர்

## சமயம் 20

**பிரம விவர்த்தன வாதம் பற்றித், தமிழிலும் வடமொழியிலும் மகாபண்டிதரான ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் கூறியது :**

# மாயாவாதத்தின் கிளையான பிரம விவர்த்தன வாதம்

*இப்பொழுது வேதாந்தத்தின் பேரால் இரண்டு மதங்கள் நிலவுகின்றன. ஒன்று பிரம விவர்த்தன வாதம். பரப்பிரமம் ஒன்றே உள்ளது. உலகமும் உயிர்களும் பரப்பிரமத்தின் பிரதிபிம்பமான வெறுந் தோற்றங்களே என்பது.*

*மற்றது, பரமாத்மா ஒன்றுதானே, மாயையினுற் பந்திக்கப்பட்டுச், சீவாத்மாக்களாய் இருக்கின்றதென்பது; சீவாத்மாக்கள் உண்மையிற் பரமாத்மாவே என்பது.*

*இந்த இரண்டு மதங்களையும் மாயாவாதம் என்று சொல்லிவிடலாம். இந்த இரண்டு மதங்களில் பிரம விவர்த்தன வாதம்,*

*படித்தவர்களால் — விவேகிகளால் — வலுப் பெற்று, இமாசலம்போல் நிமிர்ந்து நிற்கின்றது.*

*மாயாவாதத்தின் ஒரு கிளையான பிரம விவர்த்தன வாதம் பற்றித், தமிழிலும் வடமொழியிலும்*

மகாபண்டிதரான ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் அவர்கள் கூற்றை அவர்களுடைய சற்பிரசங்கத்திலிருந்து அப்படியே இங்கே அநுவதிக்கின்றோம்.

"விவர்த்தன வேதாந்தமாகிய மாயாவாதியினுடைய மதம் இங்கே கண்டிக்கப்படுகின்றது. மாயாவாதியின் மதமாமாறு :—

அத்தியாரோபம் அபவாதம் என்னும் யுத்தி இரண்டினாலும் தத்துவ நிச்சயம் அறிதல்வேண்டும்.

அத்தியாரோபமாவது,

பாம்பல்லாத கயிற்றிற் பாம்புத் தன்மையை ஏற்றுதல்போலவும், வெள்ளியல்லாத இப்பியில் வெள்ளித் தன்மையை ஏற்றுதல் போலவும் மெய்ப்பொருளிடத்தே பொய்ப்பொருளுண்மையை ஏற்றுதலாம்.

சச்சிதானந்த ரூபமான பரப்பிரமம் ஒன்று தானே மெய்ப்பொருள். கயிற்றிற் பாம்புபோலப் பிரமத்தினிடத்திலே பொய்ப்பொருளாகிய பிரபஞ்சமெல்லாம் ஆரோபமாக உண்டாயிற்று. அவ்வாரோபம் அஞ்ஞானத்தால் வந்தது. அந்த அஞ்ஞானமே மாயை எனவும் அவித்தை எனவும் பிரகிருதி எனவும் பெயர்பெற்று முக்குண வடிவினதாயிருக்கும். அந்த அஞ்ஞானம் என்கின்ற மூலப்பிரகிருதியின் சத்துவ குணத்திலே பிரதிபிம்பித்த பிரம சைதன்னியமே முற்றறிவு முதலியவற்றையுடைய ஈசுவரனும்.

மூலப்பிரகிருதியின் இரசோகுணமாகிய காரண சரீரத்திலே தோன்றிய பிரம சைதன்னியப் பிரதிவிம்ப ரூபங்களே சீவர்கள் எனப்படுவன.

மூலப்பிரகிருதியின் தமோகுணமானது ஆவரணசத்தி, விக்ஷேப சத்தி என இரண்டாம். அவற்றுள், ஆவரண சத்தியானது சூரியனை மேகம் மறைத்தல்போலப் பரமாத்மாவைத் தோன்றவிடாமல் மறைக்கும். விக்ஷேப சத்தியானது கயிற்றறியாமை கயிற்றிற் பாம்பைத் தோற்றுவித்தல்போலத் தன்னால் மறைக்கப்பட்ட பிரமத்திலே ஆகாசம் முதலிய சூக்கும பூதங்களைத் தோற்றுவிக்கும். இச் சூக்கும பூதங்களிலிருந்து சத்துவ குணக் கூருகிய ஞானேந்திரியமைந்தும் வாயுவைந்தும் புத்தியும் மனமும் இரசோ குணக் கூருகிய கருமேந்திரியமைந்தும் ஆகிய பதினேழு உறுப்புக்களை உடைய சூக்கும சரீரங்கள் தோன்றும். சூக்கும பூதங்களின் தமோகுணக் கூறுகள் பஞ்சீகரிக்கப்பட்டுழித் தூல பூதங்கள் உண்டாம்.

தூல பூதங்களிலிருந்து பிரமாண்டமும், அதனுட் பதினன்கு புவனங்களுந் தூல சரீரங்களும் யோக்கியப் பொருள்களும் உண்டாம்.

இப்படியே பரப்பிரமமானது அத்தியாரோபமாகத் தோன்றிய மாயையிலும் அவித்தையிலும் பிரதிவிம்பித்து ஈச்சுவரனும் சீவர்களும் ஆயிற்று. பிரகிருதியின் விக்ஷேப சத்தியிலே ஆரோபமாகத் தோன்றிச் சடப்பிரபஞ்சம் ஆயிற்று. இங்ஙனமாகக் காண்டல் அத்தியாரோப யுத்தியாம்.

அபவாதமாவது கயிற்றின் பொய் வேறுபாடாகிய பாம்பானது கயிறு மாத்திரமாயிருத்தல் போலப் பரப்பிரமத்தின் விவர்த்தனமாகிய

பிரபஞ்சமெல்லாம் பரப்பிரம மாத்திரமாய் இருக்குமென்று ஒழித்தறிதலாம்.

இங்ஙனமாகவே பரப்பிரமத்தின் வேருயது ஒன்றுமில்லை. பரப்பிரமம் ஒன்றுதானே தனது அவித்தையினுலே சீவர்களாகி வித்தையினுலே பரப்பிரமமாத்திரமாகும். நானே பிரமம் ஆகின்றேன் என்ற விசாரத்தால் அறிந்தால் முத்தி உண்டாம். இதுவே மாயாவாதி மதம்.

மாயாவாதிகள் கூறிய அத்தியாரோப யுத்தியே பொருந்தாது. அத்தியாரோபஞ் செய்யும்போது அத்தியாரோபிப்பான் ஒருவன் வேண்டும். அத்தியாரோபிக்கப்படும் பொருளுக்கும் அதிட்டானப் பொருளுக்கும் ஒப்புமை உண்டாதல் வேண்டும்; அத்தியாரோபத்தின் காரணமாகிய ஒரு தோஷமும் வேண்டும்.

இங்ஙனம் அன்றே! கயிற்றிற் பாம்பை ஏற்றும்போது,

1. ஏற்றுவான் ஒருவன் வேண்டும்.
2. ஏற்றப்படும் பொருளாகிய பாம்பு அவனுல் முன்னே அறியப்பட்ட மெய்ப்பொருளேயாய் இருத்தல் வேண்டும்.
3. ஏற்றப்படும் இடமாகிய கயிறும் மெய்ப்பொருளா யிருத்தல் வேண்டும்.
4. ஏற்றப்படும் பொருளாகிய பாம்புக்கும் இடமாகிய கயிற்றுக்கும், நீளமுடைமை பருமை வளைவுடைமை முதலிய ஒப்புமைத் தன்மைகள் இருத்தல் வேண்டும்.

5. ஏற்றுவோனுடைய பிரயத்தனம் இன்மை ஆயினும் அவனுடைய மனம் கண் முதலிய கருவிகளின் குறை ஆயினும், தூரம் முதலிய குறை ஆயினும் ஆரோபகாரணமாகிய தோஷமாயிருத்தல் வேண்டும்.

இங்ஙனம் கூறிய ஐந்து காரணங்களின் சாமக்கிரி உண்டானல் அத்தியாரோபம் என்னும் பிராந்தி உண்டாம். இவற்றுள் ஒன்று குறையினும் பிராந்தியே இல்லை.

வேதாந்திகள் (உண்மை வேதாந்திகள் அல்லர்) பிரமத்தின் வேருகிய பொருள் ஒன்று மில்லை என்று அத்துவைதவாதம் பேசுதலால் இவ்வைந்தும் உள்ளன என்றல் அவர்க்குக் கூடாதே.

பிரமத்திலே பிரபஞ்சத்தை அத்தியாரோபிக்கு மிடத்து,

1. அத்தியாரோபிப்பவனுகிய ஒருவன் வேண் டும். அவர்கள் அங்ஙனமாகிய ஒருவன் சீவனே என்ருல், அத்தியாரோபத்தின் பின்னே வந்த சீவன் அதன்முன்னே அத்தியாரோபிக்கமாட்டானே. அத்தியா ரோபஞ் செய்வது பிரமமே என்ருல், பிரமம் அஞ்ஞானமுடையதாமே ! அன்றியும் ஆரோபஸ்தானம் இல்லை ஆகுமே என்க.

2. அத்தியாரோபிக்கப்படும் பிரபஞ்சம் ஆரோ பிப்பவனுல் முன்னே அறியப்பட்ட மெய்ப் பொருளாயிருத்தல் வேண்டும். அவர்கள்

மதத்திலே ஆரோபத்தின் பின்வந்த பிரபஞ்சம் முன்னே அறியப்படுதல் கூடாதே!

3. அத்தியாரோபிக்கப்படும் இடமாகிய பிரமம் மெய்ப்பொருளாயிருத்தல் வேண்டும். இது மாத்திரமே அவர்களுக்கு உடன்பாடாக உள்ளதாயிருக்கின்றது.

4. ஆரோப்பியப் பொருளும் ஆரோபத்தின் இடமும் ஒப்புமையுடையனவாதல் வேண்டும். அவர் மதத்திலே ஆரோப்பியப் பொருளாகிய பிரபஞ்சமே முன்னர் இல்பொருளாயின், அது பிரமத்தோடு ஒத்தல் கூடாதே! அது உள் பொருளாயினும் பிரமத்தோடு ஒப்புமை உடையதாகாதே!

அகண்டமாய், அரூபமாய், அறிவாய் இருக்கின்ற பிரமத்துக்குக், கண்டமாய், உருவாய், அசேதனமாயிருக்கிற பிரபஞ்சம் ஒருவகையானும் ஒவ்வாதே.

5. ஆரோபகாரணமாகிய தோஷம் ஒன்று வேண்டும், அது அஞ்ஞானமே என்றால், அஞ்ஞானமென்பது ஒரு பொருளா? குணமா? ஒரு பொருளேயெனில், ஏகாத்மவாதம் அழிந்துபோம்! குணமேயெனில், அது எந்தப் பொருளின் குணம்?

சீவகுணம் என்றால், அத்தியாரோபத்துக்கு முன்னே சீவரின்மையால் அஞ்ஞானமும் இல்லையாம்.

பிரமத்தின் குணமென்ருல், அந்தப் பிரமமே பந்தமுடையதாம்; அப் பந்தம் தீர்த்தற்கு வேருெரு கருத்தா வேண்டுமே என்க.

ஒளியினது அபாவமே இருளாதல் போல ஞானத்தின் அபாவமே அஞ்ஞானம் என்றும், ஞானம் பிரமகுணம் என்றுங் கூறும் பக்ஷத்திலே, பிரமம் அகண்டம் ஆதலின் அதன் குணமாகிய ஞானமும் அகண்டமாதலின், அதன் அபாவம் பிரமத்திடத்தே இல்லை என்க. வேறு பொருளில் உண்டென்னின், வேறு பொருள் ஒன்றுமில்லை என்பது பொய்யாய்விடும் என்க.

அது இன்னதென்று கூறப்படாதெனின், அது இலக்கணப் பிரமாணங்களால் அறியப்படாத தாதலின் இல்லாத பொருளாம் என்பது. இப் படியே அத்தியாரோபித்தற்கு வேண்டிய ஐந்து காரணங்களுள், இடமாகிய பிரமம் ஒன்றே அன்றி, மற்றை நான்கும் இல்லாதிருக்க, வேதாந்திகள் (மாயாவாதிகள்) அத்தியாரோபித்தல் கூடாதே! அது கூடாதாகவே அபவாதம் வேண்டியதின்று.

ஆகவே,

ஆன்மா ஒன்றே உள்ளது பல இல்லை என்று மாயாவாதிகள் கூறுதல், அதிப்பிராந்திமூலமேயாம்.

இன்னும் ஒரு சூரியன் அநேக கோடி கடசலங் களிலே அநேக கோடி பிரதிவிம்பங்களைக் காட்டுதல் போலப் பரப்பிரமம் ஒன்றே சரீரந்தோறும் பிரதிவிம்பங்களைக் காட்டுமென்ருர். அருவாயும்

அகண்டமாயும் இருக்கிற பிரமம் உருவப்பொருள் போலப் பிரதிவிம்பங் காட்டுமென்கை யுத்திக்குப் பொருந்தாத மகாவிரோதம்!

இன்னும் உலகத்திலே ஒருவன் இறக்கும் போது மற்ருெருவன் பிறக்கிருன். ஒருவன் உண்ண விரும்பும்போது மற்ருெருவன் போக விரும்புகிருன். ஆன்மா ஒன்றே எல்லாச் சரீரத் தும் இருப்பதென்ருல் ஒருவன் ஒன்றைச் செய்யக் கருதும்போது எல்லாரும் அக்கருத்துடையராதல் வேண்டும்.

இச்செய்கை வேறுபாடுகள் பிரதிவிம்பத்தின் குணமெனின், விம்பத்தின் இல்லாத குணம் பிரதி விம்பத்தில் உண்டாகுமா? பிரதிவிம்பத்துக்கு அறிவு உண்டா என்க.

இவை அஞ்ஞானோபாதியின் குணமெனின் அஞ்ஞானம் அறிவுடைய பதார்த்தமா என்க.

சுருதி வாக்கியம் 'ஒன்றே உள்ளது' என்று கூறுகின்றதே எனின், ஆயிரஞ் சுருதிகள் கூடினும் ஒரு குடத்தைப் புடைவை ஆக்கமாட்டாவே! என்க. அங்ஙனமாயின், சுருதி கூறியது விபரீதமோ எனின், அது விபரீதம் அன்று. பதிபதார்த்தத் தைக் குறித்து ஒன்றே உள்ளது என்று சுருதி கூறும் பொருள் உண்மையே. மாயாவாதிகள் அச் சுருதிக்குக் கொண்ட வியாக்கியானமே விபரீதம் என்க. ஆதலால் ஏகாத்மவாதம் ஒருவாற்ருனும் பொருந்தாது."

# சமயம் 21

## இம்மைச் சுகத்தின்பொருட்டு எதுவும் செய்யலாமென்பது உலோகாயதம். இது மாயாவாதமாகிய ஞானகாண்டத்துக்குக் கிரியாபாகம்

## மாயாவாதம்? உலோகாயதம்?

*"சீவாத்மாக்கள் உண்மையில் பரமாத்மாவே. பரமாத்மா மாயாபந்தத்துள் தானே நுழைந்து பலவாய்த் திருவிளையாடல் புரிகின்றது" என்கின்ற இக்கொள்கை மாயாவாதத்தின் மற்றொரு கிளை.*

*இதனைக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், சுக்கிராசாரியர் வாயிலாக விஸ்தரித்துக் காட்டுகின்றார்.*

"பாச மென்றும் பசுவென்றும் மேதகும்
ஈசன் என்றும் இசைப்பர் தனையெனப்
பேசல் மித்தை பிறிதிலை ஆவியுந்
தேசு மேவு சிவனும்ஒன் றுகுமே."

— கந். சுக்கிரனுப. 24

*சிவன் சீவன் என்று இரண்டில்லை; ஒன்றே உள்ளது. பந்தம் என்பது படுபொய். அப்படி ஒரு பண்டம் இல்லை.*

" ஆதி யந்தமின் ருகி அமலமாம்
சோதி யாயமர் தொல்சிவன் ஆடலின்
காத லாகிக் கருதுதன் மாயையாற்
பூதம் யாவும் பிறவும் புரிவனல்."

-- கந். சுக்கிரனுப. 29

ஒன்ருன கடவுள் விளையாட்டுக் காதலினலே, தன் மாயையாற் பூதங்களையும் பிறவற்றையும் சிருஷ்டி செய்கின்ருன்.

" இடங்கொள் மாயையின் யாக்கைகள் ஆயின
அடங்க வும்நல்கி அன்னவற் ருடுதான்
கடங்கொள் வானிற்க லந்துமற் றவ்வுடல்
மடங்கு மெல்லையில் மன்னுவன் தொன்மைபோல்"

-- கந். சுக்கிரனுப. 30

கடவுளே விளையாட்டுக்காக யோனி பேதங்களாகிய உடம்புகளைப் படைத்து,

எங்கும் வியாபகமான ஆகாயம் சிறுச் சிறு குடங்களுட் புகுந்தவாறு, அந்தச் சர்வவியாபி ஆகிய கடவுளே இந்தப் புல்லிய சரீரங்களுட் புகுந்து, விளையாடல் நடத்துகின்ருன்.

கடம் உடைந்தவழிக் கடாகாயம் மகாகாயம் ஆனவாறுபோல, இந்தச் சரீரம் உடைந்தவழிப் பரமாத்மா, கடத்துட் புகுதமுன் ஆகாயம் இருந்தவாறேபோலச் சற்றும் விகாரமின்றி யிருக்கும். பிறகு ஒருநாள் சும்மா இருக்க முடியாமல் விளையாட்டுக் காதல் முறுகினல், பழையபடி மாயையால் சரீரங்களைச் சிருட்டித்து அவற்றுட் புகுந்து விளையாடும்.

" இத்தி றத்தின்எஞ் ஞான்றும்அவ் வெல்லைதீர்
நித்தன் ஆடல்நி லைமை புரிந்திடும்
மித்தை யாகும்வி னைகளும் யாவையும்
முத்தி தானும் முயல்வதும் அன்னதே."

— கந். சுக்கிரனுப. 31

*மித்தை—பொய்.*

" பொய்ய தாகும் பொறிபுலம் என்றிடின்
மெய்ய தோஅவை காணும் விழுப்பொருள்
மையில் புந்தியும் வாக்கும் வடிவமும்
செய்ய நின்ற செயல்களும் அன்னவே."

— கந். சுக்கிரனுப. 32

*இந்தச் சரீரமே பொய். அதில் உண்டாகும் அறிவு இச்சை செயல்கள் அதினும் படு பொய்.*

" தோன்று கின்றதுந் துண்ணென மாய்வதும்
ஏன்று செய்வினை யாவதும் செய்வதும்
ஆன்ற தற்பரற் கில்லை அனையதை
ஊன்றி நாடின் உடற்குறு பெற்றியே."

— கந். சுக்கிரனுப. 35

*தோற்றம் நிலை இறுதிகள், நல்வினை தீவினை கள் எல்லாம் உடம்பைப் பொறுத்தவை; உடம்பு ளிருக்கும் பரமாத்மாவை அணுகா.*

" போவ தும்வரு கின்றதும் பொற்புடன்
ஆவ தும்பின் அழிவதுஞ் செய்வினை
யேவ தும்மெண்ணி லாத கடந்தொறும்
மேவு கின்றதொர் விண்ணினுக் காகுமோ."

— கந். சுக்கிரனுப. 36

*குடமாய்ச் சட்டியாய் ஆகாயந் தோன்றி நின்று அழிகின்றது என்று சொல்வாரில்லையே. சட்டி*

*பானைகள் தோன்றி நின்றழிய ஆகாயம் என்றும் ஒரேபடித்தாய் நிற்கின்றதே.*

" அன்ன போலெங்கும் ஆவியொன் ருகியே
துன்னி நின்றிடு தொல்பரன் வேறுபா
டென்ன தும்இலன் என்றுமோர் பெற்றியான்
மன்னும் அங்கது வாய்மையென் ரேர்திநீ."

— கந். சுக்கிரனுப. 37

*பரமாத்மா ஒன்றே விகாரமின்றி உள்ளது. இதுவே சத்தியம்.*

" தஞ்ச மாகுந் தருமநன் ருலென
நெஞ்ச கத்து நினைந்து புரிவதும்
விஞ்சு கின்ற வியன்பவம் தீதென
அஞ்சு கின்றது மாம்அறி வின்மையே."

— கந். சுக்கிரனுப. 38

*தருமமே உய்திக்குப் பற்றுக்கோடு; அதுவே செய்யத்தக்கது; என்று செய்வதும், பாவத்துக்கு அஞ்சுவதுமே அறியாமை.*

" யாது யாதுவந் தெய்தியது அன்னதைத்
தீது நன்றுஎனச் சிந்தைகொள் ளாதவை
ஆதி மாயையென்று ஆய்ந்தவை ஆற்றுதல்
நீதி யான நெறிமைய தாகுமே."

— கந். சுக்கிரனுப. 39

*"புண்ணியம் ஆம்" "பாவம் போம்" என்பவர்கள் முழு மூடர்கள். எவர்களும் எதையுஞ் செய்யலாம். புண்ணியத்தைக் கண்ணியப்படுத்தவோ, பாவத்தைத் தண்டிக்கவோ, பரமாத்மாவாகிய நமக்கு மேலே ஆளில்லை. புண்ணிய*

பாவங்கள் வெறுஞ் சூனியங்கள். சூனியங்கள் முளைப்பதெப்படி?

"உற்றதோர் மேன்மை நாடி உன்னைநீ பிரம மென்றே தெற்றெனத் தெளிதி."

— கந். சுக்கிரனுப. 47

நானே பிரமம் என்று புத்தி பண்ணிக்கொள்ள வேண்டும். அது மகத்துவம்.

நானே பிரமம் என்கின்ற புத்தி நன்கு ஸ்திரப் பட்டு விட்டால்,

"கொலையொடு களவு காமம்
குறித்திடு வஞ்ச மெல்லாம்
நிலையெனப் புரிதி அற்றால்
நினக்குமேல் வருந்தீ தொன்றும்
இலைஅவை செய்தி டாயேல்
இறைவநீ விரும்பிற் றெல்லாம்
உலகிடை ஒருங்கு நண்ணா
உனக்குளவர் வெருவு நீரார்."

— கந். சுக்கிரனுப. 50

கொலையாதிகள் செய்யத்தக்கவைகள்; செய்ய வேண்டியவைகள். செய்யாதவழி வீண் நட்டம். பிறர் அஞ்சார்கள்; மதியார்கள்.

இந்த அமரிக்கப் பிரசங்கம் சுக்கிராச்சாரி யாரால், சூரபத்மனுக்கு உபதேசிக்கப்பட்டது.

இம்மைச் சுகத்தின்பொருட்டு எதுவுஞ் செய் யலாமென்பது உலோகாயதம். இது மாயாவாத மாகிய ஞானகாண்டத்துக்குக் கிரியாபாகம்.

விவர்த்தனவாதி தன்னைப் பரப்பிரமத்தின் நிழல் என்கின்றான்; கடாகாசவாதி பிரமமே தான் என்கின்றான். இந்த இருவர் மாயாவாதிகளுக்கும் உண்மை தெளிவாகிவிட்டது; இப்பொழுதைய நிலையிலேயே முடிந்த ஞானத்தைப் பற்றி முடிபு கட்டிவிட்டார்கள்.

"ஒழுக்கம்அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவந்தா னங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம்
அறிவொடுஅர்ச் சித்த லாதி
இழுக்கிலா அறங்கள்......................"

-- சித்தியார் 2ஆஞ் சூத். 23

இவர்களுக்கு வேண்டுவதில்லை.

நிழல் வெறுஞ் சடம். அதற்கு அறங்கள் போதிப்பது வீண்.

அவ்வாறே அறமே வடிவான பிரமத்துக்கு அறங்கள் போதிப்பதும் வீண். சூரியபகவானுக்கு ஒரு சிறு விளக்கு நல்குவது போலாகும். அன்றிப் பரப்பிரமத்தின் லீலைகளுக்கு விதிவிலக்குக்கள் அமைத்தற்கு ஒரு அதிகாரியும் உண்டோ!

மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம், உலோகாயதன் எனும் ஒண்டிறற் பாம்பின், கலாபேதத்த கடு விஷத்திலேதான்,

சென்று முற்றும்.

## சமயம் 22

இந்தப் பூமியாகிய வழி எங்கிருந்து தொடங்குகின்றது, எங்கேபோய் முடிகின்றது என்பது ஆராயற்பாலது

# ஆராய்ந்து மெய்ப்பொருள் காணுதல் வேண்டும்

*"ஜந்மாத்தியஸ்யத:" எங்கிருந்து இதன் சிருஷ்டி முதலியன.*

*இது முனி மொழி; வியாச பகவான் அருளியது;*

*உத்தர மீமாஞ்சை என்றும் வேதாந்த சூத்திரம் என்றும் வழங்குகின்ற,*

*பிரம சூத்திரத்தில் இரண்டாவது சூத்திரம்.*

*"அவன் அவள் அது எனும் அவை" எங்கிருந்து வருகின்றன என்பது, இச்சூத்திரத்தில் விசாரிக்கப்படுகின்றது.*

*'அவன் அவள் அது' என்று சொல்லப்படுகின்ற அவை,*

*சொற் பிரபஞ்சமுமாம்; பொருட் பிரபஞ்சமுமாம்.*

சொற்பிரபஞ்சம் 'அவன் அவள் அது' என்று வகுக்கப்படுகின்ற உயர்திணை அஃறிணைச் சொற்கள். பொருட் பிரபஞ்சம் சடம் சித்து என இரு வகைப்படும். சடம் அறிவு இல்லாதது. சித்து அறிவுள்ளது.

சடப்பிரபஞ்சம் நம்மாற் சுட்டியுணரப்படுவது. 'அவன்' என்றும் 'அவள்' என்றும் 'அது' என்றும் நாம் காணுவது மூவகையான சரீரங்களையே. அவற்றை இயக்கிக்கொண்டு அவற்றின் வேறுயிருப்பது உயிராகிய சித்து. அதனை ஊகித் துணர்வதன்றிச் சுட்டி யுணர்வதில்லை. இவ்வாற்றால் சுட்டி யுணரப்படுவதும், சுட்டாது ஊகித்துணர்வதும் ஆகப் பொருட்பிரபஞ்சம் இருவகை ஆகின்றது.

இந்த இருவகைப் பொருட்பிரபஞ்சங்களோடு சொற்பிரபஞ்சமுஞ் சேர்ந்து மூவகைப் பிரபஞ்சமுமாகிய

"அவை"

வருகின்றன; சற்றே நிற்கின்றன; போகின்றன.

போன,

அவை,

மீண்டும் வருகின்றன, நிற்கின்றன போகின்றன.

"ஒருவனே டொருத்தி ஒன்றென்று
உரைத்திடும் உலகம் எல்லாம்
வருமுறை வந்து நின்று போவதும் ........"

—சித்தியார் 1ஆம் சூத். 1

நடந்துகொண்டிருக்கிறது.

துயில் கூடுகிறவனை இந்தப் பிரபஞ்சம் கை விட்டு எங்கோ போய்விடுகின்றது; விழிக்கும் போது போனவாறே திரும்பி வந்துவிடுகிறது. விழித்திருக்கும்வரை நிலைக்கின்றது.

மனிதனே இந்தப் பிரபஞ்சத்தை விட்டுப் போய்விடுகின்றான்; மீண்டு வருகின்றான்; சில நாள்கள் மனைவி மக்களுடன் உண்டு களித்து நிலைக்கின்றான்.

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு." -- குறள், 336

நன்றாக மனனஞ்செய்து பலமுறை ஒப்பித்த ஒரு சொற்பிரபஞ்சம் — ஒரு பாடல் — சிலசமயம் நம்மைக் கைவிட்டுப் போய்விடுகின்றது; எங்கோ போய் ஒளித்துவிடுகின்றது; எவ்வளவோ முயன்றும் அது அச்சமயம் வருவதில்லை. அது தொலைந்தது என்று நாம் எண்ணியிருக்கும்போது, ஒரு நாள் அப்பாடல் எங்கிருந்தோ வந்து குதிக்கின்றது.

கருத்துப்பிரபஞ்சமாகிய பொருட்பிரபஞ்சமும் அவ்வாறே போக்குவரவு புரிகின்றது. எத்தனை எண்ணங்கள் வருகின்றன, போகின்றன.

நாம் காணுகிற பிரபஞ்சம் எல்லாம் ஒருநாள் வந்தவை; ஒருநாளைக்குப் போபவை.

எங்கிருந்து வருகின்றன?

எங்கே போய்ச் சேருகின்றன?

என்று விசாரிக்கும்படி வேதவியாசபகவான் தூண்டுகிறார்.

வேத ரிஷிகள் பிரபஞ்சத்தை அணு அணு வாக ஆராய்ந்திருக்கின்ருர்கள்.

"சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு" -- குறள் 27

நீத்தோராகிய வேத இருடிகளே இந்த உலகம் எங்கே இருந்து வருகின்றது; எங்கே போய்ச் சேருகின்றது என்ற உண்மையை அறிய வல்லவர்கள்; அவர்களே உலகம்.

"உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே"

உயர்ந்தோராகிய உலகமே பிரபஞ்சமாகிய உலகத்தின் இயல்பை உள்ளவாறு அறியும்.

உயர்ந்தோருக்கு உலகர் என்று பெயர்; உலகத்தை ஆராய்ந்து அதன் போக்குவரவை அறிபவர் என்று கருத்து.

உலகராகிய உயர்ந்தோர் உலகத்தை ஆராய்தற்கு வேதம் வழிசெய்கின்றது. அதனுலேதான், வேதத்தின் திறவுகோலான பிரமசூத்திரம்,

"எங்கிருந்து இதன் தோற்றம் முதலியன"

என்று, உலகத்தின் தோற்ற நிலை இறுதிகளை ஆராயத் தூண்டுகின்றது.

"வேதநூல் சைவநூல் என்றிரண் டேநூல்கள்
வேறுரைக்கும் நூல்இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதியம லன்தருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினுல் உலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது............" —சித்தியார் 8ஆம் சூத். 15

என்பது சித்தியார்.

உலகர்க்கு நீதியினால் நிகழ்த்தியது வேதநூல். இங்கே 'உலகர்' என்றது வேத இருடிகளை; சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிபவர்களை. அவர்களே அறிவா யிருக்கின்ற வேதத்தின் மூலம் உலகத்தை ஆராய்ந்து அறியத்தக்கோர்.

"புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற ஆறு..........."

— திருப்பள்ளியெழுச்சி 10

உயிர்கள் உய்ந்து கடைத்தேறும் பொருட்டு, அவ்வுயிர்களை ஆட்கொள்ளுகின்ற ஒரு நெறி, இந்தப் பூமி.

இந்தப் பூமி சிவபெருமான் உயிர்களை உய்யக் கொள்கின்ற ஓர் ஆறு; நன்னெறி; நல்வழி; சிவன் தந்த சிவவழி. இந்தப் பூமியாகிய வழி எங்கிருந்து தொடங்குகின்றது; எங்கே போய் முடிகின்றது என்பது ஆராயற்பாலது.

ஆராயற்பாலதனை ஆராயாமல்
"ஜகத் மித்தியா"
இந்த உலகம் படுபொய் என்றோ,
இந்த உலகம் சுத்தமான மெய் என்றோ, தீர்த்துக்கட்டி விடுவது மகா தவறு.

மனிதர்கள் மந்த மதியினாலே—மலபந்தத்தினாலே, மனம் போனவாறு சிவபெருமான் உய்யத் தந்த இந்தப் பூமியைத் தீர்த்துக்கட்டி,

அந்தோ !

இந்தப் புவனியில் வந்து பிறந்தும், (ஆராய் தற்குரியவர்களாயிருந்தும்) ஆராயாமையினலே,

பிறவாதவர்கள்போலாய் எடுத்த பிறப்பையே பாழாக்கி, அருமந்த வாழ்நாள்களை வீழ்நாள் செய்கின்றார்கள் ;

"பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்குகின்றார்கள்."

அறியாமையாகிய அந்தகாரத்தில் இந்தப் பூமியாகிய தீபத்தைக் கண்திறந்து பாராமல், கடுந்துயில் புரிகின்றார்கள்.

இவர்கள் நிலைமை இருந்தபடி என்னே ! என்று கரைந்து இரங்குகின்றார் மணிவாசகப் பெருமான்.

துயில் எழுமாறு பள்ளி எழுச்சி அருளுகின்றார்.

வள்ளுவர்பெருமான்,

எப்பொருள் எத்தன்மைத்தாயினும்,

யார்யார்வாய்க் கேட்பினும்,

அப்பொருளை மனம் போனவாறு தீர்த்துக் கட்டிவிடாமல், ஆராய்ந்து மெய்ப்பொருள் காண வேண்டுமென்று,

வியாசபகவான் கூற்றுக்கு அரண் செய்தருளு கின்றார்.

## சமயம் 23

தெருவிலே போகிற ஒருவனுக்குக் கேத்திரகணித சூத்திரங்களை விளக்க முடியாது; விளங்குவதற்கு வழி இருக்கிறது; வழி வகுத்திருக்கின்றார்கள்.

## அந்தச் சிவசக்தியே ஆதிபகவன்

*"ஆதிபகவன் முதற்றே உலகு" என்கின்ற தேவர் குறள், திருநான்மறை முடிவின் திறவு கோலான*

*"எங்கிருந்து இதன் தோற்றம் முதலியன" என்கின்ற முனிமொழிக்கு,*

*விடையாய் அமைந்து விளங்குகின்றது.*

*வியாசபகவான் எழுப்பிய விசார வினவுக்குத் தேவர் விடையிறுத்தருளியிருக்கின்றார்.*

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிபும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என் றுணர்." —நல்வழி 40

*என்கின்ற உலக அன்னையின் அருள் வாக்கு உள்ளூர உன்னி உணரத்தக்கது.*

*முனி - வியாசபகவான். முனிமொழி - பிரமசூத்திரம்.*

"ஏத்திடு சுருதிகள் இசைக்கும் மாண்பொருள்
மாத்திரைப் படாஎனு மாசில் காட்சியர்
பார்த்துணர் பான்மையாற் பலவ கைப்படச்
சூத்திர மானவும் சொற்று வைகினான்."

—கந். பாயிரம் 46

என்ற கச்சியப்பப் பெருமான் திருவாக்கும் இங்கே சிந்திக்கத்தக்கது.

"அவன் அவள் அது" என்று சொல்லிக் காணுகின்ற சொல்லும் பொருளுமான இந்தப் பிரபஞ்சம்,

"ஆதி பகவனாகிய முதலையுடையது."

எப்பொருள் எத்தன்மைத் தாயினும், யார் யார்வாய்க் கேட்பினும்,

அப்பொருளை அப்படியே கொள்ளாமலும், தள்ளாமலும், அப்பொருளை வைத்துக்கொண்டு, அப்பொருள் எங்கிருந்து வந்தது? எங்கே போய்ச் சேருவது? என்று விசாரம் செய்தல் வேண்டும். அங்ஙனம் விசாரித்து மெய்ப்பொருள் காணும் அறிவே, அறிவு என்று பாராட்டத்தக்கது.

கண்ட கேட்டவைகளை — நில்லாதவற்றை — நிலையின என்றுணரும் அறிவு, புல்லறிவு.

காணப்பட்ட இந்த உலகம் எங்கிருந்து வந்தது?

"இதன் தோற்றம் முதலியன எங்கிருந்து"?

என்று விசாரம் செய்தால் அந்த விசாரம் ஆதிபகவனாகிய முதலிலே சென்று முற்றுப்புள்ளி

அடையும். அந்த ஆதிபகவனே மெய்ப்பொருள். காணப்பட்ட இந்த உலகத்துக்கு முதல்.

முதல், இரண்டு வகைப்படும். ஒன்று வினை முதல்; மற்றது விதைமுதல்.

காணப்பட்ட இந்த உலகுக்கு மாயை விதை முதல் என்றும், ஆதிபகவன் வினைமுதல் என்றும் மகாஞானிகள் கண்டிருக்கின்றார்கள்; காணுதற்கு வழியும் வகுத்திருக்கின்றார்கள். அந்த வழியைப் பின்பற்றுகிறவர்கள் அவைகளை அறிகின்றார்கள்.

விதைமுதல் என்றால் வித்து. உலகமாகிய விருட்சத்துக்கு மாயை வித்து.

இந்த மாயை ஆகிய வித்துக்கும், உலகத்திலே நாம் காணுகின்ற விதைமுதல்களாகிய வித்துக்களுக்கும் வேறுபாடு உ.ண்டு.

நாம் காணுகின்ற வித்துக்களில் ஒரு முளை தோன்றி விரிந்து அழியும். தோன்றி விரிந்தது அவ்வித்தில் ஒடுங்காது.

மாயையாகிய வித்தில் உலகந் தோன்றும்; பின் அந்த மாயையாகியவித்திலேதானே ஒடுங்கும்.

இவை தம்முள் வேறுபாடு. "மாயை" என்ற சொல்லே ஒடுங்குதற்கும் விரிதற்கும் இடமானது என்ற பொருளுடையது.

ஆகவே, மாயை ஆகிய விதைமுதல் நாம் காணும் விதைமுதல்களோடு ஒருபுடைதான் ஒப்புமையுடையது.

மாயை ஒரு சடசத்தி; அது சிவசத்தியைப் பற்றி இருப்பது. சிவசத்தியைப் பற்றியிருக்கிற விசேஷத்திஞலேதான்,

உலகத்தைத் தோற்றி ஒடுக்கி இந்திரசாலம் செய்ய வல்லதாயிருக்கின்றது.

அளவான ஈர நிலத்திலே வித்தை வித்திஞல் அது பருவகாலத்தில் முளைகொள்ளுகின்றது. வித்து முளைகொள்வதற்கு ஈரநிலம் உபகாரமாயிருக்கிறது; அந்த உபகாரம் இல்லையேல் வித்து முளையாது.

❋

ஈரநிலம்போன்றது சிவசத்தி; வித்துப்போன்றது சடசத்தியாகிய மாயை. முளைபோன்றது உலகம்.

வித்து நிலத்தைப் பற்றியிருப்பதுபோலச் சட சத்தி சிவசத்தியைப் பற்றியிருக்கின்றது.

சடசத்திக்குச் சிவசத்தி தாரகமென்கின்றது சாத்திரம்.

இன்றைய விஞ்ஞானிகள் சடசத்தியை ஆராய முனைந்து நிற்கின்றூர்கள். பழைய வேத ரிஷிகள் சடசத்தியின் தாரகமான சிவசத்தியைக் காண முனைந்து நின்றூர்கள்.

இந்தச் சந்தர்ப்பத்திலே, சுப்பிரமணிய பாரதியார், தாம் மொழிபெயர்த்தியற்றிய,

வேதரிஷிகளின் கவிதை

என்ற நூலின் முகவுரையின் முகப்பு உரையை, இங்கே அநுவதிப்பது மிக்க பயனுடையதாயிருக்கும். அது வருமாறு :—

பாரதியார் தம் வசமிழந்து சொல்லுகின்றார்.

" ஸ்ரீகாசியில் ஹிந்து சர்வகலா சங்கத்துக்கு அத்திவாரக்கல் நாட்டியபோது, பல வித்துவான்கள் வந்து உபந்நியாசம் செய்தார்கள். இவற்றுள்ளே நவீன சாஸ்திர (ஸயன்ஸ்) பண்டிதர்களின் சிகாமணியாக விளங்கும் ஸ்ரீமான் ஜகதீச சந்திரவசு செய்த உபந்நியாசம் மிகவும் மாண்புடையது.

" லௌகிக சாஸ்திர ஆராய்ச்சிகளிலே மறுபடியும் பாரத தேசம் தலைமை வகிக்கும்படி செய்வது நம்முடைய கடமை."

என்பதை இவர் பலவகையில் விளக்கிய பின்பு தமது முடிவுரையிற் பின்வருமாறு சொல்லுகின்றார் :—

" ஹிந்து நாகரிகத்திற்குள்ளே ஒரு விசேஷ சத்தியிருக்கிறது. காலத்தின் அழிவுகளையெல்லாம் உலகத்திலே உள்ள பொருள்களனைத்தையும் சிதைவுபடுத்த வரும் மாறுதல்களையெல்லாம், இந்தச் சத்தியினாலே நமது நாகரிகம் எதிர்க்க வல்லதாயிற்று. எகிப்து தேசத்தில் நீலநதிக் கரையிலேயும், அஸ்ஸீரிய தேசத்திலும், பாபிலோனிலும், பல்லாயிர வருஷங்களுக்குமுன்னே, பெரிய பெரிய அறிவுப் பயிற்சிகள் தோன்றி வளர்ந்ததையும்,

மாறியதையும், மறைந்ததையும், நமது மகத்தான நாகரிகம் பார்த்துக்கொண்டிருந்தது. (அப்போது கூட நமது நாகரிகம் அளவிடமுடியாத பழைமை கொண்டதாய் விளங்கிற்று.) அந்த நாளிலே பாரத மாதா தனக்கு அழிவில்லை என்ற தீராத பக்தி யுடன் விளங்கினாள். இன்றும் யௌவனத்தோ டிருக்கின்றாள். இனி எதிர்காலத்திலும் அழியமாட் டோம் என்கிற தீராத பக்தியிலே உறுதிகொண்டு நிற்கிறாள்."

இங்ஙனம் நவீன சாஸ்திரக் கல்வியாகிய குன்றத்தின் மேலே நெருப்புத் தூணைப்போல ஒளி வீசி நிற்கும் ஸ்ரீமான் வசு கூறிய வார்த்தை கள் வெறுமே உபசாரமல்ல. நம்முடைய இடைக் காலத்து மடமைகளையெல்லாம் மஹிமைகள் என்று நினைத்து வீண்பெருமை கொள்வோரின் பேச்சை நாம் உதறிவிடுதல் நியாயம். ஆனால், வசு பண்டி தர் சொல்லியதை நாம் மதிப்புடன் ஏற்றுக்கொள் ளுதல் தகும்.

மரணமில்லாத இந்த ஹிந்து நாகரிகமாகிய கற்பக விருட்சத்துக்கு ஆதியிலே விதை ஊன்றிய வர்கள் வேதரிஷிகள். அவர்கள் எக்காலத்திலே— எத்தனை நூற்றாண்டுகளின் முன்னே—இருந்தார் கள் என்பதைக் கணக்கிட்டுச் சொல்ல நவீன ஆராய்ச்சி யாதொரு கருவியும் இல்லாதிருக்கிறது.

ஹிமவத்பர்வதம் எப்போது உண்டாயிற்று? யாருக்குத் தெரியும்? வேதரிஷிகள் எக்காலத்தில் வாழ்ந்தனர்? எப்படிச் சொல்வது?"

வேத ரிஷிகளுக்குச் சடசத்தியை ஆராய்வது மண்ணுங்கட்டி விளையாட்டு. ஒரு ரிஷியால் ஒரு குகைக்குள் இருந்தபடி இருந்து இமாசலத்தி லுள்ள மூலிகைகள் அத்தனையின் குணகுணங் களையுங் கூறிவிடமுடியும்.

அவ்வாறே வானத்தின் கோள்கள் நட்சத் திரங்களின் பலாபலன்களையுங் கூறிவிடுவர்.

காதி மகாராசாவாகிய விசுவாமித்திரரின் வில்வித்தைகள் அத்தனையையும், வசிட்ட ரிஷியின் முன்னிலையிற் கிடந்த ஒரு சிறு துரும்பு விழுங்கி விட்டது.

வேத ரிஷிகள் சடசத்தியாகிய மாயையின் திருவிளையாடல்களை நன்கு உணர்ந்திருந்தார்கள்.

அதனை ஆராய்வது அவர்களுக்குப் பெரிய காரியமன்று. அதற்கு ஆதாரமான சிவசத்தியை ஆராய்வதே பெரிய காரியம்; அரியகாரியம்.

அந்தச் சிவசத்தியே ஆதிபகவன். அது வினை முதல்; மாயை விதைமுதல்.

---

**பிரபஞ்ச விவகாரம் ஒன்றையும் முக்கியமென நாட்டஞ் செய்யாமல் எப்போதும் உன்மனம் ஈசுவரன் திருவடியையே முக்கியமெனப் பற்றி அபிமானிக்குமாயின் அப்போது ஈசுவரனது பாதுகாப்பு முழுவதும் உனக்குக் கிடைப்பதாகும்.**

— ஆன்மவிசாரம்

டாக்டர் உ. வே. சா. நூல் நிலையம்

# சமயம் 24

## கண் சூரியனொளியைச் சார்ந்துதான் உலகப் பொருள்களை அறியமுடியும்.

## சிவசக்தியைச் சாராது உண்மையைக் காணமுடியாது

*தாரகமான சிவசத்தி நிலம் போன்றது. சட சத்தியாகிய மாயை நிலத்தின்கண் வித்துப்போன்றது. தாரகம் — தாங்குவது; தரிப்பது.*

*வினையாகிய கர்மம் ஈரம்போன்றது. அவன், அவள், அது என்கின்ற உலகமுளை முளைத்துப் போக்குவரவு புரிகின்றது.*

*"அவன் அவள் அது எனும் அவை"*
*"ஆணையின்,"*
*"இருவினையின்,"*
*"போக்கு வரவு புரிய"*

*என்கின்றது சிவஞானபோதம்.*

"ஒருவனே டொருத்தி ஒன்றுஎன்று
உரைத்திடும் உலகம் எல்லாம்
வருமுறை வந்து நின்று
போவதும் ஆத லாலே."

—சித்தியார் 1ஆஞ் சூத். 1

"ஆணை" என்றது சிவசத்தியை. சிவசத்தி மாயை ஆகிய திரையிலே, உலகமாகிய முளையை முளைக்கச் செய்து, போக்குவரவு புரிவிக்கின்றாள். மலபந்தர்களாகிய ஆத்மாக்கள் இருவினைக்குத் தக்கவாறு அத்திரையிலே போக்குவரவு புரிகின்றார்கள்.

## உலகம் ஒரு சினிமாத் திரைக் காட்சி

மாயை ஆகிய சினிமாத் திரைக்குத் தாரகமான தலைவியும் ஆணையும் ஆகிய சிவசத்தி நித்திய சுமங்கலி. அவள் ஒரு சத்தனை இன்றியமையாதவள். சத்தன் குணி, சத்தி குணம். அவனின்றி அவள் இல்லை; அவளின்றி அவன் இல்லை. அவனை இன்றியமையாத அவளால் உலகந் தோன்றி நின்று அழிகின்றது.

"அவளால் வந்த ஆக்கம் இவ்வாக்கம் எல்லாம்"
—சித்தியார்

அவள் அநாதியேயாயினும் அவளுக்கு 'ஆதி' என்றும் பெயர். அடிக்கடி சிருட்டி ஆரம்பஞ் செய்பவள் அவள். அதனாலே அவள், அடிக்கடி ஆதி.

அவனுக்குப் பெயர் பகவன். அவன் என்றும் அநாதி. அவன் அங்கு இங்கு அசைவதில்லை. பெரிய முதலாளி. அவன் இருந்தபடி இருப்பான். அவன் அப்படியிருக்க, அவளால் உலகம் போக்குவரவு புரிகின்றது.

சூரியன் நின்றபடி நிற்க இந்த உலகமும் நாள் கோள்களும் சுழன்று திரிகின்றனவே. சூரியன் சத்தன். அவன் கிரணங்கள் சத்தி.

அவன் இருந்தபடி சும்மா இருந்தாலும், அவனில்லையேல், அவளும் இல்லை; உலகும் இல்லை. அணுவும் அசையாது.

காந்தம் இருந்தபடியிருக்க இரும்பு அசைகின்றது. காந்தத்தின் இருப்பு இருந்தபடி என்னே? அதன் சத்திதான் எப்படிப்பட்டது? அதுகூட விகாரப்படாமல் இரும்பை அசைக்கின்றதே.

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலா னெங்கள் பிரான்."

— திருவருட்பயன் 1ஆவது 2

"சிவன்அரு உருவும் அல்லன்
சித்தினே டசித்தும் அல்லன்
பவமுதற் றொழில்கள் ஒன்றும்
பண்ணிடு வானும் அல்லன்
தவமுதல் யோக போகந்
தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்து மொன்றும்
இயைந்திடா இயல்பி னனே."

—சித்தியார் 1ஆஞ் சூத் 70

ஆதிபகவன் பெரிய முதல்; வினை முதல்; உலகத்துக்குக் கருத்தா.

உலகமாகிய முளை முளைத்தற்கு வித்தாகிய மாயையும் முதலே. அது சிறிய முதல். சிறிய முதலாகிய மாயைக்குச் சிவசத்தி தாரகம்; சிவசத்திக்குச் சிவம் தாரகம்.

மாயைக்குச் சிவசத்தி தாரகமாயினும் மாயையின் வேருனது.

டாக்டர் உ. வே.
1162
(2411)

சிவம் சத்திக்குத் தாரகமாயினும் அதனின் வேறன்று. இவை தம்முள் வேற்றுமை.

இந்த உலகமுளைக்குந் தாரகம் மாயை; மாயைக்குத் தாரகம் சிவசத்தி; அதற்குத் தாரகம் சிவம்; அது பெரிய முதல். மாயை சின்ன முதல். சிவசத்தியாகிய முதலைப் பெரிய முதலோடு சேர்த்துக்கொள்ளலாம்.

பெரிய முதல், சின்ன முதல் இரண்டும் உலகத்துக்கு இன்றியமையாதன. இரண்டு முதல்களிலும் எந்த முதல் இல்லையாயினும் உலகம் இல்லை.

வள்ளுவநாயனார்,

"ஆதி பகவன் முதற்றே உலகு"

என்று வித்தாகிய சிறிய முதலைப் பற்றிப் பேசாது, பெரிய முதலாகிய வினை முதலின் இன்றியமையாமையே பேசியிருக்கின்றார்.

"நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே"

என்று சங்கப் புலவர்களும், "வாலிழை" ஆகிய ஆதியை இன்றியமையாத,

"ஒருவன்" ஆகிய ஆதிபகவனையே சிந்தனை செய்திருக்கின்றார்கள்.

சிறிய முதலாகிய—வித்தாயுள்ள—மாயை என்கிற சடசத்தியைப் பற்றிப் பேசவில்லை. இது பெரிதும் சிந்தனைக்குரியது.

சடசத்தி சத்தேயாயினும் அதில் தோன்றி நின்று அழிகின்ற உலகம் அசத்து.

"மண்டனில் வாழ்வும் வானத்
தரசயன் மாலார் வாழ்வும்
எண்டரு பூத பேத
யோனிகள் யாவும் எல்லாம்
கண்டஇந் திரமா சாலங்
கனுக்கமு திரதங் காட்டி
உண்டுபோ லின்ரும் பண்பின்
உலகினை அசத்தும் என்பர்."

—சித்தியார் 6ஆஞ் சூத். 3

சார்ந்ததன் வண்ணமான ஆத்மா, அசத்தாகிய உலகத்தைச் சார்ந்து நின்று, எத்தனை விஞ்ஞான கூடங்கள் அமைத்தபோதும், அசத்தாகிய உலகத்துக்குமேல் ஆராயமாட்டாது. அசத்தாகிய உலகத்துக்கு மூலமும் சிறிய முதலுமான மாயையையே அறியமாட்டாது. ஏனென்ருல் மாயை அசத்து அன்று; சத்து.

சத்து என்றும் உள்ளது. அசத்துத் தோன்றி நின்றழிவது.

சார்ந்ததன் வண்ணமாகிற ஆத்மா, அசத்தாகிய உலகத்துள் நின்று, அதன் மூலமும் சத்துமான—சடசத்தியான—மாயையை அறிவதெப்படி?

ஆகவே, ஆத்மா சத்தைச் சார்ந்தே சத்தை அறிய வேண்டும். சூரியனைச் சார்ந்தே சூரியனை அறியலாம். இருளிலிருந்து இருளையே அறியலாம்.

அப்படியானல், மாயையாகிய சத்தைச் சார்ந்து ஆத்மா மாயையை அறியலாமெனின் அதில் மற்ருெரு சங்கடமிருக்கிறது.

கண் சூரியனெளியைச் சார்ந்துதான் உலகப் பொருள்களையும் அறிதல்முடியும்.

இரவில் விளக்கொளியைக் கண்டபிறகுதான், கண் புத்தக எழுத்தைப் பார்த்தல் முடியும். விளக்கின்றி இரவிற் கண்ணுக்கு மேலே புத்தகத்தை நன்ருக விரித்து ஒற்றிஞலும் அக்கண் எழுத்தைக் காணது.

அவ்வாறே ஆத்மாவுஞ் சிற்சத்தியாகிய சிவ சத்தி என்கிற சத்தைச் சார்ந்துதான்,

சடசத்தியாகிய மாயை என்கின்ற சத்தைக் காணல் முடியும்.

சிவசத்தியைச் சாராது, சடசத்தியின் மூல உண்மையைக் காணல்முடியாது.

சிவசத்தியே அறிவைப் பிரகாசிக்கச் செய்வது. அறிவு பிரகாசியாமற் சடசத்தியின் மூல உண்மையைக் காண்பதெப்படி?

மெய்ச்சார்பை அறிய முயலாத விஞ்ஞானிகள்,

பொய்ச்சார்பில் நின்று கவலையையே பெருக்குவது இன்றைய விஞ்ஞான உலகிற் கண்கூடு.

''தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.'' –குறள் 7

இன்றைய விஞ்ஞானிகள் உலகத்தில் மனக் கவலையையே பெருக்கிக்கொண்டிருக்கின்றார்கள். அமெரிக்காவுக்குள்ள மனக்கவலை, கதிர்காமக் காட்டுக்குள் வசிக்கும் வேடர்களுக்கில்லையே.

இது நிற்க,

தாள் – சிவசத்தி. தனக்குவமையில்லாதான் சிவம். சிவமும் சத்தியும் ஒன்றே.

எனவே,

ஆதிபகவன் ஆகிய வினைமுதலே ஆராயற் பாலது. மீமாம்சையும் தனது பூர்வபாகத்தில் வினையை ஆராய்ந்து, அதனால் மாத்திரம் கவலை போகாது என்று கண்டு உத்தரபாகத் தொடக் கத்தில், “இனி, பிரமத்தை அறிய ஆசை” என்று ஆரம்பிக்கின்றது.

பிரமம் ஆதி பகவன்.

---

தீ முதலிய சடங்களாலாதல், விலங்கு முதலிய சிற் றறிவுயிர்களாலாதல் அல்லது மாநுடர்களாலாதல் நமக்கு எவ்வெத் தீங்கு விளையினும் நாம் அவற்றையெல்லாம் நமக்குக் கன்மபரிகாரம் என்று மகிழ்ந்து சகித்தல் வேண்டும்.

*　　　*　　　*

ஒருவன் தான் குற்றமற்றவனாயிருக்க வேண்டுமாயின், தான் பிறர்குற்றம் பொறுப்பதொன்றையும் விரதமாக அநுட்டிக்கவேண்டியது. பிறர்குற்றம் பொறுத்து, அதற் காக அவர்கள்மேல் இரக்கமுடையவன் எவனோ அவன் றான் குற்றமற்றவன். — ஆன்மவிசாரம்

## சமயம் 25

அறிவைப் பண்படுத்தாதபோது,
மனம் அதனைப் பின்னுக்கு இழுக்கும்.
அறிவைத் தூய்மை செய்ய மனமுந் தூய்மையாகும்.

### சுவதர்மம் : சுதர்மம்

*சுவதர்மம் சுதர்மம் எனவும் வழங்கும். தனக்குரிய தர்மம் என்பது பொருள்.*

*சுதர்மமாவது தன் கர்மம் இருந்த படியை அறிதல்.*

*கர்மம் இருவினையாய்ப் புண்ணிய பாவங்களாய்க் கிடக்கின்றது.*

*கர்மத்தைப் பரிபக்குவம் செய்வதே சிவசத்தியின் கருணை. சிவசத்தியின் கருணைவழி நில்லாத ஆத்மாக்கள், குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளுகின்றன. விருப்பு வெறுப்புக்களாகிய சேற்றுட் புதைந்து மேலும் வினைகளை ஈட்டிக்கொள்ளுகின்றன.*

*சிவசத்தியின் கருணை வழியைக் காட்டுவன, அஃதாவது சுதர்மமாகிய கர்மத்தின் பரிபக்குவத்தை அறிவிப்பன,*

வருணூசிரம தர்மங்கள் ; ஸ்மிருதிகள் ; யாகாதி கிரியைகள். ஆசிரமம்—நிலை. பிரமசரியம் கிருகஸ்தம் வானப்பிரஸ்தம் சந்நியாசம் என நான்கு நிலைகள் சாத்திரங்களிற் பேசப்படுகின்றன.

ஒவ்வொருவரும் தத்தம் வருணத்துக்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கமாகிய கர்மத்தை அறிந்து அநுட்டித்தல் வேண்டும். அது செய்யாதவழி எடுத்த பிறப்பு வீண். மனிதன் இரண்டுகால் விலங்காகிருன். "விலங்கொடு மக்கள் அனையர்" என்பது தேவர் வாக்கு.

சர்வகலாசாலைகள் உட்பட ஊர்தோறும் எடுக்கப்படும் கல்விச்சாலைகள், ஒருவனின் சுவதர்மத்தைக் காட்டாதபோது அவையனைத்தும் ஆரவாரம் பண்ணுகின்ற வெறுஞ் சினிமாக் கொட்டகைகளே; வயிறு வளர்க்கைக்கு ஏற்பட்ட வியாபார ஸ்தலங்களே, என்றுங் கூறிவிடலாம். இதிற் சற்றேனும் சந்தேகமில்லை. உண்டிருந்து கூத்தாடுவது மாத்திரம் சுவதர்மம் ஆகாது. ஆத்மா நித்தியமானது; சத்து. மறுமையும் உண்டு.

※

ஸ்ரீராமன் சக்கரவர்த்தி திருமகன்.

முனிவர்களிடம் தனக்குரிய ஆச்சிரமதர்மத்தை விசாரம் செய்கின்ருன். ஒருநாள் முனிவர்களைக் கொன்று குவிக்கும் மகா பாதக சூளாமணியாகிய தாடகை எதிர்ப்படுகின்ருள். ஸ்ரீராமனின் சுதர்மத்தை நன்கு அறிந்தவரும், அந்தணரும் ஆன விசுவாமித்திர முனிவர், வசிட்டரிடங் கற்ற வில்

வித்தையைப் பாதகியான தாடகைமீது பயன் படுத்தும்படி இராமனை ஏவுகின்றார்.

இராமன் ஒருகணம் தரிக்கின்றான்.

எப்படியும்,

"பெண்ணென மனத்திடை பெருந்தகை" நினைக்கின்றான்.

தனக்கு அது சுதர்மமா என்று இராமன் சற்றே நினைக்கின்றான். அர்ச்சுனன்போல இராமன் வில்லைக் கீழே போடவில்லை. ஆனால், சீதா கல்யாணத்திற் போல வில்லை விரைந்து வளைக்கவும் இல்லை. அம்பைத் தொடுப்பதிலே சற்றே தாமதஞ் செய்து விட்டான். விசுவாமித்திரர் திரும்பிப் பார்த்தார். அவ்வளவுதான். அந்தப் பார்வை ஸ்ரீராமனுக்குக் கீதாபோதம் ஆயிற்று.

இராமபாணம் தாடகையின் உயிரையே ஊடுருவியது. சுதர்மத்தை அடுத்த கணத்தில் இராமன் உணர்ந்துவிட்டான்; ஆயினும், அவனுடைய மனசிலே, மாசாகிய ஒரு கிலேசம் உண்டாய்விட்டது. முந்திய கணத்திலே தனது சுதர்மத்தை உணராமை காரணமாக அந்தக் கிலேசம் உண்டாகவில்லை; வேதமறிந்த அந்தணரான முனிவர் சொல்லைப் பேணாமை காரணமாக அந்தக் கிலேசம் உண்டானது. அதனால், அந்த அந்தணர் பெருமானைப் பல முறை வணங்கி இராமன் கழுவாய் நாடி நின்றான். முனிவர் மன்னித்து அவனை ஆசீர்வதிக்கின்றார். ஸ்ரீராமன் மனமாசு நீங்கிப் பிரகாசிக்கின்றான்.

"மனத்துக்கண் மாசு இலன்"
ஆகுக என்பது தேவர் கட்டளை.

புறக்கரண உட்கரணங்களைச் சுத்தி செய்வதே சுதர்மம். உட்கரணங்களுள் மோசமானதும், மிக விசேஷமானதும் மனம். மனம் சுத்தமாக எல்லாக் கரணங்களும் சுத்தமாகும்.

மனசைச் சுத்தஞ்செய்யும் கர்மங்களாகிய கிரியைகளையே ஸ்மிருதிகளும் பூர்வமீமாஞ்சையும் அவற்றின் வழிவந்த நூல்களும் விதித்தன. மனம் மாயை பெற்ற பிள்ளை; மாயேயம். அறிவு ஆத்ம குணம்; ஆத்ம சிற்சத்தி. அறிவுக்கு, மனம் உடன்பிறவாத சகோதரம். அறிவு சித்து; மனம் சடம்.

மனம் வாய்க்குமிட மெல்லாந் தன் பிறவிக் குணத்தைக் காட்டும் எந்தச் சித்துப் பொருளையும் சித்தாகப் பாராது. சித்தையும் வெறும் சடம் போலவே பார்க்கும்.

வெள்ளையன் ஆபிரிக்கனை மரந்தடியாகவே பார்ப்பான்.

"மாயையென் றொருத்தி தன்பால்
மனம்எனும் மைந்தன் தோன்றித்
தூயநல் லறிவன் தன்னைத்
தோற்றமின் றாக்கி வைத்தான்" —பாரதம்

என்பது கீதாபோதம். "அர்ச்சுனா, உன் அறிவை மனசு மறைக்கின்றது" என்கின்றான் கிருஷ்ண மூர்த்தி.

அறிவு கண்ணாடி விளக்குட் சுடர்போன்றது. மனம் கண்ணாடிபோன்றது.

மனசாகிய கண்ணாடியைக் கழுவித் தூய்மை செய்தால், அது அறிவுச் சுடரை மேலும் பிரகாசிக் கச் செய்யும்.

மனசைத் தூய்மை செய்யாதபோது, அழுக்குப் படிந்த கண்ணாடிபோல், அது அறிவுச் சுடரை அப் பிரகாசஞ் செய்து புகைப்படலத்தால் மூடி மங்க வைத்துவிடும்.

மனம் ஒரு பேய். அதற்கு நல்ல பலி பூசை செய்தால் பெரிய உதவி செய்யும்.

பூசை செய்வதில் சற்றே தவறினல், நன்றி கெட்ட மனப்பேய் பூசாரியைத் தீர்த்துக்கட்டிவிடும்.

மனம் கண்ணுக்கிடும் கண்ணாடிபோன்றது. அதைக் கொல்லல்கூடாது. தூய்மை செய்து பேணல் வேண்டும்.

மனம் நன்மைக்கே உபகரிக்கப்பட்டது. தூய்மை செய்யாதவழித் தீமை செய்யும்.

பழகாத குதிரையை வண்டி பின்னுக்கு இழுக்கும்.

அறிவைப் பண்படுத்தாதபோது, மனம் அத னைப் பின்னுக்கு இழுக்கும்.

அறிவைத் தூய்மை செய்ய மனமுந் தூய்மை யாகும்.

"சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு" —குறள் 422.

அறிவைத் தூய்மை செய்ய மனந் தூய்மையாகும். மனந் தூய்மையாக அறிவு மேலுந் தூய்மையடையும்.

மனந் தூய்மை அடைதற்கே கர்மங்கள்—சுவதர்மங்கள்—விதிக்கப்பட்டன.

சுவதர்மங்களாகிய கர்மங்களைப் பூர்வகாண்டத்தில் ஆராய்ந்த மீமாஞ்சை, உத்தரகாண்டத் தொடக்கத்தில்,

"அத2" என்று ஆரம்பிக்கின்றது. இரண்டாவது "த" வுடன்கூடிய, "அத2" என்ற வார்த்தைக்கு,

"இனி" என்று பொருள். "இனி" என்ருல் பின்னர் என்றபடி.

சுவதர்மங்களாகிய கர்மங்களை ஆராய்ந்து, அவற்றை வழிசெய்து,

அதனுல்,

அந்தக் கரணங்கள்—விசேடமாக மனம்—தூய்மை எய்திய பிறகு,

எப்பொருள் எத்தன்மைத்தாயினும், யார் யார்வாய்க் கேட்பினும், மெய்ப்பொருளையே அறிய ஆசை உண்டாகும்.

"இனி, ஆதலின் பிரமத்தை அறிய ஆசை" என்பது, பிரமசூத்திரத்தில் முதற்சூத்திரம்.

"நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப"
என்பது திருமுருகாற்றுப்படை.

தூய நெஞ்சத்தில் இன்னசை வாய்க்கும். இன்னசை, பிரமத்தை அறியும் விருப்பம்.

இந்த ஆசை "அறத்திறனல் விளைவது" என்பது சிவப்பிரகாசம்.

அறமாவது,

"மனத்துக்கண் மாசிலனுதல்".

அறத்திறனல் விளைகின்ற ஆசைக்குத்தான்,

**ஞானம்**

என்று பெயர்.

"கிரியைஎன மருவுமவை யாவும் ஞானம்
கிடைத்தற்கு நிமித்தம்,"... . ...

—சிவப்பிரகாசம்: பாயிரம் 10

"கிரியை என மருவும் அவை"
மனமாசு போக்குதற்குரிய கர்மங்கள்.

---

நம்மினும் நமக்கினியவன் ஈசுவரன்; அவன் எல்லாச் சீவர்களுக்கும் சகாயனுயிருக்கிறுன். இந்த உண்மையை ஒப்புக்கொள்வோன், பிற சீவரால் தனக்கு வரும் இடையூறுகளுக்கு அஞ்சுவது நம்பிக்கைக்கு விரோதம்.

* * *

உனக்குத் துன்பங்கள் வரும்போது அவற்றை ஊட்டுகின்றுன் ஈசுவரனே என்பதை நன்கு தெளிந்து திடம் பெறுவாயாயின், அது ஈசுவரனுக்கு உன்மேல் மிக்க பிரீதியைத் தரும். — ஆன்மவிசாரம்

# சமயம் 26

## வியாசரும் சைமினியும் தம்முள் மாறுபட்டு நூல்கள் செய்தாரென்பது, அகத்தியரோடு மாறுபட்டுத் தொல்காப்பியர் நூல் செய்தார் என்பதனோடு ஒத்த மரபு பிறழ்ந்த கதையேயாம்.

## பூர்வ மீமாஞ்சை உத்தர மீமாஞ்சை

"வேதத்துக்கு உபாங்கமாகிய நூல்கள் எவை?

*புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதி என்னும் நான்குமாம்.*"

"*மீமாஞ்சையாவது யாது?*

*வேதப்பொருளினுடைய தாற்பரியத்தை அறிதற்கு அனுகூலமாகிய நியாயங்களை ஆராய்ச்சி செய்து அறிவிப்பது. அது பூர்வ மீமாஞ்சை உத்தர மீமாஞ்சை என இரண்டு வகைப்படும். பூர்வ மீமாஞ்சையின் பெயர் கருமமீமாஞ்சை. உத்தர மீமாஞ்சையின் பெயர் பிரமமீமாஞ்சை, வேதாந்த சூத்திரம்.*"

--இரண்டாஞ் சைவ வினாவிடை

*பிரம மீமாஞ்சை ஆகிய வேதாந்த சூத்திரத்தை அருளியவர் வியாசபகவான். இவர் விஷ்ணு மூர்த்தியின் அம்சமாய் அவதரித்துத், திருவருளினாலே எல்லையில்லாத வேதமாகிய சமுத்திரத்தைக்*

கரைகண்டு அதனை நான்காக வகுத்தவர். அன்றிக் கல்லாலின் கீழ் மௌனோபதேசம் பெற்ற நான்கு முனிவருள் முதற்கண் வைத்துப் பேசும் சனற்குமார முனிவரை வழிபட்டு, அம் முனிவரிடம் பதினெண் புராணங்களையும் வரன் முறையாகக் கேட்டவர்.

இப்படிப்பட்ட வியாசமகா முனிவர், பயிலர், வைசம்பாயனர், சைமினி, சுமந்து என்கின்ற நான்கு முனிவர்களுக்கு நான்கு வேதங்களையும் தாம் இயற்றிய பிரம மீமாஞ்சை ஆகிய பிரம சூத்திரத்தையும் கற்பித்து, வேத உண்மைகளைப் பக்குவர்களுக்கு உபதேசிக்கும்படி ஆணையுந் தந்தருளினார்.

நால்வர் மாணவர்களுள் சைமினி முனிவர், தமது குருவாகிய வியாசபகவான் வேதத்தின் ஞான காண்டத்தை ஆராய்ந்து,

வேதத்தின் கர்மகாண்டத்தை ஆராய்ந்து அதன் வழிநின்று மனந்தூயராயினார்க்குப் பயன் படும் முறையில்,

பிரம சூத்திரத்தை "அத2" (இனி) என்று ஆரம்பிக்கின்றமையால், அந்த "அத2" என்கின்ற அர்த்த புஷ்டியுள்ள வார்த்தையை விரித்து விளக்குவார்போன்று,

ஞானகாண்டப் பொருளாகிய பிரம மீமாஞ்சை மேலும் எளிதிற் பயன்படுதற்குபகாரமாக,

வேதத்தின் கர்மகாண்டத்தை ஆராய்ந்து, மனந்தூய்மை எளிதிற் கைவரும் பொருட்டுப்,

## பூர்வமீமாஞ்சை

செய்வார் ஆயினர்.

வியாசர் அருளிய பிரம மீமாஞ்சைக்கு உத்தர மீமாஞ்சை என்றும் பெயர். அப் பெயர் சைமினி செய்த பூர்வ மீமாஞ்சையை நோக்கி வந்த பெயர். சைமினியும் பிரம மீமாஞ்சையாகிய உத்தரத்தை நோக்கியே தமது கர்ம மீமாஞ்சைக்குப் பூர்வ மீமாஞ்சை என்ற பெயரை வைத்துக்கொண்டார்.

பூர்வம் முன்.

உத்தரம் பின்.

வியாசர் சைமினிக்கு முன் மீமாஞ்சை செய்தாராயினும் வேதத்தின் உத்தரமாகிய ஞானகாண்டத்தை ஆராய்ந்தமையின், அவர் அருளிய மீமாஞ்சை உத்தர மீமாஞ்சை ஆயிற்று.

அவ்வாறே சைமினி தமது மீமாஞ்சையை,

வியாசர் அருளிய மீமாஞ்சையை, அவரிடம் படித்தபிறகு செய்தார் ஆயினும், வேதத்தின் பூர்வமாகிய கர்மத்தை ஆராய்ந்தமையின், பூர்வ மீமாஞ்சை ஆயிற்று.

பூர்வம் உத்தரம் ஆகிய இரு மீமாஞ்சைகளும் ஒன்று சேர்ந்த ஒரு முழு நூலேயாம்.

வேத புருஷனுக்குப் பூர்வம் உத்தரம் ஆகிய இரு மீமாஞ்சைகளும் இரு கண்கள்.

சைமினி கர்மமாகிய கிரியையை ஆராய்ந்தார். வியாசர் கிரியையால் விளையும் ஞானத்தை ஆராய்ந்தார்.

> "கிரியை எனமருவும் அவையாவும் ஞானம்
> கிடைத்தற்கு நிமித்தம் ........' —சிவப்பிரகாசம்

சைமினி பூர்வ மீமாஞ்சையைப் பன்னிரண்டு அத்தியாயங்களாக வகுத்து, கர்மங்களையும் அவற்றைச் செய்யும் முறைகளையும் வற்புறுத்தியிருக்கின்றார். அவர் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட பொருள் கர்மம்; கடவுள் அன்று. கடவுளைப்பற்றிப் பேசுதற்குச் சைமினிக்குச் சந்தர்ப்பம் இல்லை. கர்மத்தால் மனந் தூய்மை எய்திய வழிப் பேசப்படும் விஷயம் கடவுள். அவ்விஷயம் முன்னமே வியாசபகவானால் ஆராயப்பட்டுச் சைமினிக்கும் போதிக்கப்பட்டது. அவ்விஷயத்தில் சைமினி தலையிடவில்லை. அதனாலே, சைமினி முனிவர்க்குக் கடவுள் என்று ஒரு பொருள் இல்லை என்பது கருத்தன்று. பூர்வ மீமாஞ்சையில், "இதனை இவ்வாறு செய்க" என்கின்ற வேத வாக்கியங்களே பிரதானம். "ஒரு கடவுள் உண்டு" என்பது போன்ற வாக்கியங்கள், விதி வாக்கியங்களுக்கு உபகாரப்படும் அளவிற் கொள்ளப்படுபவைகள். "கடவுள் உண்டு" போன்ற வாக்கியங்களுக்குப் பிரதானங் கொடுக்கப் பூர்வ மீமாஞ்சையில் சந்தர்ப்பம் இல்லாமையால், சைமினி கடவுளில்லை யென்று கருத்துள்ளவர் என்று வாதிப்பது பொருத்தம் ஆகாது.

சைமினி முனிவர் செய்த பூர்வ மீமாஞ்சைக்குச் சபரமுனிவர் என்பவர் வியாக்கியானஞ் செய்தார். பட்டாச்சாரியன் என்பாளுெருவன், சபரமுனிவரின் வியாக்கியானத்தைக் கொள்ளாது பூர்வ மீமாஞ்சைக்குத் தாளுெரு வியாக்கியானஞ் செய்தான். பிறகு பட்டாச்சாரியனின் மாணவன் பிரபாகரன் என்பவன், பட்டாச்சாரியனின் வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்ளாது, அதனேடு சிறிது மாறுபட்டுத் தாளுெரு வியாக்கியானஞ் செய்தான்.

சபர முனிக்குப் பிறகு, பட்டனும் பிரபாகரனும் பூர்வ மீமாஞ்சைக்குச் செய்த இரு வேறு வியாக்கியானத்திஞல், கடவுளை மறுக்கும் இருவேறு மதங்கள் உண்டாயின. ஒன்று பட்டன் மதம். மற்றது பிரபாகரன் மதம். பட்டனும் பிரபாகரனும் தத்தம் மதங்களை நிறுவுதற்குப் பூர்வமீமாஞ்சையைப் பற்றிக்கொண்டார்கள். ஒருவரோடொருவர் மாறுபடுகின்ற இருவர் கருத்தைப் பூர்வ மீமாஞ்சை தருவதெப்படி? இந்த இருவர் கருத்தையும் விடுத்து வேருகப் பூர்வமீமாஞ்சை ஆராயப்படல் வேண்டும். பிரம மீமாஞ்சையாகிய உத்தர மீமாஞ்சைக்கு உபகாரப்படுமுறையில் ஆராய்ந்து உரை காணல்வேண்டும்.

சிவஞான சித்தியார் பரபக்கத்தில் பட்டாச்சாரியன் மதம் பிரபாகரன் மதம் என இரு மதங்கள் எடுத்துப் பேசி மறுக்கப்படுகின்றன. இவ்விருவரும் பூர்வ மீமாஞ்சையின் வியாக்கியானகாரர். சித்தியாரில் பூர்வ மீமாஞ்சையின் வியாக்

கியான மதங்கள் மறுக்கப்பட்டனவேயன்றி, நூல் மதமாகிய சைமினி மதம் மறுக்கப்படவில்லை.

"அருந்தவனுஞ் சைமினிபண்
டாரணநூல் ஆய்ந்தானுய்த்
திருந்தும்உல கினிற்கொண்டு
செப்பியநூல் திறமதனைப்
பரிந்துபிர பாகரன்பட்
டாசானில் வேருகிப்
புரிந்துஉரைசெய் நெறிஅதனைப்
புவனியிசைப் புகன்றிடுவாம்."

— சித்தி. பரபக். பிரபாகரன்மதம் 1.

※

"........... விண்ணில் ஏறச்
சேதமாங் கன்மஞ் செய்யச்
சைமினி செப்பு நூல்"

-- சித்தி : பரபக் : பட்டன்மதம் 1.

என்ற பரபக்கச் செய்யுள்களால்,

நூலாசிரியராகிய சைமினி மதம் வேறு; உரையாசிரியர்களாகிய பட்டன் மதம், பிரபாகரன் மதம் வேறு என்பது அறியத்தத்கது. இன்னும்,

"அருந்தவனுஞ் சைமினி"

என்று சைமினி முனிவருக்கு அருணந்தி சிவாசாரியர் கொடுத்த விசேடணமுஞ் சிந்திக்கற்பாலது.

இவ்வாறே உத்தர மீமாஞ்சை செய்த வியாச பகவான் பேரால், வியாசமதம் என்று ஒரு மதம் சித்தியார் பரபக்கத்தில் மறுக்கப்படவில்லை. வியாச பகவான் அருளிய உத்தர மீமாஞ்சையிற் சுமத்திய உரைமதங்களே மறுக்கப்படுகின்றன.

சத்தப்பிரமவாதி மதம் மாயாவதி மதம் என்பன உரைமதங்களேயன்றி, வேதத்தின் உபாங்கமான நூல்மதங்களே அல்ல.

பிற்காலத்தில் உரைமதங்களை நூல்மதங்கள் என்று கொண்டு, வியாசபகவானும் அவர் மாணவரான சைமினியும் தம்முள் மாறுபாடான நூல்கள் செய்தார்களென்பது, எவ்வாற்றானும் பொருந்தாது. வியாசரும் சைமினியும் தம்முள் மாறுபட்டு நூல்கள் செய்தாரென்பது அகத்தியரோடு மாறுபட்டுத் தொல்காப்பியர் நூல் செய்தார் என்பதனோடொத்த மரபு பிறழ்ந்த கதையேயாம்.

மேலைத்தேசக் கண்கொண்டு இந்திய தத்துவ சாத்திரம் வகுக்கும் பிரபலஸ்தர்கள், உரைமதங்களை நூல்மதங்கள் என்று நம்பி, உத்தரமீமாஞ்சையும் பூர்வமீமாஞ்சையும் தம்முள் வேறுபட்ட இந்திய தத்துவ சாத்திரங்கள் என்று புத்தகம் வெளியிடுவது நன்றன்று.

உரைமதங்கள் தம்முள் மாறுபாடானவை என்பதே பொருத்தம்.

வியாசர் அருளிய உத்தரமீமாஞ்சையாகிய வேதாந்த சூத்திரத்துக் கெழுந்த ஏகாத்மவாத உரை ஒன்று, பிரமம் ஒன்றே உள்பொருள்; மற்றவை வெறுந் தோற்றம் என்கின்றது.

அவ்வாறே பூர்வமீமாஞ்சைக் கெழுந்த உரைகள், பிரமம் என்று ஒரு பண்டம் இல்லை;

மற்றவைகளே உண்மையான பொருள்கள் என்கின்றன.

மீமாம்சைக் கெழுந்த உரைகள் மாறுபட்ட அண்ணன் தம்பிகள்.

"வியாக்ர பாத முனிவர், பதஞ்சலி முனிவர், உபமன்னியு முனிவர், திருவுடை அந்தணர்கள், வியாச முனிவர், சுக முனிவர், சௌனக முனிவர், சைமினிமுனிவர், சூதமுனிவர் முதலாயினோர் எண்ணிறந்தோர்கள், சிதம்பரத்திலே நியமமாகச் சிவகங்கையிலே ஸ்நானஞ் செய்து, நடேசப் பெருமானுடைய ஆனந்த நிருத்தத்தைத் தரிசித்து வணங்கித் துதித்துச் சிவானந்தப் பெருவாழ்வு அடைந்தார்கள். உபமன்னியு முனிவர் கிருஷ்ணனுக்குச் சிவதீக்ஷை செய்து சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொடுத்த சைவாசாரியர். சைமினி முனிவர் நடேசப்பெருமானை வேதபாதஸ்தவத்தினாலே துதித்தவர். வேதபாதஸ்தவமாவது முதன் மூன்று பாதமும் தமது வாக்காகவும் நான்காம் பாதம் வேதமாகவுஞ் செய்யப்பட்ட தோத்திரம். (ஸ்தவம் — தோத்திரம்)"

— சிதம்பர மான்மியம்.

வேதபாதஸ்தவத்தினாலே ஸ்ரீமந் நடராச மூர்த்தியைத் துதிசெய்த, சைமினி பகவான்தாமா கடவுள் இல்லை என்று பூர்வமீமாஞ்சை செய்பவர்!!

## சமயம் 27

**இந்தஉலகத்தைத் தானே தோற்றியதென்றுஞ்சொல்லலாம் ; மற்றொரு பொருள் தோற்றுவித்ததென்றுஞ் சொல்லலாம்.**

### ஒரு பதிக்குப் பலவழிகள் உளவானாற் போல......

*(கர்மகாண்டத்தினாலே மனந் தூய்மை எய்திய) 'பின்னர், பிரமத்தை அறிய ஆசை' என்று தொடங்குகின்ற வேதாந்த சூத்திரம்,*

*இரண்டாவது சூத்திரத்தில்,*

**"எங்கிருந்து இதன் தோற்றம் முதலியன"**

*என்று,*

*சுட்டியுணரப்படும் உலகத்தை வைத்துக் கொண்டு, அதன் தோற்றம் நிலை இறுதி விசாரிக் கும் முகத்தால்,*

*பிரம விசாரம்*

*ஆரம்பிக்கின்றது.*

*காணப்பட்ட இந்த உலகத்தைப் பொய்யான வெறுந் தோற்றம் என்றோ, மெய்யான பண்டம் என்றோ அது சொல்லவில்லை. நித்திய சத்திய மான மெய்ப்பொருளை அறிதற்குக் காணப்பட்ட இந்த உலகத்தைச் சாதனமாகக்கொண்டது வேதாந்த சூத்திரம்.*

"இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற
ஆறு"
—திருவாசகம்

இவ்வாறே,

சிவாகம சித்தாந்த சூத்திரமான, சிவஞான போதமும்,

"அவன்அவள் அதுஎனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ..... ........"
—சிவஞானபோதம் பிரமாணவியல் 1

என்று, சுட்டிக் காணப்பட்ட உலகத்திலிருந்து பிரம விசாரந் தொடங்குகின்றது.

"தோற்றிய திதியே"

என்பது அர்த்தபுஷ்டியுள்ள ஒரு தொடர்.

தோன்று — தோற்று — தோற்றுவி.

இந்த மூன்று வார்த்தைகளில் நடுவண் நின்ற "தோற்று" என்ற வார்த்தை, முதல் இறுதி வார்த்தைகளின் பொருளைத்தந்து, தன் வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாயதோர் வினைமுதனிலை.

"தோற்று" என்பது, நீ தோற்று அஃதாவது நீ தோன்று, என்ற பொருளையும், நீ மற்றொன்றைத் தோன்றச் செய் அஃதாவது மற்றொன்றைத் தோற்றுவி என்ற பொருளையுந் தரும். ஒளி என்ற வினைமுதனிலைபோல. ஒளி என்பது,

நீ ஒளி; புத்தகத்தை ஒளி என இரு பொருள் தந்து தன் வினைக்கும் பிறவினைக்கும் பொது வினை

யாதல் காண்க. ஒளி என்பதற்கு மறை என்று பொருள்.

மறை என்பதும் தன் வினைக்கும், பிறவினைக்கும் பொதுவினை. நீ மறை; புத்தகத்தை மறை என வரும்.

மறை என்பது விகுதியொடு சேருங்கால், தன்வினையில் "மறைந்தான்" என நகர மெல்லொற்றுப் பெற்றும், பிறவினையில், "மறைத்தான்" என வல்லொற்று மிக்கும் வரும்.

ஒளி என்பது தன்வினை பிறவினை ஈரிடத்தும், விகுதி பெறுங்கால் "ஒளித்தான்" என வலி மிக்கே வரும்; "வெளு" என்பது போல.

வெளு என்பது அவன் தான் வெளுத்தான், சீலையை வெளுத்தான் எனத் தன் வினையிலும் பிறவினையிலும் வலிமிக்கே வருதல் காண்க.

ஒளி, மறை என்பன ஒரே பொருளில் வழங்கும் பொதுவினை முதனிலைகளாயினும், விகுதிப் படுங்கால் தம்முள் வேறுபாடானவை. மறை, மறைந்தான், மறைத்தான் என வரும்.

ஒளி, ஒளித்தான் என்றே தன் வினையினும் பிறவினையினும் வரும். தன் வினையிலே, மறைந்தான் என்பதுபோல, ஒளிந்தான் என்று வாராது. அங்ஙனமாதல்,

"ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே"

—சிவபுராணம் 18

என்பதில் வைத்துணரத்தக்கது.

வடக்கே மிகப் படித்தவர்கள் கூட

'ஒளிந்தான்'

என்று பேசியும் எழுதியும் வருகின்றார்கள். அது ஆன்றோர் வழக்கிற்கு மாறு.

"ஒளிந்தான்" என்பது இனி வழக்குக்கு வந்துவிடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. "ஒளிந்தான்" என்பது ஒழியாதுபோலும்.

இன்னும் வல்லினம் மிகுக்கவேண்டிய இடத்தில், "வாழைபழம்" "தமிழ் பாஷை" என இயல்பாயும்,

"சக்கரவர்த்திதிருமகன்", "வந்த குதிரை"

என இயல்பாய் வரவேண்டிய இடத்தில் மிகுத்தும் வழங்குகின்றார்கள்.

உயிரீற்றுயர்திணைப்பெயர், ஆறும் வேற்றுமையில்,

நம்பி + கை = நம்பிகை

தம்பி + பிள்ளை = தம்பிபிள்ளை

என இயல்பாய் வருதல் காண்க.

இயல்பாய் வரவேண்டிய இடங்களை மிகுக்கும்போது காதில் ஒரு குடைச்சல் உண்டாகிறது. அவ்வாறே மிகுக்க வேண்டிய இடத்தை இயல்பாக்கும்போதும் காதிலே சங்கடம் உண்டாகிறது. சில இடங்களிலே பொருளே மாறிவிடும். இனி இவ்விஷயத்தில் அதிக தூரஞ் செல்லாமல் எடுத்த விஷயத்துக்கு வந்துவிடுவோம்.

"தோற்று" என்பது "ஒளி" என்பது போலத் தன்வினைக்கும் பிறவினைக்கும் பொது வினை முதனிலை. விகுதிப்படுங்காலும் ஒளி என்பது போலவே, தோற்றினன் எனத் தன்வினையிலும் பிறவினையிலும் வரும்.

"அவன்அவள் அதுஎனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ............."

என்ற இடத்தில் வரும் "தோற்றிய என்ற வார்த்தைக்குத்" தன்வினைப்பொருள் பிறவினைப்பொருள் இரண்டும் வெகு பொருத்தம்.

இந்த உலகத்தைத் தானே தோற்றியதென்றுஞ் சொல்லலாம்; மற்றொரு பொருள் தோற்றுவித்ததென்றுஞ் சொல்லலாம்.

காந்தம் இருந்தபடி இருக்க அதன் முன்னிலையில் இரும்பு தானே அசைந்தது என்றுஞ் சொல்லலாம். காந்தம் இரும்பை அசைத்தது என்றுஞ் சொல்லலாம்.

ஈசுவர சந்நிதியில் உலகந் தோன்றுமலிருக்க முடியாமல் தோன்றிநின்றழிகின்றது.

சூரிய சந்நிதியிற் சில மலர்கள் மலராமலிருக்க முடியாமல் மலர்ந்துநின்று கூம்புகின்றன. அது போல; ஆகவே,

உலகத்தை ஒருவர் தோற்றுவியாமல் தானே தோன்றுகின்றது என்றுஞ் சொல்லலாம். ஆனல், ஈசுவர சந்நிதியில்லையேல் உலகம் தோன்றவே

மாட்டாது. ஆகையால் உலகம் ஒருவராலே தோற்றுவிக்கப்பட்டதுமாம்.

ஈசுவரன் உலகத்துக்குச் செய்யும் உதவி,

"செய்யாமை செய்யும் உதவி"

தான் விகாரப்படாமற் செய்யும் உதவி;

அந்த உதவியைப் பெறும் உயிர்களும், ஒரு நாளைக்குச் செய்யாமையைச் செய்தற்கு உபகாரமான உதவி.

உயிர்கள் செய்யாமையைச் செய்தலாவது,

தம் கருவிகரணங்களை ஒப்பிக்க வேண்டிய இடத்தில் ஒப்பித்துவிட்டுச் சும்மா இருப்பது. இது சீவன்முத்திநிலை.

குயவன் ஒரு பானையை வனையும்போது, விகாரப்படுகின்றான். குயவன் சும்மா இருக்கப் பானை அவன் சந்நிதியில் தோன்றுவதில்லை. குயவனை ஈசுவரனுக்கு உவமை சொல்லுவது ஒருபுடை ஒப்புவமை.

ஈசுவர சந்நிதியில் தோன்றிநின்று ஒடுங்குகின்ற உலகத்தை வைத்துக்கொண்டு, அங்ஙனம் தோன்றிநின்று ஒடுங்குதற்குக் காரணம் விசாரிக்குமுகத்தால்,

கடவுளுண்மை ஆன்மாக்கள் உண்மை இரண்டுக்குமுள்ள தொடர்பு பேசுகின்றது சைவ சித்தாந்தம். அவ்வாறேதானே பிரம சூத்திரமும்,

" எங்கிருந்து இதன் தோற்றம் முதலியன "

என ஆத்ம பரமாத்ம விசாரஞ் செய்கின்றது.

வேதாந்த சித்தாந்தங்கள் ஒரு உண்மையைச் சாதிக்கின்ற இரு சமரச சைவத் துறைகள். இன்னும் எத்தனையோ வகையான சைவத் துறைகள் குறித்த உண்மையிற் சென்று முடியலாம். " மிகு சைவத் துறை " என்பது சேக்கிழார் பெருமானின் திருவாக்கு.

அகச்சமயத்துள் ஒன்றாகிய சைவத்திற் பல துறைகள் இருப்பதுபோல, ஏனைய அகச்சமயங்கள் ஒவ்வொன்றிலும் பல வேறு துறைகள் அமையலாம். சாதகர்கள் தமக்குரிய துறைகளிற் செல்வர்.

அகச்சமயங்கள்,

" ஓரிடத்தே ஒருபதிக்குப்
பலவழிகள் உளவாறுபோல "

ஒருங்கு ஒத்து முடியும். ஏனைய சமயங்கள் நீதியினால், அடங்குமாறு,

" ஓது சமயங்கள் "

என்ற செய்யுளுக்குப் பொருள் விரிக்குமுகத்தால் மேல் உரைக்கப்பட்டது.

(முற்றும்)



திருவள்ளுவர்

# I. வள்ளுவர் உபதேசம்

திருவள்ளுவநாயனாரை ஒருவர் தினந்தோறும் சென்று வழிபட்டுவந்தார்.

நாயனார் ஒருநாள் அவரைப் பார்த்து என்ன வேண்டும் என்று கேட்டார்.

அவர், "சுவாமி! நான் இந்த உலகத்திலே சகல பாக்கியங்களும் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டும். அதுதான் என்னுடைய பெரிய விருப்பம். அதற்குரிய உபாயத்தை அநுக்கிரகிக்கவேண்டும்", என்று பிரார்த்தித்தார்.

திருவள்ளுவர், "நீ சுயநலமுள்ளவனாயிரு. உனக்குச் சகல பாக்கியங்களும் சித்திக்கும்", என்றார். அந்த மனிதர் அதைக் கேட்டுக்கொண்டே வீட்டுக்குப் போனார்; சிந்திக்கத் தொடங்கினார். அவருக்கு அந்த உபதேசம் விளங்கவில்லை. அதில் அவருக்குத் திருப்தி பிறக்கவில்லை. பத்திரிகைகள் எல்லாம் "சுயநலம் கூடவே கூடாது" என்று கூச்சலிடுகின்றன. 'இவன் ஒரு சுயநலக்காரன் என்றால் மகாகெட்டவன்' என்று சனங்கள் பேசுகின்றார்கள். இப்படியிருக்க நாயனாரோ "நீ சுயநலமுள்ளவனாயிரு" என்கின்றாரே என்று மனவேதனைப்பட்டுக்கொண்டு மறுபடியும் அந்த மனி

தர் நாயனுரை அணுகி, "சுவாமீ, சுயநலத்தை உலகம் பழிக்கின்றது. உங்கள் நூலை வானளாவப் புகழ்கின்றது. தேவரீர் தங்கள் நூலில் எங்கேயாவது சுயநலத்தைப்பற்றிச் சொல்லியிருக்கின்றீர்களா? அதனை விளங்கவைக்க வேண்டும்," என்று பிரார்த்தித்தார்.

"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்."

ஒருவன் "தன்னைத்தான் காதலன்" ஆயிருக்க வேண்டும். தன்னிலே தான் பற்றுள்ளவனுயிருக்கவேண்டும். அஃதாவது சுயநலமுள்ளவனுயிருக்கவேண்டும். சுயநலமாவது தன் கருமத்திற் கண்ணுங் கருத்துமாயிருத்தல். "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்." எவன் தன் கருமத்திற் கண்ணுங் கருத்துமா யிருக்கின்ருனே, அவனே தவஞ் செய்பவன்; தவத்தி. "மற்றல்லார் அவஞ் செய்வார் ஆசையுட் பட்டு." தன் கருமஞ் செய்யாது, சுயநலமின்றிப் பிறகருமஞ் செய்கிறவர்கள் எல்லாம் அவம் செய்கின்றவர்கள்; மகா ஆசைக்காரர்கள்.

'தன்னைத்தான் காதலன்' சுயநலக்காரன். அவன் உண்மையிலே சுயநலக்காரன் ஆனுல், "எனைத்தொன்றுந் துன்னற்க தீவினைப்பால்"— எத்துணைச் சிறியதொரு தீமையையும் இரண்டாமாளுக்குச் செய்யமாட்டான். இரண்டாம் ஆளுக்கு ஒருவன் தீமை செய்தால் அது தனக்கு நட்டம். இரண்டாம் ஆளுக்கு ஒருவன் நன்மை செய்வது தனது நயத்துக்காகவே. அயல் வீட்டுப் பிள்

ளைக்கு ஒருபிடி அன்னங் கொடுத்தால், தன் பிள்ளைக்கு ஒருபிடி தசை வளருமென்று காரியந் தெரிந்த நல்ல தாய் சொல்லுவாள்.

ஒரு உபாத்தியாயர் மேற் பரீட்சைக்குப் படிக்கிறார்; தன் அறிவை மேலும் விருத்திசெய்ய முயலுகின்றார்; அது மிக நல்லதே. தங்கருமம் செய்கிறவர்கள் தவஞ் செய்கிறவர்கள். ஆனால் அந்த உபாத்தியாயர் தம் கருமமாகிய பரீட்சைப் படிப்பைத் தாம் படிப்பிக்கவேண்டிய வகுப்புப் பிள்ளைகள் முன்னிலையில் வைத்துக்கொள்ளுவாரானால், 'பிள்ளைகளே, பாடத்தை மௌனமாக வாசியுங்கள்' என்று சொல்லிவிட்டுத் தமது பாடத்தைப் படிப்பாரானால், அவர் தங்கருமஞ் செய்தவர் ஆகார்; சுயநலக்காரர் ஆகார். அவருடைய பரீட்சைப் படிப்பு வகுப்புப் பிள்ளைகளுக்கு யமனாய் வந்திருக்கிறது. அவர்களுக்குப் பெருந் தீமை விளைவிக்கின்றது. அந்தத் தீமை பிறகு இவருக்கு யமனாய் இவருடைய பரீட்சையில் அணுக்குண்டு போடும்; அது தப்பாது. ஆகவே, ஒருவன் சுயநலக்காரன் என்றால் பிறருக்குத் தீமை விளைக்காதவன் என்று கருத்து. பரீட்சைக்குப் படிக்கிற சுயநலக்கார உபாத்தியாயர், 'சுயநலம்' என்பதன் கருத்தைத் தெளிவாக உணர்ந்திருந்தால், வகுப்புப் பிள்ளைகளின் படிப்புக்கு எள்ளளவும் பங்கமில்லாமலே தம் பரீட்சைப் படிப்பை வைத்துக்கொள்வார். பரீட்சையில் அவர் சித்தியெய்தாது போகலாம்; அற்ப சம்பளத்தோடு சங்கடப்படலாம். அவருடைய சுயநலம் அஃதாவது பிறருக்கு நட்டம் விளைக்காத நன்மைப்பாடு,

" மூவேழ் சுற்றமும் முரணுறு நரகிடை
ஆழாமே ஆளும் ".

அந்த நன்மைப்பாடு முன்னோர்களான தந்தை வழியில் உள்ள ஏழு தலைமுறையாருக்கும், தாய் வழியில் உள்ள ஏழு தலைமுறையாருக்கும், இனித் தன்வழியில் வரும் ஏழு தலைமுறையாருக்கும் சென்று செறியும். இது மணிவாசகப் பெருமானின் அருளாணை. இது சத்தியம், சத்தியம், முக்காலும் சத்தியம்.

* * *

துரியோதனன் சகாதேவனிடம் போய்ப் பாரத யுத்தத்திலே களப்பலியூட்டுதற்கு நல்ல முகூர்த்தம் வைத்துத் தரும்படி கேட்டான். அந்த முகூர்த்தத்திலேதான் வெற்றி தோல்வி தங்கியிருக்கிறது. துரியோதனன் தனக்கு வெற்றி வருதற்கேற்ற முகூர்த்தத்தைத்தானே கேட்பான்.

உடனே சகாதேவன் பஞ்சாங்கங்களைப் பார்த்து, " அமாவாசித்தினத்திலன்றைக்குக் களப் பலி யூட்டினால் உனக்கு வெற்றி நிச்சயம்" என்று சொல்லிவிட்டான். இது ஒரு நடுராத்திரியில் நடந்த இரகசிய சம்பவம். மூன்றாம் ஆளுக்குத் தெரியாத சம்பவம்.

பாரதத்தில் ஒரு வெண்ணெய்க் கள்வன் — பச்சைக் கள்வன் இருக்கிறான். அவனுக்குத் தெரியாமல் எதுவும் நடத்தமுடியாது. அவன் உள்ளங் கவர் கள்வன்; பெரிய கண்ணன். அவன் அந்த இரகசியத்தை வெளிப்படுத்தற்கு

ஒருநாள் ஒரு பாசாங்கு செய்தான். காரணமில்லாமற் கோபங் காட்டிக்கொண்டு தான் துவாரகைக்குப் போவான் என்று புறப்பட்டான். 'அடுத்த வாரம் யுத்தம். இடையில் இப்படிக் கண்ணன் ஏன் செய்கிருன்' என்று எல்லோருந் திகைத்தார்கள். தருமர், கண்ணனுக்கு யாராவது தவறு செய்ததுண்டாவென்று ஒவ்வொருவரையும் விசாரித்தார். எல்லோரும் விழி விழித்தார்கள். சகாதேவனைத் தருமர் வினவினுர். தான் சாத்திரம் சொன்னதற்காகத்தான் கண்ணன் பாசாங்கு பண்ணுகிருனென்ருன். உடனே தருமருக்கு ஆனந்தபாஷ்பங் கண்ணிற் பெருகியது. சகாதேவனைக் கட்டித் தழுவினுர். "நீதான் என் உடன் பிறப்பு, நீதான் 'தன்னைத்தான் காதலன்' என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியம். நீ பிறனுக்கு, அதுவும் பகைவனுக்குத் தீமை விளைக்கத்தக்க சந்தர்ப்பத்தை, அங்ஙனஞ் செய்யாது, எமது குலத்தைக் காத்தாய்; இனிப் பாரதயுத்தத்தில் வெற்றி நமதே" என்ருர். கண்ணன் அந்த வேடிக்கையைப் பார்த்துச் சிரித்தான். அப்பால் கண்ணனுக்கு அமாவாசியை அரக்கி வைக்கிற வேலை நேர்ந்தது. அதை வெகு வேடிக்கையாகவே செய்துவைத்தான். துரியோதனன் முகூர்த்தந் தவறியதால் தோல்வியடைந்தான். சகாதேவனின் சுயநலம் வென்றது.

* * *

ஆபிரகாம் லிங்கன் ஒரு கடையிற் கூலிக்கு வியாபாரஞ் செய்கின்ருன். நடு இராத்திரி, கோயிற் றிருவிழாவிலிருந்து பல கிராமத்துச் சனங்களும்

தத்தங் கிராமத்துக்குப் போகின்ருர்கள். ஒரு குடு குடு கிழவியுந் திருவிழாப் பார்த்துவிட்டுத் தன் கிராமத்துக்குப் போகின்ருள். ஆபிரகாம் லிங்கன் கடையிற் கதவு அடைத்துவிட்டான். உள்ளே விளக்கு எரிகிறது. நித்திரை தூங்கிக்கொண்டிருக்கிருன். கிழவி கதவைத் தட்டித் தேயிலே கேட்கின்ருள். ஒரு துவாரவழியாற் காசை நீட்டுகிருள். நித்திரைத் தூக்கத்தோடு காசை வாங்கி வைத்துவிட்டுத் தேயிலே நிறுத்துக்கொடுக்கிருன் ஆபிரகாம் லிங்கன். பிறகு படுத்து நித்திரையாகிருன். விடிந்தது; எழுந்து கடை ஒழுங்கு செய்கிருன். கிழவி கொடுத்த பணம் ஒரு இடத்திலிருக்கிறது. அது ஒரு இருத்தல் தேயிலேயின் விலே. ஆனல் தராசுத் தட்டில் அரை இருத்தற் படி இருக்கிறது. ஆபிரகாம் லிங்கன் திகைத்தான். 'ஐயோ பாவம்! கிழவியிடம் ஒரு இருத்தலுக்குப் பணம் பற்றிக் கொண்டு, அரை இருத்தல் அல்லவா நித்திரைத் தூக்கத்தில் நிறுத்துக் கொடுத்துவிட்டேன்' என்று ஏங்கினன். உடனே அரை இருத்தல் தேயிலே நிறுத்தெடுத்தான். வெளியிற் கிளம்பினன். "இராத்திரி தேயிலே வாங்கின கிழவி யார்" என்று கேட்டுக் கேட்டுக் கிராமங் கிராமமாக ஓடினன். கிழவியைக் கண்டுபிடித்துவிட்டான். அமிர்தத்தைக் கண்ட தேவர்களுக்கு வந்த சந்தோஷம் அவன் சந்தோஷம். கிழவியிடங் கொடுத்து மன்னிப்புக் கேட்டான் ஆபிரகாம் லிங்கன். கிழவி தெய்வத்தைநோக்கிக் கண்ணீர் பொழிந்து, ஆசீர்வதித்தாள். அந்தக் கிழவியின் கண் காணவே

'தன்னைத்தான் காதலன்' ஆன ஆபிரகாம் லிங்கன் அமெரிக்கப் பிரசாதிபதியானான்.

* * *

இதுபோன்ற சம்பவங்கள் மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் அநேகமுண்டு. அவைகள் அத்தியாவசியகம் அறியவேண்டியவைகள்.

* * *

திருவள்ளுவநாயனாரிடம் சுயநல உபதேசம் பெற்ற அந்த மனிதர் ஆபிரகாம்லிங்கன்போலவே பிறருக்குத் தீமை வாராமல் வாழ்க்கை நடத்திப் பெரிய அந்தஸ்தை அடைந்தார். அவருக்கு வயசும் அறுபதை அடுத்தது. அவர் ஒருநாள் திருவள்ளுவரிடம் போய் மற்றொரு கேள்வி கேட்டார். "சுவாமீ, நான் பிறருக்குத் தீமைசெய்யாமலிருந்து, சகல பாக்கியங்களையும் தங்கள் அருளால் அனுபவிக்கின்றேன். இப்படியே மறுமையிலும் அனுபவிக்கிறதற்கு வழி உண்டா? அநுக்கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார் அந்த மனிதர்.

திருவள்ளுவர் கட்டை அவிழ்த்து இரண்டு திருக்குறள் வாசித்தார் :-

" அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்."

—குறள் 338

ஒன்று.

" அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி."

—குறள் 226

மற்றது.

செல்வம் ஓரிடத்திலே தங்காது நடையிலே விடுவம் என்றுதான் சதா சொல்லிக்கொண்டிருக்கும். அப்படிப்பட்ட செல்வத்தை ஒருவன் பெற்ருல் அவசரம் அவசரமாக அது புறப்படுமுன்னமே நிலையான காரியங்களைச் செய்து வைத்துவிட வேண்டும். இது முதற் குறளின் கருத்து,

மானங் குலங் கல்வி முதலிய பத்தையும் அழிக்கிற பண்டம் பசி. அப்படிப்பட்ட பசியைப் போக்கி வறியவர்களுடைய எரிகிற வயிற்றுக்குள்ளே தமது சம்பாத்தியத்தைக் கொட்டிவிட்டால், அது யாகாக்கினியிலே அவி சொரிந்ததற்குச் சமமாயிருக்கும். வறியவர்களின் வயிறுதான் நல்ல சேமநிதி வங்கி. அதிலே பொருளைப் போட்டு வைத்தால் அது இம்மையிலும் மறுமையிலும் வந்து உதவும். ஆற்றிலே போட்டுக் குளத்திலே எடுப்பதுபோல எங்கேயுமெடுக்கலாம். இது மற்றக் குறளின் கருத்து.

அந்த மனிதர் இந்த இரு குறளுபதேசத்தையுங் கேட்டுக்கொண்டு வீட்டுக்குப் போகின்ருர். போகிற வழியிலே ஒரு பாகவதர் கதைபண்ணிக் கொண்டிருக்கிருர். அப்பொழுது அங்கே சொன்ன கதை இது :

" ஒரு ஈயாப்பத்தன் இருந்தான். அவன் எச்சிற் கையாலே காகந் துரத்தான். அவன் வீட்டில் எறும்பு ஊருவதில்லை. அங்கே எறும்பு எடுக்கத்தக்க படி அவன் பொருளை வைத்திருப்பதில்லை. கண்ணை இமை காப்பதுபோல அவன் பொருளிலே கவனம்

உள்ளவன். அப்படிப்பட்ட அந்த உலோபிக்கு மரணகாலம் வந்துவிட்டது. தானங் கொடுக்கிறார்கள். தானத்துக்குப் பசு வேண்டும். உள்ள பசுக்களுக்குள்ளே ஒரு வயசுபோன பசுவைக் கொடுக்கும்படி அந்த உலோபி வெகு கஷ்டப்பட்டு அந்த மரணநேரத்தில் உத்தரவிட்டான். அது நடக்கமாட்டாத கிழட்டுப் பசு. பிராமணன் தானத்தை மறுக்கக்கூடாது. என்னசெய்வது, ஏற்றுக்கொண்டான். அதை மெள்ள மெள்ளத் தள்ளிக்கொண்டு வெளியே புறப்பட மூன்றே முக்கால் நாழிகை கழிந்தது. பிராமணனுக்கு வெகு சிரமம். அவ்வளவிற் பசுவும் செத்துப் போனது. அடுத்து உலோபியுஞ் செத்துப்போனான். யம கணங்களுக்கும் தேவ கணங்களுக்கும் போர் மூண்டது. தேவ கணங்கள் உலோபியைப் பறித்துக்கொண்டுபோய்ச் சுவர்க்க உலகத்திலே கற்பகதரு நீழலிலே இருத்தினார்கள். உலோபிக்கு இது வெகு ஆச்சரியமாயிருந்தது. விசாரித்தான். " உன்னுடைய கிழப் பசு மூன்றேமுக்கால் நாழிகை பிராமணன் வசம் இருந்தது. அவ்வளவும் நீ சுவர்க்க அதிபதி. அப்பால் சதாகாலம் நரகத்துக்குச் சக்கரவர்த்தி", என்றார்கள். உலோபி அப்படியா காரியம் என்று அறிந்துகொண்டு உடனே அங்கேயுள்ள பிராமணர்களை அழைத்து, அங்குள்ள காமதேனுக்களையும் கன்றுகளையும் தானஞ்செய்துவிட்டான். மூன்றேமுக்கால் நாழிகைக்கிடையிற் செய்து முடித்துப்போட்டான். பிறகு யமகணங்கள் அங்கேவந்து அவனை எட்டிப் பார்த்து வெட்கிப் போனார்கள். அவன் அவர்களைப் பார்த்துச் சிரித்தான். அவன் சுவர்க்கத்

துக்கு இந்திரனுய் விட்டான். நிலையாத செல்வத் தாலே நீடித்த செல்வத்தைப் பெற்றுவிட்டான். இனியும் அவன் புண்ணியமே செய்வான்.”

இது கதாப்பிரசங்கி சொன்ன கதை. திரு வள்ளுவரின் மாணவருக்கு அந்த இரண்டு குறளுக்கும் பொருத்தமான கதையாய் இருந்தது அந்தக் கதை. அவர் பெரிய புண்ணியங்களைச் செய்யத்தொடங்கினுர்; செய்தார்.

முன் பிறருக்குத் தீமை வாராமல் வாழ்க்கை நடத்தினவர்; இப்பொழுது மற்றவர்களுக்கு நன்மையுஞ் செய்யத் தொடங்கிவிட்டார்; இம்மையிலே போல மறுமையிலும் நல்வாழ்வு வாழ்தற்காக.

*　　　*　　　*

பிறருக்கு நன்மை செய்தலும் சுயநலமேயென்பதை அந்த மனிதர் நன்கு உணர்ந்தார். அவர் ஒருநாள் காசி யாத்திரை செய்தார். காசியிலே வேதவியாசரைக் கண்டார். வேதவியாசர், “நீ யார், எங்கேயிருந்து வருகிருய்” என்று வினவினுர். அப்பொழுது அந்த மனிதர் “நான் இன்னுர். திருமயிலாப்பூரிலிருந்து வருகிறேன். பிறந்த ஊர் இன்னது” என்ருர். அப்பொழுது வேதவியாசர் உரக்கச் சிரித்து, “நீ ஆர்” என்று கேட்டால் உடம்பின் பெயரைச் சொல்லுகிருயே, “நீ உந்த உடம்பா?” நூறு வருடங்களுக்குமுன் உன் பெயரென்ன? அப்பொழுதும் குறித்த ஊரிலேதான் இருந்தாயா? திருவள்ளுவருடைய ஊராகிய திருமயிலாப்பூரிலிருந்து வருகிற மனிதனே!

"நீ யார்? எங்கேயிருந்து வருகிறாய்? இனி நீ எங்கே போகப்போகிறாய்? என்று கேட்டால் நேர்விடை சொல்லுகிறாயில்லையே! திருக்குறளிலே உனக்கு எத்தனை குறள் தெரியும்? இந்தக் கேள்விகளுக்கு அதில் மறுமொழி இருக்கிறதே" என்றார்.

உடனே அந்த மனிதர் ஒன்றும் பேசாமலே ஆகாயக் கப்பலிலே புறப்பட்டு, நேரே திருமயிலாப்பூரிலே இறங்கித் திருவள்ளுவரிடம் போய்த் தமக்கு நேரிட்ட அவமானங்களைச் சொன்னார். சொல்லி, "சுவாமீ, நான் ஆர்? நான் எங்கிருந்து வந்தேன்? எங்கே போகப்போகிறேன்? எங்கே போகவேண்டும்? இந்த வினைக்களுக்கு விடை தெரியவில்லையே! ஏன் எனக்குத் தெரியவில்லை? அநுக்கிரகிக்கவேண்டும்" என்று அழுதார் அந்த மனிதர்.

அப்பொழுது திருவள்ளுவர் அந்த மனிதரைப் பார்த்துச் சொல்லுகிறார்:

ஒருவன் தன் நன்மைக்காகப் பிறருக்குத் தீமைசெய்யாமலிருப்பான்; தன் நன்மைக்காகப் பிறருக்கு நன்மைகூடச் செய்வான். ஆனால் தான் இரங்கிய ஒரு ஏழை திடீரென்று பணக்காரனாய் நல்வாழ்வு வாழ அதைப்பார்த்துச் சகிக்கமாட்டான்; எரிச்சல் வந்துவிடும். அதற்கு வஞ்சகம் என்றும் பெயர். அது மனசுக்கு ஒரு மறு; மாசு. அந்த எரிச்சலாகிய மாசு இருக்கும்வரைக்கும், வியாசருடைய கேள்விகளுக்கு மறுமொழி காண முடியாது. என்னசெய்வது எரிச்சலைப் போக்க வேண்டும் என்றார்.

அப்பொழுது அந்த மனிதருக்குப் பெரிய புராணத்திலுள்ள ஒரு கதையும் நினைவுக்கு வந்தது.

கலிக்கம்பநாயனுர் சிவனடியார் ஒருவரின் திருவடிகளைத் தங் கையாலே தீண்டிக் கழுவுகின்ருர். அவருடைய பத்தினியார் கரகத்தால் நீர் வார்க்கின்ருர். அப்படி வார்த்தவர் இடையில் தயங்கிஞர். அந்தச் சிவனடியார், முன் அங்கே வீட்டுப் பணியாளாய் இருந்தவர். அவருக்கு "இந்த உயர்ந்த நிலையுமா" என்று ஒரு மாசு மனத்திலே ஊர்ந்ததிஞலேதான், நீர் வார்த்தலிலே தடங்கல் ஏற்பட்டது. அதைக் கண்ட மன மாசில்லாத கலிக்கம்பநாயனுர் மனைவியார் கையைத் தறித்து விட்டார்.

மணிமேகலையில் ஒரு ஆபுத்திரன் வருகின்ருன். அவனிடம் ஒரு அமுதசுரபி இருந்தது. அதில் உணவுப் பண்டங்கள் பெருகிக்கொண்டிருக்கும். உணவுகளை உயிர்களுக்கு வழங்கி மகிழ்வான். ஒரு காலத்தில் மழைபெய்து நாடு செழித்துச் செல்வம் பெருகியதால், ஒருவரும் அவனுடைய கொடையை விரும்பவில்லை. அவனுக்குப் பெரிய துக்கம் வந்துவிட்டது. செல்வம் பெருகி உயிர்கள் நல்வாழ்வு வாழ்வதை அவன் மகிழவில்லை.

நாம் நல்வாழ்வுக்காகப் பிறர்க்குத் தீமை செய்யாதிருப்போம்; பிறர்க்கு நன்மைகூடச் செய்வோம். அது வேறு. எல்லாரும் வாழவேண்டும் என்று எண்ணுவது, பிறர் நல்வாழ்க்கையை மகிழ்வது வேறு.

எல்லாரும் வாழவேண்டும்; "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்கின்ற நிலை எளிதிற் கைகூடுவது அன்று. பிறர் நன்ருயிருப்பதை நம் மனம் சகியாது எரிந்துகொண்டேயிருக்கும். ஒரு படித்த மனிதர் எரிச்சலைப் போக்குகிற தற்கு மிளகாயை உபயோகியாது விட்டுப் பார்த்தார். அது போகவில்லை. அவர் மிளகாயை நிறுத்தி அசீரணத்தை வருவித்தாரேயன்றி எவ்வித பயனையும் அடையவில்லை. ஒருகோடி பிறப்பிற் செய்யும் முயற்சிகூட மன எரிச்சலை—மாசை—வஞ்சகத்தைப் போக்குதற்குப் போதாது.

பெரிய இருடிகளும் முனிவர்களும் எரிச்சல் தம்மிடம் இருப்பதைக் கண்டு நாணுகின்ருர்கள்; ஏங்குகின்ருர்கள்; அதனைப் போக்கத் தவங் கிடக்கின்ருர்கள்.

திருமுருகன் வள்ளிநாயகியைத் தினைப்புனத்திற் கண்டு அவளைக் களவுசெய்துகொண்டு தெய்வநாயகியிடஞ் செல்லுகின்ருன். தெய்வநாயகி வள்ளிநாயகியைக் கண்டு எரியவில்லை; புகையவில்லை; கதவைப் பூட்டவில்லை.

'ஈங்கொரு தமிய ளாகி யிருந்திடு வேனுக்கு இன்ருேர்
பாங்கிவந் துற்ற வாறு நன்றெனப் பரிவு கூர்ந்தாள்.'
—கந். வள்ளியம்மை திருமண. 235

முருகன் சர்வான்மநாயகன்; அவன் ஊருணி. ஊராரால் நுகரப்படும் நீர்நிலை. அவன் அருள்வெள்ளம். அந்த வெள்ளத்தை எவரும் அள்ளிப்பருக வேண்டும் என்கின்ற நிலை தெய்வநாயகியின்

திருவுள்ள நிலை. அந்த நிலைக்குத்தான் அறம் என்று பெயர்.

'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற' — குறள், 34

எவன் 'எல்லாரும் வாழல்வேண்டும் என்கின்ற மனநிலை எனக்கு வரவில்லையே' என்று என்றைக்கு ஏங்குகின்றானோ அவன் அன்றைக்குச் சமயி ஆகின்றான்; சைவத்திற் பிரவேசிக்கின்றான். அவனுக்கு மனமாசு நீங்கத் தொடங்கிவிட்டது என்று அர்த்தம். இருள் நீங்க நீங்க நிலம் வெளிக்கிறதுபோல, எரிச்சலாகிய மனமாசு நீங்க நீங்க வியாசருடைய வினாக்களுக்கு விடை வெளிக்கும். 'நான்' தெரியும்; போக்குவரவு விளங்கும்.

எல்லாரும் வாழல்வேண்டும் என்கின்ற – மனமாசு நீங்கும் நிலைதான் சைவத்தின் தொடக்கம்; சைவம்.

தன் நல்வாழ்வு கருதிப் பிறருக்குத் தீமை செய்யாதிருப்பது; தன் நல்வாழ்வு கருதிப் பிறருக்கு நன்மை செய்வது; வைதிகம். அந்த வைதிகந்தான், முதிர்ந்து தன்னிடம் எரிச்சல் இருக்கிறதே என்று நாணி ஏக்கங்கொள்ளும்போது சைவம் ஆகின்றது. சைவத்துக்கு ஆதாரம் வைதிகம்; நமது சமயத்துக்குப் பெயர் வைதிக சைவம்.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க."



மெய்கண்டதேவர்

## II. மெய்கண்ட பரம்பரையில் உமாபதி சிவம்

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது நாவலர் வாக்கு.

இந்த வாக்கியத்தில் 'முத்தி' என்று ஒரு வார்த்தை வருகின்றது. முத்தி என்றால் விடுதல் என்று அர்த்தம்.

விடவேண்டியது அறியாமை. அறியாமையினின்றும் விடுபடுதலே வீடு.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி' உயிர்கள் பிறந்தும் இறந்தும் உழலுகின்றபோது அவைகளுக்கு அறிவு, அறியாமை என்கின்ற பிரச்சினை இல்லை. மனித சரீரத்தை உயிர்கள் பெற்றதும் அறிவு அறியாமைகள் என்ற பிரச்சினைகள் உண்டாகின்றன.

மரத்துக்கு, தான் மரம் என்பது தெரியாது. மனிதன், தான் மனிதன் என்று அறிகிறான்; தன் வாழ்வின் தரத்தை உயர்த்துதற்கு எத்தனையோ திட்டங்கள் வகுக்கிறான்; பஞ்சபூதங்களைத் தன்

வழியில் அடக்கியாள முயல்கிறான். ஆனால், தான் யார்? எங்கிருந்து வந்தான்? தன்கதி யென்ன? எங்கே போகப்போகிறான்? என்பதை அறியான். அதனாலே கவலையில் முழுகுகின்றான்.

மனிதனுக்கு இந்தச் சரீர யந்திரம் எங்கிருந்து கிடைத்ததோ அங்கிருந்து அவனுக்கு மற்றுமொரு உபகாரமுங் கிடைத்திருக்கிறது. அது சரீராதிகளை, இந்த உலகத்தின் இரகசியங்களை – அவற்றை உபயோகிக்கும் விதங்களைப் போதிக்கும் புத்தகம். அதற்கு வேதம் என்று பெயர். மனிதனுடைய சத்தியைக் கடந்து, அவனை — அவன் கருவி கரணங்களை — மற்றொரு சத்தி நடத்துகிறதென்ற உண்மையை அந்த வேதம் தெரிவிக்கின்றது; அவன் காரிய காரணங்களை உணர்ந்து, கவலைகளைப் போக்க வழிசெய்கிறது. வையத்து வாழ் வாங்கு வாழ அது வழி வகுக்கின்றது. வேத நூலைப் பெறுனயின் மனிதப் பிறப்பைப் பெற்றும் பெறுதவன் ஆகிறான். வேதநூல் என்றால் அறிய வேண்டியவைகளை அறிவிக்கிற நூல் என்று கருத்து.

வேதநூலை அநுசரிக்கிறவனுக்கு வைதிகன் என்று பெயர். வைதிகன் காரியங்களை அறிந்து அந்தக்கரணங்கள் தூய்மை அடைகிறான். அந்த நிலையில் அவனுக்குத் திருவருள் சித்திக்கின்றது. இனி அவனுக்குச் சத்திநிபாதன் என்று பெயர். சத்தி – திருவருள். நிபாதம் – பதிதல்.

வைதிகன் நீதியை விசாரித்து அதை நடத்து கிறவன். சத்திநிபாதன் நீதியால் நடத்தப்படுபவன்.

நீதியை மனிதன் நடத்தினுல் ஒருநாளைக்கு நீதி மனிதனை நடத்தும். அவன் கருவி கரணங்கள் மறந்தும் பிறன்கேடு சூழா.

திருவருளுக்கு மற்ருெரு பெயர் ஆகமம். ஆகமம் என்ருல் வருவது என்று கருத்து; வேதம் என்ருல் அறிவது.

வேதம் மனித முயற்சி. காரியத்தை விசாரித்தறியவேண்டும். ஆகமம் தெய்வ நிகழ்ச்சி. திருவருள் பரிசுத்தமான இடத்திற் பிரகாசிப்பது.

திருவருளுக்குப் பாத்திரமான சமயங்கள் ஆறு. அவற்றுக்கு அகச்சமயம் என்று பெயர். திருவருளுக்கு உள்ளான சமயம் என்று கருத்து. இந்த ஆறு சமயங்களும் வேத சம்பந்தமானவை; திருவருள் எவனுடைய குணமோ அவனை அடைதற்குச் சாதகங்கள். சாதகங்களான ஆறு சமயங்களுள் சைவம் ஒன்று. வேத சம்பந்தம் பற்றிச் சைவத்துக்கு வைதிக சைவம் என்று பெயர். வைதிக சைவத்தைச் சாதகமாகக் கொண்டு சித்திக்கும் முடிபுக்குச் சைவசித்தாந்தம் என்று பெயர். இப்படியே வைதிக சம்பந்தமான ஏனைய அகச்சமயங்கள் பற்றி இன்னும் ஐந்து சித்தாந்தங்கள் வரலாம்.

அகச்சமய சித்தாந்தங்கள் எல்லாம் வேதத்தின் வழிவந்தவைகள். வேதத்தைக் கொள்ளாத சமயங்கள் புறச்சமயங்கள்; பொய்ச்சமயங்கள். அந்தச் சமயத்துக்கு அடித்தளம் வயிற்றுச் சோரு

யிருக்கும். அதனாலே வாழ்க்கைக்கு வாய்ப் பானவைகள்போலத் தோற்றும்.

"வாழ்க்கை யென்றால் என்ன?" என்று விசாரிக்கத் தொடங்கினால் அந்தச் சமயங்கள் கால் தலையற்ற முண்டங்களாய்விடும்; நாணித் தலை குனியுஞ் சமயங்களாய்விடும். ஆனால் இப்படிப் பட்ட சமயங்களுக்குத்தான் இப்பொழுது காலம். ஏனென்றால் எண்சாணுடம்புக்கு வயிறுதான் இப் பொழுது பிரதானம். உணவுப் பிரச்சினைதான் இப்பொழுது பெரிய பிரச்சினை. உணவை விருத்தி செய்வதா? மனித உற்பத்தியைக் குறைப்பதா? என்ற யோசனை அரசாங்கங்களுக்கு வந்துவிட் டது. உலகுக்கு ஆதிபகவன் முதல் என்கிற காலம் போய் உணவு முதல் என்கின்ற அன்னவிசார காலம் தலையெடுத்திருக்கிறது. அன்னவிசாரத்துக் குத் தக்கவாறு சமயங்கள் உண்டாவதில் நூத னம் இல்லை.

இந்த அன்னவிசாரம் புறச் சமயங்களாகிய பொய்ச்சமயங்களை உண்டாக்கிய அளவில் நிற்க வில்லை. உண்மையாகிய அகச் சமயங்களையும் விழுங்கிவிட்டது. அகச்சமயங்களிற் பெயரளவில் வழங்குகிற சமயம் சைவம். அது இன்றைக்கு வேத சம்பந்தத்தை விட்டுவிட்டது. இன்றைய சைவத்தை வைதிக சைவம் என்று கூறமுடியாது.

வேதத்தை அநுசரிக்கிறோம் என்பவர்களும் தாம் சைவர் ஆகவேண்டும் — சத்திநிபாதர் ஆக வேண்டும் — என்ற எண்ணத்தை விட்டுவிட்

டார்கள். வேதம் அவைதிகமாய்விட்டது. வேதம் அதற்குரிய பொருளில் வழங்கவில்லை. வைதிக சைவம் அவைதிகமும் அசைவமுமாய் இருவேறு சமயங்களாய்விட்டது.

இப்பொழுது உலகில் வழங்குஞ் சமயம் உலோகாயதம். வாய்ப்பேச்சில் ஒரு சமயம் வளர்கிறது. அது மாயாவாதம்; நான் பிரமம் என்கிற சமயம். இதுவுஞ் செயலளவில் உலோகாயதமே. இரு சமயமும் "மிண்டிய மாயாவாதம் என்னும் சண்டமாருதம், உலோகாயதமெனும் ஒண்டிறற் பாம்பின் கலாபேதத்த கடுவிடம்" என்று திருவாசகத்திற் பேசப்பட்டன. இந்தச் சண்டமாருதமும் ஆலகால விஷமும் உலகை அலைக்கின்ற காலத்திலே, மெய்கண்டதேவர் என்கின்ற மகான் தோன்றினர்.

ஆத்மா இந்த உடம்பாயும் அதே சமயத்தில் உடம்பில் வேருயும் இருக்கின்றது. ஆத்மா உடம்பும் அன்று; உடம்பில் வேறும் அன்று. இப்படியான நிலைக்கு அத்துவிதம் என்று பெயர்.

இவ்வாறே கடவுள் ஆத்மாவாயும் அதே சமயத்தில் ஆத்மாவில் வேருயுமிருக்கின்ருர். கடவுள் ஆத்மாவுமல்லர்; ஆத்மாவின் வேறுமல்லர். ஆத்மாவோடு அத்துவிதப்பட்டிருக்கிருர்.

இந்த அத்துவித நிலைதான் வேதாகமங்களிற் பேசப்படுகிறது. இந்த இரகசியத்தை மாயாவாத மாருதமும் உலோகாயத விஷமும் இடையிற் கலக்இப் பாழ்செய்துவிட்டன. பாழான பொய்யுலகத்

திலே மெய்கண்டதேவர் அந்த அத்துவிதமான மெய்ந்நிலையைக் கண்டார். அதனால், அவர் அத்துவித மெய்கண்டார் ஆயினார். அந்த அத்துவித மெய்ந்நிலையை அறிந்து சாதிப்பதே மனக்கவலை மாற்றுதற்கு மார்க்கம்; ஔஷதம். வேறு வழி இல்லை.

"பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்"யைப் பக்குவர்களான மாணவர்களுக்குப் போதித்ததோடமையாது அதனை விளக்கிச் சிவஞானபோதம் என்ற நூலையும் இயற்றியருளினார் மெய்கண்டதேவர்.

அவருடைய சிறந்த மாணவர் அருணந்தி சிவாசாரியர். அவர் அந்த அத்துவித நிலையை இன்னும் விரித்துச் சீவன் தன்னுடன் அத்துவிதப்பட்டிருக்கும் சிவத்தைச் சிந்தித்தற்கு உபகாரமான சிவஞானத்தைப் போதிக்கும் முகமாகச் சிவஞானசித்தியார் என்ற நூலை அருளிச்செய்தார்.

அவருடைய மாணவர் மறைஞான சம்பந்தர். அவர் மாணவர் உமாபதி சிவாசாரியார்.

'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே
இடம்ஒன்று மேலிடின்ஒன்று
ஒளிக்கும்.'

—கொடிக்கவி 1

என்பது உமாபதி சிவத்தின் திருவாக்கு. ஆத்மா ஒளியாகிய கடவுளோடு எப்படி அத்துவிதப்பட்டிருக்கிறதோ, அப்படி இருளாகிய அறியாமையோடும் அத்துவிதப்பட்டிருக்கிறது. "ஒன்று மேலிடின் ஒன்று ஒளிக்கும்." ஒளி மேலிட்டால் இருள்

மறையும். இருள் மேலிட்டால் ஒளி மறையும். ஆத்மா சார்ந்ததன் வண்ணமானது; சார்புணர்ந்து சார்புகெட ஒழுகவேண்டியது. அது ஒளியாகிய சிவத்தைச் சார்ந்து சிவம் பிரகாசிக்குமாயின் அதை இருள் அணுகாது. இந்த உபாயத்தை எடுத்துரைப்பது உமாபதிசிவாசாரியார் செய்தருளிய சிவப்பிரகாசம். இச் சிவப்பிரகாசமாகிய திருவருளின் பயனைத் திருவருட்பயன் என்ற நூல் வாயிலாகவும் கூறியருளியிருக்கின்றார். போற்றிப்பஃறொடை, நெஞ்சுவிடுதூது திருவருளுக்குப் பக்குவப்படுத்தும் முறையில் அவர் அருளிய வேறு இருநூல்கள்.

* * *

உமாபதிசிவாசாரியர் இற்றைக்கு அறுநூறு வருஷங்களுக்குமுன் இருந்தவர். ஒரு ஆனிமாதம் சிதம்பரத்தில் திருவிழா நடக்கின்றது. அன்று ஆறுந் திருவிழா. அந்தத் திருவிழாவுக்குப் பல இடங்களிலிருந்தும் பல மடங்களிலிருந்தும் சுவாமிகள் தம்பிரான்கள் ஆதீன வித்துவான்கள் குருக்கண்மார் வந்திருக்கின்றார்கள். ஆயிரக்கால் மண்டபத்திலும் வேறு இடங்களிலும் மடங்களிலுங் கூடிக் கூடிப் படித்தவர்கள் சமயபோதகர்கள் சமய விசாரஞ் செய்துகொண்டிருக்கின்றார்கள். தர்க்கங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அங்கே நடக்கும் வித்தியா விநோதங்களை உமாபதிசிவாசாரியாரின் சீஷர்கள் கண்டு அவைகளை உமாபதிசிவாசாரியருக்குப் போய்ச் சொல்லுகிறார்கள்.

சிதம்பரத்திலே திருவிழாத் தரிசிக்க வந்தவர்கள் சர்தார்ணமானவர்கள் அல்லர். மக்கள்

மதிக்குங் கண்ணியவர்கள். ஆனால் அவர்களில் ஒரு பகுதியார் தங்களை வேதாநுசாரிகள், வைதிகர் என்று சொல்லிக்கொண்டார்கள். கொள்கை வேதப் பிறழ்வான மாயாவாதமாயிருந்தது. பெரும் பகுதியார் தங்களை ஆகமிகள் – சைவர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் கொள்கை ஆகம விரோதங்களாய்ச் சைவப் பிறழ்வுகளாயிருந்தன.

உமாபதிசிவாசாரியர் வேதத்துக்கும் ஆகமத்துக்கும் புறம்பானவர்களான பௌத்தர், சமணர் முதலியவர்களுக்கு அஞ்சவில்லை. அவர்கள் புறப்பகை.

வேதாகமங்களைப் பிரமாணங்கள் என்று சொல்லிக்கொண்டு வருகின்ற அவைதிகர்களுக்கும் அசைவர்களுக்கும் பெரிதும் அஞ்சினார்; இரங்கினார். இவர்கள் உட்பகை.

உமாபதிசிவாசாரியரின் இரக்கம் ஒரு நூல் வடிவம் அடைந்தது. அதற்குப் பெயர் சங்கற்ப நிராகரணம்; ஒப்புயர்வில்லாதது; திருவருட்பயன் சிவப்பிரகாசம் சித்தியார் சிவஞானபோதம் பயன் படுதற்குப் பரமோபகாரமானது. அது வியக்கத் தக்கதொரு முறையிற் செய்யப்பட்டிருக்கின்றது.

அந்த நூலின் தொடக்கத்தில் ஒரு வகுப்புக் கற்பனை செய்யப்பட்டிருக்கின்றது.

மாயாவாதி மேற்கு முகமாக இருக்கின்றான் என்று வைத்துக்கொள்ளுவோம். எட்டுச் சைவ குருமார் வடக்கு முகமாக நிரையிலிருக்கிறார்கள். வகுப்பு 'ட' கர வடிவா யமைந்துவிட்டது. சைவ

குருமாரை எதிர்முகஞ் செய்துகொண்டு, தெற்கு முகமாக உமாபதிசிவாசாரியரின் மாணவர் ஒருவர் வீற்றிருக்கின்ருர். இந்தச் சமயத்திற் கிழக்கிலிருந்து ஒருவன் வருகின்ருன். வருகிறவன் "யான் வஞ்சப் பிறவிக்கு அஞ்சுகின்றேன். இறை அருளைப் பெறுமாறு யாங்ஙனம்?" என வினவுகின்ருன். அவனை எதிர்நோக்கியிருந்த மாயாவாதி, தன் சமயத்தைக் கற்பிக்கின்ருன். அதனை அயலிலிருந்த சைவ குருமாருள் ஒருவராகிய ஐக்கியவாத சைவர் நிராகரிக்கின்ருர். நிராகரிக்கின்றவர் தமது சமயத்தையுஞ் சங்கற்பிக்கின்ருர். அதனை அவருக்கு அருகில் இருந்த பாடாணவாத சைவர் நிராகரித்துத் தம் சமயத்தைச் சங்கற்பிக்கின்ருர். அப்பாலிருந்தவர் பேதவாத சைவர். அடுக்கச் சிவசமவாத சைவர். அப்பால் சங்கிராந்தவாத சைவர், ஈசுர அவிகாரவாத சைவர், சிவாத்துவித சைவர், இறுதியில் அடைமொழியில்லாத சைவர்; ஒருவரை யொருவர் நிராகரித்துச் சங்கற்பிக்கின்ருர்கள்.

ஒருவரை யொருவர் கண்டித்து, மாயாவாதி முதல் சிவாத்துவித சைவர் இறுதியானவர்கள் கழிய, எஞ்சி நிற்கின்ருர் சுத்த சைவவாதி. அவருடைய சைவ சங்கற்பத்தையும் உமாபதிசிவாசாரியரின் மாணவர் கண்டித்துத் திருவருளை விசாரித்து வந்தவனைச் சிவப்பிரகாசம் படிக்கும்படி தூண்டுகின்ருர். இந்த முறையில் அமைந்திருக்கின்றது சங்கற்பநிராகரணம். ஒன்பது சமயங்கள் கண்டிக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது சமயம் மாயாவாதம். இது வேதப் பிறழ்வு.

ஏனைய எட்டுச் சமயங்களும் சைவாகமப் பிறழ்வுகள்; அகச்சமயம் ஆறனுள் ஒன்ருகிய சைவத்தின் பிறழ்வுகள்.

நள்ளிருளிலே நடுக்காட்டில் வழிதுறை தெரியாது அலைகிறவனுக்கு, பிழைவழிகளின் பிழைகளை யுணர்த்தி நல்வழிகாட்டியாய் அமைந்திருக்கிறது இந்தச் சங்கற்பநிராகரணம்.

இந்த உடலில் உயிர் நிலைப்பதற்குக் காற்று எவ்வளவு இன்றியமையாததாய் இருக்கின்றதோ, அவ்வாறே உயிர் இருளை விலகி ஒளியில் நிலைப்பதற்குச் சங்கற்பநிராகரணம் இன்றியமையாததாயிருக்கின்றது.

உயிர்க்கு உறுதுணை அருளிய உமாபதிசிவாசாரிய சுவாமிகள் திருவடி வாழ்க.

* * *

“ செப்பரிய சமயநெறி யெல்லாந் தந்தம்
தெய்வமே தெய்வமெனும் செயற்கை யான
அப்பரிசா ளருமஃதே பிடித்தா லிப்பால்
அடுத்தவந்நூல் களும்விரித்தே யநுமா நாதி
ஒப்பவிரித் துரைப்பரிங்ஙன் பொய்ம்மெய் யென்ன
ஒன்றிலையொன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப்பரிசாஞ் சமயமுமாய் அல்ல வாகி
யாதுசம யமும்வணங்கு மியல்ப தாகி.”

* * *

“ .................................இராஜாங் கத்தில்
அமர்ந்தது வைதிகசைவம் அழகி தந்தோ!”

—தாயுமானவர்

# III. கச்சியப்ப சிவாசாரியரின் தருமோபதேசம்

' தருமம்என் றொருபொருள் உளது தாவிலா
இருமையின் இன்பமும் எளிதின் ஆக்குமால்
அருமையின் வரும்பொருள் ஆகு மன்னதும்
ஒருமையி னோர்க்கலால் உணர்தற் கொண்ணுமோ.'

— கந். அசுர காசிபனுப. 42

தருமம் என்று ஒரு பொருள் உளது — தருமம் என்று ஒரு பண்டம் இருக்கிறது. தாவிலா இருமையின் இன்பமும் எளிதின் ஆக்கும் — ஒருவனுக்கு இம்மையினும் மறுமையினும் பரிசுத்தமான இன்பம் கிடைக்கவேண்டுமேயானல், அது அந்தத் தருமத்தினலேதான் உண்டாகும். அருமையின் வரும்பொருள் ஆகும் - அந்தத் தருமம் என்ற பண்டம் பெறுதற்கரியது; பூர்வபுண்ணிய விசேஷங்களினலே—இம்மையிலே செய்யுந் தவவிரதங்களினலே—சான்றேர் இணக்கங்களினலே—விசாரங்களினலே ஒரு அளவுக்குப் பெறுதற்குரியது. அன்னதும் ஒருமையி னோர்க்கலால் உணர்தற் கொண்ணுமோ — மனம் மாசு நீங்கி, அறிவும் மனசும் ஒருநெறிப்பட்ட தூய்மையாளர்களாலன்றி, மற்றவர்களால் தருமம் என்ற பண்டத்தைச் சிந்திக்கவும் முடியாது.

* * *

காசிபமகாமுனிவர் தம் புதல்வர்களான சூரன் சிங்கன் தாரகன் மூவரையும் நோக்கி, முதன் முதல்



பாலசுப்பிரமணியர்

தேர் செலுத்திய கண்ணன், சற்றே திரும்பிப் பார்த்து, "அடே அர்ச்சுனா, உனக்கு உண்மைச் சார்பு யார்? யானா? துரியோதனனாதிகளா?" என்று எதிர்வினைச் செய்து, பொய்ச்சார்புகளைத் துகள் செய்கின்றான். "பொய்கெட்டு மெய்யானார்" என்ற மணிவாசகம் அறத்தின் உயர்நிலையையே பேசியது.

அறம் வெகு நீளமானது. அதற்குத் தொடக்கஞ் சொல்லலாம்; முடிபு சொல்லுவது கஷ்டம். தொடக்கந்தான் தருமம்.

கடவுளுக்கு ஆதியுமில்லை; அந்தமும் இல்லை. அறத்துக்கு அந்தம் கஷ்டம்; ஆதியுண்டு, அது தருமம்.

காசிபர், "அறஞ் செய விரும்பு" என்ற பாடத்தைத் தம் மக்களுக்குப் படிப்பிக்க எடுத்துக் கொள்ளவில்லை. அந்தப் பிறவிகளுக்கு அந்தப் பாடம் கூடிப்போய்விட்டது; கடினமானது என்று அவர் கண்டார். அதனால், அதை விடுத்து அதன் தொடக்கமான தருமத்தைப் போதிக்க எடுத்துக் கொண்டு,

என் அப்பன்களே கேளுங்கள்,

'தருமம் என்று ஒருபொருள் உளது' என்று போதிக்கின்றார் அந்த மகாமேதையான முனிவர்.

மனிதனுக்கு நல்ல கருவி கரணங்களைக் கடவுள் அருளியிருக்கின்றார்; சிந்திக்கும் ஆற்றல் மனிதனுக்கு இருக்கிறது. எனது சீவனம் எப்படி

இருக்கவேண்டும் என்று சிந்திக்கவேண்டியவன் மனிதன். உண்ணுதற்கு உணவு, உடுக்க உடை, மற்றும் அநுபவங்கள் மனிதனுக்கு வேண்டும். உணவு முதலியவைகளை, மற்ருெரு சீவனுக்கு வேதனை செய்து பெறலாமா? என்று மனிதன் சிந்திக்கவேண்டியவன்; சிந்திக்கின்ருனு? சிலர், "நீதி இருக்கிறது; அது பெரியது. மற்றவர்களுக்கு அநியாயஞ் செய்து சீவிக்கக்கூடாது" என்று சொல்லுகின்ருர்கள்.

"கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்." — குறள் 116

"தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்." — குறள் 209

பழியஞ்சிப் பாத்தூண் உடையதுதான் வாழ்க்கை என்று தருமோபதேசமும் செய்கின்ருர்கள். அவர்களுக்குச் சுவதர்மம் தெரியுமென்று நாம் வியக்கிருேம்; விசேட மனிதர்களென்று மதிக்கின்ருேம். ஆனுல், வாழ்க்கைச் சந்தர்ப்பங்களிலே அவர்களை நோக்கினுல், வெகு வேடிக்கையாயிருக்கும். தமது தருமோபதேசங்களை ஏட்டுச் சுரைக்காய் பண்ணிவிட்டு, ஆசைவழியே நடக்கின்ருர்கள். சில சந்தர்ப்பங்களிற் 'சுவதர்மம்' என்று ஒன்று இருக்கிறதே, என்று சிந்திப்பதே இல்லை. பணம் என்றதும் ஆள் வேறுபட்டுவிடுகிருன்.

"எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேருகு மாந்தர் பலர்." — குறள் 514

மணிமேகலையிலே ஆதிரை என்பவளின் கணவன் சாதுவன் என்று ஒருவன் வருகின்றுன். அவன் மனிதர்களைப் பிடித்துத் தின்கிறவர்கள் வாழுகின்ற ஒரு தீவை அடைகின்றுன். அவர்கள் அவனைப் பிடித்துப் பொரியல் செய்ய வருகின்றுர்கள். சாதுவனுக்கு அவர்கள் பாஷை தெரியும். உடனே 'அகிம்சா பரமோதர்மம்' என்று பிரசங்கந் தொடங்கினுன் சாதுவன். அவர்கள் அவன் தங்கள் பாஷை பேசியதற்கு மகிழ்ந்து, அவனைக் கொன்று தின்னுமல், முன்பு முன்பு கொன்று தின்றவர்களிடங் கவர்ந்த துணிமணி பண்டங்களையெல்லாம் அவனுக்கு வழங்கினுர்கள். அந்தச் சாதுவ உபதேசி, ஒருகதையுமின்றிக் கொடுத்தவைகளையெல்லாம் வாரி அள்ளிக்கொண்டு தன்னூருக்கு வந்து தன் மனைவி மூலம் "நன்பல தானமும்" செய்வானுயினுன். அந்தப் பரிபக்குவனிடம் மணிமேகலை முதன்முதல் தானம் வாங்கினுள் என்று கதை.

மணிமேகலை வாங்கிப் பிழைத்துப் போகட்டும். இந்தச் சாதுவனுக்கும்,

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்." —குறள் 755

என்ற சுவதர்மத்துக்கும் எவ்வளவு தூரம் என்பதுதான் சிந்திக்கத்தக்கது.

"தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த(து)
உண்ணலின் ஊங்கினிய தில்." —குறள் 1065

இந்த உலகத்திலே சாதுவன் போன்றவர்களே பெரிய பிரமுகர்கள். இதிலிருந்து சாதாரண

உலகின் நிலே எப்படி யிருக்குமென்று ஊகித்துக் கொள்ளலாம். சுவதர்மி என்று ஒருவன் இந்த உலகில் இருந்தால் அவனேத் தரிசிப்பதே ஜன்ம சாபல்யம்.

அதனலேதான்,

"தருமம் என்று ஒரு பொருள் உளது"; அது, "அருமையின் வரும் பொருளாகும்" என்ருர் காசிப முனிவர்.

சுவதர்மிகளாகிய தங்கருமஞ் செய்பவர்களே தவஞ் செய்பவர்கள்; அவர்களே "தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்" ஆகின்றவர்கள்.

"புழுவுக் குங்குணம் நான்கெனக் கும்மதே
புழுவுக் கிங்கெனக் குள்ளபொல் லாங்கில்லே
புழுவி னுங்கடை யேன்புனி தன்றமர்
குழுவுக் கெவ்விடத் தேன்சென்று கூடவே."

—திருநாவுக்கரசர் தேவாரம்

ஆகாரம், மைதுனம், நித்திரை, பயம் என்று நான்கு குணங்கள் புழுவுக்குச் சொல்லப்படுகின்றன. எனக்கும் அவைகள் இருக்கின்றன. ஆனல் புழுவுக்கு எனக்குள்ள பொல்லாங்கில்லே. அது ஏதோ அனுபவித்துப் போகின்றது. நான் அனுபவிக்கும்போது சும்மா கிடப்பதில்லே. எத்தனேயோ பிறப்புக்களுக்குச் சம்பாத்தியம்பண்ணி விடுகின்றேன். என்னிலும் புழு எவ்வளவோ விசேஷம். நான் புழுவினுங் கடையேன், என்கின்ருர் அப்பர்.

ஒருவன் றன் சீவனத்தைப் பரிசுத்தஞ் செய்து வைத்துக்கொள்ளல்வேண்டும். இல்லேயேல் புல்

லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிப் பிறந்து தொலைந்து போகிறது மகாவிசேஷம் என்ற அடிப்படைத் தத்துவத்தைத்தான் காசிப மகா இருஷி தம் புதல்வர்களுக்கு இரங்கி உபதேசித்தார்; அவர்கள் எடுத்த பிறப்பைப் பயன் செய்யட்டும் என்று வாயூறினர்.

* * *

இதனைப் பக்கத்திற் பார்த்துக்கொண்டு, கேட்டுக்கொண்டு நின்றவள் மாயை; மனைவி.

"நன்னய மாயவள் நகைத்துக் கூறுவாள்"

கந். மாயையுப. 1

"மறைதெரி முனிவநீ வாய்மை யாகிய
உறுதியை மொழிந்தனை உயர்ந்த வீடுறும்
அறிவுடை முனிவரர்க் கன்றி நாமருள்
சிறுவருக் கித்திறஞ் செப்ப லாகுமோ."

—கந். மாயையுப. 2

* * *

இக் குழந்தைகள் தேவ குழந்தைகளா? அல்லது முனிவர் குழந்தைகளா? அசுர குழந்தைகள். இவர்களுக்கும் உனது தருமோபதேசத்துக்கும் எவ்வளவு தூரம்! நீ படித்த வேத உண்மைகளையெல்லாம் ஏன் இவர்கள் முன்னிலையிற் கவிழ்த்துக்கொட்டுகிறாய்.

"கொள்ளும் பொருளிலர் ஆயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலின்."

—கலி, பாலைக்கலி 3

பாலைநில மறவர்கள் வழிப்போக்கர்களுக்குப் பாணந் தொடுப்பது, அவர்களிடமுள்ள பொருள் களைக் கவருதற்கு மாத்திரந்தானா? அவர்களிடத்திற் பொருளில்லையென்று நன்றாக அறிந்துகொண்டும் அம்பு தொடுக்கின்றார்களே. அம்பு பட்டு அந்தப் புதியவர்கள் துடிதுடிப்பதைப் பார்ப்பதில் அவர்களுக்கு எவ்வளவு சந்தோஷம்! அந்தச் சந் தோஷத்துக்கு அவர்களிடம் உள்ள பொருள் களைக் கவருஞ் சந்தோஷம் எம்மாத்திரம்! இந்தக் கற்றறிந்தா ரேத்துங் கலித்தொகை யுண்மையை நீ அறியாயா? பாலைநில மறவர்கள்போல நமது அசுர குழந்தைகளும் மற்றவர்களின் வேதனை களைக் கண்டுகளிக்க வேண்டியவர்கள். பிற ருடைய பதைபதைப்புத்தான் நமது குழந்தை களின் வாழ்வுக்கு அடிப்படை, அத்திபாரம், என்று காசிபருக்கு உபதேசஞ் செய்தாள் மாயை.

* * *

காசிபர் தம் பிள்ளைகளுக்கு "அறஞ் செய விரும்பு" கூடிப்போய்விட்டதென்று,

"தருமம் என்று ஒரு பொருள் உளது." என்று தொடங்க, அதுவும் உதவாதென்றாள் சக தர்மிணி. காசிபர் பெருமூச்சுவிட்டார்.

* * *

அசுரகுருவான சுக்கிராச்சாரியருடைய சர்வ கலாசாலைக்குப் பிள்ளைகளை அள்ளிக்கொண்டு போனாள் மாயை. சுக்கிரன் நல்ல வெள்ளை; வெள்ளி. எந்தக் கறுப்பர்களையும் வெள்ளையராக்க வல்லது அவர் கலாசாலை. சுக்கிரன் உபதேசஞ் செய்யத் தொடங்கினார்,

டாக்டர் உ. வே.

" தருமஞ் செய்க தவறுள பாவமாம்
கருமஞ் செய்யற்க என்பர் கருத்திலார்
இருமை தன்னையும் யாவர்செய் தாலும்மேல்
வருவ தொன்றிலை மாயம்வித் தாகுமோ.''
--கந் சுக்கிரனுப. 40

" புண்ணியமாம் பாவம்போம் ''

என்பதெல்லாம் பேய்க்கதை.

" ஆண்டோர் பேரின்பம் உண்டென்பர். அதனை யார் அறிவார்'' என்று " உலோகாயதனெனும் ஒண்டிறற் பாம்பின் கலாபேதத்த கடுவிட'' த்தைக் கக்கினார் குருமூர்த்தி. வகுப்பில் உற்சாகம் நிலவியது; சூரனுதியர்கள் சிரகம்பஞ் செய்தார்கள். தம் பிள்ளைகளுக்குத் தக்க குரு வந்து வாய்த்தார் என்று எண்ணியதும் பால் சுரந்தது மாயைக்கு. தாரமுங் குருவுந் தலைவிதியல்லவா ?

*　　　　*　　　　*

சூரனுதியர் சீவனம் என்கின்ற — சுவதர்மம் என்கின்ற—புள்ளியினின்று விலகினார்கள்.

அப்புத்தளைப் பாதையிலிருந்து புகையிரதம் விலகினால் அதனை எடுத்து நேர்செய்ய யாராலே தான் முடியும் !

" இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.'' --குறள் 879

ஆசிரமக் கல்வியில் முதற் பயிற்சி சீவனப் பிரச்சினை, சுவதர்மம். அதில் வாழ்வு தொடங்கினுற்றான், அவன் ஒருநாளைக்கு அறஞ்செய்ய

விரும்புவான். வாழ்க்கை வழியைக் கைப்பற்று வான். அவன் சஞ்சாரஞ் செய்யும் இரேகை "வீடுபெற" நிற்கும் இரேகையா யிருக்கும்.

காசிபர் இந்த ஆசிரமக் கல்வியை—ஆரம்பக் கல்வியை — வாழ்க்கையின் அத்திபாரத்தைப் போதித்தார். தாய் குழப்பினுள். குழந்தைகள் தாய்வழியில், வெள்ளியின் பள்ளியில், கறுப்பர் கள் ஆனுலும், சிந்தனையில் வெள்ளையர் ஆனுர் கள். தருமத்தை விலகினுர்கள்.

அவர்கள் பூர்வ தவவிசேஷம் உள்ளவர்கள். ஆகையினுலே, சுப்பிரமணியசுவாமி ஆறு திரு முகங்களோடும் பன்னிரண்டு திருக்கைகளோடும் வேல் முதலிய படைக்கலங்களோடும் எழுந்தருளி, வீரவாகு முதலிய இலக்கத்தொன்பதின்மர், இரண் டாயிரம் பூதவெள்ளங்கள் ஆகிய படைத் துணைக ளுடன், அவர்களை நேர்ப்படுத்த வேண்டியு தாயிற்று. பூர்வ தவம் இல்லையேல் அவர்கள் கதி அதோகதி.

புராணங்கள் இதிகாசங்களில் அளவிறந்த கதைகள் இந்தத் தருமப் பிரச்சினை பற்றியவைகள்.

எவன் சீவனம் தருமத்தில் ஆரம்பிக்கிறதோ, அவன்தான் மனிதரில், "வாழ்வாங்கு வாழ்ப வன்." அவன் வையத்தானே ஆயினும், "வானுறையுந் தெய்வம்."

திருமகள் அழுத்தகம், சுன்னுகம் (இலங்கை)